

பாலகுமாரன்
வேட்டை

31684
5470252
கொளத்தூர், சென்னை

# வேட்டை...

## 1

சூரியனின் ஒளிக்கிரணங்கள் பூமியைத் தொட்ட நேரத்தில் சந்திரசேகரின் மகளுக்கு முதல் குழந்தை பிறந்தது. அந்தக் காலை வேளையில் குழந்தை அழும் சத்தம் மிக மெல்லியதாய் பல கண்ணாடிக் கதவுகள் தாண்டி சந்திரசேகருக்கு கேட்டது.

சந்திரசேகர் பரபரப்பானார். மனைவியை அழைத்து கேட்கச் சொன்னார்.அவள் கதவுக்கு நெருக்கமாக நின்று காது கொடுத்துக் கேட்கும்போது பளிச்சென்று கதவு திறந்தது. வெள்ளை உடை அணிந்த தாதி வெளியே வந்தாள். அவள் தலையில் பச்சை தொப்பியும், கையில் பச்சை ஏப்ரானும் இருந்தன.

"உங்களுக்கு பேத்தி பொறந்திருக்கா ஸார்...பெண் குழந்தை. தாயும் சேயும் சுகம். நார்மல் டெலிவரி. ஒரு மணி நேரம் அவங்க தியேட்டர்லயே இருப்பாங்க. பிறகு மெல்ல கொண்டுவந்து வார்ட்ல விட்ருவோம். நல்ல சேதி சொல்றனே எனக்கு ஒண்ணும் இல்லையா?"

அந்த தாதி கண் சிமிட்டிக் கேட்டாள்.

"உனக்கு நெளி மோதிரம் வாங்கித் தரேம்மா."

சந்திரசேகர் உள்ளங்கை உயர்த்தி சத்தியப் பிரமாணம் போல அவளுக்குச் சொன்னார்.

"உங்க வார்த்தையே போதும்."

சொல்லிவிட்டு அவள் திரும்பினாள்.

அந்த தாதியின் குரலில் ஆசையும், அதே நேரம் வெட்கமும் இருந்தன.

"பொண்ணுதான் பொறக்கும்னு தெரியும். அவ மூஞ்சியில அத்தனை ஒரு அழகு இருந்தது. உதடெல்லாம் சிகப்பா, கன்னமெல்லாம் சிகப்பா, முந்தா நேத்து எல்லாரும் கேட்டுட்டாங்க. இவ்ளோ அழகாக இருக்காளே. இவ்ளோ அழகா இருக்காளேன்னு. கண்ணடி பட்டுடுமோன்னுகூட நான் பயந்தேன். நல்லபடியா ஆச்சு. கடவுளே, சமயபுரத்து மகமாயி, நான் குழந்தையையும், அம்மாவையும் உன் சன்னதிக்கு எடுத்துண்டு வரேண்டி. மறக்கமாட்டேன்டி."

சந்திரசேகரனின் மனைவி உரக்க கிழக்கு பார்த்து கைகூப்பிச் சொன்னாள்.

சந்திரசேகர் செல்போனை எடுத்து தனது மாப்பிள்ளைக்கு தொடர்பு கொண்டார்.

மாப்பிள்ளை ஒரு மணிக்குத்தான் போனான்.

"போ... போ... போய் ஓய்வெடுத்துக்கொள்" என்று அவர் விரட்டிய பிறகுதான் போனான்.

இந்நேரம் அவன் தூங்கியிருக்கக்கூடும். வெகுநேரம் மணியடித்தது. அணைத்துவிடலாமா என்றபோது தடுமாறி டெலிபோன் எடுப்பது காதில் விழுந்தது.மெல்ல அடிக்குரலில் 'ஹலோ' என்று மாப்பிள்ளை அழைத்தான்.

"நான்தான் சந்திரசேகர் பேசறேன். கங்ராஜுலேஷன்."

சொல்லிவிட்டு தாமதித்தார்.

"சொல்லுங்க... மாமா... மாமா... சொல்லுங்க. என்ன என்னாச்சு?" என்று அவன் பரபரத்தான்.

"உனக்கு மகள் பிறந்திருக்கிறாள்" என்று சொன்னதும்,



"தேங்க்யூ... தேங்க்யூ... மாமி சொல்லிக்கிட்டே இருந்தாங்க. பொண் குழந்தைதான் பொறக்கும்னு."

"சாவித்ரி எப்படி இருக்கா?" என்று அடுத்த கேள்வியைக் கேட்டான்.

தன் மகளைப் பற்றி அக்கறையோடு மாப்பிள்ளை கேட்பது அவருக்கு சந்தோஷமாக இருந்தது.

"தாயும் சேயும் சுகம். இன்னும் ஒரு மணி நேரத்துல கொண்டு வந்து வார்ட்ல போட்ருவாங்களாம். நீங்க குளிச்சுட்டு வந்தேள்ன்னா நன்னாயிருக்கும்."

"வந்துடறேன் மாமா. இதோ வந்துடறேன்."

அவன் மறுபடியும் எதையோ கீழே உருட்டி தடுமாறி எழுந்திருப்பது காதில் விழுந்தது.

"நிதானமா வாங்கோ. அவசரப்பட வேண்டாம்."

அவர் சொன்னதை அவன் காதில் போட்டுக் கொள்ளவில்லை. ஆனால், மறுபடியும் சில நிமிடங்களில் மணி ஒலித்தது.

"மாமா நான் சாப்டுட்டுதான் வரப்போறேன். பசிக்குது. நைட் ஒண்ணுமே சாப்பிடலை."

"நைட் ஒண்ணுமே சாப்பிடலைன்னு சாதாரணமா சொல்றீங்களே."

"சாப்பிட பிடிக்கலை மாமா."

"என்னது?"

"போனேன். தூங்கிட்டேன். உங்களுக்கு ஏதாவது வாங்கிண்டு வரட்டுமா."

இந்த அக்கறையும் அவருக்கு பிடித்திருந்தது.

"எங்களுக்கும் பசிக்கறது மாப்பிள்ளை. ஏதாவது வாங்கிண்டு வாங்க."

அடுத்த முக்கால் மணி நேரத்தில் நெற்றியில் விபூதிப் பட்டையோடும், அரைக்கை வெள்ளைச் சட்டையோடும்

வேட்டியோடும் மோட்டார் சைக்கிளிலிருந்து மாப்பிள்ளை கீழிறங்கி நடந்து வந்தான்.

அவன் கையில் பிளாஸ்டிக் பை இருந்தது. பிளாஸ்டிக் பையில் பொட்டலங்கள் இருந்தன.

"என்ன வாங்கறதுன்னு கேட்டுக்கலை. ரெண்டு செட் இட்லி, ரெண்டு செட் பூரி வாங்கிண்டு வந்திருக்கேன். சாவித்ரிக்கு ஏதாவது வாங்கணுமா? வேணும்னா சொல்லுங்க. மறுபடியும் போய் வாங்கிட்டு வந்துடறேன்."

"சாவித்ரி அந்த மாதிரியெல்லாம் சாப்பிட முடியாது. எல்லாம் ஆஸ்பத்திரியில் கொடுத்துடுவாங்க. பால், ப்ரெட், ஜூஸும்தான் குடிக்கும்படியா இருக்கும். ஐஸ்க்ரீம் கொடுப்பாங்களாம்."

"ஐயோ... குழந்தை பெத்தவங்களுக்கு ஐஸ்க்ரீம் கொடுக்கலாமா?"

"இப்போ கொடுக்கறது வழக்கமாம். அதான் ஊட்டச் சத்தாம். வெண்ணிலாதான் இருக்கு. நீங்கவேன்னா நல்ல ஐஸ்க்ரீமா ஏதாவது வாங்கிட்டு வாங்கன்னாங்க. இப்போதான் அஞ்சு நிமிஷம் முன்னாடி சொல்றாங்க."

"இருங்க நான் வாங்கிட்டு வரேன்."

மாப்பிள்ளை பையைக் கொடுத்துவிட்டு மறுபடியும் வண்டி உதைத்துத் திரும்பினான். வேகமாக போகிறவனைப் பார்க்க சந்தோஷமாக இருந்தது.

ஒன்றுக்கு மூன்று கப்பாக ஐஸ்க்ரீம் வாங்கி வந்திருந்தான்.

எல்லாம் பெரிய கோப்பைகள். மூன்று விதமான ஐஸ்க்ரீம்கள். இதிலும் மாப்பிள்ளையின் அக்கறையும், கெட்டிக்காரத்தனமும் தெரிந்தன.

"என்ன சாப்பிடலையா? பசிக்குதுன்னு சொன்னீங்க" மாப்பிள்ளை கேட்டான்.

"நீங்க உள்ள போய் அவளைப் பார்த்த பிறகு சாப்பிடலாம்."



"இதோ பாருங்க. அப்படி வேணாம். நீங்க சாப்பிடுங்க. எனக்கே காலையில் கிறுகிறுன்னு வந்துடுச்சு. உங்களுக்கு எப்படி இருக்கும்? நீங்களும் நைட் சாப்பிடலை இல்ல."

"ரெண்டு தடவை பால் குடிச்சோம்."

"அது எந்த மூலைக்கு போதும். மாமி வாங்க உட்காருங்க."

அவன் தண்ணீர் பாட்டில் திறந்து வைத்தான்.

அந்த ஆஸ்பத்திரியில் வராண்டாவின் மூலையில் அவர்கள் உட்கார்ந்து கொண்டு சாப்பிட்டார்கள்.

ஐந்து நிமிடத்தில் காலை டிபனை முடித்தார்கள்.

"அப்பா... இப்போதான் உயிரே வந்தது. நல்ல வேளையா வாங்கிட்டு வந்தீங்க. உனக்கு பூரி பிடிக்கலையாடி."

"பிடிக்குதோ, பிடிக்கலையோ சாப்பிடணும்."

"ஏன்... மாமிக்கு பூரி பிடிக்காதா?"

"இல்லை. அவ தோசைதான் சாப்பிடுவா."

"சொல்லியிருந்தா வாங்கிண்டு வந்திருப்பேனே. சரி நான் எங்க கேட்டேன்."

அவன் அலுத்துக் கொண்டான்.

"வேணா தோசை வாங்கிட்டு வந்துடட்டுமா" எழுந்தான்.

சந்திரசேகரின் மனைவி அவன் தோள்பிடித்து உட்கார வைத்தாள்.

அவர்கள் கை அலம்பிக் கொண்டார்கள். சாவித்ரியை வெளியே கொண்டு வருவதில் தாமதம் இருந்தது. குழந்தையை காட்டுவதிலும் தாமதப்படுத்தினார்கள்.

"எல்லாரும் நல்லாயிருக்காங்கம்மா. என்னத்துக்கு பச்சை புள்ளைய வெளிய எடுத்துட்டு வரதுன்னு பார்க்கறோம். இங்க அழகா கொண்டு வந்து வார்ட்ல போட்டுடறோம், அங்க வந்து பாருங்களேன். வராண்டாக்கு ஏன் குழந்தைய கொண்டு வரணும்?"

ஒரு தாதி சொல்லிவிட்டுப் போனாள்.

மூவருக்கும் குழந்தையைப் பார்க்கின்ற பரபரப்பு ஏற்பட்டது.

"என்ன டைம் சொன்னாங்க?"

"ஆறு மணி அஞ்சு நிமிஷம்."

"என்ன நட்சத்திரம்?"

"அனுஷம்."

"அடேங்கப்பா... அனுஷ நட்சத்திரத்து பொண்ணுண்ணா ரொம்ப அழகா இருக்கும். என் பொண்டாட்டி மாதிரி. அது தவிர இன்னிக்கு தேதி ஆறு. ரொம்ப சூட்சுமமா கெட்டிக்காரியா இருப்போ. ஆம்பளைங்கள ஏமாத்தற சாதுர்யத்தோட இருப்போ."

சந்திரசேகரின் மாப்பிள்ளை கணேசன் ஒரு சிரிப்போடு தன் மகளைப் பற்றி பேசினான்.

"மாப்பிள்ளை டக்குனு ஜாதகமெல்லாம் போட்டுடாதீங்க. நிதானமா செய்யலாம். நேரம், காலம் பார்த்து செய்யலாம்."

வேகமாக சந்திரசேகரன் தடுத்தார்.

சந்திரசேகரின் மனைவி சாரதா மறுபடியும் கதவுக்கருகே போய் நின்று கொண்டாள். கண்ணாடி வழியே நெடுகப் பரவிக்கிடந்த அந்த வராண்டாவையே பார்த்துக் கொண்டிருந்தாள். தியேட்டர் தொலைவில் தெரிந்தது. தியேட்டர் கதவு திறந்தது.

அவள் திரும்பி, 'கொண்டுவராங்க... கொண்டுவாராங்க' என்று உரக்கச் சொல்ல, அவர்களும் வந்து பார்த்தார்கள்.

ஒரு சக்கரம் வைத்த ஸ்ட்ரெக்சரில் அவளை படுக்க வைத்து சிலைன் பாட்டிலோடு தள்ளிக் கொண்டு வந்தார்கள்.

அவள் பக்கத்தில் குழந்தையைக் காணோம். சாரதா அம்மாவிற்கு பகீரென்று இருந்தது.

"குழந்தை இல்லியே."



உரத்த குரலில் கேட்டாள்.

பின்னால் தாதி குழந்தையை நெஞ்சோடு அணைத்து வர, மூவருமே நிம்மதியானார்கள். மனம் குளிர்ந்தார்கள்.

"ஸ்ட்ரெக்சர்ல வச்சு யாராவது தள்ளிட்டு வருவாங்களா? குழந்தைக்கு அதிருமில்ல. அதான் பூ மாதிரி அவளே தூக்கிட்டு வரா. நல்ல ஆஸ்பத்திரிம்மா இது."

சந்திரசேகர் சந்தோஷமாகச் சொன்னார்.

அந்த ஸ்ட்ரெக்சர் நாலாவது அறைக்கு திரும்பி உள்ளே போயிற்று.

கண்ணாடிக்கருகே அப்பா நிற்பதை பார்த்துவிட்டு சாவித்ரி லேசாக கையசைத்தாள். மிக பலவீனமாக இருக்கிறாள் என்று அவள் அசைவு தெரிவித்தது.

குழந்தையை எடுத்துக் கொண்டு கண்ணாடிக் கதவுக்கு அருகே வந்து நர்ஸ் காட்ட,அவர்கள் கண்ணாடி வழியாக குழந்தையை பார்த்தார்கள்.

சாரதா தாங்க முடியாமல் கண்ணாடிக் கதவை தடவினாள். தாதி குழந்தையை எடுத்துக் கொண்டு உள்ளே போனாள். மேற்கொண்டு பதினைந்து நிமிடம் ஆகியது. அவர்கள் நிற்பதும், நடப்பதும் போய் உட்காருவதுமாய் அவஸ்தைப் பட்டார்கள்.

திடீர் என்று கதவு திறக்க, ஒரு தாதி வந்து, "நீங்க வந்து பார்க்கலாம். அஞ்சு நிமிஷம்தான். முடிஞ்ச மட்டும் குழந்தைய தொடாதீங்க. ஒரு வாரம் கழிச்சு தொட்டுக்கலாம். தொடணும்னா நல்லா கைய டெட்டாலால கழுவிகிட்டு அப்புறம் தொடுங்க. யாராவது சிகரெட் பிடிப்பீங்களா? சிகரெட் பிடிக்கறவங்க கிட்ட வராதீங்க."

"இல்லீங்க. யாரும் பிடிக்கமாட்டோம்."

சந்திரசேகர் முதலில் நுழைய, அதற்குப் பிறகு கணேசன் நுழைந்தான். மூவருமே வாஷ் பேசினுக்குப் போய் டெட்டால் ஊற்றி கை கழுவிக் கொண்டார்கள். சாவித்ரி அருகே

தொட்டிலில் செக்கச்செவேல் என்று குழந்தை நிறைய தலை முடியோடு கணேசனின் கூரிய மூக்கோடு உறுதியான முகவாயோடு இருந்தது.

"அப்படியே அப்பனை உறிச்சு வச்சுருக்குடி. நல்ல அதிர்ஷ்டம்."

"ஆமாம்மா. நானும் இப்போதான் பார்க்கறேன்."

பெண் மெல்லிய குரலில் பதில் சொன்னாள்.

குழந்தையை சிறிது நேரம் பார்த்துவிட்டு கணேசன் மெல்ல கட்டிலுக்கு வந்து மனைவியை கனிவோடு பார்த்தான்.

அவள் தலையை மெல்ல தடவி விட்டான்.

அவள் கை உயர்த்தி கணேசனின் கையை பற்றிக் கொண்டாள்.

"தொட்டா இன்ஃபெக்ஷன் ஆகும்னு சொன்னாங்க."

அவன் விடுவித்துக் கொள்ள முயற்சி செய்தான்.

"மாப்பிள்ளை குழந்தைய தொட்டாதான் சொன்னாங்க. அவளை தொடலாம்."

சந்திரசேகர் அடிக்குரலில் சொல்ல, அருகே இருந்த தாதி பரவாயில்லை என்று தலையாட்ட, அவன் குனிந்து மனைவியின் நெற்றியில் முத்தமிட்டான். மெல்ல கன்னத்தோடு கன்னம் வைத்துக் கொண்டான். அவள் கை உயர்த்தி அவன் கழுத்தை கட்டிக் கொண்டாள்.

அவள் கண்களிலிருந்து நீர் வந்தது.

"என்னத்துக்கு... அதான் லட்டு மாதிரி குழந்தைய பெத்து கொடுத்திருக்கியே. ரொம்ப கஷ்டபட்டியாடி தங்கம்."

அவன் அவளுக்கு மட்டும் கேட்கின்ற குரலில் பேசினான்.

ஆனால், அந்த அறையில் இருந்த எல்லோருக்கும் கேட்டது.



அவள் ஆம் என்று தலையசைத்தாள். பிறகு, இல்லை யென்று சொன்னாள்.

"நாம பார்த்தசாரதி கோயிலுக்கு போயிட்டு வரணுமே. போய் மறுபடியும் உட்கார்ந்து ஓம் க்லீம் கிருஷ்ண க்லீம்னு சொல்லணும். பார்த்தசாரதி கிருபைதான் நமக்கு தேவகி பொறந்திருக்கா."

மறுபடியும் மெலிந்த குரலில் சந்திரசேகரின் மகள் சாவித்ரி பேசினாள்.

"என்ன வாங்கணும், ஏது வாங்கணும்? ஏதாவது சொன்னாங்களா?"

"நர்ஸ் லிஸ்ட் தருவாங்க. அவங்க நிறைய ஆஸ்பத்திரி ஸ்டாக்லேர்ந்து எடுத்திருக்காங்க. என்ன எடுத்தாங்களோ அதை நாம ரீப்ளேஸ் பண்ணணும். ஒண்ணு வாங்கித்தரணும். இல்ல, காசு கட்டிடணும். அது தவிர அம்மா... நிறைய ரத்தப் போக்கு இருந்துகிட்டே இருக்குமாம். அதனால் நிறைய கேர்ஃப்ரீ வாங்கிக்க சொன்னாங்க."

"இதை அவர் போய் எப்படி வாங்குவார்?"

"ஃபார்மஸில வாங்கறதுக்கென்ன... நர்ஸ்கிட்ட கேட்டுக் கோங்க."

"இங்க எழுதி வச்சுருக்கு."

அந்த நர்ஸ் ஒரு பேப்பரை கணேசனிடம் நீட்டினாள். கணேசன் மறுபடியும் குழந்தையை பார்த்தான். மெல்ல அதன் நெற்றியை தன் விரல்களால் தடவினான்.

அந்தக் குழந்தை ஒரு தடவை சிலிர்த்துப் போட்டது. அதன் காலை சந்திரசேகர் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டார். மெல்ல குழந்தையை எடுத்து சந்திரசேகரின் மனைவி சாரதா நெஞ்சில் அணைத்துக் கொண்டாள்.

"போதும், என் ஜென்மம் சாபல்யம் ஆயிடுத்து. நான் என் பேத்தியை பார்த்துட்டேன். நேத்திக்குதான் எனக்கு கல்யா

ணம் ஆன மாதிரி இருக்கு. நான் பொண்ணும் பெத்து என் பொண்ணுக்கு பொண்ணும் பொறந்தாச்சு.

"பேத்திக்கும் பொண்ணு பொறக்க வேணாமா? அவ்ளோ நாள் நீங்க இருப்பீங்க."

நர்ஸ் உள்ளே புகுந்து சொல்ல, "என்னத்துக்கும்மா அவ்ளோ நாள்? இப்பவே நிறைஞ்சு போச்சு எனக்கு."

சாரதா குழந்தையை அணைத்துக் கொண்டு கண்ணீர் உகுத்தாள்.

எல்லோருக்கும் அந்த நேரம் நெகிழ்ச்சியாக இருந்தது.

நர்ஸ் சிணுங்கிய குழந்தையை வாங்கிக் கொண்டாள். தொட்டியை லேசாக ஆட்டினாள்.

"சரி. நீங்கனெல்லாம் வெளிய போயிடுங்க. அம்மா மட்டும் இங்க இருக்கலாம். ஜென்ஸ் அடிக்கடி வராதீங்க. குழந்தைக்கு இன்ஃபக்ஷன் ஆகும். ஒரு பத்து நாள் காபந்தா வச்சுக்கணும். அதுக்கப்புறம் குழந்தைக்கு ரத்தம் பரவ ஆரம்பிச்சுடும். ரத்தம் ஊறிடுச்சுன்னா குழந்தை எல்லாத்தையும் எதிர்க்க தயாராகிடும். வீட்டுல இவங்க ரூமை க்ளீன் பண்ணி வைங்க. இவங்க ரூம் ரொம்ப சுத்தமா இருக்கணும். இப்பவே பூச்சி மருந்தெல்லாம் அடிச்சுட்டீங்கன்னா ரெண்டு நாள்ல எல்லாம் சரியாயிடும். தரையெல்லாம் நல்லா வென்னீர் விட்டு அலம்புங்க. பூச்சியே வரக்கூடாது. எறும்பே வரக் கூடாது. சின்னக் குழந்தைக்கு, அந்த வாசனைக்கு எறும்பு நிறைய வரும். இது ரொம்ப முக்கியமான வேலை. விசிட்டர்ஸ் ஜாஸ்தி வேணாம். அதெல்லாம் உங்க வீட்லயே வச்சுக் கோங்க. முடிஞ்ச வரைக்கு ஹாஸ்பிட்டலுக்கு நிறைய விசிட்டர்ஸ் கொண்டு வராதீங்க. அது வரவங்களுக்கும் நல்லதில்லை. ஆஸ்பத்திரிக்கும் நல்லதில்லை."

கைதட்டி அவர்களை கிளம்பச் சொன்னாள்.

சந்திரசேகரின் மனைவி சாரதா வெளியே வந்து தனக்கு வேண்டும் என்கிற புடைவையைச் சொல்ல, அவைகளையும் சந்திரசேகரன் குறித்துக் கொண்டார்.



"ஏம்ப்பா... உங்கப்பா, அம்மாவுக்கு சொல்ல வேண் டாமா?"

"சொல்லணும். நான் உங்களை கொண்டு போய் இறக்கி விட்டுட்டு வண்டி எடுத்துண்டு உங்க வீட்டுக்குப் போய் அங்கேர்ந்து கார்ல ஒரு க்ரூப்பை கொண்டு வந்துடறேன். அக்கா, தங்கை, அண்ணா, மன்னி எல்லாரும் வருவாங்க. அத்தனை பேரையும் ஒரே வண்டியில் கொண்டு வர்றதா, ரெண்டு ட்ரீப் அடிக்கறதா."

"அப்பா... எல்லாரையும் கூட்டிண்டு வரணுமா?"

"வரணும்னுவாங்க... வேணாம்னு நர்ஸ் சொல்ற மாதிரி நான் சொல்ல முடியுமா? எட்டிப் பார்த்துட்டு போறேன்னு வாங்க. சரின்னு சொல்லணும். நான் போய் டாக்ஸி ஏற்பாடு பண்ணிடறேன்."

"தீட்டுப்பா. கோயிலுக்கு எங்கயும் போயிடாத."

"போகமாட்டேன். தெரியும்."

கணேசனின் தந்தையும், தாயும் வாடகைக் காரில் வந்து இறங்கினார்கள். சந்திரசேகரை ஓடி வந்து கணேசனுடைய தகப்பனார் தழுவிக் கொண்டார்.

"ரொம்ப சந்தோஷம். ரொம்ப சந்தோஷம், கடவுளுடைய கிருபை. என்னடா ஒண்ணும் போனையே காணுமேன்னு கவலைபட்டுண்டிருந்தேன். குழந்தையைப் பார்க்கலாமா?"

இவருக்கு அவர் சொல்லி, அவருக்கு இவர் சொல்லி என்று செய்தி பரவ, அலை அலையாய் வந்து மருத்துவமனை யில் உறவினர்களும், நண்பர்களும் இறங்கினார்கள்.

சாவித்திரியை கட்டிக் கொண்டார்கள். குழந்தையை தொட் டுப் பார்த்தார்கள்.

யாரையும் தடுக்க முடியவில்லை. எல்லோருமே சந்தோ ஷத்தின் உச்சத்தில் இருந்ததால் தள்ளிப்போ என்று விரட்ட முடியவில்லை.

"குழந்தை அழறது. அப்புறம் பார்த்துக்கலாமா?" என்று ஒருவரிடம் பணிவாக சந்திரசேகர் கேட்டபோது, 'குழந்தைன்னா அழத்தான் அழும். அழுதாதான் குழந்தை. அழாத இருந்ததுன்னா பிரச்சனை சுவாமி. அழட்டும். குழந்தை நன்னா அழட்டும். அழ, அழ உடம்புல இரத்தம் பெருகி ரொம்ப பலசாலியா இருக்கும். பொண் குழந்தை அழுதா அழகு. சங்கீதம் வரும், முகம் லட்சணமாகும்.'

வேகமாக பதில் சொல்லி சந்திரசேகரின் வாயை அடைத்தார்கள்.

சந்திரசேகரும், கணேசனும் வீட்டிற்குப் போய் ஒரு அறையை சுத்தமாக ஒழித்து ஒட்டடையை அடித்து கீழே பெருக்கி வென்னீர் விட்டு அலம்பி, மூலை முடுக்குகளில் மருந்து அடித்து, கதவு திறந்து வைத்திருந்தார்கள். வேறு படுக்கை விரிப்பு விரித்தார்கள், ஜன்னல் திரைச்சீலையை மாற்றினார்கள். காலிங்பெல் அதிரடியாக இருக்கிறதென்று அதை மெல்லிய ஓசையாக வேறொரு கருவியை கொண்டு வந்து வைத்தார்கள். சமையல் அறை புகை, ஹாலுக்கு வரக் கூடாது என்று அங்கு ஒரு எக்ஸாட் ஃபேன் போட்டார்கள். சத்தமே இல்லாத ஒரு ஃப்பெடஸ்டல் ஃபேன் வாங்கினார்கள். தொட்டிலும் வேண்டாம் தூளியும் வேண்டாம் குழந்தை கட்டிலிலேயே இருக்கட்டும். அதுதான் அவளுக்கு நல்லது என்று கணேசன் ஆணித்தரமாகச் சொல்ல, தொட்டில் வாங்கும் திட்டத்தை அவர் கைவிட்டார்.

மாப்பிள்ளையின் அப்பாவும், அம்மாவும் தாம்பரம் தாண்டி சேலையூரில் தனியாக வீடு கட்டி சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள். மாப்பிள்ளைக்கு நுங்கம்பாக்கத்தில் வேலை இருந்ததால் ராஜா அண்ணாமலைபுரத்தில் ஒரு படுக்கை அறை கொண்ட அடுக்குமாடி போர்ஷனில் குடியிருந்தார்கள். ஏழாவது மாசம்தான் மகள் வீட்டுக்கு வந்தாள்.

மயிலாப்பூரிலுள்ள சந்திரசேகர் வீட்டிற்கு மாப்பிள்ளை வருவதும் போவதுமாக இருந்தான். ஞாயிற்றுக்கிழமை காலை



ராஜா அண்ணாமலை புரத்திற்குப் போய் மாப்பிள்ளையோடு அந்தப் போர்ஷன் முழுவதும் சுத்தம் செய்து மாப்பிள்ளைக்கு துணிகள் தோய்த்து உதவி செய்து படுக்கை விரிப்புகள் மாற்றி சமையல் அறையில் பேப்பர்கள் மாற்றி என்று பல் வேறு உதவிகளை சந்திரசேகர் செய்துவிட்டு வருவார். முதலில் வேகமாக மறுத்த மாப்பிள்ளை பிறகு பேசுவதற்கு சரியான துணை என்று சந்திரசேகரோடு நெருங்கிப் பழக ஆரம்பித்தான்.

மாப்பிள்ளை கம்ப்யூட்டர் கம்பெனியின் இன்ஜினியராக இருந்தான். இருபத்தைந்தாயிரம் ரூபாய் சம்பாதித்தான். கையில் இருபதாயிரம் ரூபாய் வாங்கினான்.

கார் வாங்கிடலாம். ஆனா, வீண் செலவு. மோட்டார் சைக்கிள் போதும் என்று அடக்கமாக செலவழித்தான். கெட்டப் பழக்கங்கள் இல்லாது இருந்தான்.

"பார்ட்டியெல்லாம் நடக்கும்போது குடிக்க சொல்வாளே மாப்பிள்ளை. என்ன பண்ணுவேள்?"

"டம்ளர்ல ரொப்பிப்பேன் மாமா. பேரரை வந்து கோக்க கோலா ஒண்ணு ஊத்தி வைக்க சொல்லுவேன். அழகா இதை ஒரு ஓரம் வச்சுட்டு கோக்ககோலா டம்ளரை எடுத்துண்டுடுவேன். ஒரு தடவை வாய் தப்பி ஒரு பையன்கிட்ட இதை சொல்லிட்டேன். இன்னிக்கு குடிச்சே ஆகணும்னு சொல்லி கண் எதிர்க்க கலந்து கொடுத்து குடின்னான். குடிச்சேன். அது ஒண்ணும் பண்ணலே, ஏன்னா குடிக்கறபோதே இந்த சனியன் என்னை ஒண்ணும் பண்ணக்கூடாதுன்னு ஒரு எதிர்ப்போட இருந்ததுனால அது சாதாரணமா போயிடுத்து. கூட ரெண்டு தடவ ஒண்ணுக்கு போனது தவிர வேற எந்த தொந்தரவும் இல்லை. அதுக்கப்புறம் இதை யார்கிட்டையும் நான் சொல்றதில்லை. குடிக்கிற ஆளா, அப்பப்போ குடிக்க முடியும்ங்கற ஆளாவே நான் இருக்கேன்."

"ஏன் மாப்பிள்ளை குடிக்க மாட்டேன்னு சொன்னா என்ன?"

"அவங்களுக்கு கோபம் வரும் மாமா. புறக்கணிக்கறாங்க. ஒரு பெரிய கும்பல் நம்மைச் சுத்தியிருக்கற கும்பல், அதுக்கு குடிக்கறதுல ஈடுபாடு இருக்குன்னா எனக்கு ஈடுபாடு இல்லைன்னு நீங்க காண்பிக்கறது உங்களை தனிமைப் படுத்தும். அப்புறப்படுத்தும். அன்னியப்படுத்தும்."

"குடிக்கறதுக்கு மட்டும்தான் இந்த மாதிரி ஏமாத்தணுமா? சிகரெட் குடிக்கச் சொன்னா?"

"அதை யாரும் கம்ப்பல் பண்றதில்லை. சிகரெட் நோய்னு நிறைய பேருக்குத் தெரியும், பிடிச்சுட்டா விட முடியாதுன்னு தெரியும். ஆனால், நான் அங்கயும் திடமா இருந்திருக்கேன். ஒரு அமெரிக்கன் சிகரெட் குடி அப்படின்னு டப்பா நீட்டின போது ஒரு சிகரெட் எடுத்து பத்தவச்சு நிதானமா குடிச்சேன். எங்க ஆபீஸ்ல எல்லாருக்கும் ஆச்சரியம். எப்படி அப்படின்னு கேட்டாங்க. நிறைய பேர் சிகரெட் குடிக்கறதை பார்த்திருக்கேன். அதே மாதிரி நானும் பிடிச்சேன்னு சொன்னேன். உனக்கு இருமலையேன்னு கேட்டாங்க. அது ரொம்ப மைல்ட் சிகரெட்டு. இருமல் வராது அப்படின்னேன். அந்த சிகரெட்டுக்கு அப்பறம் நான் வேற சிகரெட் பிடிக்கவேயில்லை. பிடிக்கணும்னு தோணலை."

"நான் இந்தக் கேள்வியை கேட்கப்படாது. இருந்தாலும் கேட்கறேன், பொம்மனாட்டிகள் பத்தி உங்க ஆபீஸ்ல எப்படி பேசுவாங்க?"

"எல்லா ஆபீஸ்லயும் பேசற மாதிரிதான் இழிவா, ஜொள்ளு விட்டுண்டு இதைப்பாரு, அதைப்பாருன்னு சொல்லிண்டு பேசறாங்க. இப்படி பேசணும்னு உடுத்திண்டு வர பொம்பளைங்களும் இருக்காங்க. எங்க ஆபீஸ்லயும் லேடீஸ் நிறைய பேர் ஒர்க் பண்றாங்களே. விதவிதமான பெண்கள் இருக்காங்களே. வரது போறது தெரியாம இருக்கிற பெண்கள், அதிகமா பேசாத பெண்கள், நிறைய பேசற பெண்கள், எவனாவது பேசினா போதும் உயிரை வாங்கிடற பெண்கள் அப்படின்னு



விதவிதமா இருக்காங்க. லேடீஸை கவிழ்க்கணும்னு இடையறாது போராடற ஆண்களும் இருக்காங்க."

"பெண்கள் கேலி செய்யற ஆண்கள் கூட்டத்துக்கு நடுவுல நீங்க இருக்கும்போது என்ன பண்ணுவீங்க?"

"சிரிச்சுட்டு சும்மா இருந்துடுவேன்."

"நீங்க கேலி பண்ணுவீங்களா?"

"உடம்பு ரீதியா கேலி பண்ணத் தோணாது. ரொம்ப அலட்டிக்கற பொண்ணுங்களை, தான் அழகின்னு அடிக்கடி விதம் விதமா வெளிப்படுத்தற பெண்களை கொஞ்ச நேரம் கேலி பண்ணத் தோணும். அப்புறமா அவங்க அப்படித்தான். அதனால எனக்கென்ன கெடுதல்னு சைலண்ட்டா இருந்துடுவேன். பெண்கள் அப்படிங்கற போது எனக்கு ஒரு பரிதாப உணர்ச்சிதான் அதிகம் வருது. அதனால் கேலி கம்மியா இருக்கும்.

"ஏன் பரிதாப உணர்ச்சி அதிகமா வரணும்?"

"நாம எந்தப் பெண்களை பார்க்கறோம்? வேலைக்கு வர பெண்களைத்தானே பார்க்கறோம். வீட்டுக்குள்ள இருக்கற பெண்களை நாம் பார்க்கறதில்லையே. நம்மோட அவங்களுக்கு ஒண்ணும் பெருசா காண்டாக்ட் இல்லையே. இப்படி வேலைக்கு வர பெண்களைப் பார்க்கறபோது இது இவங்களுக்கு தேவையில்லாத விஷயம் அப்படின்னு எனக்குத் தோன்றது. அதை வெளிய சொல்லவும் கூடாது. சொல்லி மாட்டிண்ருக்கேன்.

உங்க வீட்டுல உட்கார்ந்து பத்து பாத்திரம் தேய்ச்சு பெருக்கிண்டிருந்தாக்கா உனக்கு ரொம்ப பிடிக்குமா? உங்களோட சமதையா ஆபீஸ் வந்துட்டா உங்களுக்கு பொறாமையா அப்படின்னு திருப்பிக்கிட்டாங்க. மன்னிச்சுடுங்கம்மான்னு நான் கை கூப்பி நகர்ந்துட்டேன். அவங்களுக்காக நாம பரிதாபப்பட்டாலும் அவங்க அதை எடுத்துக்க மாட்டேன்றாங்க. உண்மையா பரிதாபப் படறோம்றதும் அவங்களுக்கு தெரியலை. நமக்குப் போட்டியா வந்துட்டாளே அப்படின்னு ஒரு ஆணா

திக்க மனோபாவத்தோட நாம பேசறதா நினைக்கறாங்க. ரொம்ப கடுமையா தாக்கறாங்க. அவங்களுக்கு கேலி பண்ற வனைவிட தன்னைப்பார்த்து பரிதாபப்படறவனைப் பார்த்தா ரொம்ப கோபம் வரும். ஆனால், எனக்கோ நீ ஏன் இங்க வேலைக்கு வந்து இந்த அவஸ்தை படற? இத்தனை பேர் நடுவுல ஏன் உட்காந்து இந்த வேதனைப்படற? அப்படின்னு ஒரு எண்ணம் வரும். பேசுவானேன். செருப்படி வாங்கு வானேன். அதனால் நான் கேலி பண்றதுமில்லை. பரிதா பத்தை வெளிய பகிர்ந்துக்கறதும் இல்லை. முடிஞ்சளவுக்கு தள்ளி நிக்கிறது.''

"உங்களுக்கு பிடிக்காத விஷயம் வேற என்ன மாப் பிள்ளை?"

"சீட்டு ஆடறது கொஞ்சம் கூட பிடிக்காது. ஆனால், மேனேஜ்மெண்ட் தியரியில் ஒரு முக்கியமான விஷயம் உண்டு. யாராவது உயர் அதிகாரிகிட்ட சீட்டாடி தோத்துட்டா அந்த உயர் அதிகாரிக்கு தன் கீழ வேலை செய்யறவனை ரொம்ப பிடிக்கும். இதுவொரு ஐரோப்பிய தத்துவம். மேனேஜ் மெண்ட் யுத்தி. நாலு ஆட்டம் ஆடினேன். நாலு ஆட்டத்துல யும் கணேசன் ஃபுல் விட்டான் அப்படின்னு சந்தோஷமா பாஸ் சொன்னாக்க, நாம பரிதாபமா மூஞ்சிய வச்சுண்டாக்க... வாடா, போனா போறது. டேய் வாடா டிபன் சாப்பிடலாம் அப்படின்னு அந்த பாஸ் பரிதாபப்பட்டு கூட்டிண்டு போவார். நெருக்கமாக இருப்பார் அப்படின்னு ஒரு மனோ தத்துவ பாடம் உண்டு."

"நிஜம்தானா அது?"

"நூத்துக்கு நூறு சதவீதம் நிஜம். அதேசமயம் பாஸ்கிட்ட நாலு தடவை ஜெயிச்சோம்னா நம்மள மாதிரி அயோக்கியன் யாருமில்லைன்னு அந்த முதலாளி தீர்மானம் பண்ணிடுவான். அந்த உயர் அதிகாரிக்கு இதெல்லாம் கொஞ்சம்கூட பிடிக் காத போயிடும். உயர் அதிகாரியோட சீட்டு ஆடறதா இருந்தா



தோக்கறதுக்கு உடனடியா மனசை ப்ரிபேர் பண்ணிக்கலாம் அப்படின்னுதான் நம்ம மனோதத்துவ சட்டம் சொல்லுது."

"முப்பது வயசுல இவ்வளவு ஆழமா மனுஷாள பார்க் கறேளே எதனால?"

வியப்போடு கணேசனைப் பார்த்து சந்திரசேகர் கேட்டார்.

"பத்து வயசுலயே ஆரம்பிச்சுட்டேன் மாமா. ஏன் இப்படி மனுஷாள உத்துப் பார்க்க ஆரம்பிச்சேன்னு எனக்குப் புரி யலை. ஆனா, எனக்கு ரொம்ப பிடிச்ச விஷயம் மனுஷாளை உத்துப் பார்க்கறது. இதெல்லாம் உங்க பொண்ணுகிட்ட சொன்னா கத்துவோ. நான் என்ன காரியம் பண்ணேன் தெரியுமா? பத்து வயசுல எங்க தெருவிலயே ஒருத்தர் வீட்ல சாவு. ஒரு அநியாய சாவுன்னு வச்சுக்கோங்களேன். முப்பத் தஞ்சு வயசுல ஆளு. பீச்சுக்கு மனைவியோட குழந்தையோட போயிட்டு அலையில நின்னுருக்கான். பெரிய அலை வந்து ஒரு குழந்தைய பிடுங்கிண்டு போயிடுத்து. குழந்தைய காப் பாத்தணும்ங்கறதுக்காக ஓடிப்போய் குழந்தைய தூக்கி கொண்டு வரும் போது ரெண்டாவது அலை வேகமா அடிச்சு குழந்தைய விட்டுட்டு இவனை மட்டும் இழுத்துண்டு போயி டுத்து. நாலஞ்சு பேர் பாய்ஞ்சு உள்ள போயிருக்காங்க. ஆனா, யாருக்கும் கிடைக்கலை. ரொம்பதூரம் போயிட்டான். கண்ணு முன்னாடி ரெண்டு மணி நேரம் தடயமே கிடைக்கலை. பாடி ரெண்டுமணி நேரம் கழிச்சு தானா கரையில ஒதுங்கிச்சு. புருஷன் முதுகை பிடிச்சுண்டு மடியில் குழந்தை வச்சுண்டு சந்தோஷமா போனவோ, அலறலா செத்த புருஷனோட திரும்பி வந்தா. அந்தப் பேட்டை முழுக்க ஆடிப்போச்சு. எங்க தெருவுல அவர் குறுக்கவும், நெடுக்கயும் மோட்டார் சைக் கிள்ல வோவார். அனேகமா அவர் ஒருத்தர்கிட்டதான் அந்த மாதிரி ராயல் என்ஃபீல்ட் மோட்டார் பைக் இருந்தது. டப்டப் புனு சத்தம் வரும்போது நாங்களெல்லாம் எட்டிப் பார்ப்போம். அவர் போறத வேடிக்கை பார்ப்போம்.

'எப்பவோ எனக்கு உடம்பு சரியில்லாதபோது பின்னால உட்கார வச்சு கூட்டிண்டு போயிருக்கார். ஒரு மாதிரி ஹீரோ. அவர் செத்துப் போயிட்டார்ன்றத என்னால தாங்கவே முடியலை. கும்பலோட் கும்பலா உள்ள போய் அங்க அவர் தலைமாட்டு பக்கத்துல உட்கார்ந்துட்டேன். எதுக்குத் தெரியுமா? மத்தவங்களெல்லாம் எப்படி அழறாங்கன்னு பார்க்கறதுக்கு. நானும் அழுதேன். மறுநாள் தினத்தந்தியில் நான் தலைமாட்ல உட்கார்ந்திருக்கிற போட்டோ வந்தது. எங்கப்பா அடி பின்னிட்டார். ஏண்டா போனேன்னு கேட்டார். வேடிக்கை பார்க்கறதுக்கு போனேம்பான்னு சொன்னேன். திரும்பியும் அடிச்சார் எங்கப்பா. சாவை வேடிக்கை பார்க்கற ஆளாயிட்டியா நீ அப்படின்னு அடிச்சார், எனக்கு வேடிக்கை பார்க்கறதுன்னா அவ்ளோ ஆசை மாமா.''

"அங்க என்ன வேடிக்கை பார்த்தீங்க?"

"யார் எப்படி அழறா, பொய்யா அழறது எப்படி, நிஜமா அழறது எப்படி, திகைச்சுப்போய் அழறது எப்படி, பெரிய இழப்புல அழறது எப்படி, ஒப்புக்கு அழறது எப்படின்னு விதம் விதமா பார்த்துட்டேன்."

"கடவுளே... ஆச்சரியமா இருக்கு."

"எனக்கும் ஆச்சரியமாத்தான் இருக்கு. நான் ஏன் அப்படி இருந்தேன்னு எனக்குத் தெரியவே இல்லை."

"அதுல என்ன தெரிஞ்சுது?"

"ஒரு வாரம் திரும்பத் திரும்ப பல பேர் முகத்தை நான் யோசனை பண்ணி, யோசனை பண்ணி திரும்ப கொண்டு வந்தேன். சரி. இவர் தப்பு, இவர் நல்லவர். அவர் கெட்டவர்னு நானா பிரிச்சு வச்சுண்டேன். மறுபடியும் அவங்க நல்லவங்களா கெட்டவங்களான்னு பார்க்கறதுக்குண்டான சந்தர்ப்பம் எனக்கு கிடைக்கலை. ஆனாலும், இப்படிப் பிரிச்சு பிரிச்சு ஒவ்வொருத்தரையும் ஒவ்வொரு பாக்ஸ்ல போட்டு வைக்கிற வழக்கம் எனக்கு சின்ன வயசுலயே வந்துடுத்து.



கிரிக்கெட் மேட்ச்சுக்கு போவேன் மாமா. கிரிக்கெட் பார்க்கறதுக்கு இல்லை. யார் யார் எப்படி கூச்சல் போடறாங்கன்னு பார்க்கறதுக்கு. அறுபது வயசு ஆள் டான்ஸ் ஆடறாரே அவர் மனசு எப்படியிருக்கும் அப்படின்னு பார்க்கறதுக்கு, அங்கங்க போய் ஒவ்வொருத்தரும் பண்ற சேஷ்டைய, முகக் கோணலை அதுலேர்ந்து வர பாவங்களை பார்க்கறதுதான் என்னுடைய வேலை.''

"உங்களை நீங்களே பார்த்துப்பீங்களா?"

"பார்த்துக்குவேன். மத்தவங்க என்ன பண்ணாங்களோ அந்த உணர்ச்சி என் முகத்துல வரபோது எப்படியிருக்குன்னு கண்ணாடி முன்னாடி பார்த்துப்பேன்.''

"நீங்க சொல்றது புரியலையே."

மாப்பிள்ளைக்கு அருகே உட்கார்ந்து வியப்போடு சந்திர சேகர் கேட்டார்.

"அந்தம்மா புருஷன் செத்துப் போயிட்டான்னு அந்தம்மாவுடைய அம்மா அழறாங்க. அந்த ரெண்டு பேரும் அழறா மாதிரி நான் கண்ணாடி முன்னாடி நின்னு நெஞ்சுல அடிச்சுண்டு என் முகம் அப்போ எப்படியிருக்குன்னு பார்ப்பேன்."

"கடவுளே... என்ன இது? என்ன வயசு அப்போ?"

"பத்து... பன்னெண்டு வச்சுக்கோங்களேன்."

கணேசன் சாதாரணமாகச் சொன்னான்.

"புரியலையே. ஒரு பன்னெண்டு வயது பையனுக்கு இது ஏன்னு எனக்குப் புரியலையே."

சந்திரசேகர் ஆவலாக பரபரத்தார்.

"ஒவ்வொருத்தருக்கும் உள்ள ஒவ்வொரு பழக்கம். ஒரு ஹாபி. எனக்கு இதுதான் ஹாபி. அதே மாதிரி ஊ... ஊ...ன்னு அழறா மாதிரி வேஷங்கட்டறாங்களே அந்த மாதிரியும் பண்ணிப் பார்ப்பேன்."

"கடவுளே... ரொம்ப கெட்டிக்காரப் பிள்ளையா இருந்திருப்பீங்கன்னு நினைக்கறேன்."

"அப்படி சொல்றதுக்கில்லை. மார்க்கெல்லாம் சுமாராத் தான் இருக்கும். எழுவது பர்சென்ட்டுக்குத்தான் படிப்பேன். அறுபதுலேர்ந்து அறுபத்தஞ்சு பர்சென்ட் வரும், எட்டாவது ரேங்க், ஒன்பதாவது ரேங்க்குன்னு எடுப்பேன். 'கணேசா என்றைக்கு முதல் ரேங்க் வாங்கப் போகிறாய்' அப்படின்னு ஒரு மாதிரி தமிழ்ல, எங்க க்ளாஸ் வாத்தியார் கேட்டார், வாங்க மாட்டேன் ஐயா அப்படின்னு நான் பதில் சொன்னேன்... ஏண்டா... என்னாச்சு உனக்குன்னு கேட்டார். ஃபர்ஸ்ட் ரேங்க் வாங்கிட்டு அப்புறம் செகண்ட் ரேங்க் வாங்கினா வேதனைப் படும். எட்டாவது ரேங்க் வாங்கிட்டு ஒன்பதாவது வாங்கி னாலோ அல்லது ஏழாவது ரேங்க் வாங்கினாலோ ஒரு கஷ்ட மும் இல்லை. அதனால இங்கயே இந்த மாதிரியே படிச்சாப் போதும்னு நினைக்கறேன் ஸார். அப்படின்னு சொன்னேன்."

"வாத்தியார் என்ன சொன்னார்?"

"நீங்க பெரியவங்க. உங்களுக்கு எல்லாம் தெரிஞ்சுருக் குன்னு கை எடுத்து கும்பிட்டார்."

சொல்லிவிட்டு கணேசன் சிரித்தான்.

சந்திரசேகரும் சிரித்தார்.

"நிஜமாவே ஏதோ தெரிஞ்சுருக்கு உங்களுக்கு இல்ல."

சந்திரசேகர் வியப்போடு தொடர்ந்து பேசினார்.

"அந்த வாத்தியாரும் அப்படித்தான் சொன்னார். இந்தக் கூட்டத்துலயே நீ வித்தியாசமா இருக்கடா. ரொம்ப சந்தோ ஷமா இருக்கு உன்னை பார்க்கறபோது அப்படின்னு சொன் னார். அத்தோட விடலை, ஒரு வேலையும் கொடுத்துட்டாரு."

"என்ன வேலை?"

"எனக்கு கொஞ்சம் காசு கஷ்டம்டா, ஒரு ஆயிரம் ரூபா கொடுத்தாகணும். சம்பாதிச்சு என்னுடைய உடன் பிறந்த சகோதரிக்கு அனுப்பி ஆகணும். அவங்க கஷ்டப்படறாங்க. ஆயிரம் ரூபா டியூஷனுக்கு நீ ஏற்பாடு பண்ணணும். நம்ம க்ளாஸ்ல யார் யார் டியூஷனுக்கு சரிப்படுவாங்க, எவ்வளவு கேட்கலாம் அப்படின்னு கொஞ்சம் விசாரிச்சு சொல்லணும். நான் சொன்னதா சொல்லப்படாதுன்னு சொன்னார்."



"ஐய்யய்யோ... வம்பா இருக்கே. பத்து வயசுப் பையன் கிட்ட இப்படியா சொல்வா?"

"அவர் சொன்னார், நான் செய்தனே. அறுபது பேரை ஏற்பாடு பண்ணி கொடுத்தேன். ஆயிரத்து இருநூறு ரூபா பீஸ் வந்தது. டியூஷனக்கு வறியான்னு கேட்டார். எனக்கு தேவை யில்லையே."

"இதனால் உனக்கு என்ன லாபம்?"

"மார்க். க்ளாஸ் டீச்சர் மூணு பேப்பர் திருத்துவார். இங்கி லீஷ், ஹிஸ்டரி ஜியோகரபி, மேத்த மேடிக்ஸ் மூணுலயும் பத்து பத்து மார்க் கூட போட்டுருவார். அஞ்சாவது ரேங்க்குக்கு வந்துட்டேன். எங்கப்பாவுக்கு ரொம்ப சந்தோஷம். புதன் கிழமை... புதன்கிழமை அந்த வாத்தியாருக்கு கடைசி ஃபீரி யடா இருக்கும். அப்போ நான் பர்மிஷன் கேட்டு எங்கே யாவது போயிடுவேன்."

"எங்க போவீங்க?"

சந்திரசேகர் வியப்போடு கேட்டார்.

"நான் அடிக்கடி போற இடம் மியூசியம், இல்லைன்னா ஹார்பர். ஞாயித்துக்கிழமை காலையில் ஏரோட்ராமுக்குப் போய் ஏரோப்பளேன் இறங்கறதையும், ஏறுவதையும் வேடிக்கை பார்ப்பேன். ரயில்வே ஸ்டேஷனுக்கு போய் உட் காந்துப்பேன். மாம்பலம் டு தாம்பரம் ஃபர்ஸ்ட் க்ளாஸ் ஆஃப் டிக்கெட். பதினாறு ரூபா அம்பது பைசா, அதுல வாங்கிட்டு போவேன். நீயெல்லாம் அதுல ஏறக்கூடாது, இறங்கு அப்ப டின்னு கீச்சுக்குரல்ல சில பெரிய மனுஷாள் கத்த, டிக் கெட்டை கண்முன்னாடி காமிச்சு பாக்கெட்ல வச்சுப்பேன். ஒரு மாதிரி ஆச்சரியமா பார்ப்பாங்க. அப் அண்ட் டவுன் ரெண்டு தடவை போயிட்டு வந்துடுவேன்.

"என்ன வயசு?"

"பன்னெண்டு"

கணேசன் திடமாக பதில் சொன்னான்.

"ஃப்ரெண்ட்ஸே கிடையாதா?''

"இருந்தாங்க. ஒரு பதினாறு வயசுல சரியா வந்து சேர்ந் தாங்க."

"யார் யாரு?"

கதை கேட்பது போல் சுவாரசியமாக மாப்பிள்ளைக்கு இட்லிகள் எடுத்து வைத்து குழைத்த மிளகாய்ப் பொடியை ஊற்றிக் கொண்டு சந்திரசேகர் கேட்டார்.தனக்கும் இட்லிகள் எடுத்து வைத்துக் கொண்டார். மாப்பிள்ளை எழுந்து போய் குளிர்ந்த ஜலம் கொண்டு வந்து டம்ளரில் ஊற்றினான்.

"பிண்டோ சாலமன்னு ஒரு ஆங்கிலோ இண்டியன் பையன். வெங்கடகிருஷ்ணன்னு ஒரு ஐயர் பையன். சபா பதின்னு ஒரு ஷெட்யூல்ட் காஸ்ட் பையன். அந்த சபாபதி என்னை விட ரொம்ப க்ரியேடிவ். ரொம்ப கெட்டிக்காரன். ஹண்டிங் போலாம் அப்படின்னு சொல்லுவான்."

"என்னது?"

"வேட்டையாடறதுக்கு."

"மெட்ராஸ்லயா?"

"ஆமாம்."

"என்ன வேட்டை ஆடுவீங்க?"

"ஏதாவது வினோதமான ஜந்து கிடைச்சா வேட்டை ஆடுவோம்."

"எங்க?"

"அடையார் பாலத்துக்கு கீழ இறங்கி இடுப்பளவு ஆழத் துல நீந்தி அங்க இருக்கற முள் புதருக்கு நடுவுல ஏதாவது கிடைக்குதான்னு பார்ப்போம். கவர்னர் பங்களாக்குள்ள புகுந்துடுவோம். பொன் வண்டு, பச்சோந்தி, தண்ணி பாம்பு, கீரி, வெள்ளெலி அப்படின்னு பிடிப்போம். தட்டாமாலை



சுத்தி ஆந்தையை கீழ் விழப்பண்ணி அதை பையில போட்டு எடுத்துண்டு வந்துடுவோம்.

"புரியலையே."

"மரத்துல ஆந்தை நின்னுண்டிருக்கும். அது எதிர்க்க போய் நின்னு விறுவிறுன்னு சுத்தினா போதும். பொத்துனு ஆந்தை கீழ விழுந்திடும். இது ஆந்தை பிடிக்கறதுக்கு ஒரு வழி.

"கடவுளே... இந்த பச்சோந்தி எதுக்கு?"

"வீட்ல வளர்க்கலாம். கூப்பிட்டா வரும் ஆனால் கொஞ்சம் மெல்ல வரும். டேபிள் முனையில் விட்டுட்டு இந்தப் பக்கம் டக்டக்குனு தட்டினா வரும். ஆனா, அதுக்கு சாப்பாடு போடறதுதான் கஷ்டம்."

"என்ன?"

"நிறைய கரப்பான்பூச்சி வேணும். அதுக்காக சாக்கடை திறந்து கரப்பான் பூச்சி எடுப்போம்."

"ஈஸ்வரா..." சந்திரசேகர் தலையில் அடித்துக் கொண்டார்.

"கரப்பான் பூச்சிக்கு ஐயோங்கறீங்களே. அடையார் ஆத்து பக்கத்துலேர்ந்து நாங்க மண்புழு நோண்டி எடுத்துண்டு வருவோம்."

"எதுக்கு?"

"மீன் வளர்ப்போம். மீனுக்கு ரொம்ப பிடிச்ச உணவு மண் புழுதான்."

"இதெல்லாம் உங்க அப்பாக்கு தெரியாம எப்படி செய்வீங்க?"

"அங்கங்க ரகசியமா வச்சுருப்பேன். பாத்ரூம்ல மண்புழு. தோட்டத்துல கரப்பான் பூச்சி. என்னுடைய புஸ்தக ஷெல்ப் புல பொன் வண்டு."

"பச்சோந்தி எங்க இருக்கும்?"

ஆவலாக சந்திரசேகர் கேட்டார்.

"பரணையில எலிக்கூண்டுல வச்சுருப்பேன். அப்பா ஏழு மணிக்கு ஃபேக்டரிக்கு போயிடுவார். எனக்கு எட்டே முக்கா லுக்கு தான் பள்ளிக்கூடம். ஏழுலேர்ந்து எட்டுவரைக்கும் நான் பச்சோந்தியோடதான் இருப்பேன். சிகப்புத் துணிமேல பச்சோந்திய வைக்கறது. பச்சைத் துணிமேல வைக்கறது. வெள்ளைத் துணிமேல வைக்கறது. எப்படி நிறம் மாறுதுன்னு பார்க்கறது இதான் கார்த்தால விளையாட்டு."

"ரொம்ப வித்தியாசமான பையனா இருந்திருக்கீங்க."

"ஆமாம்... ஆனா வெளிய தெரியாது. காமிச்சுக்க மாட்டேன். சைன்டிஸ்ட் ஆகப் போறேன்னு சொல்லிட்டு ஒரு பையன் வெறும் கண்ணாடிக் குடுவையா வாங்கி வச்சுருந்தான். அவன் அம்மாவை ஏமாத்தி காசு வாங்குவான். இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் வாங்கணும் அப்படிம்பான். அம்மாவை ஏமாத்தின காசுல லாட்டரிச்சீட்டு வாங்குவான். முதல் தடவை அம்பதாயிரம் ரூபா காசு விழுந்தது. முப்பதாயிரம் ரூபாய் கைக்கு கிடைச்சுது. எடுத்துண்டு எங்கயோ ஓடிப்போயிட்டான். அதுக்கப்பறம் அவன் வரவேயில்லை. சைன்டிஸ்டா மாறியிருக்கமாட்டான் அப்படின்னுதான் நாங்க நினைச்சோம். நாங்க நினைச்சது போலவே மாறலை. பிஸினஸ் பண்ணான். என்ன பிஸினஸ் சொல்லுங்க பார்க்கலாம்?"

"தெரியலையே."

"லாட்டரிச்சீட்டு வியாபாரம்."

"அப்போ உங்களுக்கு பதிமூணு வயசா?"

"இல்லை பதினாறு. முதல்லயே சொன்னேனே வேட்டையாடப் போவோம்."

"காலேஜ் படிக்கும்போது என்ன பண்ணீங்க?"

பெரிய தொடர்கதை கேட்கின்ற மனோ பாவனையில் மாப்பிள்ளையை விசித்திரமாக மாமனார் பார்க்க, மாப்பிள்ளை மனதுக்குள் சிரித்துக் கொண்டான். முகத்தில் காட்டவில்லை.



"முதல் மூணு வருஷம் இன்ஜினியரிங் காலேஜ்ல கல்ச்சுரல் ப்ரோக்ராம். சுற்றுலா பயணம். செமினார்னு சுத்திண்டிருப்பேன். யாராவது பெரியாள கூப்பிட்டு வச்சுண்டு பேசறது. நாலாவது அஞ்சாவது வருஷம் நான் பார்ட் டைம் ஜாப் போயிட்டேன். அதுல இன்ஜினியரிங் பத்தி எனக்கு தெள்ளத் தெளிவா நிறைய தெரிஞ்சுது."

"நிறைய காசு சம்பாதிக்கணும்னு ஆசையா?"

"இல்லை. காசு இருந்தது. எவ்ளோ கேட்டாலும் அப்பா கொடுப்பார். டை கட்டிண்டு ஆபீஸ் போகணும்னு ரொம்ப ஆசை. ஆபீஸ்ல பார்ட் டைம் ஜாப் பண்றேன்னு காலேஜ்ல சொல்லணும்னு ஆசை. முதல் சேலரி கவரை புக் மார்க்கா ரொம்ப நாளா வச்சுண்டிருந்தேன். எங்க காலேஜ்ல பல பசங்க அதை எடுத்து எடுத்து பார்ப்பாங்க. குறிப்பா லேடீஸ். என்ன சேலரி வாங்கிட்டியான்னு கேட்பாங்க. அஞ்சாம் தேதிதான் சம்பளம். அன்னிக்கு வாங்க கேண்டீனுக்கு போய் கோக் வாங்கித் தரேன்னுவேன். அதுக்காக கேட்கலை. இப்பவே இவ்ளோ சம்பாதிக்கறியே இன்னும் ஒரு வருஷம் போனா எவ்ளோ சம்பாதிப்ப, இன்னும் பத்து வருஷம் போனா எவ்ளோ சம்பாதிப்பேன்னு கேட்பாங்க."

"அவங்களுக்கு உங்க மேல ஒரு கிக்தானா?"

"கிக்குன்னு சொல்ல முடியாது. இவன் ரொம்ப நல்லவன். இவன் ரொம்ப கெட்டிக்காரன். ரொம்ப டேலண்டட். இப்படித் தான் ஏதாவது சொல்வாங்க. நான் ரொம்ப நல்லா ட்ரெஸ் பண்ணமாட்டேன். ட்ரஸ் பண்றதையும் ஒழுங்கா பண்ண மாட்டேன். ஒரு நாள் காலேஜ்ல லஞ்ச் டைம்ல ஷூ கழட்டிட்டு படுத்துண்டு தூங்கறேன். சாக்ஸ் கிழிஞ்சிருக்கு இதைப் பார்த்துட்டு ரெண்டு ஸ்பேர் சாக்ஸ் ஒரு பொண்ணு வாங்கி கொடுத்தா. ஏம்மான்னு கேட்டேன். உனக்கு வாங்கறதுக்கு டைம் இருக்காது. அதனாலதான் வாங்கிட்டு வந்தேன்னு சொன்னா. பதிலுக்கு நான் என்ன பண்ணமுடியும் அப்படின்னு கவலையா கேட்டேன். நான் எப்படி படிக்கணும்னு

எனக்கு ஒரு டைம் டேபிள் போட்டு கொடுங்கன்னு சொன்னா. அவளோட ஒரு நாள் முழுக்க உட்கார்ந்து, அவளைப் பத்தி நிறைய கேள்வி கேட்டு புரிஞ்சுண்டு அவங்க வீடு பத்தி தெரிஞ்சுண்டு ஒரு டைம் டேபிள் போட்டு கொடுத்தேன். அவ ப்ரிலியண்ட் ஸ்டூடண்ட் ஆயிட்டா. க்ளாஸ் ஃபர்ஸ்ட், ஸ்டேட் பர்ஸ்ட, கோல்ட் மெடலிஸ்டுன்னு போயிட்டா. கல்யாணமாகி குழந்தை பொறந்துடுச்சு. நியூசிலாந்துல இருக்காங்க."

"நீங்களும் வெளிநாடு போயிருக்கலாம் மாப்ளே."

"இல்லை எனக்கு அங்க போறதுக்கு இஷ்டமில்லை."

"ஊர்ல இருக்கற அத்தனை பேரும் ஃபாரினுக்கு போகணும்னு ஆசைப்படறான். நீங்க எதனால வேண்டாம்னு சொல்றீங்க?"

"கூட்டி கழிச்சுப் பார்த்தா அது நஷ்டம். எந்த வேலைக்கு ஃபாரின் போகணும்னு ஒண்ணு இருக்கு. எடுபிடி வேலைக்காக வளைகுடா பகுதிக்கு போகக்கூடாது. அமெரிக்கா போயிடலாம். வளைகுடாப் பகுதிக்கு டாக்டரா போகறது நல்லது. புருனே, பர்மா, மலேசியா, சிங்கப்பூர் கூட டாக்டருங்களுக்கு நல்லாயிருக்கும். கம்ப்யூட்டர் இன்ஜீனியரா இருக்கணும்னா அமெரிக்காதான் நல்ல இடம். ஆனா, எந்த ஊருக்குப் போனாலும் இது நம்ம ஊர் இல்லை. எப்போ நம்ம ஊருக்குத் திரும்பப் போறோம் அப்படின்னு ஒரு ஏக்கம் பிடித்து நம்மள உலுக்கும். போக்குவரத்து சார்ஜ். இங்க இருக்கற பொருளாதார நிலை. இதெல்லாம் பார்த்தா கொஞ்சம்தான் லாபம். அந்த கொஞ்ச லாபத்துக்கு ஏகப்பட்ட மன உளைச்சல்கள். பத்து வருஷமா கொண்டாடிண்டிருந்தவன் பதினோராவது வருஷம் பல்லை கடிச்சு பார்ப்பான். அடிக்கறதுக்கு வருவான். இந்த அவ மரியாதையெல்லாம் பொறுத்துண்டு வேற வாழ்க்கைய நடத்தணும். இப்போ வேற ஒரு கெட்டிக்காரத்தனம் இருக்கு."

"என்னது மாப்ளே?"



ஆர்வமாக அது பற்றி எதுவுமே தெரியாத ஒரு மனோநிலையில் சந்திரசேகர் கேள்வி கேட்டார்.

"இந்தியாவுல இருந்தபடியே நல்லா சம்பாதிக்கறதுக்கு ஒரு வழி இருக்கு. வெளிநாட்டோட அமெரிக்கா, ஐரோப்பா, வட இந்தியா நாடுகளோட நாம வியாபாரம் பண்ணணும். அவங்க காசு அடிப்படையில வியாபாரத்தை நடத்தணும். ஆனா, இங்கயே உட்கார்ந்து வேலை செய்யணும்."

"புரியலையே."

"ரொம்ப நாள் முன்னாடி பேங்க் உத்தியோகம்னா, ரொம்ப அற்புதம் அப்படின்னு ஒரு எண்ணம் இருந்தது. ஞாபகமிருக்கா?"

"இருக்கே. நானெல்லாம் பேங்க் வேலைக்கு ரொம்ப ட்ரை பண்ணிட்டு வெறுத்துப் போய் விட்டுட்டேன்."

"ஏன் பேங்க் வேலைக்கு அத்தனை முயற்சி பண்ணீங்க?"

"நல்ல சம்பளம்."

"எப்படி நல்ல சம்பளம்."

"என்னமோ பேங்க்ல நல்லா கொடுப்பான்."

"அப்படி இல்லை, என்னமோ சம்பளம் யாரும் கொடுக்க மாட்டாங்க, இதுல அடிப்படை விதை இருக்கு. பேங்க் சம்பளமெல்லாம் பம்பாய், கல்கத்தா அடிப்படையிலதான் இருக்கும். பம்பாயும், கல்கத்தாவும் அன்னி தேதிக்கு ரொம்ப காஸ்ட்லி சிட்டி. ஆனா, மெட்ராஸ் அப்படி இல்லை. அத்தனை காசு தேவைப்படாது. முந்நூறு ரூபா, நானூறு ரூபாய்க்கு அவங்களெல்லாம் திணறித்திணறி மெட்ராஸ்ல வேலை செய்த போது பேங்க் சம்பளம் அறுநூறு ரூபா. உயர் அதிகாரி சம்பளம் ஆயிரம் ரூபா. இந்த பேங்க் எல்லாம் பணக்காரங்களோட சம்பந்தப்பட்ட விஷயம். லோன் கொடுக்கறதெல்லாம் கிடையாது. அரசாங்கத்தினுடைய அட்டகாசம் பேங்க்ல நுழையாத காலம். ஸ்ரீரங்கத்துலயோ, மாயவரத்துலயோ, கும்பகோணத்துலயோ பேங்க் உத்தியோகம் கிடைச்சு ஒரு உதவி மேனேஜரா

சேர்ந்துட்டா ஆயிரத்து இருநூறு ரூபா சம்பளம் இருக்கும். பணக்காரர்களோடு நட்பு இருக்கும். ஒரு ராஜபோகமான வாழ்க்கை அது. எங்க போனாலும் மரியாதை. நல்ல சம்பளம், குறைச்சலான வேலை நேரம். மெட்ராஸ் சிட்டிக்குள்ள பெரிய ப்ரான்ச்ல வேலைகள் அதிகமிருக்கும். ஆனா, கும்பகோணம் மாதிரி இடத்துல வேலை அதிகம் இருக்காது. ஆனா, பொறுப்பு வேணும்.

என்ன இருந்தாலும் அன்னி தேதிக்கு ஆயிரத்து இருநூறு ரூபான்றது பிரமாதமான சம்பளம். பாம்பே சம்பளம். வீசியடிச்சு செலவு பண்ணாகூட கும்பகோணத்துல நானூறு ரூபா நானூத்தி அம்பது ரூபாய்க்கு மேல செலவாகாது.அந்த மாதிரிதான் இப்போ வேற ஒரு கெட்டிக்காரத்தனம் சென்னை மாதிரி ஊர்ல நடந்துண்டிருக்கு. ஒரு கம்பெனியினுடைய பேலன்ஸ்ஷீட் தயாரிக்கறதுக்கு ஒரு அமெரிக்கன் கம்பெனி, ஆயிரம் டாலர் தயாரிக்கற ஆளுக்கு தருவான். ஆயிரம் டாலர்னா கிட்டதட்ட அம்பதாயிரம் ரூபாய். இதே இடத்துல அஞ்சாயிரம் ரூபாய்க்கு அந்த பேலன்ஸ்ஷீட் தயார் பண்ற ஆட்கள் கிடைப்பா, அந்த மாதிரி ஆட்கள் ஏரோப்ளேன் பிடிச்சு அமெரிக்காக்குப் போய் அங்க உட்கார்ந்து பெரிய கம்பெனியில் கிளார்க் உத்தியோகம் பண்ணி நன்னா செலவு பண்ணாங்க. அமெரிக்கா விட்டு இங்க வரமுடியாத அங்கயே செட்டில் ஆயிட்டு இந்தியாவைப் பத்தின ஏக்கத்தோட செத்து போனாங்க. இப்போ அப்படி இல்லை, அதே ஆயிரம் டாலரை இங்க உட்கார்ந்து வாங்கலாம். அதுக்குக் காரணம் கம்ப்யூட்டர். இன்டர்நெட். இப்போ புரியுதா?''

"இன்டர்நெட்ல எல்லா அக்கவுண்டும் வந்துடுமா?"

"ஆமாம். பேலன்ஸ் ஷீட் வராது. குறிப்பா அங்க ஒரு ஃபாக்டரி இருக்கு. இரும்புத் தொழிற்சாலை. ஆயிரத்து நானூறு பேர் வேலை செய்யறான். அத்தனை பேருக்கும் சேலரி போடறது இங்க சென்னையில இருக்கற ஒரு கம்பெனி."



"சேலரி போடறதுன்னா காசு கொடுக்கறதா?"

"இல்லை, எத்தனை காசை அவனுக்கு கொடுக்கணும்னு சொல்றது. கணக்கு போட்டு காமிக்கறது. சென்னையில இருக்கற ஒரு கம்பெனி. ஒரு பெரிய ஹால் ரெண்டு ரூம் இருக்கற ஒரு ஃப்ளாட்ல பதினஞ்சு கம்ப்யூட்டரோட இருவது பொண்ணுங்க. பத்து பையன்களோட அந்தக் கம்பெனி நடந்துகிட்டிருக்கு. அங்க இருக்கற ஒவ்வொருத்தருடைய வருகைப் பட்டியலும், சம்பள யோக்கியதையும், கூடுதலா உழைச்சா ஓவர் டைம் நேரமும் அதுக்குண்டான காசும் இங்க அனுப்பிடுவாங்க. ஏற்கெனவே அது இவங்களுக்கு தெரிஞ்சுருக்கும். அந்த அடிப்படையில ஆயிரத்து நானூறு பேருக்கும் சேலரி ரசீது அடிச்சு அங்க அனுப்பிடுவான். ஒரு ஆள் அதை மொத்தமும் ஒரு தடவை செக் பண்ணிட்டு அவங்க பேங்க்குக்கு அனுப்பிடுவான். பேங்க் அதை இன்டர்நெட் மூலமா வாங்கி வேலை செய்யறவங்க அக்கவுண்ட்ல இந்தக் கணக்கை பாஸ் பண்ணிடும். ஒண்ணாம் தேதி ஆனவுடனே அவன் காசை வாங்கிண்டு வீட்டுக்கு போயிடுவான்."

"செய்யறதுக்கு அங்க ஆள் இல்லையா?"

"இருக்கு, அதிகமா சம்பளம் கொடுக்கணும். அதுக்குன்னு ஒரு ஆபிஸ் தேடணும். அதனால் ஃபாக்டரி நடத்தறவன் இந்த மாதிரியான ஒரு அக்கவுண்ட்ஸ் ஆபீஸ் நடத்தவே இல்லை. அந்த அக்கவுண்ட்ஸ் பூரா இங்க இருக்கற ஒரு இண்டியன் கம்பெனி பார்க்குது. அங்க ஒருத்தனுக்கு என்ன சேலரி கொடுப்பியோ அதை எங்கிட்ட கொடு. நான் வேலை பண்ணித் தரேன் அப்படின்னு இங்க இருக்கற கம்பெனிக்காக அங்க போய் ஒரு அக்ரிமெண்ட் பண்ணிட்டு வந்துடுவான். அங்க ஒரு அக்கவுண்ட்டுக்கு ஒரு மாசத்துக்கு குறைஞ்ச பட்சம் அம்பதாயிரம் ரூபா சம்பளம். பத்து அக்கவுண்டண்ட் இருந்தாதான் இந்த வேலை பண்ண முடியும். அதே பத்து ஆளுக்கு இங்க அஞ்சாயிரம் ரூபாய் கொடுத்து அந்த வேலையை செய்து முடிச்சுடுவாங்க. நாப்பத்தஞ்சாயிரம் ரூபாய் லாபம். கட்டடத்துக்கு, காபி, தண்ணிக்கு, கம்ப்யூட்ட

ருக்கு அப்படின்னு கொஞ்சம் செலவாகும். அந்த மாதிரி வச்சுண்டாலும் ஒரு பத்தாயிரம் ரூபா போக பாக்கி முப்பத்தஞ்சாயிரம் ரூபா லாபம். முப்பத்தஞ்சாயிரம் ரூபா லாபம் இருக்கே. அதுல இன்னொரு அஞ்சாயிரம் ரூபா வேலை செய்யறவங்களுக்கு கொடுக்கலாமே. இன்னும் உற்சாகமா வேலை செய்வாங்களேன்னு சொல்லிட்டு இந்த மாதிரியான இடத்துல கூடுதலா சம்பளம் கொடுப்பாங்க. கெட்டிக்கார ஆளா தேர்ந்தெடுப்பாங்க. இப்படி ஒரு கம்பெனியோட நிறுத்தாத அமெரிக்காக்குப் போய் ஒரு பத்து கம்பெனியோட இந்த மாதிரி நான் அக்கவுண்ட்ஸ் வேலையை செய்து தரேன்னு அக்ரிமென்ட் போட்டுட்டு வந்துடுவாங்க. கொஞ்சம் அட்வான்ஸ் வாங்கிண்டு இங்க வந்து இறங்கிடுவாங்க. கம்ப்யூட்டர், இன்டர்நெட் கனெக்ஷன் அப்படின்னு முதல்ல செலவு பண்ண வேண்டியிருக்கும். கூடுதலா பத்து பசங்கள போட்டு ராப்பகலா உட்கார்ந்து இந்த வேலையை பண்ணிக் கொடுக்க செம காசு, மாசத்துக்கு பத்து லட்ச ரூபா ரொம்ப எளிதா சம்பாதிக்கலாம். நிகர லாபம் பார்க்கலாம். ஒண்ணே ஒண்ணு, நல்லபடியா வேலை செய்து தரணும். காசு விஷயத்துல தப்பு பண்ணாக்க ரெண்டா கிழிச்சு போட்ருவான். அதனால் தப்பு வராத பார்க்கணும். ஒரு தடவைக்கு ரெண்டு தடவையா சரி பார்த்து அனுப்பணும்.

'பாம்பேல இந்த மாதிரி இன்டர்நெட் கனெக்ஷனோட வேலை செய்யற கம்ப்யூட்டர் கம்பெனிகள் அதிகம். அதுக்கு அடுத்தபடியா சென்னையில அதிகம். மெட்ராஸ்ல கெட்டிக்கார அக்கவுண்டட்ஸ் இருக்காங்க. கம்ப்யூட்டர்ல வேலை தெரிஞ்சவங்க இருக்காங்க. நாம தப்பு பண்ணாகூட கண்டு பிடிச்சு காட்டறவங்க இருக்காங்க அப்படின்ற நம்பிக்கையோட இந்த மாதிரியான வேலை நிறைய நமக்கு கிடைச்சுண்டிருக்கு. அமெரிக்க காசு, சென்னை வாழ்க்கை. பாம்பே சம்பளத்தை எப்படி கும்பகோணத்துல வாங்கிண்டிருந்தாங்களோ, திருநெல்வேலி, செங்கல்பட்டுல வாங்கிண்டிருந்தாங்களோ அந்த மாதிரி இப்போ நடக்குது. கடின உழைப்பு,



கெட்டிக்காரத்தனம். நல்ல ஆங்கிலப் பேச்சு, வேலையை எப்படி எளிதாக்கிக்கலாம்கற கற்பனா சக்தி. இது இருந்தா போதும், பிரமாதமா சம்பாதிக்கலாம். எண்ண முடியாத அளவுக்கு காசு சம்பாதிக்க முடியும். நல்ல டீம் அமைஞ்சுடுச்சுன்னா இன்னும் ஜோரா இருக்கும்."

"அதாவது வேலை செய்யறவங்க."

"ஆமாம். எல்லாராலும் வேலை செய்ய முடியாது. இங்க வேலை செய்யற எல்லாருக்குமே ஆங்கில அறிவு அதிகமா வேணும். அமெரிக்காலேர்ந்து ஒரு போன் வந்தா அதை அட்டெண்ட் பண்ணி பதில் சொல்லக்கூடிய திறமை உள்ளவன் வேணும். அந்த ஆங்கிலம் புரியணும். அதே மாதிரி ஆங்கிலத்துல பதில் சொல்லணும். இதுக்கு சென்னை மாதிரி சிட்டியில் பிறந்து, வளர்ந்து படிச்சு பாஸ் பண்ண கெட்டிக்காரப் பசங்க வேணும். உழைக்கற ஆசை இருக்கணும். இந்த மாதிரி இளைஞர்களை- யுவதிகளை பத்து விதமா டெஸ்ட் பண்ணி எடுத்துப்பாங்க."

"இப்போ சென்னையில் நல்ல சேலரி என்னன்னு நினைக்கறீங்க?"

"பத்தாயிரம் ரூபா. அது இருந்தா நல்லபடியா குடித்தனம் பண்ணலாம். பதினஞ்சாயிரம் சேலரி- இதுதான் ஆரம்பம். எத்தனை முறை வேணும்னாலும் டீ சாப்பிடலாம். மத்தியானம் சாப்பாடு, கம்பெனியே கொடுக்கும். காலையில எட்டு மணிக்கு உள்ள நுழைச்சோம்னா ஏழரை, எட்டு, ஒன்பது வரைக்கும் கூட வேலை இருக்கும், ஒண்ணாம்தேதி, ரெண்டாம் தேதின்னா ராத்திரி பத்து மணி வரைக்கும் வேலை இருக்கும். அஞ்சுலேர்ந்து இருவத்தஞ்சு தேதி வரைக்கும் அத்தனை வேலை இருக்காது. பட்டப்படிப்பு முடிச்சு கம்ப்யூட்டரினுடைய அடிப்படை வேலை தெரிஞ்ச நல்லா இங்கிலீஷ் பேசினா போதும். மத்த விஷயங்களெல்லாம் அந்த இடத்துல சொல்லி கொடுத்துடுவாங்க. இருவத்தி மூணு வயசுல ஒரு மாச சம்பளம் பதினஞ்சாயிரம் ரூபாய்.

'சென்னையில் பார்த்திருப்பீங்களே, ஒரு மோட்டார் சைக்கிள். முதுகுல ஒரு பெரிய பேக். தலையில ஹெல்மெட்டோட வேகமா பசங்க போவாங்க. பொண்ணுங்களும் அந்த மாதிரி முதுகுல பேக்கை மாட்டிண்டு விறுக்விறுக்குனு நடக்கும்.''

"ஆமாம். பார்த்திருக்கேன். எங்க போகுதுங்கன்னு ஆச்சரியமா பார்த்திருக்கேன்."

"இந்த மாதிரி வேலைக்குத்தான்."

"அப்படி என்ன இருக்கும்னு அந்தப் பையிலன்னு யோசனை பண்ணியிருக்கேன்."

சந்திரசேகர் வியப்பாகப் பேசினார்.

"என்ன இருக்கும்... கம்ப்யூட்டர் பத்தின புத்தகம். ஏன்னா... அது மாறிகிட்டேயிருக்கு. தொடர்ந்து தெரிஞ்சுகிட்டே இருக்கணும். அது முடியற படிப்பாவே இல்லை. அடுத்தது சின்ன லஞ்ச் பாக்ஸ். எட்டு மணிக்குள்ள கம்பெனியில் நுழையணும். அதுக்கு மேல சாப்பிட முடியாது. போய் உட்கார்ந்து வேலையை ஆரம்பிச்சுட்டு ஒருபத்து நிமிஷம் ப்ரெட்டோ, இட்லியோ சாப்பிடற மாதிரி ஒரு சாப்பாட்டு பாக்ஸ். இங்க உடம்பு சரியில்லைன்னு லீவு போட முடியாது. லீவு போட்டா அந்த நஷ்டத்தை கம்பெனியும் தாங்காது. நீங்களும் தாங்க மாட்டீங்க. அதனால எப்பவுமே மினரல் வாட்டர் பாட்டில். கண்ட தண்ணியைக் குடிக்காத எப்பவுமே ஆரோக்கியமான தண்ணியைக் குடிக்கறதுதான் அந்த மாதிரி பசங்களுடைய வழக்கம். ஒரு வாக்மென். ரெண்டு மூணு கேஸட். காதுல மாட்டிக்கிற ஹியரிங் சிஸ்டம். ஒருவேளை பிற்பகல்ல வேலையில்லைன்னா அப்படி உட்கார்ந்து பாட்டு கேட்கலாம். கம்ப்யூட்டரை விட்டு எழுந்து போகாமல் அதைப் பார்த்தபடியே சினிமா பாட்டு கேட்டுகிட்டிருக்கலாம். கம்ப்யூட்டர்ல கூப்பிட்டாங்கன்னா டக்குனு பாட்டை நிறுத்திட்டு வேலைக்கு இறங்கிடலாம். முடிஞ்சு போச்சுன்னா மறுபடியும் பாட்டு கேட்கலாம். ஏன் பாட்டு கேட்கறேன்னு கேட்க மாட்டாங்க. இப்போ அந்த மாதிரி ஆபீஸ்ல விதம் விதமான சௌகரியங்கள் வந்துடுச்சு. கம்ப்யூட்டர் எதிர்க்கயே உட்கார்ந்து குண்டாயிடப் போறேமேன்னு சொல்லிட்டு கம்ப்யூட்டரோட கனெக்ட் பண்ணின கார்ட்லெஸ் சிஸ்டத்தை மாட்டி வாய்கிட்ட மைக் கொடுத்துடுவாங்க. இவங்க கம்ப்யூட்டர் எதிர்க்க முன்னயும், பின்னயும் அலைஞ்சுகண்டே அமெரிக்காவுல இருக்கறவனோட பேசலாம். அப்படியே நடந்து போய் பாத்ரூம் போயிட்டு பேசிண்டே வேலையை முடிச்சுட்டு திருப்பி வந்து கம்ப்யூட்டர் எதிர்க்க நிக்கலாம். அசையாத கம்ப்யூட்டரையே பார்த்துண்டு உட்கார்ந்திருக்கணும்னு அவசியமேயில்லை. அங்க பேச்சு முக்கியம், பார்வையும் முக்கியம்."



"என்ன பேசுவாங்க? அதை சொல்லுங்களேன்."

"அமெரிக்காலேர்ந்து அங்க இருக்கற ஒரு மேனேஜர் இங்க இருக்கற ஒரு கிளார்க்கோட பேசுவான். 'முதல் நூறு பேருக்கு போன மாசம் சம்பளம் போட்டது யாரு?'

'ஹரிஹரன்.'

'ஹரிஹரன் நான் பேசறது கேட்குதா?'

'கேட்குது ஸார். சொல்லுங்க.'

'ஒரு தப்பு பண்ணியிருக்கீங்க.'

'என்ன தப்பு?'

"மூணு பேர் ஓவர்டைம் பண்ணாதயே ஓவர் டைம் பண்ணதா சேலரிகூட கொடுத்திருக்கீங்க. இவனும் வாங்கிட்டு இப்போ கேட்டா தலையை சொரியறான். யார் கொடுக்கறது இந்த நஷ்டத்தை?"

"அது யார் யாருன்னு சொல்லுங்க."

அவன் அங்கேயிருந்து பேர் சொல்லுவான். இங்க கம்ப்யூட்டர்ல அடிச்சு. அது என்னான்னு பார்த்து, ஸார் நீங்க சொன்னபடிதான் செய்திருக்கோம். ஓவர்டைம் போட்டதா எனக்கு சிக்னல் இருக்கு. பதினோராம் தேதி ஒரு மணி நேரம்.

பன்னெண்டாம் தேதி ஒரு மணி நேரம். பதிமூணாம் தேதி ஒரு மணி நேரம். அதனால போட்டேன். நீங்க கொடுத்த ஸ்டேட்மெண்ட்டை நான் இப்போ திருப்பி அனுப்பறேன். பாருங்களேன். ஒரு பத்து செகண்ட்ல இங்கேயிருந்து ஒரு ஸ்டேட்மெண்ட் அங்க போகும். ஆமாம்... யார் கொடுத்தாங்கன்னு தெரியலையே. இரு நான் விசாரிக்கறேன். கேட்டுண்டிருக்கறப்பவே வேற நம்பருக்கு ட்ரை பண்ணுவான். அவன் விசாரிக்கறதும் காதுல விழும். அவங்க பேசறத இங்க மூணு பேர், நாலு பேர் உட்கார்ந்து கேட்டுகிட்டருப்பாங்க. இதுக்கு கான்ஃப்ரன்ஸஸுன்னு பேர்."

"இப்படி உட்கார்ந்தபடியே பேசணுமா?"

"தேவையில்லையே. நின்னபடி பேசலாமே."

"நின்னு கண்ணாடி ஜன்னல் வழியா தெருவுல போற வரவங்களை வேடிக்கை பார்த்துண்டே இங்க இருக்கற ஹரிஹரன் அவங்க பேசறத கேட்பான். பதில் சொல்வான்."

"நல்ல வேலையா இருக்கே."

"இதுல ஒரேயொரு பிரச்சினை இருக்கு."

"என்ன?"

"நமக்கு பொழுது இருட்டறபோது அவனுக்கு பொழுது விடியும்."

"ஆமாம்."

"அதனால், ராப்பகலா இங்க நம்ம கம்பெனி திறந்து வச்சுருக்கணும். ராத்திரி ஒரு மணிக்கு பொறி பறக்கற நேரமா இருக்கும். ரெண்டு மணி, மூணு மணி வரைக்கும் பிசாசா வேலை செய்யணும். நாலு மணிக்கு அவன் வீட்டுக்கு கிளம்பறதுக்கு ஆரம்பிப்பான். அப்போ கொஞ்சம் கண் அசரலாம். நைட் ஷிப்ட். டே ஷிப்ட்டுன்னு பிரிச்சுண்டு வேலை செய்யலாம்."

"நீங்க வேலை செய்யறது அந்த மாதிரி கம்பெனிதானே."



"அந்த மாதிரி கம்பெனிதான். நான் அங்க வேலை செய்யலை."

"பிறகு?"

"அதுல பார்ட்னரா இருக்கேன், ஒர்க்கிங் பார்ட்னர்."

"லாபத்துல ஒரு பங்கா."

"ஆமாம். சேலரியா ஒரு பகுதி, லாபத்துல பங்கா இன்னொரு பகுதி அப்படின்னு கிடைக்கும். நாலுபேர் பார்ட்னர். ரெண்டு பேர் அமெரிக்காவுக்கு ஷட்டில் அடிப்பாங்க, நாங்க ரெண்டு பேரும் இங்க எல்லா வேலையும் சரியா நடக்குதான்னு மேற்பார்வை பார்த்துண்டிருப்போம்."

"தப்பா நினைச்சுக்கலேன்னா ஒரு கேள்வி கேட்கட்டுமா?"

"கேளுங்கோளேன்."

"பொண்ணை கொடுத்துட்டேன். அதனால மாப்பிள்ளைக்கு என்ன சேலரி வருது அப்படின்னு கேட்கறதுல ஒண்ணும் தப்பில்லைன்னு நினைக்கிறேன். ஒட்டு மொத்தமா எவ்வளவு இன்கம் வரும் ஒரு வருஷத்துக்கு."

"நல்லா வரும் மாமா. ஒரு மாசத்துக்கு ஒரு லட்ச ரூபா வருது."

"அப்போ என்னத்துக்கு சிங்கள் பெட்ரூம் ப்ளாட்ல கஷ்டப்பட்டுண்டிருக்கேள்? ஏன், கார் வாங்காம இருக்கேள்?"

"சொந்தமா ப்ளாட் வாங்கலாம். கடன் வாங்கி எட்டு பர்சென்ட், ஒன்பது பர்சென்ட் வட்டி கட்டறதவிட மொத்தமா காசு சேர்த்து வச்சு ஒரு அடுக்குமாடியில் ஒரு போர்ஷன் வாங்கலாம். சரியான ஏரியா பார்த்து வாங்கணும். தண்ணி கஷ்டம் இல்லாத இடமா பார்த்து வாங்கணும். ரெண்டு பேரா இருக்கற போது கார் என்னத்துக்கு? ராயல் என்ஃபீல்டு மோட்டார் சைக்கிள் போதும். இப்போ குழந்தை பிறந்திருக்கு. இப்போ கார் அவசியம். உங்க வீட்லேர்ந்து குழந்தை எங்க வீட்டுக்கு வரும்போது அநேகமா கார்லதான் வரணும்."

"அப்போ கம்ப்யூட்டர் தெரியலைன்னா ஒண்ணுமே இல்லை. இல்லையா..." சந்திரசேகர் மறுபடி துவங்கினார்.

"ஆமாம். கம்ப்யூட்டர் தெரியலைன்னா வாழ்க்கை காட்டுமிராண்டி வாழ்க்கைதான். எதிர்காலம் கேள்விக்குறியா போற வாழ்க்கைதான். டாக்டரோ... இன்ஜீனியரோ... வக்கீலோ உங்களுக்கு கம்ப்யூட்டர் வேணும். அந்தக் கம்ப்யூட்டருக்குள்ள உங்களுக்கு வேணுங்கற தகவலை வச்சுக்க தெரியணும், எடுக்கத் தெரியணும். மத்தவங்களோட தொடர்பு கொள்ளத் தெரியணும். ஏதோ ஒரு சினிமாவுல கவுண்டமணி சொல்லுவாரு. என்னடா ஆபிஸ்ல உட்கார்ந்து டிவி பார்த்துண்டிருக்கியான்னு. இல்லை ஸார் இது கம்ப்யூட்டருன்னுவான். ஓஹோ... எங்களுக்குத் தெரியாதா அப்படின்னு நகர்ந்து போவாரு. அது டி.வியா கம்ப்யூட்டரான்னு கூட தெரியாத இன்னும் நிறைய பேர் இருக்காங்க. அவங்க வாழ்க்கைதான் கஷ்டமாயிடும்."

"லேடீஸுக்கு அவசியமில்லை இல்ல."

"அப்படி சொல்ல முடியாது. நீங்க நல்லா கணக்கு போட்டீங்கன்னா பசங்களுக்கு நல்லா கணக்கு சொல்லித் தரலாம். உங்களுக்கு கம்ப்யூட்டர் தெரிஞ்சாதான் பசங்களுக்கு கம்ப்யூட்டர் சொல்லித் தர முடியும். ஆர்வம் ஏற்படுத்த உதவியா இருக்கும். இல்லைன்னா பசங்க உங்களை மதிக்காது."

"வீடு நீங்க எப்போ வாங்கப் போறீங்க?"

"அது என் வேலையா? உங்க வேலை."

"என்ன... என் வேலை."

திகைப்போடு மாப்பிள்ளையை பார்த்தார்.

"ஒரு சரியான வீடு நீங்க பார்த்து முடிவு பண்ணுங்க. நான் வந்து ஓ.கே.ன்னு சொன்ன பிறகு அந்த இடத்தை வாங்கிடுங்க. நான் அலைய முடியாதில்ல இதுக்கெல்லாம்."

"எவ்வளவு ஸ்கொயர் ஃபீட்."



"எனக்கு அந்த கணக்கு தெரியலை."

"உள் அளவுகளே ஆயிரம் சதுர அடிக்கு மேல இருந்தா தான் நல்லாயிருக்கும். மூணு ரூம் இருந்தாதான் வசதியா இருக்கும். அதுல ஒரு ரூம் ஆபீஸ் ரூம்.ஒரு ரூம் படுக்கைக்கும். ஒரு ரூம் கெஸ்ட் வந்தா தங்கறது. பெரிய ஹால், பூஜை, சமையல் அறை அப்படியிருக்கணும். சிட் அவுட் இருக்கணும். கொஞ்சம் தள்ளி வேளச்சேரி பக்கமா, மகாபலிபுரம் போற வழி பக்கமா இருந்தா நல்லதுன்னு தோன்றது."

"எவ்வளவு ரூபாய்ன்னு நினைக்கறீங்க."

"பன்னெண்டு ரூபா கையில இருக்கு. கூட ஒரு மூணு ரூபா நாலு ரூபா செலவாகலாம். அதுக்கு கடன் வாங்க முடியும்."

"நீங்க எதுக்கு கடன் வாங்கணும்? நான் தரேன். அப்போ வட்டியில்லாக் கடனா இருக்கும். ஆனாலும், குறைந்த பட்சம் ரெண்டு ரூபாயாவது வாங்கி வீட்டுக்குள்ள டேபிள் சேர் எல்லாம் புதுசா போடும்படியா இருக்கணும்."

"ரொம்ப சந்தோஷம். நான் பார்த்துக்கறேன். உங்களுக்கு செலவு இருக்கு மாமா. அவளை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போய் சேர்த்து..அந்த மாதிரி செலவு நிறைய இருக்கு."

"அதுக்கெல்லாம் நான் காசு வச்சிருக்கேன் ஐயா. நீங்க கவலைப்படாதீங்க."

மாப்பிள்ளையோடு உட்கார்ந்து சல்லாபித்தது ஞாபகத்திற்கு வந்தது.

அவன் தூங்கப் போனதும் சமையல் அறையை ஒழித்துவிட்டு, எல்லா டம்ளர்களையும் அலம்பி வைத்து, டிபன் பாக்ஸை மறுபடியும் மூடி எடுத்துக் கொண்டு பையில் போட்டுக்கொண்டு மெல்ல கதவு சார்த்திக் கொண்டு வெளியேறினார். கதவு தானாக பூட்டிக் கொண்டது. படியிறங்கி வீடு நோக்கி வரும்பொழுது மாப்பிள்ளையைப் பற்றி ஒரு மிகப் பெரிய திருப்தி இருந்தது. இது கொடுப்பினை என்று

நினைத்துக் கொண்டார். நெஞ்சில் கை வைத்து கடவுளை வணங்கினார்.

எந்த நேரத்திலும் அவன் அலட்டுவதே இல்லை.

"குழந்தை பொறக்கற போது பொண்டாட்டி அருகே இருக்கணும்னு ஆசைப்படறீங்களா?" என்று டாக்டர் கேட்டார்.

அவன் சிரித்தபடியே "இல்லை" என்று சொன்னான்.

"ஏன் ஒரு இந்திய இளைஞன்கூட, பொண்டாட்டிக்கு அருகே இருக்கமாட்டேன்னு சொல்றாங்க?"

"உங்களுக்கு புரியலை டாக்டர். என் பொண்டாட்டி அமெரிக்கால படிக்கலை. அங்க வளரலை டாக்டர். அவ இந்தியாவுல படிச்சு, இந்தியாவுல வளர்ந்தவோ. நான் பக்கத்துல போய் நின்னா, எனக்கு என்ன உதவி செய்யணும், நான் என்ன சாப்பிடணும், என்ன குடிக்கணும் அப்படின்னு என்னைப் பத்திதான் யோசனை பண்ணுவா. அந்த வலிக்கு நடுவிலயும் அவளால சுதந்திரமா இருக்க முடியாது. அவங்கப்பா அவங்கம்மா இருக்கற போதுதான் அவ நூறு சதவீதம் சுதந்திரமா இருக்க முடியும். பாதுகாப்பாகவும் உணர முடியும். நான் வந்து பக்கத்துல இருந்தா ஒரு பதற்றம் அவளுக்கு இருக்கத்தான் செய்யும். கல்யாணமாகி ரெண்டு வருஷம் ஆச்சு. அந்தப் பதற்றத்தை போக்கிடணும். நான் ஒரு ஃப்ரெண்டா சொல்லியிருக்கணும். எவ்வளவுதான் நான் ஸ்நேகிதம்னு சொன்னாலும், இங்க இருக்கற இந்தியப் பெண்கள் கணவனை ஸ்நேகிதனா நினைக்கறதுக்கு முன்னாடி அவனை தெய்வமா, வழிகாட்டியா, எஜமானனா நினைக்கறாங்க. இந்தப் புத்தியிலிருந்து என் மனைவி தப்பிச்சுக்க முடியாது. இது அவ அம்மா, அவ பாட்டி, அவங்க அத்தை அவளுக்கு சொல்லிக் கொடுத்த விஷயம். என்னை ஏன் இந்தக் கேள்வியை கேட்கறீங்க? என் மனைவிகிட்ட கேளுங்க. அவ பிரசவ நேரத்துல அவ பக்கத்துல நான் இருக்கணுமா? நீ சொல்லும்மா."

அவன் திரும்பி அவன் மனைவியைப் பார்த்தான்.



சாவித்ரி சிரித்தாள்.

"இருந்தா ஒரு மாதிரி கஷ்டம். இல்லைன்னா ஒரு மாதிரி கஷ்டம்" என்று பதில் சொன்னாள்.

அங்கிருந்த அத்தனை பேரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

டாக்டர் கூர்மையானார்.

"இருந்தா என்ன கஷ்டம்? இல்லைன்னா என்ன கஷ்டம்?"

"இருந்தா ஐயோ இங்க உட்கார்ந்து என்கூட அவஸ்தை பட்டுண்டிருக்காரே. இவருக்குத் தேவைதானா. இவர் பாட்டுக்கு தன் வேலையை கவனிக்கலாமே... அப்பாவும் அம்மாவும் இருக்காங்க. அவங்க பார்த்துக்கறாங்களே அப்படின்னும் தோணும். இவர் இல்லைன்னா, ஐயோ... நாம இல்லாத இவர் என்ன கஷ்டப்படறாரோ, எங்க சாப்பிடறாரோ, என்ன துணி துவைக்கறாரோ, வீடு எப்படி வச்சுருக்காரோ அப்படின்னு தோணும்."

"இவர் உனக்கு ஆதரவா பக்கத்துல இருக்கணும்னு தோணலையா?"

"இல்லை."

"புருஷன் ஆதரவு தேவையில்லைன்னு நினைக்கறியா?"

"அது தப்பு, புருஷன் ஆதரவா இல்லாத, வேற யார்தான் ஆதரவா எனக்கு இருக்கு முடியும்? உங்க அப்பா, அம்மா முன்னாடி எனக்கொரு மரியாதை இருக்கு அப்படின்னா என் புருஷன் எனக்கு ஆதரவா இருக்கறதுனாலதானே. என் புருஷன் என்னை அலட்சியப்படுத்தினா அது எங்கப்பாவுக்கும், எங்கம்மாவுக்கும் வேதனை மட்டுமில்ல. என்னைப்பத்தி ஒரு எடை கம்மியா போகுமில்லையா? நம்ம பொண்ணு கெட்டிக்காரி. மாப்பிள்ளையை கெட்டியா பிடிச்சுகிட்டா. அவரு பிரியமா இருக்காரு. அவர் பிரியமா இருக்கும்படியா நடந்துக்கறா அப்படின்னு எங்கம்மா நினைக்க மாட்டாங்களா, எங்கப்பா சந்தோஷப்பட மாட்டாரா? அதுதானே எனக்கு

பெரிய மரியாதை. அந்த மரியாதை கிடைச்சுண்டிருக்கு. அப்பறம் என்ன?"

ஊர் உலகமெல்லாம் சுற்றி வந்த அந்த லேடி டாக்டரே வியந்து சந்திரசேகர் மகள் சாவித்ரியைப் பார்த்தாள்.

"என்ன டாக்டர் பார்க்கறீங்க? என்னயெல்லாம் திருத்தவே முடியாதுன்னு உள்ளுக்குள்ள ஒரு கோபம் வருதா?"

"இல்லைம்மா, கோபமெல்லாம் வரலை. லோகோ பின்னருசி. ஒவ்வொரு ஊர்ல ஒவ்வொரு விதமான வாழ்க்கை. ஒவ்வொரு ஊர்ல ஒவ்வொரு விதமான மனோ நிலைமை. உன் புருஷன் சொன்னா மாதிரி இந்த ஊர்பெண்கள் இப்படித் தான். இதை மாத்த முடியாது?"

"இவர் பொறுப்பா என்னென்ன வேணும்னு பார்த்துப் பார்த்து வாங்கித் தரார். என்ன வேலை இருந்தாலும் அதுக்கு நடுவுல என்னை வெளிய வாசல்ல கூட்டிண்டு போறதுக்கு மறக்கறதில்லை. உள்ள நுழையற போதே வெளிய கிளம்ப லாமா அப்படின்னு கேள்வி கேட்கறார். காலையில போயிட்டு வந்த மனுஷன் சாயந்தரம் ஆடி அலுத்துப் போய் வராரே. மறுபடியும் இவரோட வெளிய போகணுமான்னு எனக்குத் தோணும். ஆனா, வா போகலாம். அப்படிப் போனாதான் எனக்கு ரிலாக்ஸா இருக்கும்னு சொல்லிட்டு, எட்டு மணிக்கு குளிச்சுட்டு, எட்டரை மணிக்கு நாங்க கிளம்பி பீச்சுக்கு போய் அங்க உட்கார்ந்து பேசிட்டு, ஒன்பதரை மணிக்கு ஹோட் டல்ல டிபன் சாப்பிட்டு, பத்தரை மணிக்கு வந்து படுத்துடு வோம். நான்தான் ஆறு, ஆறரை வரைக்கும் தூங்குவேன். அவர் அஞ்சு மணிக்கே எழுந்துடுவார்."

"அப்படியா... அஞ்சு மணிக்கு எழுந்து என்ன, கம்ப்யூட் டரா..."

"இல்லீங்க."

அவன் மறுதலிப்பதற்குள் அவன் மனைவி சாவித்ரி உள்ளே புகுந்தாள்.



"யோகா பண்ணுவார். எக்ஸர்ஸைஸ் பண்ணுவார்."

"அடிசக்கை. அதனாலதான் நிதானமா இருக்கீங்க."

டாக்டர் கை குலுக்கிப் பாராட்டினாள்.

அப்போதும் பெருமையாக இருந்தது.

"இந்த யோகால்லாம் பண்றேளே எதுக்கு?"

"சும்மா ஒரு தமாஷுக்குத்தான்."

மாப்பிள்ளை சிரிப்போடு சொன்னான்.

"இல்லீங்க. இதெல்லாம் எனக்கு சொல்லித் தரக்கூடாதா?"

"உங்களுக்கு வயசு அறுவத்திரண்டு. இதுக்கு மேல இது தேவையில்லை. அப்படியே பொத்தினாப் போல இருங்க. உங்களுக்கு ஒரேயொரு யோகப் பயிற்சிதான் உண்டு."

"என்னாங்க அது?"

ஆவலாக சந்திரசேகர் கேட்டார்.

"கார்த்தாலயோ அல்லது சாயந்தரமோ ஒரு மணி நேரம் வேர்த்து விடும்படி நடங்க. போறும். அதுக்கு மேல மூச்சு பிடிச்சுகிட்டெல்லாம் நிக்க வேண்டிய அவசியமில்லை. வேர்க்க விறுவிறுக்க இடுப்பு அசைய, வயிறு குலுங்க நடந் தீங்கன்னா நல்லா வயிறு சுத்தமாகும். சிறுநீரகங்கள் சுத்தமா வேலை செய்யும். சிறுநீரகங்கள் சுத்தமா வேலை செய்தா, நுரையீரல்கள் ஆரோக்கியமா இருக்கும். நுரையீரல்கள் ஆரோக்கியமா இருந்தா, ரத்தம் நல்லபடி சுத்திகரிக்கப்படும். ரத்தம் நல்லபடியா சுத்திகரிக்கப்பட்டால் இருதயம் நல்லா இயங்கும். இருதயம் நல்லா இயங்கினா நல்லா ஜீரணம் ஆகும். மூளை அமைதியா இருக்கும். நல்லா தூக்கம் வரும். நல்லா சாப்பிட்டு, நல்லா தூங்கி எழுந்து அதிகம் கவலைப் படாத வாழ்ந்தீங்கன்னா இன்னிலேர்ந்து இன்னுமொரு பத்து வருஷம் எந்த நோய் நொடியும் இல்லாம நீங்க இருக்கலாம். நடக்கறத விட்டுட்டீங்கன்னா மலச்சிக்கல் வரும். மலச்சிக்கல் ஏற்பட்டுதுன்னா சோர்வு வரும். சிறுநீரகங்கள் சரியா வேலை செய்யாது. கபம் உடனே பிடிச்சுக்கும். கபம் பிடிச்சுதுன்னா

இருதயத்தை பாதிக்கும். இருதயம் பாதிக்கப்பட்டுதுன்னா யோசிப்பு பாதிக்கப்படும், ஜீரணம் பாதிக்கப்படும். எல்லாவித நோயும் வந்து தாக்கும். மரண பயம் ஏற்படும். அந்த மரண பயம் இன்னும் நோயை கொண்டு வரும். தேவைதானா இது?"

அவன் பயமுறுத்த அன்றிலிருந்து நாகேஸ்வரராவ் பார்க்குப் போய் வேகமாக நடக்கத் தொடங்கினார். சில சமயம் மனைவியையும் கூட்டிக் கொண்டு போய் நடக்க வைப்பார். ஆனால், மகள் வந்த பிறகு நடப்பது என்பது வாரத்திற்கு நான்கு முறையோ, ஐந்து முறையோதான் செய்ய முடிந்தது.

"மாப்பிள்ளை சின்னப் பையனா இருக்கானே தவிர, ரொம்ப விவரமானவன் ஸார். எல்லாத்துக்கும் ரொம்ப தீர்க்கமா யோசனை பண்ணி அதைப்பத்தி விலாவாரியா பேசறான்."

நண்பர்களுக்கு நடுவே மிகப் பெருமையாக கணேசனைப் பற்றி அவர் பூரிப்போடு பேசினார்.

குழந்தை பிறந்து ஐந்தாம் நாள் மகளையும், பேத்தியையும் வீட்டிற்குக் கொண்டு வந்து தாதிகளை வரவழைத்து குழந்தையை குளிப்பாட்டி பதினோராம் நாள் தொட்டிலிட்டு கல்யாணி என்று மாப்பிள்ளையின் தாயார் பெயரை குழந்தையின் காதில் சொல்லி இந்தப் பெயரிலேயே அவள் அழைக்கப் படுவாள் என்று சொல்லி இன்னொரு பெயர் வைக்க வேண்டாம் என்று வாதிட்டு, வந்தவர்களுக்கெல்லாம் விருந்தளித்து உபசரித்தார்.

கணேசனின் அப்பாவும், அம்மாவும் சேலையூருக்கு கிளம்பிப் போனார்கள். காரில் வந்த தமக்கைகள் விடை பெற்றுக் கொண்டு நகர்ந்தார்கள்.

அவர்கள் எல்லோரும் போன பிறகு கணேசன் சந்திர சேகருக்கு அருகே வந்து உட்கார்ந்து கொண்டான்.

"மாமா உங்ககிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்."

37684
5470252



"பேசப்பா."

அவர் திரும்பி அவனைப் பார்த்து உட்கார்ந்து கொண்டார்.

"நான் இந்த வேலையை விட்டுடலாம்னு இருக்கேன்."

ஒற்றை வார்த்தையில் பேசிவிட்டு அவர் முகத்தையே உற்றுப்பார்த்தான்.

அவரால் திகைப்பை அடக்கிக் கொள்ள முடியவில்லை.

என்னது இது? என்ன விளையாடறான்? லேசாய் கோபம் கூட வந்தது.

ஆனால், மாப்பிள்ளையிடம் கோபித்துக் கொள்ள முடியாது. குறிப்பாக இந்த மாப்பிள்ளையிடம் கோபித்துக் கொள்ள முடியாது.

சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு, "ஏன் மாப்ளே, ஏதாவது சண்டையா?"

"அதெல்லாம் ஒண்ணுமேயில்லை. போகாத போகாதன்னு கைய பிடிச்சு இழுக்கறாங்க. நான்தான் போகணும்னு தீர்மானம் பண்ணேன்."

"ஏன் மாப்பிள்ளை?"

"இதை விட நல்லதா ஒரு வேலை செய்யலாம்னு தோன்றது."

"கூடுதலா சம்பளம் வருமோ?"

"இல்லை. குறைச்சலா வரும்."

"அப்போ ஏன் போகணும்?"

"என்னுடைய ஆத்ம திருப்திக்கு நான் உலகத்துல ஏதாவது நல்லது பண்ண வேண்டாமா?"

"பொண் குழந்தை பெத்திருக்கேள். சட்டுனு இதைவிட குறைச்சலான சம்பளத்துக்கு போகலாம்னா நன்னாவா இருக்கு?"

"ஒரேயொரு பொண் குழந்தை இது போறாதா. இன்னொரு குழந்தை என்னத்துக்கு? அதுக்கொரு இருவத்திரண்டு இரு

வத்தி மூணு வயசான பிறகு கல்யாணம் பண்ணி கொடுத்துட மாட்டோமா?"

"வீடு வாங்கணும்னு சொன்னேளே."

"காசு வச்சுருக்கேனே."

"மேற்கொண்டு கடன் வாங்கப் போறேன்னு சொன்னேளே."

"அதை சம்பாதிக்கறதுல அடைக்கலாமே."

"பெரிய காசுக்குத்தான் போகணுமே தவிர, சின்ன காசுக்கு போவானேன்?"

"நான்தான் சொன்னேனே. என்னுடைய ஆத்ம திருப்தி முக்கியம்னு."

"காசுதானே முக்கியம் மாப்பிள்ளை?"

"இல்லை. நான் ஒத்துக்க மாட்டேன்."

மாப்பிள்ளை திடமாகச் சொன்னான்.

அவருக்கு மேற்கொண்டு அவனோடு வாக்குவாதம் செய்ய தெரியவில்லை.

சந்திரசேகர் இந்த விஷயத்தை தன் மனைவியிடம் சொன்னார்.

அவர் மனைவி அவர் மகளிடம் சொல்ல, "என்னாச்சு உங்களுக்கு? வேலையை விடப்போறேன். வேற வேலையில சேரப் போறேன்னு எங்கிட்ட சொல்லக்கூடாதா? இதைப்போய் எங்கப்பாகிட்ட சொல்லணுமா? ஒரு வயசானவர்கிட்ட என்ன பேசறது, என்ன பேசக்கூடாதுன்னு தெரியாதா? மாமனார், மாமியாரோட உறவு விஷயங்கள் பேசுங்கோ. இந்த மாதிரி பர்சனல் விஷயத்தையெல்லாம் பொண்டாட்டிகிட்டதானே சொல்லணும்? இது கூடத்தெரியலை. அப்பறம் ஊருக்கு என்ன உபதேசம்?"

அவள் உரத்துக் கத்த கணேசன் மௌனமாக கேட்டுக் கொண்டிருந்தான்.



சந்திரசேகருக்கு மாப்பிள்ளையின் மௌனமும் கவலையாக இருந்தது.

அவர் மகள் மீது மெல்லியதாய் கோபம் வந்தது.

## 2

ஒரு வாரம் இந்த விஷயத்தைப் பற்றி யாரும் பேசவில்லை. ஆனால், மகள் மட்டும் கடுகடுவென்றிருந்தாள். எல்லோரிடமும் எரிந்து விழுந்தாள். குறிப்பாக அவள் அம்மாவை அதிகம் கோபித்துக் கொண்டாள்.

"நீ ஒண்ணும் எனக்கு உதவி பண்ண வேண்டாம். எல்லாம் நான் பார்த்துக்கறேன். என்னால பார்த்துக்க முடியும்" என்று கோபத்தினால் தாயை புறக்கணித்தாள். பதிலுக்கு சந்திரசேகரின் மனைவி கோபப்பட முற்பட்டபோது சந்திரசேகர் தடுத்து விட்டார்.

"வேண்டாம். அவள் உடம்பு பலவீனமாக இருக்கிறாள். இந்த நேரத்தில் இதை நீ அவளிடம் சொன்னது தவறு. நான் உன்னிடம் பேசியது அதைவிடத் தவறு. மாப்பிள்ளை சொன்னதை நான் காதில் கேட்டுக் கொண்டு மௌனமாக இருந்திருக்க வேண்டும். ஒரு ஆறுதலுக்காக உன்னிடம் சொல்ல, நீ அதை முதற்காரியமாக அவளிடம் சொல்லி விட்டாய். அவள் என்ன கோபித்தாலும் பேசாமல் எடுத்துக் கொள். அவள் நம்முடைய குழந்தை. நாமும் அவளுக்கு ஆதரவாக இல்லாவிட்டால் அவள் நொந்து போவாள். அவள் மனம் நொந்தால் அந்த விஷயம் குழந்தையை பாதிக்கும். இப்பொழுதே பாதித்து விட்டதோ என்று நான் பயப்படுகிறேன். எது சொன்னாலும் கேட்டுக் கொண்டிரு. பொறுமையாக இரு" என்று அறிவுறுத்தினார்.

"ஏன், என் மாப்பிள்ளை இப்படி பண்றார்? அதைக் கேட்டேளா?"

"கணேசன் நல்லது, கெட்டது தெரிஞ்சவன்; கெட்டிக்காரன். பொறுமைசாலி. தான் என்ன பேசறோம்னு அவனுக்கு தெரியும். என்ன பண்ணணும்னும் தெரியும். எங்கிட்ட ஆலோசனை கேட்கறதுக்காக சொல்லலை. ஒரு தகவலா சொன்னான். அதை நான் தகவலா கேட்டுண்டேன். மத்தபடி அவன் வாழ்க்கை அவன் பாடு. அபிப்ராயம் கேட்டா சொல்லலாம். அவன் அபிப்ராயம் கேட்கலை. இன்னது வேணும்கற முடிவோட இருக்கான்."

"எதுக்காக வேலையை ரிஸைன் பண்றாராம்? அதைக் கேட்டேளா?"

"நான் கேட்கல. அவன் சொல்றபோது சொல்லட்டும்."

அவர் மனைவிக்கு பதில் சொல்லிவிட்டு நகர்ந்தார்.

"வேலையை ரிஸைன் பண்ணிட்டியாப்பா?"

தாங்க முடியாமல் மறுவாரமே மாப்பிள்ளையிடம் கேட்டார்.

"வேலையை ரிஸைன் பண்ணிட்டு என்ன பண்ணப் போறேன்னு உங்களுக்கு தெரிஞ்சுக்க ரொம்ப ஆவலா இருக்கு இல்லியா. நான் யோகா க்ளாஸ் எடுக்கப் போறேன்."

"என்னது...?"

கணேசனுடைய விளக்கத்திற்கு எதிர் கேள்வியாய் சந்திரசேகர் கேட்டார்.

கணேசன் மௌனமாக இருந்தான்.

"மறுபடியும் சொல்லுங்கோ. என்ன பண்ணப் போறீங்க?"

"யோகா மாஸ்டரா மாறப்போறேன். யோகா க்ளாஸ் எடுக்கப் போறேன்."

இந்த தடவை அழுத்தம் திருத்தமாக கணேசன் சொன்னான்.

"ஏன், ஏன் திடீர்னு... இதுல காசு வருமா?"

"மறுபடியும் நான் சொல்றேன். காசுபத்தி நான் அதிகமா முக்கியத்துவம் கொடுக்கலை. இதுல வர காசு போதும்.



எவ்வளவு காசு இருந்தாலும் என்னால குடித்தனம் பண்ண முடியும். அடிப்படை தேவையான வீடு, சுத்தமான சாப்பாடு, தண்ணீர் இதுக்கு வழி இருக்கு. நான் செய்யற வேலை எனக்கு சந்தோஷத்தை கொடுக்கணும். மேலும்... மேலும்... நான் வளருகிற ஆரோக்கியத்தை கொடுக்கணும். ஐயோ... ஆபீஸிக்குப் போறோமே அப்படிங்கற வேதனையை எனக்கு கொடுத்துடக் கூடாது."

இந்தக் காலத்து இளைஞர்களை நினைக்க நினைக்க சந்திரசேகருக்கு வியப்பாக இருந்தது. அவர் தன் இளமை நாள்களில் மூழ்கினார்.

இன்ஷூரன்ஸ் கம்பெனியில் சந்திரசேகருக்கு முதன் முதலாக ஒரு ஸ்டெனோகிராபர் வேலை கிடைத்தபோது அவருக்கு வயது பதினேழு. பள்ளியிறுதி முடித்த ஆறாவது மாதம் அவர் வேலையில் சேர்ந்துவிட்டார்.

வீடு துள்ளிக் குதித்தது.

"நூத்தி எழுவத்தஞ்சு ரூபா சம்பளமா? நிஜமாவா?" என்று உறவினர்கள் கேட்டு வியந்தார்கள்.

"எப்படியாவது, கைய பிடிச்சு, காலைபிடிச்சு நாயா வேலை செய்து வேலையை தக்க வச்சுக்கோ. ஒரு வருஷம் டெம்பரரி. அப்பறம்தான் வேலை நிரந்தரமாகும். இல்லையா?"

உறவுகள் விசாரித்தன.

அறிவுரை சொல்லின.

"கை கட்டிப் பேசு. அதுதான் நல்லது. எங்கிட்ட பேசுறதா இருந்தாலும் கைகட்டிப் பேசணும். ஒரு பெரியவர் அதட்டலாகச் சொன்னார்.

அறுபத்தைந்து வயது பெரியவர். இதுவரை எங்கும் வேலை செய்தறியாதவர். இரண்டு பிள்ளை, மூன்று பெண்கள் என்று எப்படியோ கல்யாணமும் செய்தவர். கைகட்டி வாழ்தலே வாழ்க்கையாக இருந்தவர்.

உறவுக்காருடைய அடிமைத்தனம் முழுவதும் சந்திர சேகருக்கு சொல்லித் தரப்பட்டது.

"எம்ப்பா... நீ எங்கேயிருந்தாவது கிராமத்துலேர்ந்து வறியா?"

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி மேனேஜர் கேட்டார்.

"இல்லை ஸார். இங்கதான் சைதாப்பேட்டை."

"அப்போ... எம்ப்பா கைகட்டியே பேசற? சாதாரணமா பேசேன்."

"எங்க வீட்லெல்லாம் இப்படித்தான் பேசணும்னு சொல் லிக் கொடுத்திருக்காங்க."

"வேணாம்பா... உன் வேலையை நீ ஒழுங்கா செய். அது போறும். மத்த மரியாதையெல்லாம் தேவையில்லை."

தெலுங்கரான அந்த ஆபீஸர் வழிநடத்த, மெல்ல மெல்ல சந்திரசேகருக்கு உத்தியோக வாழ்க்கை பிடிபட்டது.

காலை எட்டரை மணிக்கு அலுவலகம் திறக்கும். பன்னி ரண்டரை மணிக்கு மதிய வேளையில் கேன்டீனில் குழம்பு, ரசம், மோர் என்று மூன்று விதமான சாப்பாடு, கூட்டு, காய், அப்பளம், பருப்பு என்ற விருந்தோம்பல். ஒரு ரூபாய் ஐம்பது பைசாவிற்கு சாப்பிட்டுவிட்டு வெளியே வந்து நண்பர் களோடு கிரிக்கெட் பற்றியோ, அரசியல் பற்றியோ பேசிக் கொண்டிருந்து விட்டு மறுபடியும் ஒன்றரை மணிக்கு வேலை துவக்கம். வேலையில் அமரும்போது வேறு எந்த பக்கமும் திரும்புவதில்லை.

"இன்னிக்கு எவ்வளவு சர்வே ரிப்போர்ட் அடிச்சீங்க?"

"பதினாலு" என்று மேனேஜருக்கு பதில் சொல்ல, "போறும். போய் ரெஸ்ட் எடுத்துக்கோங்க" என்று சொல்லும் அளவுக்கு அவன் உழைத்தான்.

அவன் நல்ல வேலைக்காரன் என்றுதான் சர்வேயர்கள் சுற்றிக் கொள்வார்கள்.



"ஸார். நீங்க பெருசா எழுதிட்டு வரணும்னே இல்ல. உண் மையிலேயே எந்தவிதமான தொந்தரவுன்னு சொல்லுங்க. நான் நோட் பண்ணிக்கறேன்."

அவன் சுருக்கெழுத்தில் குறித்துக் கொள்வான். பிரிண்ட் ஆன போட்டோக்களைப் பிரிப்பான்.

அவர்கள் விரும்பியது போல், அவர்களைவிட அழகான ஆங்கிலத்தில் சர்வே ரிப்போர்ட்டை தயார் செய்து கொடுப் பான்.

"சந்திரசேகரா... எங்கடா போற?"

"வீட்டுக்கு ஸார்."

"வா... நான் உன்னை ட்ராப் பண்றேன்."

"ஸார். எங்க வீடு அந்தப்பக்கம் போகணும் ஸார்."

"பரவாயில்லை வாடா. சுத்திண்டே போகலாம்."

ஒருமுறை சர்வேயர் வேண்டுமென்றே சுற்றிக் கொண்டு போய், அவன் வீட்டில் இறக்கிவிட்டுப் போனார்.

"பாம்பேல ஒரு பெரிய சர்வேயர் மகாநாடு நடக்கப் போகு துடா. நான் வந்து ஒரு ரிப்போர்ட் படிக்கணும். அது என்ன மேட்டர்னு தெரியும். ஆனா, அதை இங்கிலீஷ்ல சொல்ல வரலை. நீ செய்து கொடுக்க முடியுமா?"

போகும்போது கேட்டார்.

நிச்சயம் முடியும் என்று அவன் சொன்னான்.

அவர் வீட்டிலிருந்து, அங்கேயே சாப்பிட்டுவிட்டு, அவரோடு விவாதித்து குறிப்புகள் எடுத்துக் கொண்டான்.

பலமுறை படித்த சர்வே ரிப்போர்ட்டுகளை ஜர்னலில் பார்த்து தெரிந்து கொண்டான்.

"எல்லாரும் சொல்றதையே சொல்லாதீங்க ஸார். புதுசா ஒரு கான்செப்ட் சொல்லுங்க. ஒரு தனி தத்துவம் சொல் லுங்க" என்று அவரை வற்புறுத்தினான்.

அவரும் யோசிக்கத் துவங்கினார். இரண்டு பேரும் விவாதித்தார்கள்.

"இன்ஷூரன்ஸ் என்றால் என்ன என்று பொது மக்களுக்குத் தெரியவில்லை. தெரிந்து கொள்ள இன்ஷூரன்ஸ் கம்பெனி, தான் முன் வந்து தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ள வேண்டும். மக்கள் வருவது கடினம். இதுதான் ஸார் தத்துவம்" அவன் சொல்ல அவர் எழுந்து நின்று தழுவிக் கொண்டார்.

அவர்கள் தொடர்ந்து இதை விவாதித்து மிக அற்புதமான ஒரு கட்டுரையை தயாரித்து, சென்னையில் பத்து பேருக்கு நடுவே இதை படித்துக் காட்ட, அவர்கள் கைதட்டி சந்திர சேகரை கட்டித் தழுவிக் கொண்டார்கள்.

"ஜீனியஸ்யா நீ" என்று அவரை தட்டிக் கொடுத்தார்கள்.

எப்படி ஏற்ற இறக்கமாக படிப்பது என்று அவருக்கு பயிற்சி கொடுத்தார்கள்.

தூங்கி வழிந்து கொண்டிருந்தது அந்த சர்வேயர் மாநாடு. அந்த சர்வேயர் தன்னுடைய அறிக்கையை படிக்க ஆரம்பித்ததும் அட... என்று விழித்துக்கொண்டது. உற்றுக் கேட்டது. மிகப்பெரிய கரவொலியோடு அவரை வாழ்த்திற்று.

அந்த விஷயத்தை தொடர்ந்தே அடுத்த மூன்று நாள்களும் விவாதங்கள் இருந்தன. அந்த சர்வேயர் நடுநாயகமாக விளங்கினார்.

பம்பாயிலிருந்து அந்த சர்வேயர் திரும்பும்போது மூன்று பவுன் சங்கிலியோடு வந்தார்.

அவன் கழுத்தில் மாட்டி, "நாளைக்கு நீ கல்யாணமாகற போது வெறும் கழுத்தோட நிக்கக்கூடாது. தங்க சங்கிலி பையனா இருக்கணும். வெறும் சங்கிலியா போடலை. உனக்கு நல்ல பொண்டாட்டி கிடைக்கணும்னு ஆசிர்வாதத் தோட போடறேன்" என்று சொன்னார்.

அம்மா சந்தோஷமடைந்தாள்.



"சங்கிலி மட்டும்தானே இருக்கு. இரு..." என்று சொல்லி வெங்கடாஜலபதி டாலர் ஒன்று வாங்கி அதில் மாட்டினாள். இன்றுவரை கழுத்தில் அந்த தங்கச் சங்கிலியும், வெங்கடா ஜலபதி டாலரும் இருக்கின்றன.

அவர் வாழ்த்தியது போலவே நல்ல மனைவி கிடைத்தாள். இன்னும் அதிகமான சம்பளம். இன்னும் பொறுப்பான வேலை. இன்னும் மேலான பதவி என்று இடம் மாறி, ஐம்பத்து ஒன்பது வரை, தான் உழைத்தது இன்னும் பெருமிதமாக இருக்கிறது சந்திரசேகருக்கு.

"எதுக்கு சந்திரசேகரைப் பத்தி கேட்கறீங்க. அவனுக்கு பொண்ணு கொடுக்கப் போறீங்களா? உட்காருங்க. காபி சாப் பிடறீங்களா?"

சர்வேயர் வந்தவரை வரவேற்றார்.

"அவர் நல்லவரா, கெட்டவரா இதெல்லாம் தெரியாது. ஒரு ஆபீஸ்ல வேலை செய்யற நட்பை வச்சகிட்டு அவன் நல்லவன், கெட்டவன்னு யாராலயும் கண்டுபிடிக்க முடியாது. எல்லாருக்கும் ஆபீஸ்ல ஒரு மூஞ்சி, வீட்ல ஒரு மூஞ்சி ஆனால் அந்தப் பையன் வேலைக்காரன். அவன் எங்க போனாலும் வேலை கிடைக்கும். அவனால் ரொம்ப எனிதா ஆயிரம் ரூபா சம்பாதிக்க முடியும். சம்பாதிக்கற பிடிவாதம் இருக்கற பையன் அவன். காசு கஷ்டமில்லாத உன் பொண்ணு இருப்போ. கண்ணை மூடிண்டு உன் பொண்ண கொடுக்கலாம். மத்த விஷயத்தையெல்லாம் வெளிய விசாரிச்சுக்கோ." உரத்த குரலில் சொல்ல, பெண்ணைப் பெற்றவருக்கு சந்தோஷமாக இருந்தது.

"அதெப்படி தெரியாத போகும்? ஒன்பது மணி நேரம் ஆபீஸ்ல என்கூட இருக்கான். அவன் நல்லவனா, கெட்டவனான்னு எனக்குத் தெரியாத போயிடுமா? ஒரு பானை சோத்துக்கு ஒரு சோறு பதம். என்னுடைய பாஸ்போர்ட் டிராயர்ல வச்சுட்டேன். சாவியை போட்டு எடுத்து என் பாஸ் போட்டை வீட்டுக்கு கொண்டு வந்து கொடு அப்படின்னு

சொன்னேன். அவன் சரின்னு சொல்லிட்டு போனை வச்சான். அவன் போனை வச்ச பிறகுதான் எனக்கு தெரிஞ்சுது. அதுக்குள்ள நான் வைர மோதிரத்தை கழட்டி போட்டது. என்னா சொல்றதுன்னு பார்த்தேன். அஞ்சாவது நிமிஷம் போன் பண்றான். ஸார் பாஸ்போர்ட் எடுத்துட்டேன். உள்ள நூத்தி நாப்பத்தஞ்சு ரூபா காசும், வைர மோதிரமும், வெள்ளி சாமி படமும் இருக்கு. அது அங்கயே இருக்கட்டுமா இல்ல, எடுத்துகிட்டு வரட்டுமான்னு கேட்கறான். அவனை பத்தியிருந்த ஒரு நிமிஷ கலக்கம் டப்புனு அழிஞ்சுபோச்சு. மோதிரத்தை மட்டும் எடுத்துட்டு வாடா. மத்ததெல்லாம் அங்கயே இருக்கட்டும்னு சொல்லிட்டேன். சாதாரணமா வைர மோதிரத்தை கொடுத்துட்டு போயிட்டான்.

‘ஒருநாள் வயித்து வலி, சாப்பிட முடியாம அவஸ்தை. ஹீமூலெட் மிக்சர் சாப்பிட்டா சரியாப் போயிடும்னான். எங்க கிடைக்கும்னு சொன்னேன். அவனா வாங்கிட்டு வந்தான். கம்பல் பண்ணி ரெண்டு மூணு தடவை சாப்பிடுங்க ஸார்னு ஞாபகப்படுத்தினான். சாயந்தரம் வீட்டுக்கு போறபோது ரொம்ப குறைஞ்சிருந்தது. நைட் ரெண்டு தடவை சாப்பிட்டேன். சுத்தமா வயித்துவலி சரியாப் போச்சு. அப்புறம் நானா நாலு பாட்டில் வாங்கி வீட்ல வச்சுண்டேன். முதல் பாட்டிலுக்கு காசு கொடுக்கணுமில்ல. மறந்து போச்சு. கடைசி வரைக்கும் கேட்கவே இல்லை. நான் ஆயிரம் ரூபா சம்பளக்காரன். பெருந்தன்மை ஸார். காசு கொடுக்க வரும்போது மாட்டேனுட்டான். எனக்கு எவ்ளோ பண்றீங்க? உங்களுக்கு ஒரு கஷ்டம்னா நான் பண்ண வேணாமான்னு கேட்டான். பெரிய மனுஷன் ஸார், பயப்படாத பொண்ண கொடுங்க. அவனுக்கு ப்ரமோஷனுக்கு ரெக்கமண்ட் பண்ணியிருக்கேன். ஜூனியர் ஆபீஸரா போட்டுருவாங்க. ஜூனியர் ஆபீஸரா ஒரு வருஷம் இருந்துட்டா அப்பறம் வெளிய போடான்னு சொல்லியிருக்கேன். அவன் பெரிய ஆபீஸரா வருவான். பயப்படாத பொண்ண கொடுங்க.’’



எவ்வளவு சந்தோஷமான நாள்கள் அவை. வேலை கிடைத்ததும், கிடைத்த வேலையில் நன்கு ஒட்டிக் கொண்டதும், ஒட்டிக் கொண்டதற்காக பல்வேறு விதமான பாராட்டுகள் பெற்றதும் எவ்வளவு திருப்தி அளித்தன. எவ்வளவு நன்றாக தூங்க முடிந்தது. தட்டு நிறைய சோறு. அதன் மீது உருளைக்கிழங்கு குழம்பு, எதிரே இன்னொரு தட்டில் கத்திரிக்காய் கூட்டு. அதன் ஓரத்தில் கொஞ்சம் கொத்துவரங்காய் வறுவல், அம்மா பரிமாறிவிட்டு எதிரே உட்கார்ந்து கொண்டாள்.

“உன்னைப்பத்தி அந்த சாரதா வீட்ல அவங்க அப்பா விசாரிச்சாராம். உங்க ஆபீஸ்ல ஆஹா... ஓஹோன்னு சொல்றாளாம். நாங்க கேட்டது தப்பா இருந்தா மன்னிச்சுக்கோங்க. உங்க பிள்ளையப்பத்தி ரொம்ப நல்லா சொல்றா. நான் பொண்ணு தரேன் அப்படின்னு இன்னிக்கு கார்த்தால வந்து சொல்லிட்டுப் போனார். உங்கப்பா கேட்டார் என்ன சொல்றா அப்படின்னு. அவர் விலாவாரியா சொன்னார். கேட்க கேட்க எனக்கும், அப்பாவுக்கும் ரொம்ப சந்தோஷம் ஆயிடுச்சு. நீ பொறந்தப்போ எங்கிட்ட அஞ்சு ரூபா நாப்பது பைசா இருந்தது. உங்கப்பாகிட்ட இருவத்தஞ்சு ரூபா இருந்தது. கோஷா ஆஸ்பிட்டல்ல கட்டில் வேணும்னா அஞ்சு ரூபா தரணும்னா. எதுக்கு தரையே போதும்னு சொல்லிட்டு ஒரு பழைய துணியை மடிச்சுப்போட்டு படுத்துண்டிருந்தேன். வராண்டாவுக்கு நேர இருந்ததுனால வேப்ப மரக்காத்து சிலுசிலுன்னு வரும். நல்லா தூங்குவேன். டேய்... அம்மாகிட்ட காசே இல்லைடா. நீ பெரியவனாகி சம்பாதிச்சு, அம்மாக்கு காசு கொடுடா அப்படின்னு உன் காதோரம் சொல்லுவேன். அப்போ உன் உடம்பு சிலிர்த்துப் போடும். கைகாலெல்லாம் வேகமா ஆட்டுவ... எனக்கு சிரிப்பா வரும். என்ன சொன்னாலும் இந்தப் புள்ள பதில் சொல்றான் பாரேன் அப்படின்னு ஆச்சரியமா இருக்கும். அந்த சந்தோஷம் இன்னிக்கு மறுபடியும் வந்ததுடா.”

அம்மா அழுது கொண்டே சொன்னாள்.

"அம்மா... என்னம்மா அழற? என் காசெல்லாம் உன் காசு தான். கல்யாணமான பிறகும் காசு கொண்டு வந்து நான் உங்கிட்டதான் கொடுப்பேன்."

சந்திரசேகர் உரக்கச் சொன்னார்.

"இல்லை. அது தப்பு. கல்யாணமான பிறகு காசு கொண்டு வந்து பொண்டாட்டிகிட்ட கொடுக்கணும். உன் பொண் டாட்டி வந்து எங்கிட்ட கொடுக்கணும். நான் அதை வாங்கி கண்ல ஒத்திண்டு சாமிகிட்ட வச்சுட்டு... அம்மா, சமர்த்தா குடித்தனம் பண்ணுன்னு மறுபடியும் உன் பொண்டாட்டி கிட்டயே கொடுத்துடறேன். அதுதான் மரியாதை."

சந்திரசேகரின் மனைவி சாரதா அப்படித்தான் குடித்தனம் செய்தாள்.

பன்னிரண்டு பவுன் நகை போட்டுக் கொண்டு வந்தாள்.

"இப்போதெல்லாம் இன்னும் கூட போடறா. என்னோட காலத்துலயெல்லாம் பத்து பவுன் பன்னெண்டு பவுன்னு இருந்தது. இப்போ கூட போடலாமோன்னா" என்று அம்மா கேட்க, அவன், "வேண்டாம் கேட்காதே" என்று மறுத்து விட்டான். "உன் நகையெல்லாம் அவளுக்குத் தானேம்மா?" என்று கண் சிமிட்டினான்.

ஒரு சவரன் நானூறு ரூபாய் என்று விற்ற காலம்.

ஓவர் டைம்ல வர காசு மொத்தமும் நகை வாங்கறதுக்கு என்று அவனும் அவளும் முடிவு செய்து கொண்டார்கள்.

ஒரு நாள் ஓவர் டைம் செய்தால் இருநூறு ரூபாய் கிடைக் கும். எல்லா சர்வேயர்களுடைய சர்வே ரிப்போர்ட்டையும் படித்து குறிப்பெழுதி இவன் அனுப்பினால்தான், இவன் குறிப்பின் பெயரில்தான் நஷ்டஈடு தருவதைப் பற்றி முடிவு செய்வார்கள். எனவே, சர்வேயர்கள் மிகப் பிரியமாக இருந் தார்கள்.

"என்ன கிழமைடா."

"வெள்ளிக்கிழமை."



"ஒரு கிலோ பாதாம் அல்வா. ஒரு பந்து மல்லிப்பூ வாங்கித் தரேன். எடுத்துண்டு போ வீட்டுக்கு" என்று ஒரு சர்வேயர் உரக்கச் சொல்லி கண் சிமிட்டினார்.

"அதெல்லாம் ஒண்ணும் வேணாம் ஸார்."

"ஏண்டா நீ சாப்பிட மாட்டியா, இல்ல, உன் பொண்டாட்டி சாப்பிட மாட்டாளா?"

"ஆளுக்கு ஒரு துண்டு சாப்பிடலாம். ஒரு கிலோ என்னத் துக்கு? அவ நெளி மோதிரம் கேட்கறா. வாங்கித்தர முடி யலை. அதான்."

மறுநாள் அவன் டிராயரைத் திறக்க, ஒரு சின்ன டப்பா இருந்தது. திறக்க, சிகப்புக்கல் நெளிமோதிரம் இருந்தது.

அவன், பயந்து போய் இருக்கை விட்டு எழுந்தான். சர்வேயர் போன் செய்தார்.

"நான் நேரா கொண்டு வந்து கொடுத்தா பக்கத்துல இருக் கறவன் எரிஞ்சு போயிடுவான். அதனாலதான் காலையிலயே வந்து உன் டேபிள்ல வச்சுட்டேன். நீ எனக்கு எத்தனையோ செய்திருக்க. நான் உனக்கு செய்யணும். என் ரிப்போர்ட்டெல் லாம் டக்டக்குனு டைப் அடிச்சு கொடுத்திருக்க. அப்பவே நான் உனக்கு செய்யணும். இப்போ நெளிமோதிரம் வாங்கி கொடுக்கறது எனக்கு திருப்தியா இருக்கு. கொண்டுபோய் சந்தோஷமா பொண்டாட்டி கையில போடு. பரமானந்தமா அனுபவி. நல்ல குழந்தைங்க பிறக்கட்டும். நல்ல குழந் தைங்க பிறக்கறதுக்காகத்தான் நாம வாழ்க்கைய அனுபவிக் கறோம். பொண்டாட்டியும் சந்தோஷமா இருந்து, நீயும் சந்தோஷமா இருந்து, அதுல குழந்தை பிறந்ததுன்னா அந்தக் குழந்தையும் சந்தோஷமா இருக்கும். இந்தப் புண்ணியத்தை நான் கட்டிக்கறேன். வேணாம்னு சொல்லாத."

போனை வைத்து விட்டார்.

அவர் சொன்னது போலவே வாழ்க்கையை ஆனந்தமாக அனுபவித்தான். நல்ல குழந்தைகள் பிறந்தார்கள்.

எவ்வளவு அற்புதமான நாட்கள் அவை.

இருநூறு ரூபாய் சம்பளம். முன்னூறு ரூபாயாக மாறிய போது கோயிலுக்குப் போய் கைகூப்பி விம்மிவிம்மி அழத்தான் முடிந்தது. ஒரு நூறு ரூபாய் பெரிய பிரமிப்பாக இருந்தது. இன்று இல்லை. பத்தாயிரம் ரூபாய் சம்பளக்காரனுக்கு இரு பதாயிரம் ரூபாய் சம்பளம் ஏறினாலும் அவன் நெகிழ்ந்து போவதில்லை.

"நெளி மோதிரம் வாங்கனும்னு உங்களுக்கு எப்படி தெரிஞ்சுது?"

மனைவி கட்டிக் கொண்டு கொஞ்சிய போது, ஒரு அளப் பரிய சுகம் இருந்தது.

"இதுதான் ஆரம்பம். இன்னும் நிறைய... இன்னும் நிறைய உனக்கு பண்ணனும்" என்று காகோரம் சொல்ல, "நானும் உங்களுக்கு நிறைய நிறைய பண்ணுவேன்" என்று அவள் இன்னும் இறுக்க கட்டிக்கொண்டாள்.

இன்னொரு பெண் தேவைப்படவே இல்லை. மனசிற்குள் வரவே இல்லை. சினிமா நடிகையோ, நாட்டியத் தாரகையோ அவரைக் கவரவே இல்லை. மாறாக அவர்களைப் பற்றி நினைக்க பயமாகவும் இருந்தது.

"எதிர்வீட்டு சரோஜா யாரோடயோ ஓடிப்போயிட்டாளாம்" என்று செய்தி வந்த போது, "வேண்டாம். இதைப் பற்றிப் பேச வேண்டாம்" என்ற வேகம்தான் ஏற்பட்டது.

"இன்னிக்கு அமாவாசை. பித்ருக்கள் நம்ம வீட்ல வந்து உட்கார்ந்திருப்பாளாம். அதனால் தப்பா எதுவும் பண்ணப் படாதாம்" என்று மனைவி சொல்ல, "சரி.. சரி..." என்று உடனே கேட்டுக் கொண்டு வெறுமே மனைவிக்கு அருகே படுத்து தூங்கிப் போக முடிந்தது. பல்லைக் கடித்துக் கொண்ட கட்டுப்பாடாக இல்லை. மதிக்க வேண்டியதை, மதித்துத்தானே ஆகவேண்டும் என்கிற மரபாக இருந்தது.



ஆனால், இன்று மனைவி வேண்டாம் என்றால் அதைக் கேட்கின்ற இளைஞர்கள் மிகக் குறைவு. பெண்களை பிசா சாய் ஆண்கள் சுற்றித் திரிகிறார்கள். பெண்களும் மினுக்கிக் கொண்டு போகிறார்கள். அய்ட்டம் பாருடா என்று பெண்ணை ஆண் பேசுகிறான். வெறும் போகப் பொருளாகப் பார்க்கிறான்.

வாழ்க்கையின் எல்லா மதிப்பீடுகளும் சிதைந்து விட்டன. ஆனால், இதில் ஆச்சரியம் என்னவெனில் இதே குற்றச் சாட்டைத்தான் அப்பா போன தலைமுறை மீது சுமத்தினார்.

"வேட்டி கட்டிண்டு ஆபீஸ் போகக் கூடாதா?"

"போகக்கூடாதுப்பா."

"அப்படியொரு ரூல் இருக்கா?"

"ரூல் இல்லைப்பா."

"அப்போ போனா என்ன?"

"இல்லைப்பா பேண்ட்டுதான் ஆபீஸோட டிரெஸ்."

அவர் உடனே ஜாதியைப் பற்றி பேச ஆரம்பித்தார்.

இன்ன ஜாதிக்காரன். இன்ன வகையாக இருக்க வேண்டு மென்று உபதேசித்தார். குடுமி, பூணூல் என்றெல்லாம் பேசினார்.

"இல்லையப்பா. இப்பொழுது ஜாதி இரண்டே வகை. ஒன்று வேலை செய்யும் ஜாதி. வேலை செய்யாத ஜாதி. உழைக்கற ஜாதி, உழைப்பு இலாத ஜாதி. உழைப்பதற்கு இந்த உடைதான் சௌகரியம். அதனால், இதைத்தான் போட்டுக் கொள்வேன். தயவுசெய்து மன்னித்து விடுங்கள்" என்று பணி வாகச் சொன்னான்.

அவனுக்கு ஆதரவாக பலபேர் பேசினார்கள்.

இரவு, அப்பா படுத்திருக்கும் போது அருகே போய் உட் கார்ந்து, "நான் வேணா வாரத்துக்கு ஒரு நாள் வேட்டியில போகவா? ஒவ்வொரு சனிக்கிழமையும் வேட்டியில போறனே" என்று சொன்னான்.

அப்பா சிரித்தபடி எழுந்து உட்கார்ந்து கொண்டார்.

"நான்தான் முட்டாள்தனமா பேசினேன். உன்னுடைய அலுவலகத்தில் உனக்குன்னு ஒரு மரபு இருக்கு. நம்ம மரபு வேற. அலுவலக மரபு வேற. நீ வீட்ல இருக்கும்போது வீட்டு மரபையும், அலுவலகத்துல இருக்கும்போது அலுவலக மரபையும் கடைபிடிச்சுண்டிருந்தா போதும். தினம் சந்தியா வந்தனம், பூஜை, மூலமந்திர ஜபம்னு வந்துட்டீன்னா அதுவே பெருசு. ஒவ்வொரு பசங்கள் தத்தாரியா சுத்தறதுக்கு நீ எவ்வளவோ மேல்."

முதலில் பிறந்த பையனுக்கு ஆறு வயதாகி, இரண்டாவது பெண் பிறந்த போது அவர் மனைவி சாரதாவிடம் நாற்பது பவுன் நகைக்கு மேல் இருந்தது. முப்பது பவுன் இவர் போட்டது. பன்னெண்டு பவுன் சாரதா வீட்டில் இருந்து வந்தது.

பெண் பிறந்த பதினைந்தாம் நாள் அம்மா தன் திருமாங்கல்யம் தவிர அத்தனை நகைகளையும் கழற்றி பொட்டலமாகக் கட்டி சந்திரசேகரன் மனைவி சாரதாவிடம் கொடுத்து, இது என் பேத்திக்கு என்று சொன்னாள். அதில் இருபத்தொரு சவரன் நகைகள் இருந்தன.

"இருக்கட்டும் அம்மா. இதை ஏன் கழட்டி கொண்டு வந்து என் கையில் கொடுக்கறீங்க? நீங்க கழுத்துல போட்டுக்கோங்க. இது அவளுக்குத்தான். நான் சட்டமா வாங்கிக்கறேன். கவலைப்படாதீங்க."

"ஏண்டி... பேத்திக்கு கொண்டு வந்து நகை கொடுத்த? முதல்ல ஒரு பேரன் இருக்கானே. அவனுக்கு என்ன பண்ண...?"

"அதுக்கு நீங்க பண்ணுங்களேன்" என்று அம்மா பதிலுக்கு அதட்டினார்.

அவர் தன் சேமிப்புப்பணம் மொத்தமும் எடுத்து ஒன்றாக்கி வேளச்சேரியில் ஒரு பெரிய காலிமனை வாங்கினார்.



"நாட்டுப் புறத்துல போய் மனை வாங்கறீங்களே! இவன் அங்க போய் மாடா மேய்க்கப் போறான்?" என்று அம்மா சத்தியதை புறக்கணித்தார்

அவர் கணக்கு துல்லியமாக இருந்தது. நிலத்தின் விலைகள் பல மடங்கு உயர்ந்தன.

பையன் இன்ஜினியரிங் காலேஜில் சேரவேண்டும் என்று சொன்னபோது அப்பா, "நிலத்தை வித்துருடா" என்று கட்டளையிட்டார்.

இரண்டரை லட்ச ரூபாய்க்கு வாங்கிய, அந்த நிலம் முப்பத்திரண்டு லட்ச ரூபாய்க்குப் போயிற்று. மூன்று லட்ச ரூபாய் காசு கொடுத்து பையனை இன்ஜினியரிங் சேர்த்து விட்டு மீதி காசுக்கு நகரத்தின் மையத்திலேயே வீடு வாங்கினார். குழந்தைகள் படிப்பதற்காக தனித்தனி அறைகள் இருந்தன. அப்படி வீடு வாங்கிய நாளும் அற்புதமான நாள்.

கிரஹப்பிரவேசத்தின் போது அப்பாவின் காலில் விழுந்து வணங்கிய பின்னர் எழுந்திருக்கவே முடியவில்லை. விழுந்தபடியே விம்மிவிம்மி அழ, எல்லோரும் அவரை தூக்கி நிறுத்தினார்கள். அப்பா இறுக அணைத்துக் கொண்டார்.

"எதுக்குடா அழற? உன் யோக்கியதைக்கு என்ன உண்டோ அது கிடைச்சுருக்கு. அழாதடா. எனக்கு நல்ல பையன் கிடைச்சுருக்கான். நல்ல மாட்டுப் பொண் கிடைச்சுருக்கா, என்னை ரெண்டு பேரும் உள்ளங்கையில் வச்சு தாங்கறா. என் பொண்டாட்டி தாங்கறா, இதைவிட என்னடா வேணும்? வீடு யார் வேணாலும் வாங்கலாம்டா. இன்னிக்கு லோன் போட்டா பத்து வருஷத்துல லோன் அடைச்சுடலாம். காசை கட்டறதே தெரியாம பத்து வருஷத்துல சொந்த வீடு வாங்கிடலாம். ஆனா, இப்படிப்பட்ட பிள்ளை கிடைப்பானா எனக்கு?"

மறுபடியும் தழுவிக் கொண்டார்.

அதுவும் ஒரு ஆனந்தமயமான நாளாகத்தான் இருந்தது.

"சரி. உங்க காசுல வீடு வாங்கிட்டேன்.என் காசுல நான் ஏதாவது வாங்க வேண்டாமா? இன்னொரு வீடு வாங்கட்டுமா?"

சந்திரசேகரன் கேட்க அப்பா திகைத்தார்.

"எதுக்குடா நிறைய சொத்து சேர்த்துண்டே போற?"

"அப்பா என் பொண்ணுக்கு ஏதாவது பண்ண வேண்டாமா? அவளுக்கு கல்யாணம்னாக்கா நாம வீட்டை வித்தோ அல்லது வீட்டை அவளுக்குக் கொடுத்தோ அவளை தூக்கி நிறுத்த வேண்டாமா? பிள்ளை பி.இ.படிக்கறான். பொண்ண பட்டதாரியாக்கினா போறும். அவ ஒரு நல்ல வொய்ஃப்பா இருக்கணும். அதுதான் என் ஆசை. நல்ல இடத்துல நல்ல படியா கல்யாணம் பண்ணி கொடுக்கணும். போகப் போக நிலத்தோட விலை உயரத்தானே போறது! இன்னும் குறையப் போறது இல்ல. நான் கடன் படறேனே அதனால என்ன தப்பு? நீங்க சொன்ன மாதிரி வீடு வாங்கினா கடன்தானே வாங்கணும்? கடன் வாங்கினாத்தானே வீடு வாங்க முடியும்? பொண்ணுக்கு பத்து வயசாகறது. இப்போ கடன் பட்டாக்க சாவித்ரி இருபது வயது ஆகறபோது நான் கடனை தீர்த்துடுவேன்."

நகரின் இன்னொரு மையமான, அதே சமயம் அமைதியான பகுதியில் இன்னொரு அடுக்குமாடி போர்ஷன் பார்த்து வீட்டிலிருந்த நகைகளையெல்லாம் விற்று முன்பணம் கொடுத்து மற்றதற்கு கடன் வாங்கி மறுபடியும் இன்னொரு பெரிய போருக்கு சந்திரசேகர் தயாரானார். சாரதா கவலைப் பட்டாள்.

"இது போறுமே. ஏன் மேல மேல பாரத்தை வாரிப் போட்டுக்கறீங்க?" என்று மெல்லியதாய் கடிந்து கொண்டாள்.

"உனக்குத் தெரியாது... நான் செய்யறது எவ்வளவு நல்ல வேலைன்னு. பன்னெண்டு பவுன் நகையோடாதானே நீ வந்த? என் பொண்ணுக்கு நகையவிட ஒரு வீடு முக்கியம். என் பொண்ணுக்கு ஒரு ஃப்ளாட் எழுதி வைக்கறேன். அப்ப டின்னு சொல்லிட்டா அதுக்குண்டான மரியாதையே தனி. அவ வீட்ல அவ போய் தனிக்குடித்தனம் பண்ணட்டுமே."



அந்தப் புதிய வீட்டில் கிரஹப்பிரவேசம் பண்ணிய போது, "கண்ணு, இது உன் வீடுடா. இங்கதான் நீ குடித்தனம் பண்ணப் போற" என்று உறவுகள் அத்தனை பேரும் மகளைப் பார்த்துச் சொன்னதும், மகள் பெருமையாக தலையை சிலுப்பிக் கொண்டு வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்தது இன்னும் ஆனந்த மயமாக உள்ளுக்குள்ளே இருக்கின்றன.

"எனக்கு ஒரே பொண்ணு. நீங்க என்ன எதிர்பார்க்கறீங்க? எவ்ளோ நகை போடணும்?" என்று பணிவாக பிள்ளை பெற்ற சம்பந்தியை கேட்டபோது, "இதை ஏன் எங்கிட்ட கேட்கறீங்க?" என்று அவர் பதில் சொன்னார்.

"புரியலையே" என்று சந்திரசேகர் வியந்தபோது, "உங்க பொண்ண கேளுங்க. அவ எவ்வளவு போடணும்னு சொல்றாளோ, அவ்ளோ போட்டா போதும். எவ்ளோ எடுத்துண்டு வந்தா தான் புழங்கறதுக்கு சரியா இருக்கும்னு நினைக்கறாளோ அதை கொண்டு வந்தா போதும்."

"இதைத்தவிர என்ன வேணும்?"

"உம்ம இஷ்டம்."

"ராஜா அண்ணாமலைபுரம் அடுக்குமாடியில ஒரு போர்ஷன் இருக்கு, ஆயிரத்து ஐந்நூறு ஸ்கொயர் ஃபீட், பொண்ணுக்காகத்தான் வாங்கினேன். அதைக் கொடுத்துடறேன்."

சட்டென்று சம்பந்தி பக்கம் மௌனம் நிலவியது.

அவர்கள் இதை எதிர்பார்க்கவில்லை போலும்.

"அப்போ உங்களுக்கு...?"

"எனக்கு இதோ இந்த இடம் இருக்கே. இது எங்க அப்பா எனக்கு வாங்கிக் கொடுத்தது. எம்புள்ள இங்கதான் இருக்கப் போறான். அது நான் வாங்கினது. என் பொண்ணுக்கு கொடுத்துடலாம்னு இருக்கேன்."

"எத்தனை பெறும்?"

"இருவத்தி மூணு, இருவத்தி நாலு லட்சம் இருக்கும்."

"பிறகு என்னத்துக்கு எங்கிட்ட நகையைப் பத்தி கேட்கறீர்? என்ன பண்ணணும்னு ஏன் கேட்கறேள்? நான் ஒண்ணும் அவ்வளவு பேராசைக்காரன் இல்லைய்யா. இருவத்தி மூணு லட்ச ரூபாயோட ஒரு பொண்ணு வரா. அவ அந்த வீட்ல இருக்கப் போறா. அது தவிர எனக்கு என்ன வேணும்? ரிசப்ஷன் நன்னா பண்ணுங்கோ. கல்யாணத்தை திருப்பதியில வச்சுப்போமா?"

"ஒரே பொண்ணுக்கு கல்யாணம். ரெண்டும் இங்கயே பண்ணலாம்."

"ஆஹா... பரமானந்தம்."

தாம்பரத்திலேயே நிலம் வாங்கி, நிலம் விற்று வீடு வாங்கி, வீடு விற்று அடுக்கு மாடி வாங்கி என்று பல வளங்கள் பெற்ற சம்பந்தி நகரின் நடுப்பகுதியில் தன் மருமகள் ஒரு போர்ஷனுக்குச் சொந்தக்காரியாக வரப் போகிறாள் என்றதும் ஆடித்தான் போனார்.

"பையனை நல்ல இடத்துலேர்ந்து பொண்ணா பார்த்து கல்யாணம் பண்ணணும்னு எல்லா அப்பாக்கும் ஆசை. உம்ம வீடு, உம்முடைய மகள், அவ கொண்டுவர சொத்து எல்லாமும் எங்களுக்கு பரம சந்தோஷம்" என்று வாய் நிறைய பாராட்டினார்.

"எனக்கு வேற ஒரு எண்ணமிருக்கு" என்று மாப்பிள்ளை வந்தான்.

"சொல்லுங்கோ."

"இவ்ளோ பெரிய வீடு எங்க ரெண்டு பேருக்கும் எதுக்கு மாமா? இதை வித்துட்டு சின்னதா இன்னொரு ப்ளாட் வாங்கிண்டா என்ன?"

சந்திரசேகர் மௌனமாக இருந்தார்.



"அதுல வர பாதி காசுல நான் தனியா ஒரு பிசினஸ் ஆரம்பிக்கலாம்னு இருக்கேன்."

"இந்த ப்ளாட்டையும், பொண்ணையும் கொடுத்தாச்சு, என்ன வேணா பண்ணிக்கோங்கோ."

சந்திரசேகர் ஒதுங்கிக் கொண்டார். ஆனால் கவலைப் பட்டார்.

சம்பந்தி வீட்டிலிருந்து ஓடி வந்தார்கள்.

"ஏன் இதற்கு சரியென்று ஒத்துக் கொண்டீர்கள்?" என்று சத்தமிட்டார்கள்.

இருபத்தி மூணு லட்ச ரூபாய் பெறுமானமுள்ள அந்த போர்ஷன் இருபத்தியாறு லட்ச ரூபாய்க்கு சாமர்த்தியமாக விற்கப் பட்டது. பத்தாயிரம் செலவு செய்து வண்ணப் பூச்சுகள் செய்து சேர்கள், பர்னீச்சர்கள் புதுப்பித்துப் போட்டு அப்படியே எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்ல, நல்ல விலைக்கு விற்பனையானது.

மாப்பிள்ளை சிறிய ப்ளாட்டிற்குப் போனார்.

காசு எடுத்துக்கொண்டு நண்பர்களோடு சேர்ந்து கம்ப்யூட்டர் சம்பந்தமான கம்பெனி ஒன்றை துவங்கினார்.

என்ன என்று சந்திரசேகர் கேட்கவில்லை. மகளும் சொல்லவில்லை. மாப்பிள்ளையும் பேசவில்லை.

ஆனால், மகள் மிக சந்தோஷமாக இருக்கிறாள் என்பது பல்வேறு விதங்களில் தெரிந்து போயிற்று.

மூன்று நாள்களுக்கு மேல் புருஷனைவிட்டு பிரிந்து அவளால் இருக்க முடியவில்லை. மூன்று மணி நேரத்திற்கு ஒருமுறை டெலிபோனில் பேசாமல் இருக்க முடியவில்லை. பத்து நிமிஷத்திற்கு ஒருமுறை கணேசன்... கணேசன்... என்று அவன் பெயரை சொல்லாமல் இருக்க முடியவில்லை.

மாப்பிள்ளையும் அப்படித்தான் இருந்தான். சாவித்திரியை கம்பீரமாக நேசித்தான். அது சந்தோஷமாக இருந்தது.

ஆனால், இப்பொழுது நான் வேறு வேலைக்குப் போகிறேன் என்று சொன்ன போது வயிறு கலங்கியது.

இந்திய இளைஞர்கள் இப்படி திடீர் திடீர் என்று இடம் மாறுகிறார்கள். மாறுதல் தேவை என்று அலைகிறார்கள். இன்ஷூரன்ஸ் கம்பெனியில் வேலைக்கு சேர்ந்த புதிதில் ஒரு நாள்கூட லீவு கிடையாது என்று சொல்லப்பட்டு, எல்லா ஞாயிற்றுக்கிழமையும் வேலை செய்திருக்கிறார். வேலை செய்த ஞாயிற்றுக்கிழமைக்கு இரண்டு சம்பளம் கிடையாது. ஒரு சம்பளம்தான் என்று சொல்ல, அதனால் என்ன, சம்பளமே இல்லாவிட்டாலும் பரவாயில்லை என்று சொல்லியிருக்கிறார். அப்படி வேலை செய்ய இப்பொழுது யாரும் தயாராக இல்லையா? என்ன காரணம்? அதிகம் சம்பாதிக்க வேலை மாறுகிறேன் என்று சொன்னாலும் பரவாயில்லை. மாப்பிள்ளை வேறு ஏதோ காரணம் சொல்கிறார்.

சந்திரசேகரை கவலை இறுகப் பற்றிக் கொண்டது.

"இதுக்கு போய் எதுக்கு கவலைப்படறீங்க?"

மாப்பிள்ளை அவரை அணைத்துக்கொண்டு பேசினான்.

ஆனால், இப்படி வேலை செய்கிற சந்தோஷமும், வேலையில் முன்னேறுகிற சந்தோஷமும் அவருடைய மகன் வெங்கடகிருஷ்ணன் வாழ்க்கையில் இல்லை.

கார் கம்பெனியில் டெல்லிக்கு அருகே வேலை கிடைத்த போது அட... அற்புதமான கம்பெனி. வளர்ந்து வரும் கம்பெனி என்று எல்லோரும் சொன்னார்கள். அவருக்கும் சந்தோஷமாக இருந்தது.

முன்பு பிரதமராக இருந்தவரின் மகனுக்குச் சொந்தமானது. எனவே, தூக்கி ஓரம்போடு, எந்த வசதியும் செய்யாதே. எல்லாவற்றையும் கேள்வி கேள் என்று அரசாங்க எந்திரத்தை முடுக்கிவிட்டு அந்த எந்திரமும் அந்த கம்பெனியை கண்டபடி நசுக்கப் பார்த்தது. கார் கம்பெனி பதிலுக்கு எதிர்க்கவில்லை. அரசாங்கத்தை யாரால் எதிர்க்க முடியும்? அரசாங்கம் என்னவெல்லாம் சொல்கிறதோ அதற்கெல்லாம் கட்டுப்



பட்டு தன் தயாரிப்பை குறைத்துக் கொண்டது. உற்சாகமாக உற்பத்தி செய்யாமல் தன்னால் முடிந்த அளவுக்கு உற்பத்தியை நடத்தி வந்தது.

வெங்கடகிருஷ்ணனைப் போல இன்னும் அதிகமான ஆட்களை எடுக்க வேண்டிய அந்தக் கம்பெனி சட்டென்று தன்னுடைய விஸ்தரிப்பை குறைத்துக் கொண்டது. இன்ஜீனியரிங் படித்த வெங்கடகிருஷ்ணன் அந்தக் கம்பெனியில் கார்பொரேட்டர் இணைப்புக்கு உதவித் தலைவராக இருந்தான். கார்பொரேட்டர் என்பது காரின் மிக முக்கிய பாகம். இருதயம் போன்ற இடம். அங்கிருந்துதான் பெட்ரோலும், நெருப்பும் ஒன்று சேர்ந்து சக்தி உருவாகி பிஸ்டனை அசைக்க ஆரம்பிக்கிறது. அசைந்த பிஸ்டன்தான் சக்கரத்தை சுழல வைக்கிறது. சக்தி ஆரம்பிக்கின்ற அந்த இடத்தில் பல நுணுக்கங்கள் இருந்தன. மிகக் கவனமான மேற்பார்வையின் கீழ் கார்பொரேட்டர் இணைக்கப்பட வேண்டியிருந்தது. இணைக்கப்பட்டதை பல்வேறு சோதனைகளுக்கு உட்படுத்தி இருதயம் போன்ற அந்தப் பகுதியை மிகக் கவனமாக பிளாஸ்டிக் கவரில் போட்டு மூடி சீல் இட்டு உள்ளே மாட்டுகிற நேரத்தில் மட்டுமே வெளியே கொணர்ந்து மாட்டிவிட்டு மறுபடியும் இணைப்புகளை கோர்த்து விடுவார்கள். காற்று புக முடியாத ஒரு இடத்தில் கார்பொரெட்டர் இருக்கும். ஒரு நாளைக்கு நூறு கார் தயாரிக்க வேண்டுமென்று திட்டமிடப்பட்ட இடத்தில் பதினாறு அல்லது பதினேழு கார்களே செய்யப்பட்டன. வேலைக்கு எடுத்தவர்களை விலக்குவதற்கு கம்பெனிக்கு விருப்பமில்லை. இன்றில்லையாவது ஒரு நாள் அரசியல் காற்று திசைமாற இந்தக் கம்பெனிக்கு விடிவு காலம் வந்துவிடுமென்று கம்பெனியின் பங்குதாரர்களும், மற்றவர்களும் நினைக்க பதினாறு வண்டிகள் தயாரிப்பை இழுத்துப் பிடித்துக் கொண்டு கம்பெனி நகர்ந்தது.

இருபத்தோராயிரம் ரூபாய் சம்பளத்தில் சேர்ந்த வெங்கடகிருஷ்ணன் கார்பொரேட்டரில் தன் முழுத்திறமையைக் காட்டி உழைத்தான். பல்வேறு முயற்சிகளை செய்வதற்கு

முற்பட்டான். கார்பொரேட்டர் என்ற அந்த பகுதியை லேசாக்கினான். வடிவமைப்பை மாற்றினான். அதற்குண்டான நேரம் அங்கு கிடைத்தது. அவனுக்கு மரியாதை ஏற்பட்டது. கடினமாக உழைக்கின்ற ஊழியர்களை உற்சாகப்படுத்த வேண்டுமென்று அவர்கள் ஒரு கூட்டம் நடத்தி அவனுக்கு விருது கொடுத்தார்கள். அவனைப் போன்ற வேறு சிலருக்கும் விருதுகள் கிடைத்தன.

ஒரு வருடத்திற்குப் பிறகு தயாரிப்பு இன்னும் குறைந்தது. கிடுக்கிப்பிடிகள் போடப்பட்டன. தொழிலாளர்கள் மிகப் பெரிதாக எதிர்பார்த்து வந்த பிறகு சரியான சம்பளம் கிடைக்கவில்லை. தொழில் வளர்ச்சியடையவில்லை என்பதை புரிந்து கொள்ளாமல் தொழிற் சங்கத்தின் மூலம் போராடினார்கள். அரசியல் ரீதியாக தொழிற்சங்கம் தூண்டப்பட்டது.

வெங்கடகிருஷ்ணன் வேலைக்கு வந்த இருபத்து மூன்றாவது மாதம் சுத்தமாக தயாரிப்பில்லாமல் நின்று போனது. தொழிற்சாலை மூடப்பட்டது. ஆனால் வெங்கடகிருஷ்ணன் போன்றவர்கள் தினமும் போக வேண்டியிருந்தது.

காலை ஏழரை மணிக்குத் துவங்கும் அலுவலகத்திற்கு வெங்கடகிருஷ்ணன் போன்றவர்கள் எட்டு மணிக்கு வருவார்கள். அவனுடைய அதிகாரிகள் பத்து மணிக்கு வருவார்கள். வந்து டிபன் சாப்பிடுவார்கள். பேப்பர் படிப்பார்கள். டி. வி. பார்ப்பார்கள். பிறகு சற்று தொழிற்சாலையை சுற்றி வருவார்கள். ஒரு கூட்டம் போடுவார்கள். பிறகு மத்தியானம் சாப்பிட்டுவிட்டு மெல்ல தூக்கம் போடுவார்கள். பிறகு இரண்டரை மணி, மூன்று மணிக்கு எழுந்து வீட்டிற்குப் போவார்கள்.

இருபத்திரண்டாயிரம் ரூபாய் சம்பளமும், எந்த வேலையும் இல்லாத ஒரு வேலையும் அவனுக்குக் கிடைக்க வெங்கடகிருஷ்ணன் தவித்துப் போனான். அந்த நேரம் பார்த்து திருமணம் செய்து கொண்டான். அட... அந்தக் கம்பெனியா... இரண்டு வருடத்தில் சரியாகி விடும். அல்லது அங்கிருந்து வெளியே கிளம்பினால் மிகப் பெரிய கம்பெனியில்



வேலை கிடைக்கும் என்றெல்லாம் அவனைப் பற்றி புகழ்ந்து சொல்லி அவன் விருதுகளைப் பார்த்து அவனுக்குப் பெண் தேடி நல்ல பெண்ணாக தன் அம்மாவின் பக்கமுள்ள உறவுகள் தேர்ந்தெடுத்துக் கொடுக்க, சிறிய நகரத்தில் வளர்ந்த அந்தப் பெண் டெல்லிக்குப் போய் அவனோடு குடித்தனம் செய்தாள்.

டெல்லி குளிருக்கு வெங்கடகிருஷ்ணன் மனைவியை கட்டிக் கொண்டு தூங்கினான்.பகல் இரண்டரை மணிக்கு ஓடி வந்து மறுபடியும் கட்டிக்கொண்டான். இரவும் விளையாடினான். பகலும் விளையாடினான். அலுவலகத்தில் போய் ஆழ்ந்து தூங்கினான். அவனுக்கு அந்த வேலை பிடித்து விட்டது. இந்தக் கம்பெனிக்கு ஓடிப் போய் கஷ்டப்பட்டு வேலை செய்கின்ற ஒரு மனோபாவனை அறவே அகன்று விட்டது.

பதினாறாயிரம் கிலோ மீட்டர் ஓட்ட முடியுமா
பார்க்க வேண்டும். இரவு தங்கி விடு. பகலில் பயணம்

அவனுக்கு ஒரு கார் கொடுத்தார்கள். மனைவியை ..ழைத்துக் கொண்டு வட இந்தியாவின் பல பாகங்களுக்கு பயணம் செய்தான். என்ன விதமாக எல்லாம் அந்தக் கார் தொந்தரவு கொடுக்கிறது. என்ன விதச் சிறப்புகள் இருக்கின்றன என்று குறிப்பெடுத்துக் கொண்டான். ஹனிமூன் போலவும் ஆயிற்று. வேலையாகவும் இருந்தது.

ஊருக்கு திரும்புவதற்கு முன்பே கிட்டத்தட்ட நூற்றிப் பன்னிரண்டு பக்கமுள்ள அறிக்கையை அவன் தயார் செய்து விட்டான். அறிக்கையை உடனே கொடுத்து விடாதே. அந்த அறிக்கை தயாராகிக் கொண்டிருக்கிறது. என்று நான் மேலிடத்தில் சொல்லியிருக்கிறேன். நிதானமாகச் செய். பத்துப் பதினைந்து நாள் எடுத்துக்கொள் என்று சொல்ல,அவன் தினமும் பத்துப்பத்து பக்கமாக தன்னுடைய உதவியாளருக்கு டிக்டேட் செய்து அதை அடித்துத் திருத்தி சுவாரசியமாக எழுதி ஒரு குறுநாவல் போலும் அதை சமர்ப்பிக்க, அதைப்

பற்றி ஒரு வாரம் மிகப் பெரிய விசாரணையும், விவாதமும் கம்பெனியில் நடந்தன. அங்கே வெங்கடகிருஷ்ணன் மிக முக்கியமான ஆளானான். அது தனுக்கு வேலை. அந்த அறிக்கையை படித்து விட்டு வேறு கம்பெனிகள் அவனை அழைத்த போதும்அவன் போகவே இல்லை. தான் அழைக்கப் படுவதை மட்டும் தன்னுடைய கம்பெனிக்கு அவன் விளக்கி விவரமாக எழுத, அவன் கம்பெனி அவனுக்கு கூடுதலாக சம்பளம் தந்து அவனை இறுக்கிக் கொண்டது.

இருபத்தாறாயிரம் ரூபாய்க்கு மூன்றாவது வருடம் அவன் தன் வேலையை தொடர்ந்தான்.

அவன் மனைவி கர்ப்பமானாள், குழந்தை பெற்றாள்.

அவன் குதூகலமானான். குழந்தையோடு விளையாடுவதும் அதற்குண்டான சௌகரியங்கள் செய்து தருவதும் அவன் வாழ்க்கையின் முக்கிய விஷயங்களாயின.

வேலைதேடி அவனொத்த வாலிபர்கள் வெளிநாடு போக அல்லது வேறு கம்பெனிகளுக்குப் போக, இவன் இந்தக் கம்பெனியில் சாசுவதமாக உட்கார்ந்து கொண்டு, விதம் விதமாக மனைவி சமைத்துப் போட, மாமியார் அள்ளி அள்ளிப் போட சந்தோஷமாக சாப்பிட்டு வந்தான். தெற்கு திசை பார்த்த அவனுடைய குவார்ட்டர்ஸ் காற்று சிலுசிலுவென்று அடித்தது. குளிருக்கு மிகக் கதகதப்பாக இருந்தது. அந்த குவார்ட்டர்ஸ் சுற்றி பெரிய நந்தவனங்களும் மரங்களும், செயற்கை அருவிகளும் இருந்தன. ஒன்றரை மணி நேர கார் பயணத்தில் டெல்லியின் இருதயப் பகுதியை அடைய முடிந்தது. மாதத்திற்கு ஒருமுறை அல்லது மாதத்திற்கு இரண்டு முறை டெல்லிக்குப் போய் வேண்டிய விஷயங்கள் வாங்கிக் கொண்டு மறுபடியும் குவார்ட்டர்ஸுக்கு வந்து விடுவார்கள்.

"இது சம்பளமே இல்லையேடா. தங்கற இடம், கார், பெட்ரோல், வைத்திய செலவு இது தவிர சம்பளம் இருபத்தஞ்சா? அவனவன் லட்சத்துக்கு போயிட்டாண்டா. ரொம்ப உசந்த



காசுக்கு போய் வேலை செய்யறான். எனக்குத் தெரிஞ்சு ஒரு கம்ப்யூட்டர் பையன் உன்னைவிட ரெண்டு வயசு சின்னவன். அமெரிக்கால ஒரு மாசம் ஆறு லட்ச ரூபா சம்பாதிக்கறாண்டா. சொந்தமா வீடு வாங்கிட்டான். இந்தக் கடன், அந்தக் கடன்னு மூணு லட்சம்னு போக கையில் மூணு லட்சம் மிஞ்சறது. கார் ஷெட்டோட மாடியும், கீழுமா தனி வீடு. ஏக போகமா வாழறான் போயேன். உனக்கு அப்படி ஆசை இல்லையா?" அம்மாவின் உறவினர்கள் கேட்க, "இல்லை" என்று அவன் மறுத்துவிட்டான்.

"மெட்ராஸ்ல புதுசா ஒரு கம்பெனி ஆரம்பிக்கறாண்டா கொரியாக்காரன். ரொம்ப பிரமாதமா சம்பளம் தரானாம்."

அங்கேயும் அவன் வேண்டாம் என்று மறுத்து விட்டான்.

"இது சுகம். இங்க இருக்கறதெல்லாம் தெரிஞ்ச பூதம். எனக்குத் தெரிஞ்ச வேலை. எனக்கு இருக்கறது ஒரேயொரு குழந்தை. ஒரேயொரு பொண்டாட்டி. இது போதும். இதுக்கு மேல எனக்கு எதுவும் தேவையில்லை. எங்கையாவது கண் காணாத இடத்துக்குப் போய் வெய்யில்லயும், குளிர்லேயும் நடுங்கி லட்ச ரூபா சம்பாதிக்கணும். டெல்லி பரமசுகம். வெய்யிலுக்கு ஏ.சி... குளிருக்கு ஹீட்டர் ரெண்டும் வீட்ல இருக்கு. இருபது நிமிஷம் கார் ஓட்டிண்டு போனா பேக்டரி. ரெண்டு மணி நேரம் வேலை செய்தா ஜாஸ்தி. கான்டீன்ல இருக்குற மலையாளத்தானுக்கு கத்தரிக்காய் வத்தகுழம்பு வைக்க சொல்லிக் கொடுத்துட்டேன். பிச்சு உதறிண்டிருக்கான். ருசியான சாப்பாடு.கஜல் பாட்டு. இது ஒரு வருஷமாதான் கத்துண்டிருக்கேன். ஒவ்வொரு பாட்டா மனப்பாடம் பண்ணி அதை தமிழ்ல ட்ரான்ஸ்லேட் பண்ணி அர்த்தம் புரிஞ்சு அந்த கஜல்பாட்டு பாடறேன்."

**'நிலவே இன்று நீ ஏன் வரவில்லை**
**பூமியில் நல்ல மழை**
**மேகம் விசும்புவது உனக்குத் கேட்கிறதா?**
**நிலவே நீ ஏன் வரவில்லை?'**

நாலு லைன்தாண்டா பாடறான். உயிரை பிழிஞ்சு எடுத்து டறான். புரட்டி புரட்டி விதவிதமா பாடறான். பாட்டு முடியற போது...

**'நிலவே நீ ஏன் வந்தாய்?**
**ஒரு மேகம் கூட காணோமே!**
**உன்னை தேடி அவை எங்கு போயின?**
**நிலவே இப்போது ஏன் வந்தாய்?**
**நீயும் போய் விடாதே நானும் தனிமையில்**
**இருக்கிறேன்.'**

கஜல் பாட்டு, கார் கம்பெனி, அற்புதமான மனைவி, அழகான குழந்தை என்று அவன் தீர்மானமாக இருந்தான்.

வெறும் வேட்டியை மட்டும் கட்டிக் கொண்டு வராண்டா வில் நின்றபடி கஜல் கேட்டுக் கொண்டிருக்கிறான்.

"டேய்... ஆபீஸ் போக வேண்டாமாடா?"

ஒருவாரம் அவனோடு தங்கியிருந்த சந்திரசேகர், அவன் சோம்பேறித்தனத்தைப் பார்த்துவிட்டு வியந்தார்.

"போனா போறதுப்பா."

"எப்போ போகணும்?"

"நாம எப்போ நினைக்கறோமோ அப்போ போகலாம். இந்தப் பாட்டு கேட்டுண்டிருக்கேன். இது முடிஞ்சவுடனே போவேன்."

"இந்த கஜல் எப்போ முடியும்?"

"இன்னும் அரைமணி நேரம் ஆகும்ப்பா."

"எட்டரை மணிக்காவது இருக்க வேண்டாமா?"

"ஒன்பது மணிக்குப் போனா ஏன் அப்படின்னு கேட்கற துக்கு ஆள் இல்லை."

"டேய்... உன் கம்பெனி திறந்து புரொடக்ஷன் ஆரம் பிச்சுட்டா... அப்போ வேலை ஜாஸ்தி ஆயிடுமில்ல."



"அப்போ ஆபீஸ்ல உட்கார்ந்து கஜல் கேட்பேன் அவ்ளோ தான்."

அப்படியே ஆயிற்று.

சந்திரசேகர் அவன் சோம்பேறித்தனத்தைப் பார்த்து திகைத்துப் போனார்.

மெல்ல அரசியல் சூழ்நிலை மாற, அவன் கம்பெனி விழித் துக்கொள்ள, இன்னும் அதிகமான கார்கள் தயாரிக்கவும், மற்ற உதவிகளுக்கும் போட்டி போட்டுக் கொண்டு கட்சிகள் ஏற்பாடு செய்ய, பழைய அரசாங்க அதிகாரிகள் பின் வாங்கி புதிய அதிகாரிகள் வர, மறுபடியும் கம்பெனி சிலிர்த் தெழுந்து.

சற்று முடக்கமான காலத்தில் துணையாக இருந்தவர்கள் என்ற பட்டியலில் வெங்கடகிருஷ்ணன் சேர்ந்து கொண் டான். புது இளைஞர்களை தேர்வு செய்தான்.

தமிழ்நாட்டிலிருந்தும், கேரளாவிலிருந்தும், கர்நாடகா விலிருந்தும், தெலுங்கு தேசத்திலிருந்தும் இன்ஜீனியர்களை அவன் வரவழைத்து நேர்முகமாய் பலதும் கார் பற்றி விசாரித்து ஒரு மிகச் சிறந்த குழு அமையவேண்டுமென்று முயற்சி செய்தான். எப்படி இந்தக் கார் சிறந்தது என்று அவன் பாடம் எடுத்தான்.

அவன் பாடம் எடுத்ததை வீடியோ எடுத்தார்கள். சேர்மன் அந்த வீடியோவை பார்த்து அவனை கூப்பிட்டு விசாரித்தார்.

இங்குள்ள எல்லாத் துறை இன்ஜீனியர்களையும் ஊக்கு விக்கின்ற ஒரு மேனேஜர் தேவையென்று நான் ஆசைப் பட்டி ருக்கிறேன். இப்படிப்பட்ட பதவிகள் அமெரிக்காவில் இருந் திருக்கின்றன. உனக்குத் தரட்டுமா என்று கேட்க, அவன் சந்தோஷமாக ஒப்புக் கொண்டான்.

மறுபடியும் சம்பளம் உயர்ந்தது.

இப்போது வெங்கடகிருஷ்ணனுக்கும், புரொடக்ஷனுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. மாறாய் இளம் இன்ஜீனியர்களை

சிரிக்க வைத்தும், கூர்மையாக கேட்க வைத்தும் அவர்களை உற்சாகப்படுத்தியும் அவன் எல்லோரோடும் பேசியும் அவர்களுடைய வேலைத்திறன் பற்றி சேர்மனுக்கு அறிக்கை அனுப்புகின்ற ஆள் என்று தெரிந்து அவனை சகலரும் மரியாதையோடு நினைத்தார்கள்.

இந்தக் கம்பெனியை விட்டு என்ன ஆனாலும் போகக் கூடாது என்ற உறுதி அவனுக்கு வந்துவிட்டது.

"டேய்...உனக்குன்னு ஒரு வீடு வேண்டாமாடா?"

சந்திரசேகர் அவனை நச்சரிக்கத் துவங்கினார். உடனே, கணவனும், மனைவியும் உட்கார்ந்து கொண்டு வேகமாக கணக்குப் போட்டார்கள்.

சென்னையில் பதினாலு லட்ச ரூபாய்க்கு வீடு வாங்க வேண்டுமென்றால் பத்து லட்ச ரூபாயாவது கடன் வாங்க வேண்டும். பத்து லட்ச ரூபாய் கடன் வாங்க வேண்டுமென்றால் பத்து வருடத்திற்கு மாதம் பதினெட்டாயிரம் ரூபாய் கட்ட வேண்டும். ஆறு லட்ச ரூபாய் இப்படி அப்படி புரட்டிக் கொடுத்து விடலாம் என்று திட்டமிட்டார்கள். யோசித்தார்கள்.

இருவத்தெட்டாயிரம் ரூபாயில் பதினெட்டாயிரம் ரூபாய் போய் விட்டால் பத்தாயிரம் ரூபாயில் எப்படி குடித்தனம் செய்வது? திகைத்தார்கள்.

அறுபது வயது வரை வேலையிருக்கும். அதுவரை ஏதேனும் சேமித்து, சேமித்து பணத்தை வங்கியில் போட்டு அந்த வட்டியில் வாழ்ந்து கொண்டிருக்கலாம். எல்லா ஊருக்கும் டி.வி. வந்து விட்டது. அதுபோல மற்ற சௌகரியங்களும் வந்து விடும். எனவே, சொந்த வீடு என்று ஒரு கட்டிடத்தில் காசை போய் முடக்குவானேன்?

மேற்கு மலை தொடர்ச்சி அடிவாரத்தில் பவானி ஆற்றங்கரையில் நகரத்திலிருந்து சற்று தள்ளியிருக்கிற ஊர்களில் போய் குடியிருந்தால் என்ன? பட்டணத்தில்தான் வாழ வேண்டுமென்று என்ன நியதி? இப்போது இருக்கின்ற குவார்ட்டர்ஸ் போல அமைதியான இடம் வேண்டுமென்றால்



கிராமத்திற்குத்தானே போக முடியும்? டெல்லியில் இருந்து கொண்டு சென்னையில் வீடு வாங்கினால் அதை என்ன செய்வது? யாருக்காவது வாடகைக்கு விட்டு அவன் பின்னால் கைகட்டிக் கொண்டு இருக்க வேண்டுமா? என் காசு முழுவதும் எங்கேயோ போட்டு விட்டு நான் கடன் வைத்துக் கொண்டிருக்க வேண்டுமா? நான் அனுபவிக்கிறேன் என்றால் நான் வீடு வாங்குவது சரி. எனக்கு இப்படி ராஜோபசாரமாக ஒரு குவார்ட்டர்ஸ் கிடைத்திருக்கிறதே இதை விட்டுவிட்டு நான் எதற்கு வீடு வாங்க வேண்டும்? என் வீடு எங்கிருக்கிறது என்றே எனக்கு இன்னமும் தெரியவில்லை. இப்போதைக்கு என் வீடு இதோ இந்த ஃபரீதாபாத் குவார்டஸ் தான். இதைச் சுற்றியுள்ள இந்த குல்மொகர் மரங்களும், கத்தாழைச் செடிகளும், செம்பருத்திப் பூக்களும், கொரியன் புல் வெளியும், நீருற்றும் மிகச் சந்தோஷமாக இருக்கின்றன.

அல்லா பண்டிகையிலிருந்து குருநானக் ஜெயந்தியிலிருந்து எல்லாவிதமான கொண்டாட்டங்களும் இங்கு நடைபெறுகின்றன. ஜாதி சண்டையில்லை. மதக்கலவரம் இல்லை. எல்லோரும் பிழைக்க வந்திருக்கிறோம் என்று புரிந்து கொண்டு ஒருவருக்கொருவர் அனுசரணையாக இருக்கிறார்கள். இடப்பக்கம் தமிழர், எதிரே ஒரு மலையாளி, கீழே இரண்டு கன்னடக்காரர்கள். தெலுங்கு, பஞ்சாபி என்று இந்த ஒன்பது குடித்தனங்களும் மிக அற்புதமாக ஒன்றாக கைகோர்த்துக் கொண்டிருக்கின்றன. எதிரே பஞ்சாபி தாத்தாவுக்கு நெஞ்சடைப்பு வந்துவிட்டது. சட்டென்று வெங்கடகிருஷ்ணன் மனைவி டாக்ஸியை கூப்பிட்டு அவரை ஏற்றி ஆஸ்பத்திரியில் கொண்டு போய் சேர்த்தாள். மாஸிவ் அட்டாக். ஆனால், சரியான நேரத்தில் கொண்டு வந்து சேர்த்ததால் அவர் பிழைத்துவிட்டார்.

அவர் பிள்ளை ஓடி வந்து வெங்கடகிருஷ்ணன் மனைவியின் காலில் தன்னுடைய டர்பன்பட வணங்கினான். கைகூப்பி அழுதான்.

வெங்கடகிருஷணன் குழந்தை எப்பொழுதும் அடுத்த போர்ஷனிலுள்ள தமிழர் வீட்டில்தான் இருக்கிறான். அந்த மனிதர் பர்சனல் டிபார்ட்மெண்ட் மேனேஜர். மனோதத்துவம் தெரிந்தவர். அவனோடு விதம்விதமாக விளையாடி அவனுடைய புத்திக் கூர்மையை அதிகப்படுத்தினார்.

அவர் வீட்டில் பெரிய குழந்தைகள் இருந்ததால் அடிக்கடி ஓடி வருகின்ற இந்த மூன்று வயதுக்குழந்தையை அவர் அதிகம் அனுபவித்தார். அவர் மனைவியும் கொண்டாடினார்.

மலையாளி அதிகம் பேசுவதில்லை. ஆனால், பிரியத்திற்கு எந்தக் குறையும் இல்லை.

நிறைய வீடுகள் உள்ள அந்த குவார்ட்டர்ஸுக்கு ஸிஸ்டம் செய்வதினுடைய பொறுப்பை அவன் எடுத்துக் கொண்டான். வசதிகள் அதிகம் வேண்டுமென்று மேனேஜ்மெண்டோடு பேசினான். குழந்தைகளுக்கான விளையாட்டுத்தளம் அமைத்தான். ஐயப்ப சேவா சங்கம் அமைத்து கோயில் கட்டினான்.

கார் கம்பெனியின் டயர் பிரிவிலிருந்த அவனுக்கு மேனேஜ்மெண்ட் பயப்பட்டது.

தெலுங்கர்கள் ஜாலியானவர்கள், சற்று உரத்த குரலில் பேசுவார்கள். கன்னடர்கள் வீட்டில் எப்பொழுதும் ஊதுவத்தி மணமும், சாம்பிராணிப் புகையும் நிறைந்திருக்கும். அடிக்கடி மணிசத்தம் கேட்கும்.

அந்த குவார்ட்டர்ஸ் கோவில் போல இருப்பதற்கு அந்த வீடுதான் காரணம்.

இந்த குவார்ட்டர்ஸ் மட்டுமல்ல அடுத்த பல குவார்ட்டர்ஸிலிருந்து இளைஞர்கள் வெங்கடகிருஷ்ணனை தேடி வந்தார்கள். என்ன படிக்கலாம், எப்படி படிக்கலாம் என்பது குறித்த கேள்விகளை அவன் சொல்ல அவர்கள் வட்டமாக உட்கார்ந்து கேட்டுக் கொண்டார்கள். அந்த வருடத்திற்கு இருபத்தைந்து, முப்பது பிறந்த நாள்களை வெகு எளிதாக வெங்கடகிருஷ்ணன் கொண்டாடினான். அந்த இளைஞர்கள்



அழைத்துக் கொண்டு போய் அவனுக்கு மாலையிட்டு உட்கார வைத்து கேக் வெட்டி வாயில் ஊட்டினார்கள்.

வேலை செய்பவர், காய்கறிக்காரர், வீட்டு வேலை செய்கிற பெண்மணி என்று பலரின் குழந்தைகளுக்கு வெங்கடகிருஷ்ணன் படிப்பு சமாச்சாரங்களில் உதவி செய்ய, அவன் மதிப்பு மேலும் உயர்ந்தது.

இதே சொர்க்கம். இந்த இடத்தை விட்டு எவரேனும் வெளியே போவார்களா? வேறு எங்கேனும் போய் வீடு வாங்குவார்களா? இல்லை. போவது என்பதே இல்லை. இந்த ஃபரிதாபாத் கார் கம்பெனியும், குவார்ட்டர்ஸும் மிகப்பெரிய சந்தோஷம்.

தமிழ் சினிமாக்கள் பார்க்க முடியவில்லையே என்றிருந்த ஒரு விஷயத்தையும் பல சேனல்கள் பார்வைக்கு வந்து துடைத்து விட்டது. புத்தகங்கள் எளிதாகக் கிடைத்தன. முதல் நாள் தினமலர், மறுநாள் படிக்கக் கிடைத்தது. அன்று மாலையே தினமணி கிடைத்தது.

தமிழனாகத்தான் இருக்க வேண்டிய அவசியமென்ன? இந்த டெல்லியில் பிஹாரி பையன்கள் எடுபிடி வேலைக்கு சேர்க்கப்பட்டார்கள். சிறிய சம்பளத்திற்கு வந்து தங்கி மிகச் சந்தோஷமாக வேலை செய்தார்கள்.

அவர்களுக்கு அந்தச் சிறிய சம்பளமும் மிகப்பெரிய விஷயமாக இருந்தது.

"அடேய்... ஞாயிற்றுக்கிழமை காலையில் வந்து வீடு கொஞ்சம் சுத்தம் செய்து கொடு" என்று சொன்னால் போதும் எழு மணிக்கு கதவு தட்டிவிடுவான். வீடு பெருக்கி, ஃபேன் துடைத்து, சுவர் முழுவதும் தூசுதட்டி, படுக்கை மாற்றிப் போட்டு, தரையை ஈரத்துணியால் துடைத்து, வாசலிலுள்ள ஒவ்வொரு பொம்மையையும் சுத்தம் செய்து வைத்து, சமையல் அறைக்குப்போய் அத்தனையும் சுத்தம் செய்து, பாத்ரும் கழுவி, வீட்டை பளிங்கு போல் மாற்றிவிடுவான். அடுத்த

ஞாயிற்றுக் கிழமை வருகிறேன் என்று நூறு ரூபாய் காசு கொடுத்ததும் கண்ணில் ஒற்றிக் கொண்டு போய் விடுவான்.

அடுத்த வாரமும் மறக்காமல் இட்லி சாம்பார் கொடுங்கள் என்று கேட்டு வாங்கிக் கொண்டு சாப்பிடுவான்.

அம்மா இறந்துவிட்டாளாம். ஊருக்கு போக வேண்டும். உங்களை நம்பி வந்திருக்கிறேன் என்று வழக்கமாக வேலை செய்கிற பையன் வாசலில் வந்து இரவு நேரம் அழ, வெங்கட கிருஷ்ணன் சட்டென்று அதிர்ந்து போனான்.

"உன் அம்மாவைத் தவிர அங்க யார் இருக்கிறார்கள்" என்று வெங்கடகிருஷ்ணன் மனைவி விசாரித்தாள்.

"என் தங்கை இருக்கிறாள். என் அப்பா இருக்கிறார்.வீட்டில் எல்லோருக்கும் விவசாயம்தான் தொழில். ஆனால் விவசாயம் அவ்வளவு செழிப்பாக இல்லை. கூலி வேலைக்குத்தான் போய் கொண்டிருக்கிறோம்" என்று சொல்ல, "உன் தங்கையை இங்கு அழைத்து வந்து விடு. புடவை உடுத்திக் கொள்வாளா? என்ன வயதாயிற்று? இந்தா அவளுக்கு புடவை கொடு" என்று இரண்டு பழம் புடைவைகளை ஒரு பெட்டியில் போட்டுக் கொடுத்தாள். உள்ளே எவர் சில்வர் அலுமினியப் பாத்திரங்களையும் அந்தப் பெட்டியில் வைத்தாள்.

வெங்கடகிருஷ்ணன் பீரோவைத் திறந்து இரண்டாயிரம் ரூபாய் காசு எடுத்து எல்லாவற்றையும் முடித்து விட்டு வா என்று கொடுக்க, அவன் கீழே விழுந்து புலம்பத் துவங்கினான். ஆளுக்கு நூறு, இருநூறு என்று கொடுத்து அவனை தட்டிக் கொடுத்து அனுப்பினார்கள்.

அவன் முப்பது நாள் கழித்து மறுபடியும் வந்தான். மொட்டையடித்திருந்தான். பின்னால் சிறிய குடுமி வைத்திருந்தான்.

அம்மாவின் தகனம் மிக நன்றாக நடந்ததாம். ஊரே ஆச்சரியப்பட்டதாம். நூறு ரூபாய்க்கு மூன்று சந்தனக்கட்டைகள் வாங்கிப் போயிருந்தானாம். அதைப் போட்டு எரித்தானாம்.



தங்கை வந்திருக்கிறாள் என்று ஒரு பதினேழு வயதுப் பெண்ணை கொண்டு வந்து நிறுத்தினான். கச்சலாக, நடுத்தர உயரமாக, சுறுசுறுப்பான, களையான முகத்தோடு ஒரு பெண் வந்து வணக்கம் சொன்னாள். முகத்தை மறைத்துக் கொண்டாள்.

"முகத்தை மறைத்துக் கொண்டால் நான் எப்படி பார்ப்பது? இதெல்லாம் உன் ஊரோடு வைத்துக்கொள். துப்பட்டாவை இடுப்பில் சொருகு" என்று சொல்ல, அவள் எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டாள். பல் தெரிய சிரித்தாள்.

பதினேழு வயதுப் பெண் உதவிக்கு வர, குழந்தை வளர்ப்பு என்பது வெங்கடகிருஷ்ணன் தம்பதியருக்கு மிக மிக எளிதாயிற்று. கார் கம்பெனி வியாபராம் சூடு பிடித்துக் கொண்டது. இளைஞர்கள் அற்புதமாக வேலை செய்து கம்பெனியை விஸ்தரித்தார்கள். உயர்ந்த பதவிகளில் இருக்கிற வெங்கட கிருஷ்ணன் போன்றவர்கள் வெறும் வழிகாட்டிகளாக இருந்தார்கள். தளுக்காக வேலை செய்தார்கள்.

உலக கார் மார்க்கெட்டைப் பற்றியும், இந்திய கார் மார்க்கெட்டைப் பற்றியும் ஒப்பிட்டுப் பார்த்து அதிகம் சிந்தித்தார்கள்.

"அவன்தானே, கார் கம்பெனி ஆரம்பிக்கறானா? ஆரம்பிக்கட்டும். அவன் இடத்துல என் காரை நான் விக்கறேன்."

ஃபரீதாபாத் கார் கம்பெனியில் பல பேர் தொடை தட்டினார்கள். அப்படியே நிரூபித்தார்கள்.

"ஒரு அளவுக்கு மேல கார் விக்க முடியாதே."

"எவன் சொன்னது?"

எப்போ மோட்டார் சைக்கிள்ல போகணும்னு ஆரம்பிச்சுட்டானோ அப்போ, அவன் கார்லதான் வருவான். ஏரோப்ளேன் வாங்க முடியாது. மோட்டார் சைக்கிளையும் ஓட்டிண்டிருக்கவும் முடியாது. ஆக, மோட்டார் சைக்கிள்ல போனஅத்தனை பேருக்கும் அடுத்த இடம் கார். கார் விற்கும்.

இன்னும் இருபது வருஷத்துக்கு இந்தியாவுல கார் கனஜோரா விற்கும். வா, காசி, கயாவுக்கெல்லாம் போயிட்டு வரலாம். சந்திரசேகரையும், அவர் மனைவியையும் அழைத்து வந்து பிள்ளை வெங்கடகிருஷ்ணன் காசி விசுவநாதரை தரிசனம் பண்ண வைத்தான். டெல்லியிலேயே இருக்க வைத்தான். பாராளுமன்றத்தையும், பிரதமர் வீட்டையும் எட்டி பார்க்க வைத்தான்.

நாலு வருடத்தில் வெங்கடகிருஷ்ணன் சம்பளம் முப்பதாயிரத்தை எட்ட அவர் மனைவி இதுபோதும். இங்கேயே தனி பங்களா கொடுத்தால்கூட வேண்டாம் என்று சொல்லி விடுங்கள். குவார்ட்டர்ஸில் இருப்பதுதான் பாதுகாப்பானது. இப்பொழுது இருக்கின்ற சோஃபா செட்டுகளை எல்லாம் எடுத்துவிட்டு, புதிதாய் கொண்டு வந்து போடச் சொல்லுங்கள். ஹாலுக்கும் ஏ.சி. வேண்டுமென்று சொல்லி விடுங்கள்'' என்று சொல்ல, அதேபோல சில உத்தரவாதங்கள் கிடைத்தன.

அங்குள்ள மகிளா மன்றத்தின் தலைவியாக வெங்கடகிருஷ்ணன் மனைவி இருந்தாள்.

எம்.எஸ். விஸ்வநாதன் குழுவை கொண்டு வந்து மேடையில் ஏற்றினார்கள். 'ஜனனி ஜனனி ஜகம் நீ...' என்று அவர் பாட அந்த டெல்லிக் கூட்டம் வாயடைத்து கேட்டுக்கொண்டிருந்தது. மிகப்பெரிய கரகோஷம் செய்தது. ஒன்ஸ்மோர் என்று கூவியது. மூன்றுமுறை அந்தப் பாடல் பாடப்பட்டது.

குங்குமப்பொட்டும், சந்தனக் கீற்றுமாய் இருக்கின்ற எம்.எஸ்.விஸ்வநாதனைப் பார்த்ததும், 'பாபாஜி... பாபாஜி' என்று பல பேர் காலில் விழுந்து எழுந்தார்கள்.

வெங்கடகிருஷ்ணனின் மனைவி சந்தோஷத்தில் நிலை கொள்ளாமல் தவித்தாள்.

"இந்த டெல்லியை விட்டு வெளிய போவதாவது. இந்த குவார்ட்டர்ஸை விட்டு நகருவதாவது. இந்த கம்பெனியை விட்டு மாறுவதாவது. மூன்று லட்சம், நான்கு லட்சம் சம்பா



தித்து என்ன சந்தோஷம். அந்த சந்தோஷம் இங்க கிடைக்கறதே" என்று அடித்துச் சொல்ல, அவர்கள் சந்திரசேகர் எப்படிப் பேசினாலும் வருவதாக இல்லை என்று தெளிவாகச் சொன்னார்கள்.

முன்னேற மாட்டேன் என்று ஒரு பிள்ளை, முன்னேறி உச்சாணிக் கொம்பை தொட முடியும் என்கிறபோது, அந்த வேலையை உதறிவிட்டு நான் வேறு விஷயத்திற்கு போகப் போகிறேன் என்கிற மாப்பிள்ளை.

சந்திரசேகர் கஷ்டப்பட்டார்.மெல்ல உள்ளுக்குள் குமைந்து போனார்.

வண்டியேறி பெங்களூரில் கொடி கட்டிப் பறக்கும் தன் தம்பியை நோக்கி நகர்ந்தார். அவனிடம் ஆலோசனை கேட்கலாம் என்று அவன் வீட்டில் தங்கினார்.

அவர் தம்பி நாராயணசாமி மிகத்துடுக்கான பையன், ஃபேனில் கயிறு கட்டி ரங்கராட்டினம் சுற்றுகிறேன் என்று சொல்லி மின் விசிறியின் சிறகுகளை வளைத்து விட்டு அது வேகமாகச் சுழல நாலா பக்கமும் அடிபட்டு தலை குப்புற விழுந்த பையன்.

எல்லாச் சிறகுகளையும் தொங்க விட்டு உயரப் பறக்கும் ஒரு குருவிபோல அந்த மின்விசிறி இருந்தது. அம்மா அதைப் பார்த்துப் பார்த்து கோபப்படுவாள். சுளீர் சுளீரென்று நாராயணசாமியை அடிப்பாள். நாராயணசாமி அடிபடக்கூடாது என்பதற்காகவே பல தவறுகளை சந்திரசேகரன் தான் ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

ஆனால், இந்த துடுக்குத்தனம் கல்லூரியிலும் தொடர்ந்தது. ஒரு நாள் இரவு எட்டரை மணிக்கு ஒரு பெண் ஆட்டோவில் வந்து இறங்கியது. கதவு தட்டியது. அம்மா கதவு திறந்ததும், "நீங்கதான் நாராயணசாமி அம்மாவா? என்னை மருமகளா ஏத்துப்பீங்களா?" என்று கேட்டது.

அம்மா திகைத்து எல்லோரையும் உரத்த குரலில் அழைக்க அவள் அசையாது நின்றாள்.

"என்னம்மா... என்ன கேட்கற?" என்று அப்பா கேட்க, "உங்க பிள்ளை லவ் லெட்டர் எழுதியிருக்கார் ஸார். என் மேல உயிரையே வச்சுருக்கறதா. மேற்கொண்டு பேசலாமேன்னு வந்தேன்" என்று சொல்ல, நாராயணசாமி மாடியிலிருந்து கொல்லைப்புறம் குதித்து சுவரேறி தப்பித்துப் போனான். அவனை ஆள் வைத்துத் தேட வேண்டியதாயிற்று. ஆறு நாள்களுக்குப் பிறகு வீடு வந்து சேர்ந்தான்.

"அவளுக்கு எழுதினது உண்மைதான்ப்பா. கொடுக்கணும்கறதுக்காக எழுதலை. எழுதிட்டு கிழிச்சுப் போடலாம் அப்படின்னு நினைச்சேன். என் ஃப்ரெண்ட் கொண்டாடா படிச்சுட்டு தரேன்னுட்டு வாங்கிண்டு போய் அவகிட்ட கொடுத்துட்டான். ரொம்ப நாளா கவிழ்க்கணும்னு பார்த்துண்டிருந்தான்."

"இதை அப்பவே சொல்ல வேண்டியதுதானே?"

"இல்லை இப்போதான் தோன்றியது" என்று பதில் சொல்ல, வீடு சிரித்து அவனை மன்னித்து ஏற்றுக் கொண்டது.

"சிறுக்கி சரியான நேரத்துல என் வீட்டுக்கு வந்து என் லவ் லெட்டரை காண்பிச்ச இல்ல. உனக்கு கல்யாணம்னு ஒண்ணு நடக்கும்போது அப்போ பதினாலு பேருக்கு லவ் லெட்டர் எழுதியிருந்தன்னு, பதினாலு லவ் லெட்டரையும் உன் புருஷன்கிட்ட கொடுப்பேன். எவ்வளவு கலாட்டா பண்ண முடியுமோ அத்தனை பண்ணுவேன்" என்று பதிலுக்கு அவன் மிரட்ட அவள் வீட்டிலிருந்து இருபது இருபத்தைந்து ஆண்கள் வந்து இறங்கினார்கள்.

"அவ கல்யாணத்தை கலைப்பேன்னு சொன்னானாமே உன் புள்ள. எங்க கூப்பிடு அவனை. இருந்தாதானே கலைப்பான். இல்லாத பண்ணிட்டோம்னா" என்று அரிவாள் உயர்த்திக் காட்டினார்கள்.

அப்பா எல்லோரையும் சமாதானப்படுத்தி கை கூப்பி அனுப்பினார்.



ஆனால், இதற்குப் பிறகு நடந்த ஒரு சம்பவம்தான் வீட்டையே உலுக்கி விட்டது.

நாராயணசாமி இன்ஜீனியரிங் கல்லூரியில் கட்டிடக் கலை பற்றி படித்து வந்தான். அவனுக்கும், பேராசிரியர் ஒருவர் மனைவிக்கும் கள்ளத் தொடர்பு என்று பல கடிதங்கள் வீட்டுக்கு வந்தன.

அப்பா திகைத்தார். அம்மா அவனிடம் கடிதத்தைக் காட்டி என்ன இது என்று கேட்டாள்.

அவன், "ஆமாம்" என்று நடுக்கூடத்தில் தலை குனிந்து கொண்டு சொன்னான். வீடு திகைத்துப் போய் தலையில் அடித்துக் கொண்டது. மெல்ல சந்திரசேகர் என்ன காரணம் என்று விசாரிக்க, "அவர் வீட்டிற்கு வேலை செய்வதற்காகப் போனேன். வேலை செய்தால் கூடுதலாக மார்க் கிடைக்கும் என்று நினைத்தேன். ப்ராக்டிகலில் அவர் அதிகம் மார்க் போட்டு வாழ்த்துவார் என்று அவர் சொன்னதால் காய்கறி வாங்கிக் கொடுப்பது, வீட்டு வேலைகள் செய்வது என்று போய்செய்து விட்டு வருவேன். அவர் மனைவி நெருங்கிப் பழகினார். நான் விலக முற்பட்டபோது உன்னைப் பற்றி தவறாக போட்டுக் கொடுத்து விடுவேன். பேராசிரியரிடம் உன்னை ஃபெயிலாக்கச் சொல்லுவேன் என்று சொன்னார். எனக்கு பயமாகி விட்டது. வேறு வழியில்லை. எனவே, அவர்களுக்கு கட்டுப்பட்டு நடந்தேன்."

"என்ன செய்யப் போகிறாய்?" என்று சந்திரசேகர் கேட்க, "இதை இப்படியே விட்டு விடுங்கள். இந்த வருடம் கடைசி வருடம். எப்படியும் பாஸ் செய்து விடுவேன்" என்று சொல்ல வீடு சிலிர்த்து எழுந்தது.

அப்பா கத்தினார். அம்மா அடிக்க வந்தாள்.

சந்திரசேகர் அவர்களை தடுத்துவிட்டு அவனை ஹாஸ்டலில் கொண்டு போய் சேர்த்தார்.

"வீட்டில் எனக்கும் அப்பாவுக்கும் தகராறு என்று சொல்லி விடு" என்று சொல்லிக் கொடுத்தார்.

"டேய்... பார்த்துடா. உடம்பை பாழாக்கிக்காதடா..." என்று சொன்னார்.

மிகச் சிறப்பான முறையில் அவன் இன்ஜீனியரிங் படிப்பில் தேறினான். பெரிய கம்பெனியில் நேர்முக இன்டர்வியூவுக்குப் போய் அங்கு தேர்வானான். அந்தக் கம்பெனியில் மூன்று வருடங்கள் வேலை செய்தான். பிறகு உதறிவிட்டு சென்னையில் தனியே அடுக்குமாடி கட்டிடம் கட்டும் கம்பெனியை ஆரம்பித்தான். சென்னையில் சரியாக போணியாகாததால் இங்குவிட பெங்களூரில் இன்னும் நல்லபடியாக காசு புழக்கம் இருப்பதால் பெங்களூருக்கு தன் வீட்டை மாற்றிக் கொண்டான்.

போய் எப்படி பொண்ணு கேட்கறதுன்னு பயமா இருக்கு. நீ யாரு என்னன்னு எனக்கே தெரியலையே. உன்னை நம்பி யார்கிட்ட போய் நான் பொண்ணு கேட்கறது என்று அம்மா சொல்ல, அடுத்த மூன்று வாரத்திற்குள் தனக்குத் திருமணம் என்றும் பெண்ணின் ஜாதகம் பார்த்து விட்டேன் என்றும், ஜாதி மாறவில்லை என்றும், மிகச் சரியான விதத்தில் பெண் பார்த்து ஏற்பாடு செய்து விட்டேன் என்றும், அவள் சாதாரண குடும்பத்தை சேர்ந்தவள் என்றும், மிக எளிமையான முறையில் திருமணம் இருக்கும் என்றும் வீட்டிற்கு வந்து சொன்னான். வந்திருந்து கல்யாணத்தை நடத்திக் கொடுத்தாலும் சரி, இல்லையென்றாலும் சரி, நீங்கள் வரவில்லையென்றாலும் பரவாயில்லை. சந்திரசேகரும், அவன் மனைவியும் வந்து விட்டால் போதும் என்று சொல்ல, அப்பா நொந்து போனார்.

"இத்தனை கெட்டிகாரனா இருக்கிற ஒரு புள்ளைய எப்படி ஸார் ஒதுக்கி வைக்கறேள்... எனக்கு புரியவே இல்லையே."

பெண்ணின் தகப்பன் வந்து கேட்க எல்லோரும் மௌனமாக அவரைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"உனக்கு என்ன தெரியும், என் பிள்ளையைப் பத்தி அப்படிங்கறேளா, ஸார்... அவர் கம்பெனியில் நான் அக்கௌண்



டண்டா இருக்கேன். ரொம்ப சந்தோஷமா என் பொண்ண அவருக்கு கல்யாணம் பண்ணி கொடுக்கறேன். மூன்றரை வருஷமும் அவர் எப்படி உழைக்கறார். எப்படி சம்பாதிக்கறார்னு கண்ணு முன்னாடி பார்த்தேன். ஒவ்வொரு பிரச்சினையையும் அவர் தீர்க்கிற அழகும், பிரச்சினைகளே வராத அவர் போடற தடுப்பும், அற்புதமா இருக்கு, பாருங்க ஸார். இன்னும் பத்து வருஷத்துல பெங்களூர்ல இந்தப் பகுதியில பாதி கட்டடம் இவர் கட்டினதாதான் இருக்கும். நீங்களெல்லாம் வராம இருந்துடுவேளோன்னு நினைச்சேன். வந்து வாழ்த்தினது பத்தி ரொம்ப சந்தோஷம். என்ன வலை போட்டு தேடியிருந்தாலும் இவ்ளோ நல்ல மாப்பிள்ளை கிடைச்சுருக்க மாட்டார் ஸார். அவரா வந்து என் பொண்ண கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொன்ன போது எனக்கு கனவா நனவான்னு தெரியலை. பகவானுடைய க்ருபை. என் மூத்தோர்களுடைய புண்ணியம். எனக்கு நல்ல மாப்பிள்ளை கிடைச்சார் ஸார். இப்போவும் நான்தான் அவருக்கு அக்கவுண்டண்ட்.

"எனது ரெண்டாவது பிள்ளைய மைசூர் யுனிவர்சிட்டியில சேர்த்து சிவில் இன்ஜீனியரிங் படிக்க வைக்கறார் ஸார். அத்தனை காசும் சப்ஜாடா அவர்தான் செலவு பண்றார். அவர் எங்களுக்கு மாப்பிள்ளை இல்லை ஸார். தெய்வம். நாங்க அவருக்கு அடிமைகள்."

"சரி போ... எங்கயோ சந்தோஷமா இருக்கான். ரொம்ப சந்தோஷம். யாரோடயோ ஒட்டினுட்டான். அது இன்னமும் சந்தோஷம். ஆனால், அவன் பண்ண விஷமங்களால் உண்டான காயம் ஆறலை. எனக்கு அவனை பிடிக்கலை. எங்கயோ நன்னா இருக்கட்டும்."

மஞ்சள் அட்சதை போட்டுவிட்டு அவர்கள் வந்து விட்டார்கள்.

அப்பாவும், அம்மாவும் திரும்பி விட்டார்கள். சந்திரசேகர் இரண்டு நாள்கள் அவனோடு தங்கிவிட்டு வந்தார்.

"கும்பல் பெருத்து போய்டுத்தேடா. பெரிய க்ரூப்பா வளைச்சு போட்டியே. அத்தனை பேருக்கும் சோறு போட ணும்னா அந்த மாதிரி சம்பாத்தியம் இருக்கா? வருஷத்துக்கு ஒருத்தர் எவ்வளவு சம்பாதிச்சா இவ்வளவு பெரிய குடும்பத் துக்கு சோறு போட முடியும்னு நினைக்கற. குறைஞ்ச பட்சம் ஒரு மாசத்துக்கு அம்பது, அறுபது ரூபாயாவது வேண்டாமா?"

"ஆனா, என்னுடைய திட்டம் ஒரு மாசத்துக்கு அஞ்சு அல்லது ஆறு லட்சரூபா சம்பாதிக்கறது.அடுத்த வருஷம் ஒரு கோடி ரூபா சம்பாதிக்கறது. அதுக்கு அடுத்த வருஷம் மூணு கோடி ரூபா சம்பாதிக்கறது."

"டேய்... மறுபடியும் தப்பான வழியில் இறங்காத."

"நேரான வழின்னு ஒண்ணு கிடையாது. ஜெயிக்கறதுக்கு ஒரு வழிதான் உண்டு. அந்த வழி தப்பு, ரைட்டுங்கறது மனுஷாளுடைய அபிப்ராயமே தவிர ஜெயிக்கறதுக்கு எந்த அபிப்ராயமும் கிடையாது."

"எனக்கு புரியாதுடா நீ பேசறது."

"ஒண்ணுமில்ல ஒரு நிலம் வாங்கியிருக்கேன்.அதை போய் ரிஜிஸ்டர் பண்ணிண்டு வரணும். கிளார்க் காசு கேட்கறான். கொடுத்தாதான் பண்ணுவான். இல்லைன்னா முடியாது. சர்வேயர் வந்து பார்த்துட்டு கையெழுத்து போடணும், காசு கேட்கறான். கொடுத்தாதான் வருவான். இல்லைன்னா முடியாது. அவனுக்கு காசை தூக்கி போட்டு அந்த நிலத்தை என்னுடையதாக்கி அந்த நிலத்தை பரிசோதனை பண்ணி எவ்வளவு உயரம் கட்டடம் எழுப்பலாம்னு தீர்மானம் பண்ணி, செங்கல் வாங்கி, மணல் வாங்கி, சிமெண்ட் வாங்கி கொஞ்சம் கொஞ்சமாக எழுப்பி, எழுப்பின பிறகு இந்த மாதிரி பண்ணியிருக்கேன். இப்படி பண்ணப் போறேன்னு காண் பிச்சு அந்தக் காசை வாங்கி இன்னும் மேல எழுப்பி, காசில் லாத இந்த வியாபாரம் பண்ணமுடியாது. எத்தனை மாசத்துல முடிப்பன்னு கேட்பான். மூணு மாசம்னு சொல்லுவேன். மூணு மாசத்துல முடிக்க முடியாது. அது அவருக்கும் தெரியும். நாலு மாசத்துலயாவது முடிப்பியான்னு கேட்பான். ஆறு மாசத்துல முடிச்சு கையெழுத்து போடுவோம்.

'வீடு அருமையா கட்டியிருக்க. லொகேஷன் ரொம்ப நன்னாயிருக்கு. ஒரு ப்ளாட் இருவத்தஞ்சு லட்சரூபா சொல்ற. அத்தனையும் கொண்டு வந்து உங்கிட்ட கொடுத்தா என்னை ஜெயில்ல போட்ருவான். வெள்ளை எவ்வளவு, கருப்பு எவ்வளவுன்னு கேட்பான். வெள்ளை பதினஞ்சு, கருப்பு பத்து அப்படிம்பேன். அப்படியிருக்கற நான் எப்படி வெள்ளையா இருக்க முடியும்? அது கருப்பாதான் இருக்கும். அதாவது கணக்குல வராத பணமாதான் இருக்கும். அதாவது, வரி ஏய்ப்பு என்பது சாமர்த்தியமாக நடைபெறும்.இருவத்தி அஞ்சு லட்ச ரூபாக்கு நாற்பது பர்செண்ட் வரின்னா என்ன ஆச்சு? யோசனை பண்ணிப்பார். அரசாங்கத்துக்கு கொடுக்க முடி யுமா? கொடுக்க யாருக்காவது மனசு வருமா?"

"பத்து பர்செண்ட் வரின்னா கொடுத்துவிடுயா?"

"அப்பவும் தரமாட்டோம். அது வேற விஷயம்."

நாராயணசாமி வாய் விட்டுச் சிரித்தான். அவன் சிரிப்பு சந்திரசேகருக்கு பயத்தை ஏற்படுத்தின.

"வரி ஏய்ப்புங்கறது ஒரு கலையாயிடுத்து. என்னென்ன பண்ணலாம். எப்படியெல்லாம் தப்பிச்சுக்கலாம்னு யோசனை பண்றது சிலருக்கு வேலையாயிடுத்து. இதுக்கு ஐடியா கொடுத்து காசு வாங்கற கம்பெனி நிறைய இருக்கு. ஒன்பது ப்ளாக். ஒன்பது ப்ளாக்ல இருக்கறவனும் பத்துப் பத்து லட்ச ரூபா எனக்கு கொண்டு வந்து கருப்புப் பணமா கொடுத்தாக்க நான் அதை வச்சுண்டு என்ன செய்ய முடியும்? வரியா கட்ட முடியும்? டிக்ளரா பண்ண முடியும்? வரிக்கேத்தபடி என் வாழ்க்கையை, என் கணக்கு புஸ்தகத்தை மாத்தணும். கணக்கை ஒரு அக்கவுண்டண்டுகிட்ட கொடுத்தாக்க நாளைக்கு கூட சம்பளம் கேட்பான். முடியாதுன்னாக்க மாட்டி விட்ருவேன்னுவான். கணக்கு புக்கை ஜெராக்ஸ் எடுத் துண்டு போய் இன்கம்டாக்ஸ்ல கொடுத்துட்டு இன்கம்டாக்ஸ்

லஞ்சப் பணத்தை, அதாவது பரிசுப் பணத்தை அவன் வாங்கிண்டு போயிடுவான். நான் மாட்டிப்பேன். அதனாலதான் பில் பாஸ் பண்ற பொம்மனாட்டியையே பொண்டாட்டியா, அக்கவுண்டண்டையே மாமனாரா, மைத்துனனையே காரோட்டியா வச்சுனுட்டேன். இப்போ என் கணக்கு எதுவும் வெளிய போகாது. நான் யாருக்கும் பயப்பட வேண்டிய அவசியம் இருக்காது. இல்லையா?"

"அப்போ இந்தக் கல்யாணம் ஒரு கணக்கு, ஒரு தந்திரமா?"

சந்திரசேகர் வியப்போடு கேட்டார்.

"உலகத்துல இருக்கற அத்தனை விஷயமும் தந்திரம் தான்."

"உனக்கும் எனக்கும் நடுவில என்னடா தந்திரம்?"

"உனக்கும் எனக்கும் உறவே இல்லையே. அப்போ தந்திரத்துக்கு என்ன வழி வந்தது?"

"என்னடா இப்படி பேசற?"

"ஆமாம். நீ எங்கிட்ட ஒரு அஞ்சு பைசா கேட்கப் போறதில்லை. உன்னை நம்பி எந்த வேலைக்கும் வரப் போறதில்லை. என்னை நம்பியும் நீ எந்த வேலைக்கும் வரப்போறதில்லை. அப்புறம் தந்திரமென்ன?"

"டேய்...நான் உனக்கு அண்ணாடா."

"இல்லைன்னு சொல்லலை. உன் உறவால லாபமோ, நஷ்டமோ இல்லாதபோது அந்த உறவுக்கு எந்த மரியாதையும் இல்லை. நீ சௌக்கியமா, நான் சௌக்கியமா அப்படின்னு வெறும் பேச்சா கேள்வியா கேள்விக்குண்டான பதிலா முடிஞ்சுட்' போறது."

பேச்சுதான் தடாலடியாக இருக்குமே தவிர நாராயணசாமி உண்மையிலேயே உறவுகள் மீதும், நட்புகள் மீதும் பிரியமுள்ளவன். அவனைக் கொண்டாட வேண்டுமென்று கொஞ்சம் எதிர்பார்ப்பானே தவிர ஏதேனும் உதவி செய்ய வேண்டு



மென்றால் ஒன்றுக்குப் பத்தாகச் செய்யும் பலமுடையவன்; புத்தியுடையவன்.

"ஒருவேளை தடுக்குனு நான் செத்துப் போயிட்டா என்னடா பண்ணுவ?"

நாராயணசாமி அதிர்வான் என்று சந்திரசேகர் நினைத்தார்.

அவன் மெல்ல சிரித்தான்.

"யார் வேணா, எப்போ வேணா, எங்க வேணா செத்துப் போயிடலாம். அதுதான் இந்த உலகத்தினுடைய இந்த வாழ்க்கையினுடைய விசேஷம்.நான் நூறு வருஷம் இருப்பேன்னு எந்த உயிரும் இங்க சொல்ல முடியாது.நீ செத்துப் போயிட்டா கொஞ்ச நேரம் அழுவேன். அடுத்தது என்னன்னு யோசனை பண்ணி உன் தகனத்தை நல்லபடியா முடிப்பேன். உன் குடும்பத்தை நான் காப்பாத்துவேன்."

"வெறும் அன்பைதானடா ஒருத்தர் எதிர்பார்க்கறது. பிறகு ஏன் விட்டேத்தியா பேசற?"

"நான் பண்ணுவேன். நான் பண்ணுவேன்னு முன்னாடியே சொல்லணுமா? தேவையே இல்லை. உன் பொண்ணு காலேஜ் படிக்கறா. உன் பையன் இன்ஜினியரிங் படிக்கறான். ரெண்டு பேரையும் மேல கொண்டுவந்து ஆளுக்கொரு வேலை பார்த்து கொடுத்துட்டு ஒரு கல்யாணத்தை பண்ணி முடிக்கறது எனக்கு கஷ்டமா, சாதாரணமா செய்துடலாம். அது என் வேலையும் கூட. மகத்தான காரியமா நான் செய்யறதுக்கு இஷ்டப்படுவேன்."

"அப்போ உனக்குள்ள அன்பு இருக்கு."

"இருக்குன்னு தெரிஞ்ச பிறகு எதுக்கு வெளிய காட்டிக்கறது? உனக்கு தெரிஞ்சா போதும். ஊருக்குத் தெரியணும்னு அவசிய மில்லை."

அதற்குப்பிறகு நாராயணசாமியோடு அவருடைய நட்பு இன்னும் பலமாக இறுகியது.

"என்ன அமெரிக்கா வாழ்க்கை. அமெரிக்க வாழ்க்கையைப் பத்தி அந்த வசதியைப் பத்தி யார் பேசினாலும் எனக்கு சிரிப்பாதான் வரும். நானும் போய் பார்த்துட்டேன். எதுக்கு அண்ணா காசு சம்பாதிக்கறோம்? நம்மள சுத்தி ஒரு சின்ன கூட்டம் வச்சுண்டு அவங்களால நமக்கு சந்தோஷமும், நம்மால அவங்களுக்கு சந்தோஷமும் இருக்கணும். நம்முடைய வெற்றியை பரிமாறிக்கறதுக்கு இடம் இல்லைன்னா, குடும்பம் இல்லைன்னா, வெற்றி பெற்று எந்த லாபமும் இல்லை. நாம வெற்றி பெற்றதற்கு நமக்கு கூட இருந்தவா வருத்தப்படறான்னா நம்ம வெற்றி அபத்தமா போயிடும். அக்கவுண்டண்ட் பொண்ணையே கல்யாணம் பண்ணிண்டேன். பாருங்க, அந்த மொத்த குடும்பமும் அவ்வளவு விசுவாசமா இருக்கு. எனக்கு என்ன பிடிக்குமோ அதைத்தான் என் மாமியார் சமைப்போ. எனக்கு என்ன பிடிக்குமோ அதைத்தான் என் மாமனார் பேசுவார். நான் என்ன சொல்றேனோ அதைத்தான் என் வொய்ஃப் செய்வோ. நான் ஏதாவது சொல்ல மாட்டேனான்னு காத்துண்டு கை கட்டிண்டிருப்பான் மச்சான். இதுதான் என்னை சுத்தி இருக்கிறது. இவாளைத் தாண்டி நான் உங்கிட்டயோ அல்லது அப்பாகிட்டயோ, அம்மாகிட்டயோ போக வேண்டிய அவசியமென்ன? என்னுடைய கோட்டையை, என்னுடைய குடும்பத்தை நான் உருவாக்கிட்டேன். இது சர்வாதிகாரமா தெரியும். இல்லை, சர்வாதிகாரம் இல்லை, ரொம்ப சர்வாதிகாரம் காட்டினோம்னா, ஒரு நாள் இல்லைன்னா ஒருநாள் பிடுங்கிக்கும்.

'யோசிக்காத கூட்டத்தை பக்கத்துல வச்சுண்டு, வெறுப்பு காட்டற கூட்டத்தை நெருக்கமா வச்சுண்டு யாரும் ஜெயிச்சுட முடியாது. தனக்கு என்ன வேணும்னு இவா யோசனை பண்ற மாதிரி அவங்களுக்கு என்ன வேணும்னு நான் யோசனை பண்ணுவேன். காரடையான் நோன்புக்கு மாமியாருக்கு ஒரு பட்டுப்புடவை, மனைவிக்கு ஒரு பட்டுப்புடவை, மச்சினன் பொண்டாட்டிக்கு ஒரு பட்டுப்புடவை வாங்கிக் கொடுப்பேன். இப்போ போய் யாராவது கட்டிப்பாளான்னு மாமியார் சொல்லுவா. கட்டிக்கோங்களேன் அப்படின்னு வற்புறுத்துவேன். ரொம்ப சந்தோஷமாயிடும் அந்த பொம்மனாட்டிகளுக்கு. ஒரு புடவை விலை ரெண்டாயிரத்து ஐந்நூறு ரூபாதான். எனக்கு அது காசே இல்லை. ஆனா, அவா பதிலுக்கு செய்யற அன்புக்கு என்ன விலை வைக்க முடியும்? நானே புடவைய கொடுக்கறதில்லை, என் பொண்டாட்டிய விட்டு அம்மாகிட்ட கொடுத்து நமஸ்காரம் பண்ணிக்கோ. மன்னிகிட்ட கொடுத்து நமஸ்காரம் பண்ணிக்கோன்னு சொன்னா அவளுக்கு ரொம்ப சந்தோஷம். அந்தப் பொம்மனாட்டிகளுக்கும் ரொம்ப சந்தோஷம். நான் நேரடியா அதுல இன்வால்வ் ஆகறதில்லை. அவதான் ஆசைப்பட்டு கேட்டா உங்களுக்கு ஏதாவது தரணும்னு. எனக்கு இதுதான் தோணித்து அப்படின்னு சொல்லிட்டோம்னாக்க பொண்டாட்டிக்கு இன்னும் குஷால் ஆயிடும். குஷாலான பொண்டாட்டி என்ன பண்ணுவோ. விட்டேனா பார்னு ராத்திரி கொஞ்சி தீர்த்துடுவோ. ராத்திரி பொண்டாட்டி கொஞ்சித் தீர்த்தா என்ன ஆகும்? ஆழ்ந்து அடிச்சப் போட்டா மாதிரி தூங்கலாம். தூங்கினா என்ன ஆகும். மறுநாள் கார்த்தால ரொம்ப உற்சாகமா புத்துணர்வா விழிச்சு எழுந்திருக்கலாம். உற்சாகமா, புத்துணர்வா கார்த்தால இருந்தா என்ன ஆகும்? என்ன வேலை செய்யறமோ அது திட்டமிட்டபடி தெளிவா நடக்கும். ஆக, சந்தோஷம் எங்கிருந்து வருகிறது. மற்றவரை சந்தோஷப்படுத்துவதிலிருந்து நமக்கு சந்தோஷம் வருகிறது. மற்றவரை சந்தோஷப்படுத்துவதிலிருந்து நமக்கு பலம் வருகிறது. நம் பலத்திலிருந்து நமக்கு வெற்றி வருகிறது. நமது வெற்றியிலிருந்து நமக்கு சந்தோஷம் வருகிறது.

'சந்திரசேகர் என்ற அண்ணா மேல எனக்கு மரியாதை இருக்கறதுக்கு காரணம் அவருடைய மனைவி. அவருடைய மகள். அவருடைய மகன். குடும்பம்கற விஷயம்தான், சந்தோஷமா நிறைய நிறைய சம்பாதிக்கணும்கற வெறியை தருது. என் பொண்டாட்டி எனக்கு பொண்டாட்டியா இருக்கறதுக்கு முன்னாடி ஒருநாள் கூப்பிட்டு என்னை கல்யாணம் பண்ணிக்

கறியான்னு கேட்டேன். ஆஹா... நான் கொடுத்து வச்சுருக்கணும்னு சொன்னா. என்கூட பாம்பே வரியான்னு கேட்டேன். நீங்க எங்க கூப்பிட்டாலும் வரேன்னு சொன்னா. அவளுக்கும் பாம்பேக்கு ஏரோப்ளேன் டிக்கெட் போட்டு அவளை கூட்டிண்டு போனேன். ஒரு வாரம் பாம்பேல கொட்டமடிச்சோம்.

'உன்னை கல்யாணம் பண்ணிக்கலைன்னா என்ன பண்ணுவ அப்படின்னு கேட்டேன். செத்தா போக முடியும்? கல்யாணம் பண்ணிப்பேங்கற நம்பிக்கையில்தான் வந்தேன். ஆடினேன். இல்லைன்னா வேற வழியை பார்க்க வேண்டியதுதான் அப்படின்னு சாதாரணமா சொன்னா. அந்த உண்மை, மூஞ்சியில அடிச்சா மாதிரி இருந்த அந்த உண்மை. வாழ்க்கைய அவ புரிஞ்சுண்டிருக்கற எதார்த்தம் எனக்கு பிடிச்சது.

'உங்க பொண்ண கல்யாணம் பண்ணிக்கறேன்னு அக்கவுண்டண்ட்கிட்ட சொன்னேன். பொண்ணு போன் பண்ணி சொன்னாளே பாம்பேலயே கல்யாணம் முடிஞ்சுபோச்சுன்னு, ரொம்ப சாதாரணமா சொல்றார். விட்டுப் போயிருந்தா என்ன பண்ணுவீர்னு மிரட்டினேன். நீர் முரடர்னு தெரியும். அதே சமயத்துல நல்லவர்னும் தெரியும். உம்மகிட்ட வேற யார் வேலை செய்ய முடியும்.' என்னைத் தவிர, உமக்கு வேற யார் பொண்டாட்டியா இருக்க முடியும், என் பொண்ணைத் தவிர அப்படிங்கறார். அந்த நம்பிக்கையும் பிடிச்சது.

'பல லட்சங்கள் சம்பாதிக்கலாம்னுதான் இந்தக் கடைய ஆரம்பிச்சேன். இந்தக் கம்பெனியை ஆரம்பிச்சேன்.இப்போ கோடி... கோடிகள் வேணும். பெரிய பங்களா காரெல்லாம் வேணும். அந்த ஆட்டத்துக்கு நான் ரெடியாகறதுக்கு காரணமே இந்தக் குடும்பம்."

இவ்வளவு விட்டேத்தியாகவும், நிம்மதியாகவும் பேசியவன் மறுநாள் காலை வெகு துரிதமாக மாறினான்.

இடையறாத போன் கால்கள், தொடர்ந்த கான்ஃப்ரென்ஸுகள். வியாபாரப் பேச்சுகள், இரவு நேரங்களில் க்ளப்புக்கு கூட்டிக் கொண்டு போய் நண்பர்களை உபசரித்து தானும்

5470252



மெல்லியதாக மது அருந்தி, வியாபராம் பற்றியே இடையறாது சிந்தித்தல், வருமானத்தின் எல்லா விஷயங்களையும் ஆராய்தல்.

மாமனார் எதற்கு, வியாபாரத்திற்கு. நட்புகள் எதற்கு. வியாபாரத்திற்கு. சாமி கும்பிடுவது எதற்கு, வியாபாரத்திற்கு. என்று வாழ்க்கையில் வியாபாரம் மட்டுமே அவனுக்கு முக்கியமான விஷயமாகப் போயிற்று.

"பெங்களூர், மெட்ராஸ் ரோட்ல நாலு ஏக்கர் நிலம் இருக்கு. அஞ்சு பேருக்கு சொந்தமான இடம் அது. மூணு பேர் கையெழுத்து போட ரெடியா இருக்கான். ஒருத்தனை ஆசை காட்டி மயக்கிடலாம். ஒருத்தன் மட்டும் விக்க மாட்டேன்னு எகிறிண்டிருக்கான். கொஞ்சம் காசு பணத்தோட இருக்கறதுனால அவன் ரொம்ப அலட்டறான். அந்த ஒரு நிலத்தை வாங்கிட்டோம்னா ரெண்டா பிரிச்சு பேர்பாதியை வித்து அந்த பேர்பாதி காசுல அஸ்திவாரம் போட்டு, அந்த அஸ்திவாரத்தைக் காட்டி பேங்க்ல கடன் வாங்கி, ஆறு அடுக்கு மாளிகை கட்டலாம். ஆபீஸ் காம்ப்ளெக்ஸ் அற்புதமா இருக்கும். கீழ குடோன். மேல ஆபீஸ்னு கட்டினா இன்னும் பிரமாதமா இருக்கும். பெங்களூர் தொழில் நகரமா வளர்ந்துண்டு வருது. இந்த மாதிரி கட்டிடத்துக்கு ரொம்ப மதிப்பு என்று யாரோ பேச, அவரைப் பிடித்துக் கொண்டு இவர் அந்த இடம் போய் பார்த்து, அந்த மூன்று பேரிடமும் சம்மதம் வாங்கி, நாலாவது ஆளுக்கு தொகை தருவதாக, மற்றவரை விட கூடுதலான தொகை முன்னதாகவே கொடுத்து அவரைச் சரிகட்டி, அவர் கையெழுத்தும் வாங்கி, கடைசி ஆள் கையெழுத்து போட மறுத்ததால் வேறு வழியின்றி நாலு ஆட்களைவிட்டு அவர் வீட்டை அடித்து நாசம் செய்ய, அவர் பயந்து போய் கையெழுத்து போட்டுக் கொடுத்தார்.

இந்த மாதிரி செய்யப் போகிறேன் என்று நண்பரான போலீஸ் அதிகாரிக்கு முன்னே சொன்னதனால் அது போலீஸ் கேஸாகவும் எடுபடவில்லை. அவன் நினைத்ததை விட அந்த இடத்திற்கு அதிகம் போட்டியிருந்தது.

யார் இந்த திட்டத்தை கொடுத்தானோ அவனுக்கு ஒரு சிறிய தொகையை கொடுத்தான். அவன் மேலும் காசு கேட்டு முறைத்தபோது, அதே அடி உதை மறுபடியும் நடக்குமென்று நாராயணசாமி மிரட்டினான். மறுநாள் இவன் பெயரில் விளம்பரம் வந்தது.

கோடவுன் கம் ஆபீஸ் என்று சொல்லப்பட்டது. அது மட்டுமல்ல முதல் மாடியும் கோடவுன்தான். இரண்டாவது மாடிதான் ஆபீஸ், மூன்றாவது மாடி, நான்காவது மாடி அலுவலகங்கள், ஆறாவது மாடி கான்ஃப்ரென்ஸ் ஹால் என்று சொல்ல சகல கம்பெனிகளும் மயங்கின. குறிப்பாய் சிகரெட் கம்பெனிகளும், டயர் கம்பெனிகளும் அந்த இடத்தை வந்து பார்த்தன. லாரிகள் நிற்கவும். போக்குவரத்து சௌகரியங்களும் இருந்த இடம் என்பதால் மிக அற்புதமான விளைக்குப் போயிற்று.

அவனுடைய கம்பெனி பற்றி பெங்களூரில் சகலருக்கும் தெரிந்தது.

பெங்களூரின் நடு மையத்தில் சற்று சேரியாக இருந்த இடத்திற்குப் பக்கத்தில் மாநகராட்சி இடம் ஒன்றை வாங்கி எல்லோரும் வந்து பார்த்து விட்டு, இந்த இடத்தில் எப்படி வீடு வாங்குவது உள்ளே வருவதற்கே கடினமாக இருக்கிறதே. சேரியைத் தாண்டி வரவேண்டியிருக்கிறதே என்றெல்லாம் பார்க்க... விலை கொடுத்து வாங்குங்கள். பிறகு, பாருங்கள் சேரி என்ன ஆகிறது என்று அவன் மறைமுகமாகச் சொன்னான்.

சேரிக்குள்ளே சண்டை மூட்டினான். அடிதடி ரகளை அவ்வப்போது நடந்து போலீஸுக்கு தொந்தரவான இடமாக மாறியது. அப்படி அந்த இடம் தொந்தரவாக இருக்க என்ன காரணம் என்று பெரிய பத்திரிகையில ஒரு ரிப்போர்ட்டரை விட்டு கட்டுரை எழுத வைத்தான். அந்த இடம் உண்மையில் அங்கு உள்ளவர்களுக்கு சொந்தமல்ல, ஒரு அரசியல் கட்சிக்கு சொந்தமான இடம். அந்த அரசியல் கட்சி இரண்டாகப்



பிளந்தபோது, அந்த அரசியல் கட்சியை சேர்ந்தவர்கள் இங்கு குடிசைப்போட்டுக் கொண்டார்கள். அந்த இரண்டாகப் பிளந்தது மறுபடியும் பிளந்தபோது வேறு சில பேர் வந்து குடிசை போட்டுக் கொண்டார்கள். ஆக, அந்த அரசியல் கட்சியின் அனுமதி இல்லாமல் அந்த இடங்கள் தனியார்களால் கைப் பற்றப்பட்டன. அந்த அரசியல் கட்சி இப்பொழுது இல்லையெனினும் அந்த அரசியல் கட்சியின் வழித் தோன்றலான இன்னொரு அரசியல் கட்சி இப்பொழுது இருக்கிறதென்று உசுப்பேற்றி விட, அங்கே மறுநாளே அந்த அரசியல் கட்சியின் கொடி நடப்பட்டது. அங்கு வாடகை வேண்டும் என்று சொல்லப்பட்டது.கட்சிக்கு நன்கொடை என்று கேட்கப்பட்டது. நன்கொடை என்று அவர்கள் கொடுத்ததை வாடகை என்று அவர்கள் பிரித்துக் கொண்டார்கள்.மூன்று மாதம் வாங்கிய பிறகு அந்த இடத்தை காலி செய்யச் சொல்லி நோட்டீஸ் அனுப்பினார்கள். 'நாம்தான் வாடகை கொடுக்கிறாமே' என்று அங்கு குடியேறினவர்கள். எதிர்த்துப் பேசிய போது, "நீங்கள் வாடகைதான் கொடுத்தீர்கள். இதனாலேயே இந்த இடம் உங்களுக்குச் சொந்தமல்ல என்று தெரிந்து போயிற்று.

'இந்த இடத்தை நாங்கள் விற்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு வருகிறோம்.எங்கள் கட்சியினுடைய வளர்ச்சிக்காக இந்த இடத்தை நாங்கள் விற்கப் போகிறோம். எனவே உடனடியாக இந்த இடத்தை காலி செய்யுங்கள். செய்யாது போனால் நடப்பதே வேறு" என்று மிரட்டப்பட்டார்கள். அரசியல் கட்சித் தலைவர்கள் ஒன்றுகூடி இதை விற்க முற்பட அவன் உள்ளே புகுந்தான்.

"இந்த இடத்தை விற்காதீர்கள். நான் கட்டடம் கட்டித் தருகிறேன். இந்த நிலத்தை எனக்கு தொண்ணூற்று ஒன்பது வருடத்திற்கு லீஸுக்குக் கொடுங்கள். கீழ்பகுதி முழுவதும் நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள்" என்று சொன்னான்.

அவர்கள் அவ்விதமே ஒப்பந்தம் போட்டுக் கொண்டார்கள்.

கீழ்ப்பகுதி முழுவதும் அரசியல் கட்சியினுடைய அலுவல கமாகவும், மேல் பகுதி முழுவதும் குடியிருப்புகளாகவும் மாறி சுற்றிலும் மறுபடியும் தோட்டங்கள் போடப்பட அவன் நம்பிய தைவிட, அது இன்னும் அதிகமாக விற்றது. அவனுடைய சாமர்த்தியம் பற்றி நகரத்தில் கட்டுமானப் பணிகள் செய்பவர் களிடையே சந்தோஷமாக பேசப்பட்டது. அவன் அலுவல கத்தை விஸ்தரித்தான். இன்ஜினீயர்களை வேலையில் சேர்த் துக் கொண்டான்.

புராஜக்ட் நம்பர் நான்கு, ஐந்து, ஆறு, ஏழு என்று ஒரே நேரத்தில் பல இடங்களில் கை வைத்தான். காலை ஆறி லிருந்து இரவு பதினொரு மணி வரை பிசாசாக உழைத்தான். அவன் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் அவன் குடும் பம் திணறியது; அவனுடைய ஊழியர்கள் திகைத்தார்கள்.

மைசூருக்குப் பக்கத்தில் இன்னும் பொட்டல் காடாக பல ஏக்கர் நிலம் வாங்கினான்.

"மின்சாரமும், தண்ணீரும் இல்லையே. இங்கு போய் நிலம் வாங்குகிறீர்களே" என்று மற்றோர்கள் திகைத்தார்கள்.

வாங்கினால் மின்சாரமும் தண்ணீரும் தானாக வருகிறது என்று சொன்னான்.

நீச்சல் குளத்தோடு கூடிய குடியிருப்புகள், குழந்தைகள் விளையாடும் இடங்கள், கார்கள் நிறுத்தும் வசதி, டாய்லெட் டுடன் கூடிய தனி வரவேற்பறை, பிறந்த நாள் விழாக்கள், பண்டிகைகள், கூட்டங்கள் போய் கொண்டாட மேல் மாடி யில் தனியாக ஒரு ஹால், சுற்றிலும் பூந்தோட்டம், உயர்ந்த மரங்கள், ஒரு தாமரைத் தடாகம், ஒரு பைரவர் கோயில், தனியாக அம்மன் சன்னதி என்று விளம்பரம் செய்ய அந்த பொட்டல் காட்டை பலநூறு கார்கள் வந்து பார்த்தன. எப்படி எப்படி என்று விசாரித்தன. அவனைப் பற்றி கேள்விப் பட்டதும் துணிந்து பல பேர் காசு கொடுக்க வந்தார்கள்.



இவரு எப்பவுமே இந்த மாதிரிதான். ஒப்பனா இருக்கற வசதியே இல்லாத இடத்தை எடுத்து வசதி பண்ணிடுவாரு. பெரிய ஆளு என்று அவனை புகழ்ந்தார்கள்.

ஒரு வாரப் பத்திரிகையில் நாலு பக்கம் வாங்கி அவனே வேறு பெயரில் நல்ல கட்டிடங்கள் வாங்குவது எப்படி? வாஸ்து விஷயங்கள் என்னென்ன? எந்த இடத்தில் எந்த நிலம் என்ன விலை? எந்த இடத்தில் எந்த அடுக்கு மாடிக் கட்டிடம் என்ன விலை என்று விதம் விதமாக கட்டுரையில் எழுதினான். பக்கத்திற்குப் பக்கம் தாமரைத் தடாகம் என்ற அந்த கட்டாந்தரையை படம் போட்டு கீழேயே அது எப்படி மாறப் போகிறது என்பதையும் எழுதினான். அடுத்த வாரம் அவன் பேட்டியை அவனே எடுத்து எழுதிக் கொண்டான்.

நிலத்தை குறைவான விலைக்கு வாங்கி எல்லா வசதி களையும் செய்து கொடுப்பதுதான் நல்ல பில்டருடைய வேலை. அதுதான் உங்களுக்கும் நல்ல லாபம். இந்த பொட்டல்காடு என்று நீங்கள் கருதும் பகுதியை நீங்கள் பங்கு பெற்று ஒரு பகுதியை வாங்கி அதில் ஆரம்பத்தில் வாடகைக்கு விட்டு ஐந்து வருடம் கழித்து நீங்கள் உள்ளே வரத்தயாராகுங்கள். அப்போது அந்த இடம் எல்லா வசதிகளு டனும் கூடிய ஒரு நகரமாக நிச்சயம் மாறியிருக்கும் என்று சொல்லி எந்தெந்த இடம் எப்படி மாறியது என்று சொல்ல, மத்திய தர வர்க்கத்தினரிடையே அதுதான் பேச்சாக இருந்தது. அந்தப் பத்திரிகை அமோகமாக விற்றது. அதேபோல் தனக் கும் கட்டுரை எழுதச் சொல்லி இன்னொரு பத்திரிகை சொன் னது. அந்தப் பத்திரிகைக்கும் அவன் கட்டுரை எழுதினான்.

கன்னடம் பேசுகின்ற அத்தனை கர்நாடகத்து ஜனங்களுக் கும் வீடு வாங்குகின்ற ஆவலை அவன் கிளறி விட்டான். மற்ற கட்டுமான பணியில் ஈடுபட்டுள்ள இன்ஜீனியர்களும் நல்ல லாபம் சம்பாதித்தார்கள். இதை அவன் சுட்டிக்காட்ட விஸ்வேஸ்வரய்யாவின் ஆசிர்வாதம் என்று அவனுக்குப் பட்டம் கொடுத்தார்கள்.

சிங்க கிளப்பில் அவன் தனித்த மரியாதை பெற்றான். நல்ல விலைக்கு விற்று அட்வான்ஸ் வாங்கியதும் அந்தக் காசை எடுத்துக் கொண்டு மாமனாரோடும், மாமியாரோடும், மனைவியோடும் அவன் ஐரோப்பாவுக்குப் பயணமானான்.

பதினான்கு நாள் சுற்றுலாவிற்கு தயாரானான்.

அவன் ஊரைவிட்டுக் கிளம்புகிறான் என்று தெரிந்ததும் பல பேர் அவனை வழியனுப்ப வந்தார்கள். விமான நிலையத்தில் பூங்கொத்து கொடுத்து போய் வாருங்கள் என்று சொன்னார்கள். பான்வாயேஜ் என்று சொன்னார்கள்.

அவன் போன பிறகு அவன் அலுவலகத்து கடைசி சிப்பந்தியை மடக்கி அவனது ஆபீஸ் சாவியை சோப்பில் அழுத்திக் கொடுக்கச் சொன்னார்கள். மாற்று சாவி தயாரித்தார்கள். இரவோடு இரவாக உள்ளே புகுந்தார்கள்.

பீரோக்களைத் திறந்து சோதனையிட்டு முக்கியமான விஷயங்களை ஜெராக்ஸ் எடுத்துக் கொண்டார்கள். இரண்டாவது கணக்கு புத்தகத்தை பிரதி எடுத்துக் கொண்டார்கள். கம்ப்யூட்டரிலிருந்து விஷயங்களை கிரகித்துக் கொண்டார்கள்.

பெங்களூரிலுள்ள இன்கம்டாக்ஸ் அலுவலகத்திற்கும், பிறகு டெல்லிக்கும் அனுப்பினார்கள்.

அவன் எழுதிய வாரப்பத்திரிகையிலேயே இந்த பில்டர் கைதாவார் என்பது உறுதி என்று அவனைப் பற்றிய தகவல் சொன்னார்கள்.

அவன் பதினான்கு நாள்கள் ஜெர்மனி, பிரான்ஸ், ஆஸ்திரியா, லண்டன் என்று சுற்றிவிட்டு திரும்பி வந்தபோது அவனை நோக்கி வருமான வரித்துறை அதிகாரிகள் வந்தார்கள். அவன் கணக்குகளை பார்க்க வேண்டும் என்று சொன்னார்கள்.

எல்லா கம்பெனிகளிலும் செய்கின்ற கணக்கு ஒளித்தலைத்தான் நானும் செய்கிறேன். எவ்வளவு அபராதம் கட்ட வேண்டும் என்று சொல்லுங்கள். கட்டி விடுகிறேன். ஆனால்,



ஒரு பொழுதும் என் வேலையை தடுத்து நிறுத்தாதீர்கள் என்று சொல்லி ஒரு அபராதம் விதிக்கப்பட்டது.

அலுவலகத்தின் கடைநிலை ஊழியரை, அவன் மிகச் சரியாகக் கண்டுபிடித்து அவனை அடித்து விஷயம் வாங்கினான்.

கடைநிலை ஊழியன் ரத்தம் தெறித்த சட்டையோடு யார் காட்டிக் கொடுத்தார்களோ அந்த நண்பர் வீட்டுக்குப் போனான்.

இன்றிலிருந்து பதினைந்தாம் நாள் உன் வாழ்க்கையை முடிக்கிறேன் என்று சபதமேற்றுவிட்டு வந்தான். அவன் மீது போலீஸ் புகார் செய்யப்பட்டது. அவன் முன் எச்சரிக்கை ஜாமீன் வாங்கினான். அந்த இடத்தின் எதிர்ப்பகுதியை மறுபடியும் விலைபேசி வாங்கினான். அங்கு போர்டு மாட்டினான்.

எல்லா பத்திரிகைகளிலும் அரைப்பக்க, முழுப்பக்க விளம்பரம் கொடுத்தான். முழுக்காசும் உடனே தருகிறவர்களுக்கு பத்து பர்செண்ட் சலுகை என்று அறிவித்தான். நாற்பத்தொரு குடியிருப்புகள் என்று விளக்கிக் காட்டினான்.

அவன் எதிரிகள் இந்த விளம்பரம் கண்டு மிரண்டார்கள்.

மறுபடியும் காசு குவிந்தது. குவிந்த காசின் சிறு பகுதியை தன் எதிரியின் எதிரிக்கு கடன் கொடுத்து உதவினான். எதிரிகளுக்கிடையே சண்டை மூட்டி விட்டான். அவர்கள் அடித்துக் கொண்டு படுகின்ற அவஸ்தையை பெரிதாக்கினான்.

கட்டிடக் கலைஞர்களுக்கு நடுவே ஏன் இந்தப் போட்டி. இன்ஜினியர்களுக்குள் ஏன் பொறாமை என்று ஒரு வாரப் பத்திரிகையில் விளக்கி கட்டுரை எழுதினான்.

கஷ்டப்பட்டு உழைத்த காசும், திருட்டு பில்டர்களும் என்று இன்னொரு கட்டுரை எழுத மத்திய தரத்து வர்க்கத்தினரிடையே இதுவே பேச்சாக இருந்தது. அவனுக்கு காசு குவிந்தது. குறைந்த பட்சம் நாற்பது லட்ச ரூபாய் போர்ஷன் என்று விளம்பரப்படுத்த பத்து லட்ச ரூபாய் கறுப்புப்

பணமாக வாங்க அந்தப் பணம் மட்டும் அவன் சூட்கேஸில் போட்டு மெட்ராஸுக்குக் காரில் அவனே எடுத்து வந்து சந்திரசேகர் வீட்டில் வைத்தான்.

சந்திரசேகர் பயந்தார்.

"நம்ம வீட்டுக்கு எதிர்வீட்டு மாடி போர்ஷன் காலியா இருக்கில்லையா. அங்க இந்தப் பெட்டியை வச்சுடலாம்."

அந்த இடத்தை வாடகைக்கு வாங்கி ரூம்களுக்குள்ளே பெட்டியை வைத்து மூடி போட்டு அமுத்தினான். சாவியை எடுத்துக்கொண்டு போனான்.

எல்லா பக்கத்து அதிகாரிகளையும் சரி கட்டினான்.

இந்த முறை அவன் மைத்துனனை அவர் எதிரிகள் விலைக்கு வாங்கினார்கள். கறுப்பு பணம் எங்கிருக்கிறது என்று விசாரிக்கச் சொன்னார்கள்.

மைத்துனன் வந்து விசாரித்தபோது சந்திரசேகரின் மனைவி சாரதா எதிர்வீட்டில் பெட்டிகள் வைத்திருப்பதை கூறி விட்டாள். அந்தத் தகவலோடு உடனே வண்டி ஏற இது தெரிந்து போய் சந்திரசேகர் அந்தப் பெட்டிகளை எடுத்துக் கொண்டு போய் சாரதாவின் தம்பி வீட்டில் மறைத்து வைத்தான்.

இரண்டு மிகப் பெரிய சூட்கேஸுகள். அது முழுவதும் பணம் இருக்கிறது என்று தெரியும். எவ்வளவு பணம் என்று தெரியாது. மறைத்த பிறகு அந்தத் தகவலை தம்பியிடம் சொன்னான். தம்பி அவர் செயலுக்கு, துணிச்சலுக்கு பாராட்டி னான்.

அப்படியே இருக்கட்டும் யாரும் வர மாட்டார்கள். நான் இங்கேயே மடக்கி விடுவேன் என்று சொன்னான்.

மூன்று மாதங்கள் அந்த மூன்று பெட்டிகளும் அங்கே இருந்தன. மைத்துனனின் மனைவி காலில் விழுந்து கதறிய தால் அவனை மன்னித்து ஆந்திராவுக்கு அனுப்பி வேர்க் கடலை பர்பி வியாபாரம் செய்யச் சொன்னான்.



"சைக்கிள் பின்னால் டப்பாவை கட்டிண்டு போய் கடை கடையா வித்துப் பார். அப்போதான் காசு சம்பாதிக்கறது ஹுடைய கஷ்டம் புரியும். ஆந்திர வெய்யில் உடம்புல இறங் கினாத்தான் சுறுசுறுப்பு வரும்.ஏ.சி.ரூம்ல, ஏ.சி.கார்ல சுகமா, கத்தரிக்காய் கூட்டு, உருளைக்கிழங்கு கறி, வத்தக்குழம்பு அப்படின்னு வளர்ந்துட்ட இல்ல. அதனால உண்டான கொழுப்பு, அவன் ஸார் ஸார்னு கூப்பிட்டான்னு மயங்கிட்ட இல்ல போ. அரவாடு, தொங்கடு அப்படின்னு ஆந்திராக் காரன் கூப்பிடுவான். அப்போ உன் மரியாதை என்ன, அதை எப்படி காப்பாத்திக்கறதுன்னு அப்போ தெரியவரும்."

கிட்டத்தட்ட கழுத்தைப் பிடித்து தள்ளாத குறையாக வெளியேற்றினான்.

நான்கு மாதங்களுக்குப் பிறகு சென்னைக்கு வந்து மெல்ல அந்த பெட்டிகளை கொண்டு வந்து சந்திரசேகருக்கு பிரித் துக் காட்டினான். இரண்டு பெட்டிகளையும் சேர்த்து அறுபத் தேழு லட்சரூபாய் காசு இருந்தது.

"இந்தாண்ணா பத்து லட்சரூபா வச்சுக்கோ."

அவன் அதிலிருந்து காசு எடுத்துக் கொடுத்த போது சந்திரசேகர் வேண்டாம் என்று மறுத்து விட்டார்.

"ஏன், பாவக்காசுன்னு நினைக்கறயா, இல்லை. இது உழைச்சு சம்பாதிச்சது. எடுத்துக்கோ" என்று வற்புறுத் தினான்.

"இல்லைப்பா. எனக்கு இந்த பத்து லட்ச ரூபா தேவை யில்லை, பொண்ணுக்கு கல்யாணம் வரும் போது உன்னால என்ன முடியுமோ அந்த உதவியை செய். மத்தபடிக்கு காசால் லாம் கொடுக்காத. எனக்கு வாங்கறதுக்கு கஷ்டமா இருக் கும்."

"என்ன உதவி வேணும் சொல்லுங்கோ."

"நீ என்ன செஞ்சாலும் சரி."

"வைர அட்டிகை போடறேன். வைர கம்மல் போடறேன். அது தவிர இருபது பவுனுக்கு நகை போடறேன். இன்னும் என்ன வேணும்? சாப்பாடு செலவு நான் எடுத்துக்கட்டுமா" என்று அடுக்க அவர் மறுபடியும் மெல்லிய குரலில் அவனை மறுத்தார்.

"ஏதேனும் சிறியதாக செய் போதும்" என்று சொன்னார்.

அவன் அறுபதாயிரம் ரூபாய்க்கு தோடும், மூக்குத்தியும் வாங்கிக் கொடுத்து விட்டுத் திரும்பினான்.

சாவித்ரிக்கு கல்யாணம் நிச்சயமாகி திருமணத்திற்கு முதல் நாள் நாராயணசாமி வந்து இறங்கிய போதுதான் பிரச்சினை அதிகமாகியது.

தான் மிகச் சாதாரணமான ஒரு அதிகாரி. தன்னுடைய மாதாந்திர சம்பளம் இவ்வளவு. தன்னால் இவ்வளவுதான் செய்ய முடியும் என்று அவர் சொல்லியிருக்க, இரண்டு நாள் முன்னதாக வந்து ஏகப்பட்ட கார்களை நிறுத்தி, நாலைந்து லாட்ஜ்களை மடக்கி வருபவர்களை இங்கே தங்கு, அங்கே தங்கு என்று அனுப்பிய போது சம்பந்தி மிரட்சி அடைந்தார்.

"என்ன இது நீங்க சாதான்றீங்க. உங்க தம்பி பெரிய ஆளா இருக்கார். கொஞ்சம் கூட கேட்டிருக்கலாமோ. கூட கேட்ரு வேணோங்கறதுக்காக உங்களைப்பத்தி குறைச்சலா சொல்லிட்டேளோ" என்று பேசத் துவங்கினார்.

சந்திரசேகருக்கு மனம் வேதனைப்பட்டது.

"இதோ பாருங்க. அவன் என் தம்பி. எனக்கும் அவனுக்கும் தம்பிங்கற உறவைத் தவிர வேற கொடுக்கல் வாங்கல் இல்லை. அவனை நம்பிண்டு, அவங்கிட்ட காசு கேட்டுட்டு அவனுடைய சம்பாத்தியத்தை மனசுல வச்சுண்டு நான் சம்பந்தப்படலை. என்னை, என் சம்பாத்தியத்தை மனசுல வச்சுண்டு தான் சம்பந்தம் பண்றேன். தன் சந்தோஷத்துக்கு எதுவோ, இங்க வந்து பண்ணிண்டிருக்கான். அதை கணக்குல வச்சுண்டு என்னை தப்பா நினைக்காதீங்க."



"வைரக் கம்மல், வைர மூக்குத்தி ஏற்கெனவே இருக்கு. கல்யாணத்துக்கு வந்து சபையில் வைர அட்டிகை ஒதிட்டு அதை என் பிள்ளையை விட்டே கழுத்துல போட சொன்னேள். ரொம்ப பாந்தமா இருக்கு. ஒரு ஜதை வைர வளையல் போட்டுட்டேன்னாக்கா முழு செட்டும் ஆயிடும். ஊருக்கு போகறதுக்குள்ள போட முடியாதா? நீங்க நினைச்சா எது வேணா பண்ணலாமே" என்று மாப்பிள்ளை வீட்டின் பக்கத்திலிருந்து எவளோ பேச, இதோ ஆயிற்று என்று அவன் தொடை தட்டிக் கிளம்ப, சந்திரசேகர் தடுத்து நிறுத்தினார்.

"ஒத்த பைசா இதுக்கு மேல செலவு பண்ணீன்னா தூக்கி விசிறி அடிச்சுடுவேன்" என்று அதட்டினார்.

கல்யாணக்கூடம் அமைதியாயிற்று.

"வைர வளையல் போட முடியாது. அட்டிகையே கூட பொண்ணு கழுத்துல ரெண்டு நாள்தான் இருக்கும். நீங்க ஊருக்கு போற போது அட்டிகை வாங்கி நான் வச்சுடுவேன்."

"எப்படி. எங்க மருமாளுக்கு போட்டது."

"இல்லை, என் பொண்ணுக்கு போட்டது. அத்தனையும் நான் சரின்னு சொன்னாதான் எடுத்துண்டு போகலாமே தவிர, நீங்களா எடுத்துண்டு போக முடியாது. அது எனக்கு கொடுக்கப்பட்ட பரிசு. வைர அட்டிகை போட்டதாலதானே வைர வளையல்னு உங்களுக்கு தோணறது. வைர அட்டிகைன்னு நாங்க கொடுக்கலேன்னா... கொடுக்கணும்னு பேச்சு ஒண்ணுமில்லையே" என்று தீர்மானமாக சந்திரசேகர் சொல்ல, மாப்பிள்ளை சாவித்ரியை பார்த்து அட்டிகையை கழற்றி அப்பாவிடம் கொடுத்து விடு என்று சொன்னான். மறுபேச்சில்லாமல் சாவித்ரி கழற்றி பெட்டியில் வைத்து அப்பாவிடம் நீட்டினாள்.

நாராயணசாமிக்கு கோபம் வந்துவிட்டது.

"இதைவிட பெரிய அவமானம் எனக்கு ஏதாவது உண்டா. என் குழந்தை சௌக்கியமா இருக்கணும்னுதானே நான் போட்டிருக்கேன். வாங்கி கழுத்துல மாட்டுங்க. போட்ட ஆறாவது மணி நேரம் இப்படிப் பேசி திருப்பி கொடுக்கறேளே"

என்று சொல்ல, "அப்படித்தான்" என்று சந்திரசேகர் பிடிவாதம் பிடிக்க அவன் கோபித்துக் கொண்டு திருமண மண்டபத்தை விட்டு வெளியே போனான்.

போன நேரம் தவறான நேரம்.

தம்பியை இப்படி நான்கு பேர் முன்பு அவமானப்படுத்தி விட்டோமே என்று சந்திரசேகர் வருந்தினார். மாப்பிள்ளை வீட்டில் என்ன சொல்வார்களோ என்று சந்திரசேகரின் மனைவி சாரதா தயங்கினார்.

ஆனால், மாப்பிள்ளை மிகத் தெளிவாகச் சொன்னான்.

"அது உங்களுக்கும், உங்கள் தம்பிக்கும் உண்டான விஷயம். நாங்கள் கேட்டதைவிட அதிகமாக செய்திருக்கிறீர்கள். விமரிசையாக செய்திருக்கிறீர்கள். எங்களுக்கு மிகவும் சந்தோஷம்" என்று தானாக முன் நின்று பேச அவன் வீடு அமைதி ஆயிற்று.

கல்யாண வீடியோவை திரும்பத் திரும்ப போட்டுப் பார்த்து சந்தோஷமடைந்தது.

மகள் சாவித்ரிக்கு மிகப் பெரிய மரியாதை அந்த வீட்டில் ஏற்பட்டது.

"வைர அட்டிகை போட்டதனால வைர வளையல் போடு அப்படின்னு நம்ம பக்கத்துலேர்ந்து வந்த குரல் ரொம்ப தப்பு. இது என்னுடைய அப்பாவோ, அம்மாவோ சொல்லலை. அதுல எனக்கு ரொம்ப சந்தோஷம். அப்பாவோட அக்கா ஒரு கிழட்டு அத்தை இதை கிளறிவிட்டா. அம்மாவோட அக்கா ஒரு அறிவு கெட்ட பெரியம்மா இதுக்கு தலையாட்டினா. வக்காலத்து வாங்கினா. பெருசா பேசினா. நம்ம வீட்டு கல்யாணம் பத்தி, நமக்கு உறவா வரப்போற சந்திரசேகர் பத்தி இவங்களுக்கு எந்த அக்கறையும் இல்லை. நான் எனக்கு வரப்போற மனைவி, அவளோட நான் பண்ற குடித்தனம் இது பத்தி எந்த சந்தோஷமும் இல்லை. அடடா... கணேசன் கல்யாணம் இவ்ளோ பெரிசா நடக்கறதா அது எப்படி அப்படிங்கற ஆத்திரம்தான் அவங்களுக்கு. ஒரு பொறாமைதான் முந்திட்டு



வரது. அதனாலதான் வைர வளையல் போடுங்களேன் அப்படின்னு சொல்றது. போட்டா, நான் சொல்லி போட்டா அப்படிம்பா, போடலேன்னா, ஐயோ பாவம் இதுக்குக்கூட லாயக்கில்லாத போயிட்டியா அப்படின்னு நம்மள ஏத்தி விடறது. என்ன ஆனாலும் ஆகட்டும்னு அந்த அட்டிகைய பிடுங்கி வச்சுண்டாரே சந்திரசேகர். எனக்கு ரொம்ப சந்தோஷம். இது உங்களது இல்லை. தரமாட்டேன்னு வாங்கினாரே. ரொம்ப தைரியம். அதை கோபமே இல்லாத சொன்னாரே அது கம்பீரம்.

'ஒரு பொண்ணுக்கு இப்படியொரு நிலைமை வந்தது, அல்லது எங்க அக்காவுக்கு இப்படியொரு நிலைமை வந்ததுன்னா. தாலி கட்டி முடிச்சு ரெண்டு மணி நேரத்துக்கப்புறம் வைர வளையல் போடுங்களேன்னு சொன்னா என்ன பண்ணுவோ. நமக்கு யார் முக்கியம் சந்திரசேகரா, சந்திரசேகருடைய தம்பியா? ஒரு சபையில நாலு பேர் பாராட்டணுங்கறதுக்காக தடக்கு புடக்குன்னு பெருசா பண்றவங்களை நான் மதிக்கறதே இல்லை. காசு மேல நிதானமில்லாத ஆட்கள். இதே காசுக்காக இதே பாராட்டுக்காக நம்மள இழிவு படுத்தவும் செய்வாங்க.

'எனக்கு சந்திரசேகர் தம்பியை பிடிக்கவில்லை. தன்னை வெளிப்படுத்திக் கொள்ளவே அவர் எல்லா காரியமும் செய்தார் என்று எனக்குத் தோன்றுகிறது. சந்திரசேகரிடமிருக்கிற உண்மை அவர் தம்பியிடம் இல்லை. உண்மையில்லாத மனிதர்களிடம் எப்படிப் பழகுவது? இடையறாத ஒரு பயம் இருக்கும். பயத்தோடு பழகுகிற எந்த மனிதரிடமும் என்னால் வாய்விட்டுச் சிரிக்கவும், மனம் விட்டு அருகே அமரவும் முடியாது. தேவையில்லாமல் எதையாவது பேசி சந்திரசேகரையும், அவர் மனைவியையும் புண்படுத்தி விடாதீர்கள்."

மாப்பிள்ளை கணேசன் கூடத்திற்கு நடுவே உட்கார்ந்து மிகத் தெளிவாக உரையாற்றினானாம். எல்லோரும் மிக அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தார்களாம். இரவு மனைவியை அழைத்துக் கொண்டு மாடிக்குப் போய் அவளைக் கொஞ்சி

பரவசப்படுத்தி, சமாதானப் படுத்தினானாம்.மறுநாள் மறுபடியும் காபி குடிக்க எல்லோரும் உட்காரும்போது கணேசன் சொன்னதே சரி என்று எல்லோரும் பாராட்டினார்களாம்.

சந்திரசேகர்தான் முக்கியம். அவருடைய நட்புதான் உறுதியானது என்று கணேசன் அப்பா சொல்லி விட்டாராம்.

"அத்தனை செலவு பண்ணி நமக்கு சீர் பண்றா.நமக்கு பரிசு கொடுக்கறான்னா அதே மாதிரி எதிர்பார்ப்பாதானே. அதைப் பண்றதுக்கு நமக்கு வக்கு இருக்கணுமே. இல்லைன்னா நன்னாயிருக்குமா? அதனால அளவான பரிசுதான் நல்லதுன்னு அம்மா சொன்னாளாம்."

சந்திரசேகர் வீட்டிற்கு மறு விருந்துக்கு வந்த போது அந்த வீடு நாராயணசாமியைப்பத்தி ஒன்றுமே பேசவில்லை. சந்திரசேகரை மட்டுமே கொண்டாடிக் கொண்டிருந்தது. அவர் வாழ்க்கையை விசாரித்துக் கொண்டிருந்தது.

"உங்களுக்கு வாஸ்துசாஸ்திரம் தெரியும்னு குழந்தை சொன்னாளே. தாம்பரத்துக்கு வந்து எங்க வீட்டை பார்க்கறது. ஏதாவது மாற்றம் இருந்தா சொல்றது."

சம்பந்தி கை கூப்பிக் கேட்டுக் கொண்டார்.

"ஐயா... வாஸ்து சாஸ்திரம் என்பது அரண்மனையில் வாழும் அரசனுக்கும், கடவுள் குடியிருக்கும் கோயிலுக்கும் மட்டுமே உரித்தானது. மத்த இடத்துல வாஸ்து சாஸ்திரம் பார்க்கணும்னு ஒண்ணும் அவசியமில்லை. அரசாளுகிற அரசன் அமைதியாக இருந்தல் வேண்டும். கோவில் சுபிட்சமாகவும், வளர்ச்சியாகவும் உள்ளுக்குள் இருக்கிற தெய்வ சக்தி பலம் பொருந்தியதாகவும் இருக்க வேண்டும். சிதிலமடையக் கூடாது. இவர்கள் இரண்டு பேரும், சுபிட்சமாக இருந்தால் போதும். தேசம் சுபிட்சமாக இருக்கும். அரசன் உடைவாள் வைத்துக்கொள்ளலாம். கொடி வைத்துக் கொள்ளலாம். நானும் உடைவாள் வைத்துக் கொள்வேன். கொடி வைத்துக் கொள்வேன் என்று சகல ஜனங்களும் ஆரம்பித்தால் என்ன ஆவது? அரசனுக்குத்தான் யானையும், குதிரையும்,



முரசும், சங்கும், எக்காளமும் இருக்கும். கடவுள் கோவில் விட்டு வெளியே ஊர்வலம் வரும்போதுதான் இவை முழங்கும். இந்த மரியாதைகள் நடக்கும். நாம் வீட்டை விட்டு வெளியே போகும்போது முரசு எக்காளம் ஒலித்தால் என்னாகும்? தேவையில்லாமல் எல்லார் கவனத்தையும் கவர்வோம். இது தவறு. வாஸ்து சாஸ்திரம் மிகப் பெரியது. மண்ணிலிருந்து, கல்லிலிருந்து தேர்ந்தெடுத்து செய்யப்பட வேண்டும். நீங்கள் வீடு கட்டி விட்டீர்கள். மண் தேர்வு எதுவும் செய்யாமல் அங்கு கட்டிடம் எழுப்பப்பட்டுவிட்டது. இப்போது அந்த மண்ணே நன்றாக இல்லையென்றால் நீங்கள் என்ன செய்வீர்கள்? உங்களால் என்ன செய்யமுடியும்?

'மண் பரிசோதனை என்ன? ஓரடிக்கு ஒரு அடி நீள அகலத்தில் ஒரு அடி ஆழத்தில் குழி வெட்டி அதில் ஜலம் விட்டுப் பார்ப்பது. ஜலம் இரண்டு அங்குலம் குறைந்தால் நல்ல மண். முற்றிலும் காய்ந்து போனால் தவறானது. குறையாமல் இருந்தாலும் களி மண்ணாக இருக்கும். எதுவும் விளையாது. இப்படியொரு சோதனை செய்து விட்டு யார் மனை வாங்குவார்கள்? இதெல்லாம் நமக்கு சாத்தியப்படுமா? இரண்டு கிரவுண்ட் நிலம் வாங்கி ஒரு கிரவுண்டில் வீடு கட்டியிருக்கிறீர்கள் என்றால் இது பூர்வ ஜென்ம புண்ணியம். நெடுஞ்சாலையிலிருந்து பத்து நிமிட தூரத்தில் இருக்கிறதென்றால் அது இன்னமும் உசத்தி. அருகை கோவில், மருத்துவமனையும், பஸ்ஸ்டாண்டும், ரயில்வே ஸ்டேஷனும் இருக்கின்றன. சற்றுத் தொலைவில் மார்க்கெட் இருக்கிறது. உங்கள் வீட்டைவிட லக்ஷ்மிகரமான விஷயம் ஏதாவது உண்டா, இப்போது போய் அதற்கு என்ன வாஸ்து சாஸ்திரம்?

'உங்கள் மகளுக்கும் உங்கள் வீட்டிற்கு வந்து திருமணமாகியிருக்கிறது. உங்கள் மகனுக்கு திருமணமாகியிருக்கிறது. உங்கள் தாயார் சுமங்கலியாக இந்த வீட்டில் இறந்திருக்கிறார். மகள் கல்யாணத்திற்காக பெரிய தொகை கடன் வாங்கியிருக்கிறீர்கள். அந்தக் கடனை திருப்பி அடைத்திருக்கிறீர்கள்.

அப்படி வாழ்ந்த வீட்டிற்கு இனிமேல் ஏதற்கு வாஸ்து. ஆனாலும் நீங்கள் சொன்னதற்காக வந்து பார்க்கிறேன்.''

சந்திரசேகர் அழகாகச் சொல்ல அந்த வீடு கைகட்டிக் கேட்டுக் கொண்டது. ஆனாலும் சந்திரசேகர் அவர்கள் வார்த்தைக்கு கட்டுப்பட்டு போனார்.

"ஈசான்ய மூலையில் ஒரு சமையல் கட்டு இருக்கு. இது ஒரு தவறுதான். ஆனாலும், இந்த சமையல் அப்புறம் ரொம்ப அழகா ஒரு சர்வீஸ் இடம் இருக்கு. அங்க குழாய் இருக்கு. அந்தக் குழாயில சொட்டுசொட்டா ஜலம் சிந்தும்படியா வச்சுக்கோங்க. சரியா இருக்கும். வடக்குப் பக்கம் களம் வைக்க வேண்டாம். தெற்குப் பக்கம் சுமை வைங்க. வீட்டு வராண்டாவுல பெரிய நிலைக்கண்ணாடி மாட்டுங்க. வீட்டுக்குள்ள வ்றவன் ஒரு க்ஷணம் அங்க நின்னுதான் வரணும். நின்னு தன் மூஞ்சியை பார்க்கறவனுக்கு தான் வந்த காரியம் மறந்து போகும். கோபமோ பொறாமையோ இருந்தா கலைஞ்சு போகும். அந்த கண்ணாடி கிழக்கு பக்கம் இருக்கட்டும். கண்ணாடியை தெற்குப் பார்த்தோ, வடக்குப் பார்த்தோ வைக்கக் கூடாது. வீட்ல வாக்குவாதம் வரும். வராண்டாவுல அஞ்சு குழாய் இருக்கற மணியை தொங்க விடுங்க. அந்தச் சத்தம் கேட்டுக்கிட்டே இருக்கட்டும். சாமி மாடம் மேற்கு பார்த்து இருக்கலாம். தப்பேயில்லை. நாம கிழக்க பார்த்துதானே நமஸ்காரம் பண்ணணும். அது வசதி.

அக்னி மூலையில ஒரு சின்ன கண்ணாடி கூண்டு போட்டு அதுக்குள்ள எப்போவும் ஒரு விளக்கு எரியும்படியா பண்ணிக்கோங்க. அந்தப்பக்கம் சிகப்புப்பூ இருக்கிற செடிகள் வரட்டும். மணி ப்ளாண்ட் போடுங்க. வடக்க வில்வ மரமும், வேப்ப மரமும் நடுங்க. தினம் வாசல்ல கோலம் போடணும். வீட்டு வாசல்ல பிறை வச்சு அதுல விளக்கு எரியணும். சாமி மாடத்துல விளக்கு எரியணும். சாய்ந்தரம் ஆனா, எல்லாரும் உட்கார்ந்துண்டு கோவிந்த நாமாவளி சொல்லுங்க ஸார்.''

"அப்படின்னா..."



கணேசனின் தாயார் வியப்போடு கேட்டார்.

"கேட்டதே இல்லையா? கேள்விப் பட்டதே இல்லையா?"

அவர்கள் தலையசைத்தார்கள்.

"ஸ்ரீனுவாசா கோவிந்தா, ஸ்ரீவெங்கடேசா கோவிந்தா, பக்த வச்சலா கோவிந்தா, பாகவதப் ப்ரிய கோவிந்தா, நித்ய நிர்மல கோவிந்தா, நீலமேக ஸ்யாமா கோவிந்தா" என்று அவர் நூத்தியெட்டு விதமாக கோவிந்தனை அழைத்தார்.

வீடு கை கூப்பிக் கேட்டுக் கொண்டிருந்தது.

"கோவிந்த நாமாவளி சொல்ற இடத்துள காசுக்கு குறைவு வராது ஸார். தப்பான காசும் வராது. காசு மட்டுமே சௌக்கிய மாக்கிடாது ஸார். நீங்க உள்ளுக்குள்ள கனிஞ்சு கனிஞ்சு கரைஞ்சு கரைஞ்சு பிரார்த்தனை பண்ணணும். அதுதான் முக்கியம். பிரார்த்தனை பண்றபோது வீட்டுக்குள்ள ஒருத்தர் மேல ஒருத்தருக்கு அக்கறை வேணும். வீடு ஒத்துமையா இருந்தா வெளிய இருக்கற பிரச்சினை எதையும் ஜெயிக்கலாம் ஸார். நான் அப்படித்தான் ஜெயிச்சேன்.எனக்கு நல்ல பொண்டாட்டி, நல்ல குழந்தைகள்."

சம்பந்தி நீண்ட நெடுஞ்சாண் கிடையாக அவர் காலில் விழ அவர் குடும்பம் விழுந்தது.

சந்திரசேகர் பதறிப் போனார்.

"இல்லையே. இது தேவையில்லையே" என்று சொன்னார்.

"சம்மந்தியா நமஸ்காரம் பண்ணலை. எனக்கு உபதேசம் பண்ண ஆச்சார்யனா நமஸ்காரம் பண்றேன். விழுந்து நமஸ்காரம் பண்ணா போதுமா? இதையும் எடுத்துக்கணும்" வேட்டியும், மேல துண்டும் நூற்றியொரு ரூபாய் காசும் வைத்துக் கொடுத்து மரியாதையாக திருப்பி அனுப்பினார்கள்.

குழந்தையை ஒரு நல்ல குடும்பத்தில் ஒப்படைத்திருக்கிறோம். நல்ல மாப்பிள்ளை நமக்கு வாய்த்திருக்கிறான் என்று சந்திரசேகர் நிம்மதியானார்.

கர்நாடகத்தில் தேர்தல் வந்தது. நாராயணசாமி ஒரு குறிப்பிட்ட கட்சியை தேர்ந்தெடுத்து அதற்கு தன்னுடைய இடங்களை ஒதுக்கி காசு கொடுத்து, பேனர் கட்டி வைத்து, கொடிகளைக் கொடுத்து அந்தக்கட்சி நிச்சயம் ஜெயிக்கும் என்று நம்பி அதிகம் பணம் செலவிட்டான்.

அந்தக்கட்சி படுதோல்வி அடைந்தது.

தோல்வி அடைந்த இரவே ஒரு கும்பல் நாராயணசாமியின் வீட்டிற்குள் நுழைந்து அவன் ஹாலில் இருக்கிற பல பொருள்களை அடித்துப் போட்டது. அவன் மனைவியின் மார்பில் கை வைத்தது. நாராயணசாமி துப்பாக்கியை எடுத்து வானத்தை நோக்கிச்சுட அவன் ரௌடித்தனம் செய்ததாக கைது செய்யப்பட்டான். அவன் நெஞ்சு வலிக்கிறது என்று சொல்ல, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான். அது பொய்யான நெஞ்சுவலி என்று எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்க உண்மையாகவே அது மாஸிவ் அட்டாக் என்கிற பிரச்சினை ஆயிற்று.

உன்னை வாழ விடமாட்டேன்டா என்று எதிரிகள் சூளுரைத்துப் போனது அவனை பயமுறுத்தியிருக்க வேண்டும்.

நாராயணசாமி சந்திரசேகரை வரச் சொல்லி கெஞ்சி கேட்டுக் கொண்டான்.

சந்திரசேகர் அங்கு போனதும் அலுவலக பொறுப்பை எடுத்துக் கொள்ளச் சொன்னான். எனக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்ல, எதுவும் செய்ய வேண்டாம். பதில் சொல்லிக் கொண்டிரு போதும் என்று சொன்னான்.

நாராயணசாமி இல்லை. அவர் விரைவில் குணமாகி வந்து விடுவார் என்ற பதிலை திரும்பத் திரும்ப சந்திரசேகர் சொல்லிக் கொண்டிருந்தார்.

சொல்வது சந்திரசேகர் என்பதால் அந்தப் பேச்சில் உண்மை இருந்ததால் பல பேர் நம்பி திரும்பிப் போனார்கள்.



அடுக்கு மாடி வீட்டுக்காக காசு கட்டியவர்கள் கவலையோடு விசாரித்தார்கள். காசைத் திருப்பிக் கொடுத்து விடுங்கள். எனக்கு இந்த இடம் அச்சான்யமாக இருக்கிறது என்று ஒருவர் சொல்ல, நாராயணசாமியிடம் பேசி அவருக்கு மொத்தக் காசையும் திருப்பிக் கொடுத்துவிட்டார்.

நாராயணசாமி குணமாகி மீண்டு வந்தபோது அவனுக்கு முன்பு போல் முழு மடங்கு வேகத்தில் வேலை செய்ய முடியவில்லை. அரசியல் எதிர்ப்பு மிக பலமாக இருந்ததால் அவன் கையில் இருக்கின்ற காசை திருப்பிக் கொடுக்கின்ற ஏற்பாட்டில் வேகமாக இறங்கினான். தான் இதுவரை எழுப்பிய கட்டிடத்தை அப்படியே வேறொருவருக்கு விற்றான். அந்தக் காசை யார் யார் வாங்கினார்களோ அவர்களுக்கு திருப்பிக் கொடுத்தான். கிட்டத்தட்ட இருபத்து நான்கு லட்ச ரூபாய் நஷ்டம் இருந்தது.

பரவாயில்லை. போனால் போகட்டும்,ஒரு வருடம் உடல் நலம் பேணுவோம். பிறகு மெல்ல மெல்ல சிறிய வேலைகள் செய்து பிழைத்துக் கொள்ளலாம் என்று தீர்மானித்தான். அலுவலக ஊழியர்களை வீட்டிற்கு அனுப்பினான். எங்கே தப்பு என்று தனிமையில் உட்கார்ந்து யோசிக்கத் துவங்கினான்.

"அடிச்சு உதைச்சு நிலம் வாங்கின இல்ல. அந்தக் கிழவிகளோட சாபம் சும்மா விடுமா? இருவது லட்ச ரூபா கொடுக்க வேண்டிய இடத்துல பன்னெண்டு லட்ச ரூபா கொடுத்து விட்டு ஏமாத்திட்டு வந்தியே அவ எரியாம இருப்பாளா? வியாபாரம் செய்ய வேண்டியதுதான். ஒரு ரூபாய்க்கு வாங்கி ரெண்டு ரூபாய்க்கு விக்க வேண்டியதுதான். ஆனா, தலையில அடிச்சு நாலணா கொடுத்துட்டு அதை நாப்பது ரூபாய்க்கு விக்கற சாமர்த்தியம் சரியா? அது கடிக்காத போகுமா. பதிலுக்குத் தாக்காத போகுமா?" என்று சந்திரசேகர் சொன்னபோது கண்மூடி உட்கார்ந்திருந்தான்.

அவனால் துரத்தி அனுப்பப்பட்ட மைத்துனன் மறுபடியும் வந்து வீட்டு வாசலில் நின்று அவனை இழிவாகப் பேசி

ஏளனம் செய்தபோது திரும்பவும் கோபம் வந்தது. பொங்கி எழ, மறுபடியும் நெஞ்சைப் பிடித்துக்கொண்டு சுருண்டு விழுந்தான். அவனை திரும்பவும் மருத்துவமனையில் கொண்டு போய் சேர்த்தார்கள்.

பதினைந்து நாள்கள் பேச்சு மூச்சின்றிக் கிடந்தான். இன்னும் ஒருமுறை பலமாக இருமினால்கூட அவன் இருதயம் மேலும் பாதிப்படையும் என்று சொன்னார்கள்.

எல்லாவற்றிலிருந்தும் விடுபட்டு எழுந்தால்தான் உயிரோடு இருக்கு முடியும் என்று அறிவுறுத்தினார்கள்.

நாராயணசாமி தன்னுடைய வீட்டை வாடகைக்கு விட்டு விட்டு மகாராஷ்டிர மாநிலத்திற்குள்ளே உள்ள பண்டரிபுரத்திற்கு மனைவியோடு இடம் பெயர்ந்தான். அவன் மகளையும், மகனையும் மாமனார் மாயவரத்திற்கு அழைத்துச் சென்றார்.

உடைந்து நான்கு பக்கமும் சிதறிய பீங்கான் தட்டு போல் அந்தக் குடும்பம் போயிற்று. மிக ரகசியமாக பத்து லட்ச ரூபாய் எடுத்து நாராயணசாமி சந்திரசேகரிடம் கொடுத்தான். "இதை நீ வச்சுக்கோ. குழந்தைகளுக்கு தேவைப்பட்டபோது உன்னுடைய காசா கொடு. திருப்பியும் இந்தப் பக்கம் வரதுக்கு மனசு இல்லை. அப்பப்போ குழந்தேளை கவனிச்சுக்கோ" என்று சொல்லிவிட்டு இறுக்கமான முகத்தோடு ஊர் விட்டுப் போனான்.

அவன் கதையை ஒரு வாரப்பத்திரிகை நாவல் போல ஆறு வாரங்களுக்கு வெளியிட்டது.

அவனுக்கு ஏகப்பட்ட பெண் தொடர்புகள். அதனால்தான் சீரழிந்தான் என்று அந்தக் கதை போலும் உள்ள கட்டுரை சொல்லியிருந்தது.

நாராயணசாமி ஊருக்குக் கிளம்பிய அன்று தாம்பரத்திலுள்ள சம்பந்தியிடமிருந்து சந்திரசேகருடைய மகள் உண்டாகியிருக்கிறாள் என்ற தகவல் வர... அங்கு எல்லோரும் நாராயணசாமியை விசாரிக்க, எப்படியிருக்கிறார் என்று



கேள்வி கேட்க, மிக நலமாக மிகச் சந்தோஷமாக இருக்கிறார். நிம்மதியாக இருக்கிறார் என்று அவர் பதில் சொன்னார்.

ஆனால், உள்ளுக்குள் தம்பியின் தோல்வி பற்றி அவருக்கு மிகப் பெரிய வருத்தம் இருந்தது.

இத்தனை ஆடியிருக்க வேண்டாமோ. இவ்வளவு வேகம் இருந்திருக்க வேண்டாமோ, கோபமும், ஆத்திரமுமாய் சம்பாதித்திருக்க வேண்டாமோ, நாலா பக்கத்தையும் வலைவீசி வளைத்து இறுக்கிவிட முடியும் என்று கொக்கரித்திருக்க வேண்டாமோ. கெட்டிக்காரனாக வாழ்வது எப்படி என்று பறையறிவித்துக் கொண்டிருக்க வேண்டாமோ, செயல் மட்டுமே மனிதனுக்கு முக்கியம். பேச்சு தேவையில்லை. செய்யும் செயலிலும் நிதானம். மிக அவசியம் என்று அவருக்குப் புரிந்து போயிற்று.

மகனின் மந்தமான வாழ்க்கை. தம்பியின் திமிரான வாழ்க்கை என்று இரண்டும் வெவ்வேறு விதமாகத் தாக்க அவர் ஆச்சரியத்தில் மூழ்கிப் போனார். மாப்பிள்ளைதான் மிக நிதானமானவன் என்று மனைவியோடு பேசிக் கொண்டிருந்தார்.

ஆனால், அந்த மாப்பிள்ளையும் இந்த வேலையை விட்டு விட்டு நான் வேறு வேலைக்குப் போகப் போகிறேன் என்கிற போது அவருக்கு வேதனை அதிகரித்தது. என்ன ஆயிற்று இந்த உலகிற்கு என்று கேள்வி வந்தது.

மிக நிதானமாக மெல்ல மெல்ல நான் முன்னேறினேனே. அப்படி முன்னேற ஏன் இவர்களுக்குத் தெரியவில்லை என்று புலம்பினார்.

ஏதோ ஒரு வேலை, ஏதோ ஒரு இடம், ஏதோ ஒரு விதமான வாழ்க்கை அப்படின்னு நான் நினைக்கலை.

ஒரு வேலை கிடைக்கறது இந்த கால கட்டத்துல போராட்டம். அந்த வேலை தனக்கு பிடிச்சுருக்கா, பிடிக்கலையான்னு கேள்வியே இல்லாம அப்பாடா வேலை கிடைச்சுடுத்து, இருநூறு சம்பளம் கிடைச்சுடுத்து, மோர் சாதத்துக்கு கவலை

இல்லை அப்படின்னு உள்ள இறங்கி, மோர் சாதம் மட்டும் இருந்தா போறாது. குழம்பு சாதம் வேணும். குழம்பு சாதம் மட்டும் போறாது. ஒரு கூட்டுக்கறிக்கு சம்பாதிக்கணும். கூட்டுக்கறிக்கு மட்டும் சம்பாதிச்சா போறாது. பட்டுப் புடைவைக்கு சம்பாதிக்கணும்னு படிப்படியா ஆசை ஆசையா வந்திருக்கேள். இதுல தப்பு சொல்லலை.

ஆனால், உங்களுடைய வேலை, உங்களுடைய யோக்கியதை இதைப் பண்றதுக்குத்தானா அப்படின்னு நீங்க கேட்டுக்கவே இல்லை. கேட்காததுனால சந்தோஷமாவே இருந்தேள். நான் கேட்டுக்க ஆரம்பிச்சுட்டேன் என்னுடைய வேலை இது தானா... இப்படி கேட்டுண்டவர் நாராயணசாமி. என்னாச்சு... தன்னுடைய வேலை நிறைய சம்பாதிக்கறது. பெரிய ஆளாகறது. எப்படின்னு அவர் கேட்டுண்டார். ஆனால், செயல்படுத்தறதுல பெரிய தப்பு வந்தது. தன்னுடைய வேலை என்ன அப்படின்னு கேள்வி கேட்டுக்கறது மட்டுமில்லை. அதுல எவ்வளவு தூரம் முன்னேற வேண்டும். எப்படி முன்னேற வேண்டும். அதனுடைய வழிமுறைகள் என்ன அப்படின்னு ஒருத்தர் கேட்டுக்கணும். எந்த வழியைப் பத்தியும் கவலை இல்லை. முன்னேறது ஒண்ணுதான் லட்சியம் அப்படின்னார் நாராயணசாமி. ஏதோ ஒரு வழி மடக்கி கீழ்போட்டு மெறிச்சுடுத்து.

"அந்த வைர அட்டிகை சமாச்சாரம், என்னை ரொம்ப நாள் உறுத்திண்டிருந்தது. நான் திரும்பத் திரும்ப எதுக்காக அந்த வைர அட்டிகையை எனக்கு இவர் கொடுத்தார் அப்படின்னு பார்த்தாக்க, அது என்னை சந்தோஷப்படுத்தவோ, என் மனைவியை குளிர்விக்கவோ, எங்க வீட்டுக்காராள பெருமைப்படுத்தவோ அல்ல. உங்களை அவமானப்படுத்த. இந்தக் கல்யாணமே நான்தாண்டா நடத்தினேன் அப்படின்னு ஒரு தோற்றம் ஏற்படுத்த நாராயணசாமி பண்ணது. சொந்த அண்ணா கிட்டயே ஜகஜால வித்தை காண்பிக்கணும்னா அதுக்கு என்ன காரணம்? பணம். பணத்தினுடைய திமிர். நிறைய பணம் கையில இருந்தா அது சும்மாயிருக்க விடாது.



தோணாது. நாலாபக்கமும் செவிட்டியடிக்கத் தோணும். செல்வத்தினுடைய இன்னொரு விளைவு யுத்த தளவாடங்கள். யுத்த தளவாடங்களுடைய இன்னொரு விளைவு போர். யார் மீது போர்? யார் நண்பராக இருந்தார்களோ அவர்களின் மீதே போர். அவர் காசை ஆயுதமா பயன்படுத்தினார். பணிய வைக்கறதுக்கு முயற்சி செய்தார். எல்லாரையும் விலைக்கும் வாங்கினார். இப்படி விலைக்கு வாங்கறபோதுதான் இன்னொரு பணக்காரன் முழிச்சுக்கறான். நம்மள மாதிரியே இன்னொருத்தன் விலைக்கு வாங்கறானே. இவன் எல்லாரையும் விலைக்கு வாங்கிட்டா நான் யாரை விலைக்கு வாங்குவேன்? அப்போ இவனை, விலைக்கு வாங்க பண்ண முடியாமல் நிறுத்தணும். தனக்கு நேர் எதிராக, போட்டியாக இல்லாமல் போனாலும் மறைமுகமான எதிரி. ஒரு நாள் இல்லைன்னா ஒருநாள் இவன் என் பொண்டாட்டியும் விலைக்கு வாங்கிடுவான்னு நினைச்சு அவரை அழிக்க முற்படுவார்கள்.

ஒருத்தன் தன் எதிரியை, சண்டை போட்டாதான் சம்பாதிச்சுக்கப் போறோம்கறது இல்லை, வெறுமன வேகமா வளர்ந்தாலே நம்மைச் சுற்றி நாற்பது ஐம்பது எதிரிகள் உருவாகி விடுவார்கள். அதனால ஒரு ஹைட்டுக்கு மேல போறதும் தவறு. எல்லாரும் பார்க்க உயரமான இடத்தில உட்கார்ந்துட்டீங்கன்னா எப்போ விழுவீங்கன்னுதான் அத்தனை பேரும் நினைப்பான். இது சாதாரண மனோதத்துவம்.

உண்மையில் உங்க பிள்ளைக்குகூட அந்த வேலை பிடிகலை. அந்த கார் கம்பெனியில் இதுக்கு மேல பண்றதுக்கு ஒண்ணுமில்லை. ஆனாலும், இறுக்க பிடிச்சுண்டு, அந்தக் கார் கம்பெனி ஒரு கவர்மெண்ட் ஆபீஸ் மாதிரி ஆயிடுத்து. உங்க பிள்ளை ஆம்பளையா இல்லாத, போறும் இருவத்தாறாயிரம் ரூபா காசு, அப்படின்னு சொல்லி எப்போ ப்ராவிடண்ட் ஃபண்ட்ல காசு சேரும், எப்போ லோன் எடுக்கலாம், எப்போ அந்தக் காசுல நகை வாங்கலான்னு நினைக்கற சாதாரண பெண் பிள்ளையா மாறிட்டார். அரசாங்க வேலையில ஈடுபடற ஒரு பெண் பிள்ளைக்கு, வெறும் குமாஸ்தாவா இருக்கற

ஒரு நாற்பது வயது பெண்மணிக்கு தன்னுடைய வேலையின்
மீது என்ன மதிப்பு, என்ன காதல் இருக்கும். அதுதான் உங்கள்
மகனிடமும், அவர் வேலை பற்றிய அபிப்ராயமாக இருக்
கிறது. இந்த வேலையை தக்கவச்சுண்டா போதும். அதுல
கிடைக்கற சந்தோஷங்களை, குவார்ட்டர்ஸ்களை, இன்சென்ட்
டிவ் போனஸை அங்க கிடைக்கற வேலையாட்கள் சௌகரி
யத்தை அனுபவிச்சா போதும் அப்படின்னு சின்ன வட்டத்துக்
குள்ள மாட்டிண்டார்.''

"அப்படியானால் காசு தேடுதல், வேலைக்குப் போதல்
எப்படி இருக்கணும்?"

"உங்களுடைய வாழ்க்கை போலவும் இருக்கக்கூடாது.
நாராயணசாமி போலவும் இருக்கக்கூடாது. உங்க பிள்ளை
வெங்கடகிருஷ்ணன் போலவும் இருக்கக்கூடாது. நான்
சொல்றது கம்ப்யூட்டர் கம்பெனியில் பாகஸ்தரில்லை. இந்த
கம்ப்யூட்டர் கம்பெனியில வேலை செய்யற இந்தப் பெண்
களையும், இளைஞர்களையும் நான் உத்துப் பார்க்கறேன்.

இன்றைய வாழ்க்கையை இன்னும் கவனமா பார்க்கறேன்.
ஏகப்பட்ட பிரச்சினைகள். எப்போவும் டென்ஷன். கார்த்தால
எட்டு மணியிலிருந்து ராத்திரி எட்டு மணி வரைக்கும் பன்னி
ரண்டு மணிநேரம் ஒரு சின்ன ஸ்க்ரீன் முன்னால இருக்கற
ஓயாத வேலை. ஒரு ஹோட்டல்ல வேலை செய்யறவன் பதி
னாலு மணிநேரம் வேலை செய்யறான். தொழிற்சாலையில
வேலை செய்யறவனை தொடர்ந்து அதிகமா புரொடக்ஷன்
கொடுக்கச் சொல்லி வற்புறுத்தி அவனுக்கு ஓவர் டைமும்,
இன்செண்டிவ், போனஸும் ஆசைக் காண்பிச்சு சனிக்கிழமை
யும், ஞாயித்துக்கிழமையும் தொடர்ந்து வேலை நடந்துண்
டிருக்கு. சினிமாவுல, பத்திரிகைல இருக்கறவங்களுக்கெல்
லாம் இருபத்து நாலு மணிநேரமும் வேலை நடந்துண்
டிருக்கு. சினிமாவுல, பத்திரிகைல இருக்கறவங்களுக்கெல்
லாம் இருபத்து நாலு மணிநேரமும் வேலை. எப்போ தூங்கப்
போறோம்னு அங்க யாருக்குமே தெரியலை. எப்போ



வீட்டோட உட்காரப் போறோம்னு அவங்களுக்கு கணக்கே இல்லை.''

"இதனால என்ன பிரச்சினை வருது?"

"மன அழுத்தம். கம்ப்யூட்டர் முன்னாடி உட்கார்ந்துண்டிருக்கற பொண்ணுக்கு பத்துமணி நேரம் வேலை, பதினோறாயிரம், பன்னிரண்டாயிரம் சம்பளம். அதைக்கொண்டு போய் வீட்ல கொடுக்கறதுனால அவளுக்கு ஏற்படுகிற மரியாதை, அதன் காரணமாக ஏற்படுகிற திமிர், அலட்சியம், அவங்களுடைய சொந்த வாழ்க்கையும் பாழ்பண்றது. பத்து மணி நேரம் வீட்ல இல்லாத பொண்ணு, பன்னிரண்டு மணி நேரம் வீட்ல இல்லைன்னா கேட்பாருண்டா. ஏதோ காரணமில்லாமல் இருக்குமா? ஆக, எட்டு மணிலேர்ந்து பத்து மணி வரைக்கும் நைட் வேற யார்கூடயாவது ஒரு க்ளப்புல உர்கார்ந்து பீர் குடிச்சுட்டு வந்தா என்ன தப்பு?

புத்தி மாறுகிறது. பத்து மணி நேர உழைப்பே அதிகம். ஒரு ரெண்டு மணி நேரத்துல ஆல்கஹாலையும், அசட்டுப் பேச்சுகளையும் உடம்புல ஏத்திண்டு இன்னும் டென்ஷனா, வெறியா அந்தப் பொண்ணு அலையுது. எதுக்கு கல்யாணம் அப்படின்னு யோசிக்க ஆரம்பிச்சுடுச்சு. தட்டிக் கேட்காத அப்பா அம்மாவோடயே இருந்துடலாமே. மாமனார், மாமியார் கிட்ட மாட்டிப்பானேன். அப்படின்னு யோசிக்குது.

இன்னும் சில வகை பெண்கள் கம்ப்யூட்டர்ல வேலை செய்யறதுனால கம்ப்யூட்டர்ல வேலை செய்யறவனோடயே குடித்தனம் பண்ணா நல்லது. அவனுக்குத்தான் புரியும். பத்து மணி நேர வேலை என்னான்னு. ரெண்டு பேரும் பத்து மணி நேரம் வேலை செய்துட்டு வீட்டுக்கு போறதுக்கு முன்னாடி ராத்திரி சாப்பாட்டை ஓட்டல்லயே முடிச்சுக்கறாங்க. வீட்டுக்குப் போய் தூங்கறாங்க. காத்தால எழுந்து பல் தேய்ச்சு குளிச்சுட்டு ஹோட்டல்ல வந்து டிபன் சாப்டுட்டு ஆபீஸுக்கு வந்துடறாங்க. சமைக்கறதுக்கு முடியாது. சமைக்க தேவையில்லை. சமையல் அறை காபி போட மட்டுமே உபயோகம்.

மத்தபடி ஷெல்ப்புல நிறைய புஸ்தகங்கள்தான் இருக்கு. மேடைக்குக் கீழ் வாரப் பத்திரிகைகளும், பேப்பருந்தான் இருக்கு.

இந்த கம்பெனியில் இப்போ பதினஞ்சாயிரம் சம்பளம். வேற எங்க போனா அதிக சம்பளம்? அதுக்காகத்தான் அவங்க பேப்பர் வாங்கறாங்க.குழந்தை பெத்துக்கறதுக்கு பயப்பட றாங்க. யாராவது கூட ஆள் ஹெல்ப்புக்கு இருந்தா, அப்போ குழந்தை பெத்துக்கலாம் அப்படின்னு தள்ளி போடறாங்க. ரெண்டு பசங்க மட்டும் பெத்துண்டா போறும் அப்படின்னு சொல்ற குடும்பக்கட்டுப்பாடு, ஒண்ணு பெத்துண்டா போறும்னு சொல்ற குடும்ப கட்டுப்பாடெல்லாம் போய் குடும்பமே தேவையா அப்படிங்கற கேள்வி வந்துடுத்து. குடும்பம் இல்லாத இந்த மாதிரியான இளைஞர்களுடைய வாழ்க்கை கோபமாகவும், ஆத்திரமாகவும், பிடிப்பில்லாமலும், தற்கொலை எண்ணங்களோடும் ஊர் சுத்திண்டிருக்கு.நான் கம்ப்யூட்டர் பெண்களை மட்டும் பேசலை, கம்ப்யூட்டர் ஆண்களை மட்டும் பேசலை, இந்த இடத்துல எல்லா இளை ஞர்களுக்கும் இந்த டென்ஷன் இருக்கு. லாரி டிரான்ஸ் போர்ட்ல வேலை செய்யற பையன், ஸ்பேர் பார்ட்ஸ் விக்கற பையன், மார்க்கெட்ல காய்கறி பழம் பூ விற்கிற இளைஞன், வளையல் கடை வச்சுண்டிருக்கிற பையன், ஹோட்டல்ல வேலை செய்யற இளைஞன் அத்தனை பேருக்கும் வேலை பளு அதிகம். மிகமிக அதிகம்.

இந்த வேலை பளு அதிகமாக இருக்கற ஆளுக்கு சினிமா ஒரு வடிகால். சினிமாவுக்கு போகக்கூட நேரமில்லாத இந்த பட்டணத்து இளைஞர்களுக்கு இப்போ தொலைக்காட்சி ஒரு வடிகால். தொலைகாட்சியை பார்க்கறதுக்கு மூளையே வேண் டாம். யோசிப்புத்திறனே தேவையில்லை. எதிர எவளோ ஒருத்தி கத்திண்டிருப்போ, அழுதுண்டிருப்போ, சிரிச்சுண்டி ருப்போ, நம்மளவிட அதிகமா கீச்கீச்சுனு தொண்டை கிழிய கத்திண்டிருப்போ. எல்லா டிவியிலயும், நாடகத்துலயும் வெட்டுவேன், குத்திடுவேன், கொன்னுடுவேன், வெளிய



போ, இங்க நிக்காத அப்படின்ற கூச்சல்தான் கதையா இருக்கு. அமைதியாக, ஆழ்ந்து, உள்ளே உட்கார்ந்து நிம்மதியைத் தேடுகின்ற ஒரு சுபாவம் இல்லை. தனக்கு என்ன வேண்டு மென்று கேட்கின்ற எண்ணமே இல்லை.''

"இது என்ன ஆகும்?"

"நாப்பது வயசுலயே செத்துப் போயிடுவான். முப்பத்தஞ்சு வயசுல எல்லாரும் நோயாளி ஆயிடுவாங்க. முப்பது வயசு லயே சர்க்கரை வியாதி வந்துடும். ப்ளட் ப்ரஷர் வந்துடும். முப்பது வயசுலயே அப்பனுக்கும், மாமாவுக்கும் சர்க்கரை வியாதி வந்துட்டா அவனுக்கு பிறந்த குழந்தைக்கு பதினஞ்சு வயசுலயே வந்திடும். பதினஞ்சு வயசுல இனிப்பு சாப்பிட முடியாது. ஓடியாட முடியாது. அப்படியொரு வியாதி. எவ்வ ளவு மோசமான நிலையில நாம இருக்கோம்னு உங்களுக்கு புரியுதா? எந்த நோயையும் சமாளிக்க தாங்கறதுக்கு முடியாது. நாலு தடவை தும்மினா லீவு. அஞ்சு தடவை ஆண்டிபயாடிக். அதனால நுரையீரல் பலவீனம், இருதய பலவீனம். இந்தியா வில அதிகமாக இருதய நோயாளிகள் இருக்காங்க. காரணம், கெட்ட பழக்கம். டென்ஷனான வாழ்க்கை. டென்ஷன் அதி கமா இருக்குன்னு சிகரெட்டை தொட்டவன் அத்தனை பேரும் சாவைத் தொட்டவன்தான். ஆபீஸுக்குள்ள சிகரெட் பிடிக்க முடியலை என்ன பண்ணலாம்? பான்பராக் அப்படின்னு ஒரு விஷப்பாக்கு கொண்டுவந்தாங்க. கடுமையா சுண்ணாம்பு சேர்த்து பல், ஈறு அண்ணம் எல்லாமே அழிஞ்சு போகும் படியா, வெந்து போகும்படியா பண்ணாங்க. அது இரைப் பையில குடலை, ஆசனவாயை, கிட்னியை எல்லாத்தையும் தாக்கித்து. நல்ல வேளை பெரிய தடை போட்டோம். இது சரியா செயல்படறதான்னு தெரியலை. ஜரிதா, பீடா மாதிரி பான்பராக் மாதிரி கெடுதல் உலகத்துல எதுவும் இல்லை. பல பணக்காரர்கள், பல அலுவலர்கள், செத்துப் போறதுக்கு காரணம் ஜரிதா, பீடாதான். யாருமே அம்பதைத் தாண்டலை. பத்து வருஷத்துக்கு மேல ஜரிதா, பீடா பழக்கம் அவனை சாகடிக்கறது. மூணாவது வருஷத்துலயே அவனுடைய

வலுவை முடக்கிப் போடறது. ஆண்மை இல்லாத ஆளா மாறிடறான்.

அடுத்தது மது. போர்க்காலத்தில் வீரர்களுக்கும், குதிரைகளுக்கும் கொடுக்கப்பட்ட திராட்சை ரசம். இதை தினம் தோறும் குடிக்க வேண்டிய அவசியமென்ன? கல்யாண காலத்தில், குழந்தை பிறந்த போது ஒரு உற்சாகத்திற்காக, கொண்டாட்டத்திற்காக கண்டுபிடிக்கப்பட்ட திராட்சை மது. அதை கார்த்தால, மத்தியானம், சாயந்திரம்னு குடிக்கறவன் என்ன கதிக்கு ஆளாவான். நரம்பு மண்டலம் சிதறிப் போறது. போதையில் உளறி தெளிவாக இருக்கறபோதும் உளறலே பிடிச்சு, அப்பவும் உளறி போதையில் இருக்கறா போலவே ஒரு கற்பனையிலிருந்து பேச ஆரம்பிக்கிறான். மனசு சரியில்லாத ஆளோடு யார் தொடர்பு கொள்ள முடியும்? அப்படித் தொடர்பு கொள்வது நின்று போனால் அவன் இன்னும் அதிகமாகப் பேசுகிறான். தனக்குத்தானே பேசுகிறவன் கிட்டத்தட்ட மனநிலை சரியில்லாதவன். பைத்தியம். ஆல்கஹால் ஒரு மனிதனை பைத்தியமாக்குகிறது. புத்தியை பேதலிக்க வைக்கிறது.

சுதந்திரத்திற்கு முன்பும் மதுக்கடைகள் இருந்தன. ஆனால், எத்தனை பேர் குடித்தார்கள்? இன்றைக்கும் மதுக்கடைகள் இருக்கின்றன. எண்பது சதவீதத்தினர் குடிக்கிறார்கள். மதுக்கடை நடத்த போட்டா போட்டி நடக்கிறது. ஏன், அரிசி விற்கிறதோ இல்லையோ சாராயம் விற்கிறது. துணி விற்கிறதோ இல்லையோ ரம் விற்கிறது. ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் குடிக்கிறார்கள். ஆனால், யாராவது உளறுகிறார்களா, தெருவில் முன்னும், பின்னும் நடக்கிறார்களா? நமது மாநிலத்து மக்களுக்கு குடிக்காதபோது புத்தி வேலை செய்யாது. எந்தக் கேள்விக்கும் பதில் தெரியாது.எல்லாமும் திகைப்பாக இருக்கும்.குடித்த பிறகு அவனுக்கு சகலமும் தெரிகிறது. எதற்கும் பதில் சொல்ல முடிகிறது. அவன் மூடிய மனம் திறக்கிறது. தன் மனதை தானே திறந்து பார்ப்பதற்கு அவன் மதுவை நாடுகிறான். ஆகவேதான் மது பழக்கமாகி



விடுகிறது.மறுபடி மறுபடி பேச மதுவே காரணமாக இருக்கிறது. மதுவின் உதவி தேவைப்படுகிறது. எனவே, சோற்றுக்கு செலவு செய்வதைவிட மனம் திறந்து பேச மதுவுக்கு செலவு செய்கிறான்.

எங்கள் அலுவலகத்தில் ஒரு டிரைவர் இருந்தான். அவனுக்கு எந்த ரோடு பெயரும் தெரியாது. எந்தக் கட்டிடத்தின் பெயரும் தெரியாது. எந்த அலுவலகத்தின் பெயரும் தெரியாது. ஆனால் அவனுக்கு நகரத்திலுள்ள அத்தனை ஒயின் ஷாப்புகளும் அத்துப்படி. எ.பி.ஒயின்ஸ்லேர்ந்து முருகன் ஒயின்ஸ் போய், முருகன் ஒயின்ஸ் பக்கம் லெஃப்ட்ல திரும்பி, ராஜா ஒயின்ஸ் தாண்டி, ராஜா ஒயின்ஸ்லேர்ந்து நேரா போனோம்னாக்க அங்க ஜி.கே. ஒயின்ஸ் வரும், அங்க ஜி.கே. ஒயின்ஸுக்கு நேர் எதிர் பக்கம் சரவணா ஒயின்ஸ் இருக்கும். அந்த சரவணா ஒயின்ஸுக்கு பக்கத்துல இருக்கற பில்டிங், அங்கதான் இந்த புக்கை டெலிவரி பண்ணினேன் என்று சொல்வான். தெருவில் நடமாட அவனுக்கு ஒயின் ஷாப்புதான் அடையாளம். வேறு எதையும் அவன் மனம் கிரஹிப்பதே இல்லை.''

சந்திரசேகரும், அவர் மனைவியும் மகளும் மாப்பிள்ளையை கவனமாகப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தார்கள்.

"நீங்க என்ன பண்ணப் போறீங்கன்னு சொல்லலையே."

"இவங்களை தட்டிக் கொடுத்து சரி பண்ற வேலை எனக்கு இருக்கோன்னு தோன்றது."

"ஏன் மாப்பிள்ளை? இந்த வேலை உங்களுக்கு ஏன்?"

"நான் சரியா இருக்கேனே.நான் உள்ளுக்குள்ள ஆடாம அமைதியாக இருக்கேன். எனக்கு பிரச்சினைகள் வந்த போதும், பிரச்சினைகள் இல்லாத போதும் நான் தெளிவாக இருக்கிறேன். பொறுமையாக இருக்கிறேன். அடுத்தது என்ன செய்ய வேண்டுமென்ற ஆர்வத்தோடு இருக்கிறேன்."

"என்ன செய்யப் போறீங்கன்னு சொல்லலையே."

"இந்த இளைஞர்களுக்கு எப்படி வாழ்வது அப்படின்னு நான் சொல்லித் தரப் போறேன். வாழும் வகை அறிவிக்கப் போகிறேன்."

"எப்படி வாழும் வகை, இவங்க யாருக்குப் புரியும்?"

"புரியறது என்பது வேற விஷயம். சொல்லிக் கொடுக்க யாராவது இருக்கணுமில்லையா? அது என் வேலை."

"எப்படி சொல்லித் தருவீங்க?"

"நாடி சுத்தி. பிராணாயாமம். யோகாசனம். மெடிடேஷன்."

"இவ்வளவுதானா. இதுக்கு வேலையை விடுவானேன்? இதை வேலையில இருந்துண்டே சொல்லித் தரலாமே."

"இல்லை. இது அரைமணி நேரம், ஒரு மணி நேரம் வேலை இல்லை. ஆபீஸ்ல ஒன்பது மணி நேரம் வேலை செய்துட்டு பாக்கி ரெண்டு மணி நேரம் அவன் க்ளப்புக்கு போறதுக்கு பதிலா எங்கிட்ட வரட்டும்னு சொல்ற வேலை இல்லை. அவனுக்காக இருவத்தி நாலு மணி நேரமும் என் வீட்டுக் கதவுகள், என் அலுவலகத்தின் கதவுகள் திறந்து வைக்கப்பட்டிருக்கும். அவன் முன்னேற்றத்தைக் கவனித்து நிதானமாக இதை விளக்கி கெட்டியாக, உறுதியாக அவன் வளர்வதற்கு உதவி செய்வது என் லட்சியம். இது எனக்கு ரொம்ப பிடிச்சுருக்கு."

"இதுல காசு வராதே."

"ஆரம்பத்துல வராது. பின்னால் வரலாம்."

"எனக்கு புரியறது. நீங்க ஆசிரமம் கட்டப் போறேள். இப்போல்லாம் ஆசிரமத்துல நல்ல காசு. மடியில கொண்டு வந்து கொட்றா."

சாவித்ரி சொல்ல, மாப்பிள்ளை உரக்கச் சிரித்து பலமாக தலையசைத்தார்.

"இல்லை, நான் கடவுள் விற்கப் போறதில்லை. எனக்கு எல்லாம் தெரியும்னு என்ன வேணா என்னை கேள்வி கேளுங்கோ நான் பதில் சொல்றேன் அப்படின்னு சப்ளாங்



கால் கட்டிண்டு நெஞ்சை நிமிர்த்திக்கப் போறதில்லை. வேதம் பத்தி உனக்கு ஒண்ணும் தெரியாது. எனக்கு தெரியும். நான் உனக்கு சொல்லித்தரேன் பார் அப்படின்னு உரத்த குரல்ல பசப்புவதல்ல. வேதத்தில் கடவுள் தேடல் பற்றியும், அதில் வாழ்வின் நெறிமுறையும் இருக்கிறது. நல்ல நெறி முறையான வாழ்க்கை உள்ளவர்களுக்குத்தான் கடவுள் கிடைக்கக்கூடும். எனவே சனாதன தர்மத்தில் வாழுகின்ற வகை இருக்கிறது.

வெங்காயம் சாப்பிடாத, பூண்டு ஒதுக்கிடு என்று வெறும் விதிமுறைகள் சொல்வதல்ல,விதிமுறையை மட்டுமே காட்டுகின்ற எந்தக் குழுவும் ஆட்டம் காண ஆரம்பித்து விடும். விதி என்று ஒன்று இருந்தால் மீறுவது என்பது மனித இயல்பு. பூண்டு ஒதுக்கிடலாமா, வெங்காயம் பரவாயில்லையா, வாரத்துக்கு ஒரு நாள் சேர்த்துக்கலாமா, அதனால், ஞாயித்துக் கிழமை, எங்க வீட்ல வெங்காய சாம்பார், உருளைக்கிழங்கு கறி என்று விதிகள் தளர ஆரம்பிக்கும். விதிப்பதாலேயே மீறுவார்கள்.

தன்னை அறியும் கலையே விஞ்ஞானம். தன்னை அறியும் வாழ்க்கையே உண்மையான வாழ்க்கை. தன்னைப் பற்றிய ஒரு கூர்மையான பார்வையை இடையறாது தன்னுள் வைத்துக் கொண்டிருப்பதற்கு ஒரு பயிற்சி வேண்டும். அந்தப் பயிற்சியைத்தான் நான் சொல்லித் தரப் போகிறேன். அது சுவாசத்தை சரியானபடி வைத்துக் கொள்வதில் ஆரம்பிக்கும். சுவாசம் சரியாக இருந்தால் உணவுப் பழக்கம் தானாக வரையறுக்கப்படும். சுவாசத்தை பயிற்சி செய்யாமல் உணவுப் பழக்கத்தை மட்டும் வைத்துக் கொண்டிருந்தால், ஒரு நாள் இல்லையெனில் ஒரு நாள் மீறுவார்கள். அந்த உணவு, அவர்கள் சாப்பிடுகின்ற சாத்வீக உணவும் செரிக்க முடியாது போகும். பூண்டும், வெங்காயமும் ஒதுக்குவதல்ல வாழ்க்கை. சுவாசத்தை நெறிப்படுத்துதல்தான் ஒரு வாழ்வின் முதல் நெறி. ஏனெனில் எண்ணங்களும், மூச்சும் இரண்டறப் பிணைந்திருக்கின்றன. நீங்கள் மூச்சு விடுவது போல் சிந்திக்

கிறீர்கள். சிந்திப்பதற்கேற்ப மூச்சு மாறுகிறது. அமைதியாக மூச்சு விடுங்கள். அமைதியாக சிந்திப்பீர்கள். எனவே என் பயிற்சி மூச்சு விடுவதிலிருந்து துவங்குகிறது. உட்காருவதி லிருந்து ஆரம்பிக்கிறது. அமைதியாக தனித்து இருப்பதி லிருந்து துவங்குகிறது. முதலில் மூன்று நாள் தனிமையில் இருந்துவிட்டு வா. யாரோடும் பேசாத என்று தான் நான் போதிக்கிறேன்.''

"ஆரம்பிச்சுட்டேளா?"

"அங்கங்க தனித்தனியா எங்கிட்ட வந்து என்ன செய்யற துன்னு தெரியாம அழறவாளுக்கு நான் மெல்ல மெல்ல சொல்லித் தரேன். ரொம்ப சீக்கிரம் இதை ஒரு வகுப்பா வந்து கத்துக்கறதுக்கு ஒரு இடமா பண்ணப் போறேன்."

"காசு வாங்க மாட்டேளா?"

"ஜெயிச்சவன் தானா கொண்டு வந்து தருவான். பின்னால் அவனா விருப்பப்பட்டு கொடுக்கறபோது அது என்னுடைய வளர்ச்சிக்கு பயன்படும்."

"ஒரு வேளை இந்த முயற்சி தோத்துப் போயிடுத்துன்னா."

"எனக்கு பயிற்சி போதவில்லை என்று அர்த்தம். நான் பயிற் சியை எடுத்துக்கொள்ள வேறு இடத்திற்குப் போய் சில வரு டங்கள் இருந்துவிட்டு மறுபடியும் திரும்புவேன். மறுபடியும் துவங்குவேன்."

"ரொம்ப தைரியம் மாப்பிள்ளை."

"ஆமாம், அதுக்குக் காரணம் நீங்க.உங்க பொண். எனக்கு இருக்கற ஒரேயொரு குழந்தை.எங்கப்பா, அம்மா, என் குழந்தையை, என் மனைவியை நான் இல்லாத போதும் கவனித்துக் கொள்ள எனக்கு ஆட்கள் உண்டு.

அதுதான் என் முதல் தைரியம். ஒண்ணுக்கு மேல பெத்துக் கக் கூடாதுன்னு சொல்லி நாங்க ரெண்டுபேரும் தீர்மானம் பண்ணோமே அது ரெண்டாவது தைரியம். மனசுக்குப் பிடிச்ச இந்த வேலை நம்மள சந்தோஷப்படுத்தும். நாம் சந்தோஷ



மாக இருந்தால் நாம் சம்பாதிப்பது மிகச் சரியாக இருக்கும் அப்படின்னு ஒரு முடிவுக்கு வந்தோமே இது மூணாவது தைரியம்.''

"இப்படி எல்லாருமே மூச்சு பிடிச்சு உட்கார்ந்துண்டி ருக்கறதுன்னு ஆரம்பிச்சா வாழ்க்கை எப்படி நடக்கும்?"

சந்திரசேகர் கேள்வி கேட்டார்.

"ஹா... ஒரு காலத்தில் இந்த பாரத தேசம் முழுவதும் எல்லா ஜாதியினரும் மூச்சுப் பிடித்து உட்காருவதையே தங்க ளுடைய தினசரி கடமையாகக் கருதியிருந்தார்கள். தேசம் அப்பொழுது மிகச் செழிப்பாக இருந்தது. அன்னியர் வருகை யினால் இப்படி மூச்சை நெறிப்படுத்தி உட்காருவது என்பது மறந்து போக, கைவிட்டுப்போக, இந்த தேசத்திலும் குழப்பம் ஏற்பட்டது. இத்தனை அன்னியர் வருகைக்குப் பிறகும் இந்த சனாதன தர்மம் அழியாதிருப்பதற்குக் காரணம் யாரோ சில பேர் மூச்சை நெறிப்படுத்திக் கொண்டு வாழ்கிறார்கள் என்பதால்தான், ஒரேயொரு ஞானி இருந்தால்போதும், மூச்சை நெறிப்படுத்திய ஒரு மனிதன் இருந்தால் போதும், அவரைச் சுற்றி பல மக்கள் சௌக்கியமாக வாழ்வார்கள். அவருடைய அதிர்வினால், அவர்களுடைய வாழ்க்கை முறை மாறும். துக் கங்கள் மறையும். மூச்சை நெறிப்படுத்தி தன்னை அறிந்தவர் மற்றவருக்கு மிகப் பெரிய உபயோகமாகிறார். நானும் பிற ருக்கு உபயோகப்படுத்த வேண்டுமென்று விரும்புகின்றேன்."

"உங்களை புரிஞ்சுனுட்டேளா மாப்பிள்ளை?"

சந்திரசேகர் அருகே வந்து கேட்டார்.

"ஆம் என்று சொன்னால் அகம்பாவம். இல்லை என்று சொன்னால் பொய். இந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை, இப்படிக் கேட்பதும் தவறு. என்னை நான் உணர்ந்து கொண்டேனா என்பது என் நட வடிக்கைகளில், என் கண்களில், என் பேச்சில், என் பழக்கத் தில் உங்களுக்குத் தெரிந்துவிடும்."

வியப்போடு சந்திரசேகர் உட்கார்ந்தார். அவர் மகள் அருகே வந்து அப்பாவின் தோளை அணைத்துக் கொண்டாள்.

"அப்பா அவரை விட்ருங்கப்பா. நீங்க கேட்ட எல்லா கேள்வியையும் நானும் கேட்டேன். நானும் பயந்தேன். ஆனால், அவரோட பேசப்பேச, பழகப்பழக அவர் ரொம்ப ரொம்ப தெளிவா இருக்கார்னு தெரிஞ்சுது. அவர் ரொம்ப உசந்த இடத்தில் இருக்கார்பா. ரொம்ப உறுதியா இருக்கார். ஞானி அப்படின்னு நான் உங்ககிட்ட சொன்னாகூட உங்களுக்கு கேலியா படும். நீங்க மனசுக்குள்ள என் புருஷனை கேலியா நினைக்கற ஒரு வார்த்தையை நான் சொல்லமாட்டேன். அவர் ஞானின்னு ஒருநாள் உலகம் கூப்பிடும். அப்போ நிஜமான சந்தோஷம் உனக்கு வரும். அவர்மேல் எனக்கு ரொம்ப நம்பிக்கை இருக்குப்பா. மத்தவாளுக்கு உதவி செய்யறதுதான் வாழ்க்கைன்னு நினைக்கறவாளை நாம எப்படி தடை பண்றது? காசு வரும்ப்பா. எங்க சத்தியம் இருக்கோ அங்க எல்லாவித சௌகரியமும் இருக்கும். காசு சௌகரியத்துக்குதானேப்பா? அது தானா வரும். கவலைப் படாதே. அவர் அஞ்சாயிரம் ரூபா கொண்டுவந்தா போதும். அதுல நான் குடித்தனம் பண்ணுவேன். அவருக்கு அடிப்படையான வசதிகள் இருக்குப்பா. அந்த வசதியை நீங்க ஏற்படுத்தி கொடுத்திருக்கேள். அந்த மாதிரியான வசதிகள் இருக்கறவா இன்னும் வெறுமன வசதிகளை பெருக்கறதுல என்ன லாபம்? நாராயணசாமி சித்தப்பா எப்படி பயங்கரமா தோத்துப் போனார்? வெறும் வசதியாவே இருக்கறதவிட மத்தவாளுக்காக வாழறபோது, அதுல ஒரு பெரிய பெருமை இருக்குப்பா. ரொம்ப நிம்மதி இருக்கு. எங்காத்துக்காரர் பெரிய மனுஷர்ப்பா. அவரை வேட்டையாடச் சொல்லாதீங்கோ."

சந்திரசேகர் திகைத்துப் போய் உட்கார்ந்திருந்தார். அவருடைய மனைவி டபரா டம்ளரில் காபி கொண்டு வந்து அவருக்கு அருகே வைத்தாள். அவரைப் பார்த்துவிட்டு மெல்ல திரும்பினாள். மறுபடியும் அவருக்கு அருகே வந்தாள்.



"என்ன... ஏன் இப்படி ஹான்னு உட்கார்ந்திருக்கேள்?" காதோரம் கிசுகிசுப்பாய் கேட்டாள்.

"ஒண்ணும் புரியலைடி. வாழ்க்கை இத்தனை வருஷத்துக்கு அப்புறமும் எதுவும் தெரியலை. எது சரியான வழி, எப்படி வாழணும், அதை தெள்ளத்தெளிவா ஒரே கோடா சொல்றதுக்கு இத்தனை வயசாகியும் முடியலை."

"ஏன் தெரியலை... எனக்குத் தெரிஞ்சுடுத்து."

"என்ன... என்ன... சொல்லு."

"ராஜா மெச்சினதே ரம்பா. நாம நினைக்கறது சரியா வந்தா நல்ல வாழ்க்கை, வரலைன்னா கெட்ட வாழ்க்கை."

"புரியலையே."

"திருடி சம்பாதிக்கணும். இன்னிக்கு நிறைய திருடிட்டோம்னா அந்த வாழ்க்கை நல்ல வாழ்க்கை. திருட்டு கிடைக்கலை... பிடிச்சு அடிச்சிட்டான்... அப்படின்னா மோசமான வாழ்க்கை. இன்னிக்கு நன்னா உழைச்சு நிறைய சம்பாதிக்கணும்னு நினைக்கறது நல்ல வாழ்க்கை. கிடைக்கலையா கெட்ட வாழ்க்கை. நாம எதை வாழ்க்கைன்னு நினைக்கறோமோ, அதில எது நல்லதோ, அது கிடைத்தால் நல்லது. மனுஷாளுடைய மனசை பொறுத்துதான் வாழ்க்கை இருக்கு. அவருடைய விருப்பத்திற்கேற்பதான் நல்லதும் கெட்டதும் பொருந்தும். ஆடு பார்த்தவுடனே பிராணியா தோணும் ஒருத்தனுக்கு. கறியா தோணும் இன்னொருத்தனுக்கு. ரெண்டு பார்வையும் பார்வைதான். எது சரி? எது தப்பு? அதனாலதான் நீங்க சொல்றா மாதிரி ஒரேயொரு கோடா வாழ்க்கையை நான் வேறவிதமா யோசனை பண்ணி வச்சுருக்கேன்."

"என்ன?"

"இங்க எல்லாமும் சரி. இங்க நடக்கற அத்தனை விஷயமும் சரி. லஞ்சம் வாங்கட்டும். அப்போதான் லஞ்சம் வாங்காத உண்மையா இருக்கறவனுடைய மகிமை தெரியவரும். லஞ்சம் வாங்கி... லஞ்சம் வாங்கி அவன் வாழ்க்கை வீணா

போறபோது, லஞ்சம் வாங்கக்கூடாதுன்றது இன்னும் தெளிவா தெரியும். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.இன்னிக்கு ரெண்டு குழி வெட்டிட்டு எட்டு குழி வெட்டினேன்னு ஒரு காண்ட்ராக்டர் அரசாங்கத்தை ஏமாத்தினா அவன் வீட்டுக் குள்ள மிச்சம் ஆறு குழியையும் வேற யாரோ வெட்டுவா. இந்த அடிப்படையான விஷயம் தப்பறதேயில்லை. நம்ம கண்ணுக்கு தெரியறதும் இல்லை. ஏமாத்தி சம்பாதிச்ச அத் தனை பேரும் அலறித்தான் சாகறான். நிம்மதியில்லாம பயத்தோடதான் சாகறான். மாப்பிள்ளை பாருங்கோ, இந்த வேலையை உதறிட்டு ஜனங்களுக்கு உதவி செய்யணும்னு ஒரு வேலையை எடுத்துண்டிருக்காரே, அப்படி எடுத்த ஒரு முடிவுக்கு வந்தவுடனேயே அவர் முகம் மாறிப்போச்சு. பெண்மை கலந்த ஒரு அழகு, ஒரு அமைதி அவருக்கு வந்துடுத்து. ஏமாத்தறவன் கண்ல எப்போவும் ஒரு பயம் இருக்கும். உங்க தம்பி கண்ல இருந்தது. மாப்பிள்ளைய பாருங்கோ. அந்தக் கண்ல பயமேயில்லை. யாரைப் பார்த் தாலும் அந்தக் கண்ணு சிரிக்கறது. ஸ்நேகமா இருக்கு. கண் ணுலயே இத்தனை அழகிய தன்மை இருந்தா அந்த நெஞ்சுக் குள்ள எவ்வளவு அழகிய தன்மை இருக்கும்? எவ்வளவு நிம்மதி இருக்கும்? எனக்கு என்ன தெரியுமா ஆசை, இந்த ஒரு குழந்தையோட நிறுத்திடாத, மாப்பிள்ளை இன்னொரு குழந்தை பெத்துக்கணும்."

"ஏன்?"

"இந்த மனோநிலையில நம்ம பெண்ணோட அவர் கூடி இன்னொரு குழந்தை பெத்தா அந்தக் குழந்தை ரொம்பப் பிரமாதமா வரும். நம்ம பொண்ணு திடீர்னு ஒரு வார்த்தை சொன்னா காசு வேட்டைன்னு ஆச்சரியமா இருந்தது. இவளுக்கு எங்கேயிருந்து இந்த வார்த்தை கிடைச்சுதுன்னு... காசுவேட்டையாடப்படாது. காசை துரத்தி துரத்தி வளைச்சுப் பிடிச்சா ஒரு காலகட்டத்துல அது திரும்பி நின்னு வயித்துக் குள்ளதான் கொம்பை சொருகிடும். சுத்தி யாருமே இல்லாத சாகும்படியா ஆகும். காசு, தானா வந்து விழணும். யாசகமா வந்து விழணும். உலகத்துல இருக்கற பிராணிகள்தான் வேட் டையாடும், பசிக்காக, சாப்பாடுக்காக, உயிர் வாழ்றதுக்காக. நாலு பேர்கிட்ட அலட்டிக்கறதுக்காக யாராவது வேட்டையாடு வாளா? சாப்பாடு தவிர மற்ற விஷயத்திற்கு இந்த ஜனங்கள் பண்ற கூத்து இருக்கே. அநியாயமா இருக்கு.அதான் ஒரு புலவன் பாடியிருக்கான். காசா லேசான்னு."



"என்னன்னு புரியலையே."

"காசு என்ன லேசான விஷயமா? அப்படியும் அர்த்தம். காசாலே... சா... காசால செத்துப்போ அப்படின்னும் அர்த்தம்."

மனைவி சொல்ல சந்திரசேகர் கைகொட்டிச் சிரித்தார்.

காசு தேடி காசாலேயே செத்துப்போவது. இதுதான் மரணம். பாவத்தின் சம்பளமான மரணம். காசு, காசு என்று அலைந்து உணர்வுகளை பலி கொடுக்கிறவர்களுக்கு முடிவு கள் வேறு விதமாகத்தான் இருக்கும்.

சட்டென்று சந்திரசேகருக்கு எல்லாம் புரிந்ததுபோல் ஆயிற்று.

(சுபம்)

## அவரும் அவளும்

### 1

மழைமேகம் திரண்டு கருவூரை சுற்றி வளைத்துக் கொண்டது. புழுக்கம் அதிகரித்ததால் பறவைகள் எம்பி எம்பி பறந்து இடம் மாறி உட்கார்ந்து இடையறாது ஓசை எழுப்பிக் கொண்டிருந்தன.

எந்த திசையில் சுற்றினாலும் ஒரு வெக்கை இருந்தது. எல்லா மனிதர்களிடமும் ஒரு அலுப்பும் கோபமும் மாறி மாறி ஏற்பட்டன.

மேகங்கள் தரைக்கு இழுக்கப்பட்டன. இன்னும் நெருங்கி வந்து கருவூரை உற்றுப் பார்த்தன. வீடுகளில் துணிகளை எடுப்பதும், உலர வைத்த தானியங்களை வாரி சேமிப்பதுமான காரியங்கள் துரிதமாக நடைபெற்றன. தள்ளு வண்டிக்காரர்கள் குறிப்பிட்ட இடத்தை சீக்கிரம் அடைந்து விட வேண்டுமென்று விரைவது தெரிந்தது. மழை வரும் முன்னே மக்கள் பதுங்கிக் கொண்டார்கள். எதிர் வீட்டுப் பக்கமிருந்த குழந்தைகள் மழை வேண்டுமென்று உரத்த குரலில் மழையை அழைத்து பாடத் துவங்கின.

மரங்களுக்கு மிகுந்த சந்தோஷம் என்று அதன் அசைவுகளில் தெரிந்தது. சுவரோரம் எறும்புகள் தலைதெறிக்கிற வேகத்தில் எங்கோ நகர்ந்து கொண்டிருந்தன.



சட்டென்று ஒரு காற்று சுழன்று எழுந்தது. தெருவில் தூசி ஒரு கம்பம் போல் நகர்ந்தது. வேகமாக நகரும் கம்பத்தை மக்கள் பயத்தோடு வேடிக்கை பார்த்தார்கள். காகிதம், இலை, பிளாஸ்டிக் பை என்று பலதும் அந்த கம்பத்தில் சுழன்று எழுந்தன. சட்டென்று அந்த சுழல் ஒடிந்து கீழே விழுந்து அங்கிருந்த குப்பைகள் எல்லாமும் வேகமாக நாலா பக்கமும் அலையத் துவங்கின. காற்று தரையில் மோதி உயர எழும்புவதை குப்பைகள் மூலம் அறிந்து கொள்ள முடிந்தது. இடது பக்கமாக ஓடின குப்பைகள் எல்லாம் சட்டென்று வலது பக்கமாக ஓடி வரத் துவங்கின.

"கலைக்குது, கலைக்குது காத்து கலைக்குது" யாரோ கத்தினார்கள்.

மாணிக்கவல்லி மேலே பார்த்தாள்.

மேகங்களெல்லாம் அசைந்து அசைந்து ஆடின. என்ன செய்வது என்று தெரியாத கும்பல் போல இடதும் வலதுமான சிறிய ஆட்டம் இருந்தன. மேகங்கள் கிழக்கு பக்கம் நோக்கி வேகமாக நகரத் துவங்கின.

அடுத்த பத்து நிமிடத்தில் பளிச்சென்று வெய்யில் வந்து விட்டது. காற்று மிதமாக வீசியது.

ஜனங்கள் தெருவில் வந்து வானத்தை அண்ணாந்து பார்த்தார்கள்.

"அடிச்சு மழை பெய்ஞ்சு ஊரே நனையப் போகுதுன்னு நினைச்சேன் என்னா... டப்புனு காணாமப் போயிடுச்சே."

ஒரு கிழவி முகவாயில் கை வைத்துக்கொண்டு பேசினாள்.

அவள் பேசிய வார்த்தைதான் எல்லோர் மனதிலும் எதிரொலித்தது. எல்லோர் வார்த்தையாகவும் இருந்தது.

"அப்போ மழை வராதா?"

குதித்து மழை வரவேற்றுப் பாடிய குழந்தைகள் திகைத்துப் போய்க் கேட்டன.

மறுபடியும் தெருவில் ஜன நடமாட்டம் அதிகரித்தது. தள்ளு வண்டிகள் கரகரத்த சப்தத்துடன் நகர்ந்தன. மறுபடியும் கொடியில் துணிகளை உலர்த்த ஆரம்பித்தார்கள்.

முற்றத்தில் இருந்த தூசு ஹாலுக்கு வந்ததால் கால்களிலெல்லாம் மண் ஒட்டியது.

மாணிக்கவல்லி துடைப்பம் எடுத்து பெருக்க ஆரம்பித்தாள். ஒரு பக்கம் சுவரும் மறுபக்கம் இரண்டு உயர்ந்த தூண்களுமாய் அந்த கூடம் இருந்தது. பெருக்கிய பிறகு ஈரத்துணி போட்டு, கூடத்தை மாணிக்கவல்லி சுத்தம் செய்தாள். தூண்களைத் துடைத்தாள். ஷோகேஸில் படிந்திருந்த தூசுகளையும் அகற்றினாள். ஊதுவத்தி ஏற்றி வைத்தாள்.

கூடத்தின் ஒரு ஓரத்தில் ஒரு ஜாண் உயரத்திற்கு தேக்குக் கட்டில் போடப்பட்டிருந்தது. இரண்டு பக்கமும் அதற்கு சாய்ந்து கொள்ள பலகைகள் எழுப்பப்பட்டிருந்தன. பலகை இல்லாமலும் சுவரோரம் கூட சாய்ந்து கொள்ளலாம்.

மாணிக்கவல்லி படுக்கையில்லாமல், இன்னொரு மனைப் பலகை வைத்து அதில் படுத்துக் கொள்வது வழக்கம். பல சமயங்களில் உட்கார்ந்து கொள்ளவும் சாய்ந்து கொள்ளவும் அந்தக் கட்டிலையே அவள் நாற்காலியாக பயன்படுத்தினாள்.

சுவர் முழுவதும் சற்று நிறம் குறைந்த வெள்ளை பெயிண்ட் அடிக்கப்பட்டு, அங்கே அரக்கு பார்டர் கொடுக்கப்பட்டிருந்தது. அதே போல உத்திரத்திற்கு அருகேயும் ஹால் சுற்றி அரக்கு பார்டர் இருந்தது. அது பார்வை அசைவுக்கு ஒரு வெள்ளை வேட்டியை சுற்றிலும் விரித்தாற் போல இருக்கும். படங்கள் எதுவும் இல்லாமல் இருப்பதுதான் மாணிக்கவல்லிக்கு பிடித்த விஷயம். கூடத்தை ஒட்டிய பூஜையறையில் ஒரு தாமிர முக்காலி இருந்தது. அதன் மீது மாணிக்கவல்லி மரகத சிவலிங்கம் வைத்திருந்தாள். அதன் மீது பூச்



சொறிந்திருந்தாள். ஒரு மல்லிகைச் சரத்தை மாலையாகப் போட்டிருந்தாள். திரும்பி அந்த மரகதலிங்கத்தைப் பார்த்து மெல்ல மாணிக்கவல்லி சிரித்தாள்.

"என்ன மழையை நிப்பாட்டிட்டீரு."

கட்டிலில் உட்கார்ந்தவாறே பூஜையறையில் இருக்கின்ற மரகதலிங்கம் பார்த்துக் கேட்டாள்.

மரகதலிங்கம் அசையாமல் இருந்தது.

ஆனால், உள்ளுக்குள் வார்த்தை தோன்றின.

"இந்த ஊர்ல என்னத்துக்கு மழை?"

"ஏன் எதுக்கு இவ்வளவு அலுப்பா சொல்றீங்க?"

மாணிக்கவல்லி மிக அன்போடு அந்த மரகதலிங்கம் பார்த்துக் கேட்டாள். மறுபடியும் உள்ளுக்குள் வார்த்தைகள் கிளம்பின.

"இந்த ஊர் நல்லாயில்லை. தப்பு. இங்க மழை தேவையில்லை அப்படின்னு பட்டுது அதான்."

"எதுக்கு கோவிச்சுக்கறீங்க. நீங்க கோவிச்சுகிட்டா இந்த ஊர் தாங்குமா? ஊருன்னா நல்லது கெட்டது இருக்கும். எல்லாத்தையும் பொறுத்துகிட்டு போய் கொடுக்க வேண்டியதை கொடுக்க வேண்டாமா?"

"எனக்கு கொடுக்க மனசில்லை."

"அப்படி சொல்லக்கூடாது. இது தப்பு, அப்படின்னு சுட்டிக் காட்டணும். என்ன தப்புன்னு சொல்லுங்க. நான் சரி பண்ணறேன்."

"உன்னால சரி பண்ண முடியாது. இந்த ஊர் மோசமான ஊர்."

"அப்படித்தான் இருக்கும். பெரியவங்க பொறுத்துகிட்டு போகணும்."

மாணிக்கவல்லி மரகதலிங்கத்தைப் பார்த்து மறுபடியும் பேசினாள்.

மரகதலிங்கம் பதில் சொல்லாதிருந்தது.

"என்ன தப்பு சொல்லுங்க. நான் சரி பண்றேன்."

"உன் வேலை அது இல்லை."

"தெரியும். ஆனா, நீங்க கோவிச்சுட்டிருக்கும்போது என்னால பார்த்துகிட்டிருக்க முடியுமா? நான் ஏதாவது சரி பண்ணணுமில்லை."

"உன் வேலை இது இல்லை."

"எது... எது என் வேலை?"

உடனடியாக மாணிக்கவல்லி கேட்டாள்.

"சொல்றேன். சொல்லும்போது செய்" என்று சற்று அதட்டலான குரலில் உள்ளுக்குள் வார்த்தைகள் தோன்றின.

அவள் அடங்கிப் போனாள்.

"மறுபடியும் தனக்குத்தானே பேச ஆரம்பிச்சுட்டியா? மேல வந்து கூடமாட உதவி செய்யக்கூடாதா. இந்த கட்டில்லயே உட்கார்ந்து பேசிகிட்டிருக்கியே."

அண்ணி உரத்த குரலில் கத்திக்கொண்டே உள்ளே நுழைந்தாள்.

"மேல அப்படியே தூசு வந்து அடைஞ்சுப் போச்சு. வா, வந்து பெருக்கு. கண்ணாடி மேல எல்லாம் தூசு. வா" என்று அவளை அதட்டி அழைத்தாள்.

மாணிக்கவல்லி எழுந்து பூஜையறை கதவைச் சார்த்தி அந்த நாதங்கியில் ஒரு கொக்கியைப் போட்டு கூடத்தைத் தாண்டி மாடிக்கு படியேறினாள்.

"இந்த இடம் பெருக்க வேணாமா?"

கூடம் பார்த்துக் கேட்டாள்.

"இப்போதான் பெருக்கினேன்."



மாணிக்கவல்லி பதில் சொன்னாள்.

"படுக்கற இடமா இவ்வளவு தூசா இருக்கு? இன்னொரு தடவை பெருக்கி துடைக்க வேண்டியதுதானே."

"நான் பெருக்கி துடைச்சுட்டேன். காத்து அடிச்சுகிட்டே இருக்குல்ல. தூசு வரத்தான்செய்யும்."

அவள் பதிலுக்குக் காத்திராமல், மாணிக்கவல்லி மேலே போனாள்.

அங்கிருந்த துடைப்பத்தை எடுத்து வீடு முழுவதும் சுத்தம் செய்ய ஆரம்பித்தாள்.

தன் மனைவி, தன் தங்கையை மேலே வரச் செய்ததும், மேலே வந்த தன் தங்கை நிதானமாக வீடு கூட்டுவதும் பார்த்து விட்டு மாணிக்கவல்லியின் அண்ணனுக்கு துக்கம் ஏற்பட்டது.

அவர் பேப்பரை மடித்து வைத்து விட்டு நான் வேணா எதுனா உதவி செய்யட்டுமா?'' என்று வந்து நின்றார்.

மாணிக்கவல்லி ஏறிட்டுப் பார்த்துவிட்டு பதிலே சொல்லாமல் தொடர்ந்து பெருக்க ஆரம்பித்தாள்.

அண்ணி மாணிக்கவல்லியை ஏவும் போதெல்லாம் அண்ணனுக்கு வலிக்கிறது. அண்ணன் உடனடியாக அதைத் தடுக்க முடியாமல், மனைவியை அதட்ட முடியாமல் வேறு வழியை பின்பற்றுகிறார். நான் உதவி செய்கிறேனே என்று ஒப்புக்காகவேணும் மாணிக்கவல்லிக்கு அருகே வந்து நின்றார். ஆனால், அவர் உதவி செய்ய முயற்சிப்பதையும் முழுமையாக செய்வதில்லை; மனசாரச் செய்ததில்லை. இரண்டு நாற்காலிகளை நகர்த்தி வைத்துவிட்டு இடுப்பு நோவு என்று பேச ஆரம்பிப்பார். பரணிலிருந்து சாமான்கள் எடுக்கும்போது ஒரேயொரு பெட்டியை வாங்கி விட்டு பிறகு தும்மியபடியே தொலைதூரம் போய் நின்று விடுவார்.

எனக்கு ஆவலை இந்த வேலை என்று விலகி விடுவார்.

கீழேயுள்ள கூடத்தை விட மாடியில் தூசு அதிகமாக இருந்தது. மின் விசிறியை நிறுத்திவிட்டு வேகமாகப் பெருக்கி கண்ணாடிகளைத் துடைத்து மறுபடியும் இன்னொரு முறை பெருக்கி கூடைக்குள் போட்டு விட்டு, நீர் பிடித்து ஈரத் துணியை உள்ளே அழுத்தி பிழிந்து கூரை முழுவதும் மறுபடியும் துடைத்து, நாற்காலிகளையும், சோஃபாவின் மரப்பிடிகளையும் துடைக்க வீடு பளிச்சென்று ஆகியது.

"பங்கஜம் ரொம்ப கஷ்டப்படுத்துதா உன்னை."

அண்ணா திடீரென்று கேட்டார்.

"இல்லியே ஒண்ணும் சொல்றதே இல்லியே. எதுக்கு திடீர்னு கேட்கறீங்க?"

"இல்லைம்மா சும்மா நீதான் பெருக்கிட்டிருக்க. காத்து அடிச்சா தூசு வரும். தூசு வந்தா நீதான் பெருக்கணுமா? அவ பெருக்கக்கூடாதா?"

"சரி, அண்ணிக்கு ஆயிரம் வேலை. யாராவது ஒருத்தர் பெருக்கணும். யார் பெருக்கினா என்ன? எனக்கொண்ணும் வேற வேலையில்லையே, அதனால பெருக்கறேன்."

"இல்லை. உன்னை ஏவி வேலை செய்யறபோது எனக்கு ரொம்ப வருத்தமாயிருக்கு. நான் ஏதாவது சொன்னா பெருசா சண்டை வரும்."

"சொல்லாதீங்க. தெரியுது இல்ல. நாலஞ்சு தடவை சண்டை போட்டு அசிங்கமாயிடுச்சு இல்ல. அப்புறம் திரும்பத் திரும்ப அதையே பண்ணுவானேன்?"

"இல்லை. நீ பெருக்கறது கஷ்டமா இருக்கே."

"நான் பெருக்கறதுல ஒண்ணும் குறைவு வந்துடாது. எனக்குன்னு என்ன வேலை? பெருக்கறது, துடைக்கறது இதானே, செய்துட்டுப் போறேன்."

மாணிக்கவல்லி சாதாரணமாகச் சொன்னாள்.



அண்ணனுக்கு ஏன் வலிக்கிறதென்று அவளுக்கு தெள்ளத் தெளிவாகப் புரிந்தது. உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள்.

மாணிக்கவல்லிக்கு நாற்பது வயது முடிந்து நாற்பத்தோராவது வயது நடந்து கொண்டிருக்கிறது. ஆனால், திருமணமாகவில்லை.

அண்ணனுக்கு ஐம்பது வயது. திருமணமாகி பருவ வயதில் ஒரு பெண்ணும், நல்ல வாலிபனாய் ஒரு பையனும் இருக்கிறார்கள்.

அண்ணனுக்கு பெரிய சம்பாத்தியம் இல்லை. சாதாரண அரசு உத்தியோகம். வீட்டிற்கு ஆறாயிரம் ரூபாய் கொண்டு வருகிறார். இந்த இரண்டு குழந்தைகளை வளர்த்திருக்கவே முடியாது. இப்பொழுது இருக்கிற வீடு மாணிக்கவல்லிக்கு அவள் அம்மா எழுதிக் கொடுத்த வீடு. கீழும் மாடியுமாக இரண்டாயிரத்து ஐந்நூறு சதுர அடி வீட்டை அண்ணன் அனுபவித்து வந்தான்.

"இதுக்கு வாடகை கொடுத்துடறேன். சும்மா எனக்கு வேணாம்" என்று சொல்லி அவளுக்கு ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் வாடகை கொடுத்து வந்தார். மாடிக்கு மட்டுமே நாலாயிரம் ரூபாய் வாடகை கிடைக்கும். கீழே கடை போன்ற இடம் கட்டி வாடகைக்கு விட்டால் பத்தாயிரம் பன்னிரண்டாயிரம் கூட வாடகை வாங்கி விடலாம்.

ஆனால், கீழ் போர்ஷன் முழுவதும் மாணிக்கவல்லி உபயோகப்படுத்திக்கொள்ள, மாடியில் இரண்டு படுக்கையறையும், ஒரு ஹாலும், ஒரு பெரிய சமையல் அறையும் வராண்டாவும் திறந்தவெளி முற்றமுமாக அண்ணன் அனுபவித்து வந்தார். இதைத் தவிர இந்த வீட்டிற்கு பின்னால் இருக்கிற கொல்லைப்புறத்தில் மூன்று வீடுகள் கட்டி மூன்று வீடுகளும் வாடகைக்கு விடப்பட்டிருந்தன. அந்த ஓட்டு வீட்டு வாடகையும் அண்ணனுக்கேதான் போயிற்று.

அந்த வீட்டுக்கு அருகே இருக்கின்ற ஒரு காலி மனையில் ஆஸ்பெஸ்டாஸ் கூரை போட்டு தறி வைத்திருந்தார்கள். அந்தத் தறி கடைக்காரர்களும் நல்ல வாடகை கொடுத்தார்கள். அந்த தறிக்கடைக்காரர் கொடுக்கிற வாடகை மகள் திருமணத்திற்கு என்று அண்ணன் சேமித்து வந்தார். அதை சேமிப்பாக வைத்துக் கொள்ளட்டுமா என்று மாணிக்கவல்லியை கேட்டுத்தான் செய்தார்.

இன்று அண்ணன் அனுபவிக்கின்ற அத்தனை சௌகரியங்களும், கம்பீரங்களும் மாணிக்கவல்லியின் தயவால் கிடைத்தவை. இது அண்ணனுக்கு நன்கு தெரியும். அண்ணிக்கும் தெரியும். ஆனால், அண்ணி மனதளவில் எடுத்துக் கொள்ளாது சும்மாதானே இருக்க, செய்யேன் என்று மாணிக்கவல்லியை வேலை வாங்க முற்படுவாள்.

ஒரு நாத்தனார் இப்படி இருக்கறபோது என் பொண்ணு கல்யாணத்துக்கு கேள்வி வராதா? ஏன் உன் நாத்தனாருக்கு கல்யாணம் ஆகலை. ஏதாவது நோயான்னு கேட்டா நான் என்னா பதில் சொல்லுவேன்? காலாகாலத்துல கல்யாணம் பண்ணிண்டு போகாத இப்படி இருந்து எல்லாரையும் கஷ்டப்படுத்துதே என்று அக்கம் பக்கம் பேசுவது மாணிக்கவல்லியின் காதிற்கு வந்தது.

"அவளா பண்ணிக்கமாட்டேன்னு சொன்னா, நியாயமா உங்க வீட்டுக்காருதான் பார்த்து செய்திருக்கணும். செய்யாத விட்டுட்டாரு" என்று ஒரு கிழவி பேச, அந்தக் கிழவியோடு அண்ணி அப்புறம் பேசுவதில்லை.

அண்ணி கெட்டவளல்ல. அது ஒரு விதமான பயம். குற்ற உணர்வு. நாற்பது வயது நாத்தனார் திருமணமாகாமல் நிற்கதான் இன்னும் கணவரோடு கட்டிக் கொண்டாடி கொஞ்சிக் கொண்டிருக்கிறோமே என்கிற அருவருப்பு.

புருஷன் தன்னைவிட தன் தங்கையை அதிகம் கொண்டாடுகிற பொழுது ஏற்படுகின்ற அலுப்பு, சலிப்பு.



"எங்கக்கா பார்க்கலியா? எங்கம்மா பார்க்கலியா? அவங்களும் குடித்தனம் கட்டி நல்லபடியாத்தான் இருக்காங்க. அவங்களுக்கும் நாத்தனார் இருக்கத்தான் செய்யறாங்க. அந்த நாத்தனார் பிள்ளைப்பேறுக்கு வரபோது, விசேஷத்துக்கு வரபோது உட்காரவச்சு நாங்க சீராட்டத்தான் செய்யறோம். ஏன் உங்க நாத்தனாருக்கு கல்யாணம் ஆகலைன்னு என்னைத் தானே கேட்கறாங்க."

அவ்வப்போது அண்ணி அலுத்துக் கொள்வாள்.

தான் விரட்டினாலாவது தனக்குப் பயந்து இவள் திருமணம் என்று ஆசைப்படமாட்டாளா? இவள் திருமணம் என்று வேறெங்கேனும் போகமாட்டாளா என்று ஒரு அல்பத்தனமான நப்பாசையும் அவளிடமிருந்தது.

"ஏன் சும்மா நிக்கற? பெருக்கேன்" என்று பெருக்கிய வீட்டைக் காட்டி உத்தரவிடுவாள்.

"என்னால சமைக்க முடியாது. நீ ஏதாவது சமைக்கறியா?" என்று கேட்பாள்.

ஆனால், புருஷன் வக்கணையாக சாப்பிடுகிறவன் என்று ஞாபகத்திற்கு வந்துவிடும். பாதி சமையலில் எட்டிப் பார்ப்பாள்.

வேணாம்... வேணாம் நீ பண்ணா அவ்வளவு ருசிக்காது. அவரு கோபப்படுவாரு. நானே சமைக்கறேன். நீ போ. நல்ல வேளை உனக்கு கல்யாணமாகலை. கல்யாணமாகி குடித்தனத்துக்கு போயிருந்த உன் சமையலுக்கு நாறிப்போயிருப்ப என்று எகத்தாளமாகப் பேசுவாள்.

ஆனால், அண்ணனின் குழந்தைகள் இத்தனை கடுமையாக இருக்கமாட்டார்கள்.

மாலையில் தேவாரம், திருவாசகம் படிக்கிறபொழுது வந்து அருகே உட்கார்ந்து கொள்வார்கள். எல்லோருக்கும் புத்தகம்

வாங்கிக் கொடுக்க அவர்களும் அவள் பாடுவதிற்கு பின்னாலேயே பாடிக் கொண்டிருப்பார்கள்.

இன்னிக்கு பரீட்சை. ஒன்றுமே படிக்கலை. கைகாலெல்லாம் உதறுது. ராத்திரி தூக்கமே இல்லை. எப்படி பண்ணப் போறேன்னே தெரியலை. நீங்கதான் எனக்காக பிரேயர் பண்ணணும். அண்ணனின் மகன் காலில் விழுவான். அவன் தலையைத் தடவி சிறிது நேரம் மௌனமாக இருந்து, "நல்லா பண்ணுவ. ஒண்ணு பண்றியா? இப்போ மணி என்னா ஏழு. ஏழுலேர்ந்து எட்டரை வரைக்கும் எதுனா படி. மாத்தி மாத்தி படி. நீ என்னா படிக்கறியோ அதான் கேள்வியா வரும்" சரியென்று ஆவலாக ஓடுவான்.

ஏழிலிருந்து எட்டரை வரைக்கும் படித்து விட்டு குளித்து விட்டு, சாப்பிட்டு விட்டு பள்ளிக்கூடம் போவான். பிற்பகலில் பிசாசு மாதிரி உள்ளே நுழைவான்.

"கரெக்டா சொன்னீங்க. கரெக்டா சொன்னீங்க. காலையில என்ன படிச்சேனோ அதான் கேள்வியா வந்தது. எல்லாக் கேள்வியும் கரெக்டா எழுதிட்டேன். என்னாடா இவ்வளவு வேகமாக எழுதறேன்னு பக்கத்துல இருக்கறவனே கேட்டான். எல்லாம் ஈசியாதாண்டா இருக்கு அப்படின்னு சொன்னேன். நான் ஈசியா இருக்குன்னு சொன்னது எல்லாருக்கும் பரவிடுச்சு. எல்லாரும் டஃப்புனு சொல்றாங்க. எனக்கு மட்டும் ஈசியா இருந்தது. அத்தை உங்களாலதான்."

மறுபடியும் பாதம் பணிவான்.

எதனால் என்று மாணிக்கவல்லிக்கு தெரியவில்லை. ஆனால், மிகுந்த சந்தோஷத்துடன் அவள் மரகதலிங்கத்தை நோக்கி கைகூப்புவாள். மிக்க நன்றி, மிக்க நன்றி என்பாள்.

அண்ணனின் மகளுக்கு கைவேலைகளில் ஈடுபாடு.

"இவ்வளவு அழகா ஒரு பூஜையறை வச்சுருக்கீங்க. கோயில் மாதிரி இருக்கு. இதுக்கு ஸ்க்ரீன் வேணாமா? நான் தைச்சுத்தறேன்" என்று அவள் சொல்வாள்.



மாணிக்கவல்லிக்கு அருகே உட்கார்ந்து ஊரில் இருக்கிற பலபேருடைய வாழ்க்கையைப் பற்றி விவரமாகச் சொல்லிக் கொண்டே ஸ்கிரீனில் பூ வேலைகளை செய்து கொண்டிருப்பாள்.

வெள்ளைத் துணியில் நீளநீளமாக வெட்டி நமசிவாய நமசிவாய என்று சக்கரமாக எழுதிக் கொடுப்பாள்.

எந்தப் பக்கத்திலிருந்து படித்தாலும் நமசிவாய என்று படிக்கும்படியாக இருக்கும்.

"ஒரு புஸ்தகத்துல படிச்சேன். ஒரு வீட்ல கோயில் மாதிரி இருக்கணும்னா மேல விதானம் இருக்கணுமாம். ஸ்க்ரீன் தைச்சா மாதிரி, விதானம் தைச்சா என்ன? விதானம் தைக்கத் தெரியுமா?"

மாணிக்கவல்லி கேட்டாள்.

"தெரியாது. தெரிஞ்சுகிட்டா போச்சு. நீங்க சொல்றா மாதிரி ரெண்டு பேரும் விழுந்து கும்பிட்டு நல்ல விதானம் ஒண்ணு தைச்சு தரணும்னு வேண்டிப்போம். வராதா என்ன?"

"அற்புதமாக வரும்."

அந்தப் பெண் விதம் விதமாகக் கணக்குப் போட்டு யோசித்து தைத்து, தைத்ததை பிரித்து மறுபடியும் தைத்து, பத்து நாள்களில் ஒரு பெரிய விதானம் தயார் செய்து அதை மேலே இறுக்கக் கட்ட விதானத்திற்கு மேலே ஒரு நூறு வாட்ஸ் பல்பு போட, பல்புக்கு மூன்றடி கீழேயிருந்த அந்த விதானம் நீல நிறத்தில் மிளிர்ந்தது. அறை முழுவதும் நீலமாகிற்று. சொர்க்கம் போல ஒரு தோற்றத்தை ஏற்படுத்தியது. சிகப்பு இருக்கிற பக்கங்களெல்லாம் சிகப்பு நிறம் டாலடித்தது. மஞ்சள் இருக்கும் பக்கங்களெல்லாம் மஞ்சள் பொங்கி வழிந்தது. நீலம் இருக்கும் பக்கங்களெல்லாம் அடர்த்தியாக நீலம் இறங்கியது.

அவர்களையும் மீறி அவர்களுடைய கணக்குகளையும் தாண்டி மிக அழகாக தானாகவே அந்த விதானம் அமைந்து கொண்டது.

வீட்டிற்கு வருபவர்கள் ஒரு நிமிடம் நின்று மெய் மறந்து பார்த்து விட்டுப் போவார்கள்.

என்னமோ செய்யுது இந்த இடம் என்று உடம்பை சிலிர்த்துக்கொண்டு நமஸ்கரித்துவிட்டுப் போவார்கள்.

"இது மாதிரி நம்ம வீட்டுக்கு ஒண்ணு பண்ணேண்டி" என்று அண்ணி கேட்டபோது அவளுடைய மகள் தோளைக் குலுக்கி முடியாது என்று சொல்லிவிட்டாள்.

"ஏண்டி நம்ம வீட்டுக்குன்னா ஆவாதா?"

"நானா பண்ணேன். அது என்னமோ தானா அமைஞ்சுது. அத்தை பக்கத்துல உட்கார்ந்து இதை வச்சுக்கோ இதை வச்சுக் கோன்னு எடுத்து எடுத்து கொடுப்பாங்க. நான் அத்தை கொடுக்கற துணியை ஒண்ணுமே சொல்லாத போட்டேன். பார்த்தா அதுவொரு டிஸைனாவே வந்துடுச்சு. அத்தைக்கே அதுவொரு டிஸைன்னு தெரியாது. இல்ல அத்தை" என்று கேட்க, ஆமாம் என்று மாணிக்கவல்லி தலையாட்டுவாள்.

சரியாக சமைக்கத் தெரியாது. பத்துப் பாத்திரம் தேய்க்க அண்ணன் விடுவதில்லை.

"அதெல்லாம் மாணிக்கவல்லி செய்ய வேண்டாம். பத்தா யிரம் ரூபாய் வீட்டுக்கு ஆயிரத்து ஐந்நூறு ரூபா வாடகை கொடுக்கறோம். அவளுக்கு பத்துப் பாத்திரம் தேய்க்கிற வேலையா கொடுக்கற போடி" என்று சீறுவார்.

துணிகள் துவைப்பதை மாரியம்மாள் என்கிற வேலைக்காரி செய்து விடுவாள். மாரியம்மாளுக்கும் முதுகுப் பிடிப்பு. குனிந்து பெருக்க முடியாது. நின்றவாக்கில் துணிகளை மிஷினில் போட்டு எடுத்து காலரை ப்ரஷ் போட்டுத் தேய்த்து மறுபடியும் துணியை மிஷினிலேயே சுழற்றிவிட்டு பிறகு



எடுத்துக்கொண்டு போய் உலர்த்துவது அவளுடைய வேலை.

பத்துப் பாத்திரம் கூட சமையலறைக்கு அருகேயுள்ள பெரிய வராண்டாவில் வாஷ்பேஷனில் போட்டு நின்றபடியே தேய்த்துக் கொடுத்துவிட்டுப் போய்விடுவாள். மெதுவாக செய்தாலும் வேலை சுத்தமாக இருக்கும். சாப்பாடு கிடைக் கும் என்பதால் லீவு போடமாட்டாள். அவளுக்கும் மாணிக்க வல்லி ஸ்நேகிதம்.

அவளுக்கு வாயு உடம்பு. எட்டி இந்த இடத்துல ஒரு உதை விடேன் என்று மாணிக்கவல்லியை வலதுபக்கத் தொடையை தடவிக் கேட்பாள்.

மாணிக்கவல்லி பட்டென்று வலது கையால் ஓங்கி அதில் அடிக்க, இன்னும் பத்து நிமிஷத்துல சரியாப் போயிடும் பார் என்று அவளே சொல்லிக் கொண்டு போவாள். மாலை வந்து நன்றாக இருந்தது. வலியே இல்லை என்று சொல்வாள்.

"என் பொண்ணு துணிக்கடையில வேலை செய்யுது. நாலாயிரத்து ஐந்நூறு ரூபா சம்பளம். ஆனா, அங்க யாரோ தொந்தரவு பண்றாங்களாம். படுக்க வாடி, படுக்க வாடின்னு அசிங்கமா கூப்பிடறாங்களாம். வந்து அழுவுது. பதில் பேசாம சண்டை போட்டாக்க, கட் பண்றது சரியில்லை. துணியை வேஸ்ட் பண்ற இவளை வேலைலேர்ந்து எடுத்துடணும்னு சொல்லி முதலாளிகிட்ட சொல்றானாம். வேலை செய்யற மத்த ஆளுங்ககிட்ட இது சரியான பொம்பளை இல்லை. கேஸ் அப்படின்றானாம். உன் கையால கொஞ்சம் திருநீறு கொடு. அவ இட்டுகிட்டு போகட்டும்."

ஒரு சிறிய டப்பாவில் விபூதி வாங்கிக் கொண்டு போனாள். ஒரு வாரம் கழித்து அவனுக்கு சிங்கப்பூரில் வேலை கிடைத்துவிட்டது என்று இந்த வேலையை விட்டுவிட்டுப் போய்விட்டான் என்று சொன்னாள்.

37684
5470252

"அவன் செய்யற வேலையை இப்போ இவளே செய்யறாளாம். கூட ஆயிரம் ரூபாய் சம்பளமாம். அதைத் தவிர ரெண்டு பொண்ணுங்களுக்கு கட்டிங் சொல்லித் தராங்களாம். அதுக்கும் சம்பளம் சேர்த்து தரதா முதலாளி சொல்லியிருக்காராம். நீ திருநீறு இட்ட நேரம் நல்லபடியா வரா."

"இந்த வேலையை விட்டுடமாட்டியே" என்று மாணிக்க வல்லி கேட்க, "உன்னை விட்டுட்டு நான் எங்க போவேன். நான் வேலைக்கு வரது துட்டுக்கு இல்லை. உன்னை பார்க்கறதுக்குத்தான்."

அவள் சொன்னது உண்மை என்று அவள் சிரிப்பில் தெரிந்தது.

மாரியம்மாளின் மகளை தொந்தரவு செய்ததும், சிங்கப்பூருக்குப் போய் அங்கு தாக்கு பிடிக்க முடியாமல் மறுபடியும் வந்து இங்கே வேலை கேட்க, அவனை அசிங்கமாகப் பேசி முதலாளி துரத்தி விட்டார்.

"அடிக்கடி போறவனை நம்பி நான் கம்பெனி நடத்த முடியாது. இந்த படியேறி மறுபடி வேலை கேட்கறீங்களே உங்களுக்கு வெட்கமாயில்லை? ஆறாயிரம் ரூபாய் சம்பளம் கொடுத்து கிட்டிருந்தேன். அது வேஸ்ட்டுன்னு இப்போ தெரிஞ்சுபோச்சு. கூட ஆயிரம் ரூபாய்க்கு நீ பண்ற வேலையையும் சேர்த்து இந்தப் பொண்ணு பண்ணுது" என்று சுட்டிக் காட்ட அவன் கைகூப்பி, "நான் பண்ண தப்புக்கு தண்டனை கிடைச்சுடுச்சு. இதுக்கு மேல சோதிக்காத தாயே அப்படின்னு சொல்லிட்டுப் போயிட்டானாம். என் பொண்ணு வந்து, திருநீறுதான் காரணம். திருநீறுதான் காரணம்னு சொல்லுது. இன்னிக்கு சாயந்திரம் வரதும்மா உன்னை பார்க்கறதுக்கு" என்று சொல்வாள்.

பெண் வரும் போது அண்ணனின் மகனும், மகளும் அவளும் உட்கார்ந்து தேவாரம் படித்துக் கொண்டிருந்தார்கள். அவளும் வந்து அருகே உட்கார்ந்து கொண்டாள். அவர்கள்



இப்பொழுது படிக்கிற தேவாரத்தின் முதல் வரியையெல்லாம் எழுதிக்கொண்டாள்.

"எதுக்கு இப்படி எழுதிக்கறே?"

"இங்க நீங்க என்னா படிக்கறீங்களோ அதைத்தான் நான் ஆயுசுபூரா சொல்லப்போறேன். ஆறுபாட்டு தேவாரம் படிச்சீங்க. அந்த ஆறும் நான் எழுதிக்கட்டுமா?"

தரையில் உட்கார்ந்து அந்த ஆறு பாட்டையும் எழுதிக் கொண்டு போனாள்.

மாணிக்கவல்லியை நமஸ்கரித்து விட்டுப் போனாள். அவளுக்கு நல்ல இடத்தில் திருமணம் ஆகும் என்று மாணிக்கவல்லிக்குத் தெரிந்து விட்டது.

மஞ்சற்கிழங்கும், குங்குமமும், ரவிக்கைத் துணியும், வெற்றிலைப் பாக்கும் நூற்றியொரு ரூபாய் பணமும் கொடுத்து அந்தக் குழந்தையை ஆசிர்வதித்தாள்.

இவளுக்கு உடம்பு சரியில்லை, இன்னொருத்தருக்கு வேதனை என்று அந்தப்பெண் எப்போவாவது வந்து திருநீறு வாங்கிக் கொண்டு போகும். ஏதாவது பெண் குழந்தைகளை கூட்டிக்கொண்டு வந்து நிற்கும்.

மாணிக்கவல்லிக்குப் புரியவில்லை.

எதனால் தான் தொடுவதாலும், வழிபடுவதாலும் நல்லன நடக்கிறது என்று புரியவில்லை. தன்னைவிட மரகதலிங்கேஸ்வரர் தனக்கு என்ன செய்ய வேண்டுமென்று நினைத்திருக்கிறார். அவரால்தான் தனக்கு சிறப்பு ஏற்படுகிறதென்று முழுமையாக நம்பினாள். பகல் நேரமும் உட்கார்ந்து அவரோடு பேசிக் கொண்டிருந்தாள்.

மரகதலிங்கேஸ்வரரோடு பேசுவது தவிர அவளுக்கு வேறு எந்த வேலையும் இல்லாமலேயே இருந்தது.

"மாணிக்கவல்லி பார்த்தியா" என்று மாரியம்மாள் உள்ளுக்குள்ளே நுழைந்தாள்.

அவள் நுழைந்த நேரம் வீடு சுத்தமாக பெருக்கப்பட் டிருந்தது-

"திபுதிபுன்னு மேகம் வந்தது. அடிச்சு பெய்யப் போகு துன்னு நினைச்சா எல்லாம் கலைஞ்சுப் போச்சு. எப்படி" என்று ஆச்சரியமாகக் கேட்டாள்.

"பெய்ய வேண்டிய மழை. பெய்ய வேண்டிய நேரத்துல பெய்யலைன்னா என்ன அர்த்தம்?" என்று கூர்மையாகப் பார்த்தபடி கேள்வி கேட்டாள்.

"தெரியலையே. எதுனா காரணம் இருக்கும். இன்னிக்கு பெய்யலைன்னா என்ன நாளைக்குப் பெய்யும். மழை பெய்யா தயே இருந்துடுமா?"

"நான் சொல்றேன்; இந்த ஊர்ல கெட்டவங்க இருக்காங்க."

"மழைக்கு இப்படி எண்ணமில்லை. கெட்டவங்க இருந்தா லும், நல்லவங்க இருந்தாலும் பெய்ய வேண்டிய நேரத்துல மழை நிச்சயமா பெய்யும்."

"போன வருஷம் மழை இல்லையே."

"மழை இருந்தது. நிறைய இல்லை. இந்த வருஷம் சேர்த்து வச்சுப் பெய்யும்."

"அதான் என்ன காரணம்னு கேட்கறேன்."

"தெரியலையே எதுனா காரணம் இருக்கும்."

"நான் என்ன சொல்றேன்னா இந்த ஊர்ல கெட்டவங்க ஜாஸ்தி. மழை பெய்யாது. மத்த எல்லா இடங்களிலும் பெய்ய வேண்டிய மழை கூட இந்தக் கருவூர்ல இருக்காது."

"அப்படிச் சொல்லாத. மறுபடியும் மழை பெய்யும். நல்ல மழை பெய்யும்."

"பெய்யாதது நல்லதுதான். இந்த ஊர்ல விவசாயம் பார்த்து என்ன நடக்கப்போகுது. இந்த ஊர்ல நெசவாளி ஜாஸ்தி. மழை பெய்ஞ்சா நெசவாளிக்கு கஷ்டம். துணி தடிமனா



யிடும். அறுந்து போவும். அதனால வெய்யில் காய்ஞ்சாதான் கருவூருக்கு நல்லது."

"நல்லாயிருக்கே நீ பேசறது. எல்லாருமா துணி வேலை செய்யறாங்க? குடிக்கறதுக்கு தண்ணி வேணாமா? குளிக்கற துக்கு தண்ணி வேணாமா? அதுக்கு எங்க போறது. சமுத்திரத் திலேர்ந்தா மொண்டு கொண்ணாந்து கொடுப்பாங்க" என்று மாரியம்மாள் உரத்த குரலில் அண்ணனோடு சண்டை போட்டாள்.

"என்ன காரணம் இருக்கும்னு சொல்லு" என்று மாணிக்க வல்லியை மறுபடி கேட்டார்.

மாணிக்கவல்லிக்கு புரியவில்லை.

கருகரு என்று திரண்ட மேகம் ஏன் காணாமல் போயிற்று? இன்று மழை பெய்ய வேண்டாம் என்று தீர்மானித்தது யார்? எதனால் காற்று கலைத்தது? ஒரு சொட்டாவது விழுந்திருக்க வேண்டுமே.

மாலை ஆறே முக்கால் போல இருட்டிக்கொண்டு கரு கும்மென்று சாலை விளக்குகளை போடும்படியாக வைத்த ஒரு மேகக்கூட்டம் திடீரென்று பதினைந்து நிமிடத்தில் காணாமல் போக வேண்டுமென்றால் இது ஏதோ, யாரோ கலைத்தது போலல்லவா இருக்கிறது? யார் கலைத்திருப்பார் கள். யாராவது கலைத்து கலைந்து போயிற்றா அல்லது வேறு ஏதேனும் காரணம்...

அவள் யோசித்துக்கொண்டே அமர்ந்தாள்.

யாரோ அவளை பார்ப்பது போல் உள்ளே தெரிந்தது.

சட்டென்று மரகதலிங்கேஸ்வரரைப் பார்த்தாள். விளக்குப் போட்டாள்.

நீல ஒளி விதானத்திலிருந்து கீழே இறங்கியது. மஞ்சளும், பச்சையும் மெல்லிய கோடுகளாக அவர் மீது விழுந்திருந்தன.

"என்னா... கூப்பிட்டாப்போல இருந்தது. ஏதாவது சொன்னீங்களா?" என்று மரகதலிங்கேஸ்வரரைப் பார்த்துக் கேட்டாள்.

யாரோ ஒருவர் உட்கார்ந்து ஒரு பிளாஸ்டிக் கப்பில் டீ குடித்துக் கொண்டிருந்தார்கள். யாரது என்று தெரியவில்லை.

ஆனால், மனசுக்குள் அந்தப் படம் தெளிவாக இருந்தது. நீண்ட சிகையும் தாடியும், பருத்த உடலுமாய் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். எங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. மறுபடி மறுபடி உற்றுப் பார்க்க, உட்கார்ந்த இடத்தினுடைய தூணிலிருந்து மேலே கருவூர் என்று மஞ்சள் பலகையில் கறுப்பில் எழுதப்பட்டிருந்தது. இப்படி எங்கே எழுதப்பட்டிருக்கும். ரயில்வே ஸ்டேஷனில் தானே, யாரோ எங்கோ உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் காட்டுகிறதா, ரயில்வே ஸ்டேஷனில் இப்படியொரு கிழவர் இருக்கிறாரா, உட்கார்ந்து கொண்டிருக்கிறாரா? இவருக்காகத்தான் மேகம் கலைந்ததா? சட்டென்று திடுக்கிட்டு எழுந்தாள்.

"போய் கூட்டிகிட்டு வா."

உள்ளே தெளிவாக குரல் கேட்டது.

பீரோவைத் திறந்தாள். மணிபர்ஸை எடுத்து இடுப்பில் இறுக்கிக் கொண்டாள். மேலே போர்த்திக் கொண்டாள்.

"மாரியம்மா கீழ கொஞ்சம் இரு. நான்வெளிய போயிட்டு வந்துடறேன்."

"என்னா திடீர்னு?"

"மேல அண்ணன்கிட்ட சொல்லிடு. ரயில்வே ஸ்டேஷன் போயிட்டு வந்துடறேன் அப்படின்னு."

"என்னா யாராவது வராங்களா?"

"தெரியலை. போய் பார்த்தாதான் தெரியும்."



"இந்நேரத்துக்கு யார் வரப்போறாங்க டிரெயினே கிடையாதே."

மாரியம்மாள் எல்லாம் தெரிந்தவள் போல பேசினாள்.

"தெரியலை. போய் பார்த்துட்டு வரேன்."

மாணிக்கவல்லி இறங்கி தெருவில் நடந்தாள்.

அவள் வீட்டிலிருந்து ஒரு ஃபர்லாங் தூரத்தில் ரயில்வே ஸ்டேஷன் இருந்தது.

நடக்கலாமா ஆட்டோவில் போய்விடலாமா?

நடக்கலாம். ஆட்டோவில் போனால் எண்ணங்கள் சிதறும். நடந்தால் எண்ணங்கள் ஒன்றாகக் குவியும். நடக்கும் போது யோசிப்பது நல்லது.

அவள் வேகமாக ஸ்டேஷனை நோக்கி நடக்க, அவர் காத்துக் கொண்டிருப்பது தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது. அவளுக்காகத்தான் அவர் அங்கு வந்திருக்கிறார் என்பதும் புரிந்தது.

ஏன் எனக்காக, எதற்காக, நான் இன்னும் ஏதேனும் கற்றுக் கொள்ள வேண்டுமா என்பது போல கேள்விகள் எழுந்தன.

எந்தக் கேள்விக்கும் பதில் கிடைக்கவில்லை.

போ. போய் அழைத்து வா.

யாரது. நீங்களா என்று உள்ளுக்குள்ளே மரகதலிங்கேஸ்வரரை விசாரித்தாள்.

இல்லை. போய் அழைத்து வா.

மறுபடியும் பதில் வந்தது.

அவள் ரயில்வே ஸ்டேஷனுக்குள் போனாள். பிளாட்பாரம் டிக்கெட் வாங்கிக் கொண்டாள்.

முதல் பிளாட்பாரத்தில் வேகமாக நடந்தாள். உள்வாயிலிலிருந்து வலப்பக்கம் நடந்து போக, அங்கே ரயில்வே கேன்டீன் இருந்தது. அதற்கெதிரே வட்டமாக ஒரு தூணைச்

சுற்றி ஒரு திண்ணை கட்டப்பட்டிருந்தது. அந்த திண்ணை மீது தொந்தியும், தொப்பையுமாய் வேட்டியும் கழுத்து நிறைய மாலைகளும், மேலே துண்டும் போர்த்தி ஒரு ஆள் உட்கார்ந்திருந்தார்.

மனதில் தோன்றியது போலவே நீண்ட சிகை, வெள்ளை தாடி, அரைக் கண்ணாடி போட்டு, இடது கையில் டீ டம்ளரை வைத்துக் கொண்டு வலது கையில் ஏதோ ஒரு புத்தகத்தை படித்துக் கொண்டிருந்தார்.

தொலைவிலிருந்து அவரையே உற்றுப் பார்த்தாள்.

அவர் படிப்பிலிருந்து வேறு எந்தப் பக்கமும் திரும்பவில்லை. அடுத்த பக்கத்தை புரட்டி மறுபடியும் டீயை உறிஞ்சினார். டீயை மெல்ல குடித்துவிட்டு, கீழே டம்ளரை வைத்துவிட்டு மீண்டும் தொடர்ந்து படித்துக் கொண்டிருந்தார்.

மெல்ல அவரை மாணிக்கவல்லி கடந்தாள். ஒரு முறை சுற்றி வந்தாள். மறுபடி தொலைவிலிருந்து பார்த்தாள்.

எல்லாப் பக்கங்களிலிருந்தும் அவளுக்குள் தோன்றிய உருவம் போலவே அவர் இருந்தார். மறுபடியும் போய் அருகே நின்றாள். கை கூப்பினாள்.

அவர் மெல்ல நிமிர்ந்து பார்த்தார். அவர் இதழோரம் சிறியதாய் ஒரு புன்னகை மிளிர்ந்தது.

"ஐயா, எனக்கு மனசுக்குள்ளே தோணிச்சு. நீங்க இங்க காத்திருக்கீங்க உங்களை கூட்டியாரணும்னு. நீங்க என் கூட வரீங்களா ஐயா" கை கூப்பி மிருதுவான குரலில் விசாரித்தாள்.

"எனக்கும் மனசுக்குள்ள தோணிச்சு. யாரேனும் வந்து கூட்டிகிட்டு போவாங்க, இங்கேயே உட்கார்ந்துக்கோன்னு. அதான் உட்கார்ந்திருக்கேன்."

புத்தகத்தை மூடி பைக்குள் வைத்தார்.



மூன்றடி நீளமுள்ள தோளில் மாட்டிக் கொள்கிற பெரிய பை ஒன்று காலின் கீழ் இருந்தது. அதற்குப் பக்கத்தில் கண்ணாடிக்கூடும் துணியால் ஆன தோள்பையும் இருந்தன.

"பசிக்குதாங்களாயா?"

"ஆமாம்."

"இங்க ஏதாவது வாங்கித் தரட்டுங்களாய்யா?"

"வேண்டாம்."

"நம்ம வீட்டுக்கு போய் சாப்பிடலாமா?"

"குளிச்சுட்டுதான் சாப்பிடணும்."

"வாங்கய்யா. நல்லா வாங்க."

அவள் கைகூப்பினாள். அவர் எழுந்திருந்தார். அவள் பாய்ந்து அந்த பெரிய பையை எடுத்து தோளில் மாட்டிக் கொண்டாள். பை கனமாக இருந்தது.

"உன் பேர் என்னம்மா?"

நடந்து கொண்டே அவர் கேட்டார்.

"மாணிக்கவல்லி."

"என் பேர் சீனுவாசன்."

"ஐயாக்கு குடும்பம் இருக்குங்களா?"

"இருக்கு."

"எங்க இருக்குங்கய்யா?"

"சென்னையில."

"ஐயா எங்க போயிகிட்டிருக்கீங்க?"

"தெரியலை."

"என்னய்யா இப்படி பதில் சொல்றீங்க?"

"மனசு போற போக்குல போறேம்மா. அப்படி போகணுங்கற ஒரு எண்ணத்துலதான் கிளம்பியிருக்கேன்."

"ஐயா, எப்போ கிளம்பினீங்க?"

"கிளம்பி ஏழு நாளாச்சு. ஈரோடுல மூணு நாள் இருந்தேன்."

"ஈரோடுல எங்க இருந்தீங்கய்யா?"

"டாக்டர் உமா வீட்ல இருந்தேன்."

"யாருன்னு தெரியலையே."

அவள் யோசித்துப் பார்த்தாள்.

"எனக்கும் தெரியலை. போய் இறங்கினேன். வெளிய வந்தேன். அவங்க கார்ல நின்னுண்டிருந்தாங்க. உங்க வீட்டுக்கு வரலாங்களா? குளிச்சிட்டு சாப்பிடலாங்களான்னு கேட்டேன். நல்லா வாங்க அப்படின்னு கூட்டிகிட்டு போனாங்க. அங்கயே தங்க சொன்னாங்க. ரெண்டு நாள் தங்கியிருந்து அப்புறம் வரேங்கன்னு சொல்லி கிளம்பி வந்தேன். இப்போ நீ கூப்பிட்டு போற."

அவர் நிதானமாகப் பேசினார்.

"எப்பவுமே இந்த மாதிரிதான் நடக்குமாய்யா?"

அவள் வியப்போடு அவரைப் பார்த்துக் கேட்டாள்.

அவருக்கு பருத்த உடம்பு. வேகமாக நடக்க முடியவில்லை. வாசலில் ஆட்டோ இருக்க வேண்டுமே என்ற கவலை அவளுக்கு சட்டென்று பற்றிக் கொண்டது. ஆனால், நல்ல வேளையாக வாசலில் ஆட்டோக்கள் இருந்தன. ஒருவருக்கு இரண்டு பேர் போட்டி போட்டுக் கொண்டு பையை வாங்க முன் வந்தார்கள்.

நம்ம வீட்டுக்குத்தானமா? வாம்மா போகலாம் என்று அவளை தெரிந்தவன் போல ஒரு ஆட்டோக்காரன் அழைத்தான்.

அவள் வினோதமாக அவனைப் பார்த்தாள்.

"சுந்தரமூர்த்தி தங்கச்சிதானம்மா நீங்க? சுந்தரமூர்த்தி என் கூட படிச்சவரு. வாங்க போகலாம்."



அடுத்த ஆட்டோக்காரனை மெல்ல புறம் தள்ளி விட்டு அவளிடமிருந்த பையை அவன் வாங்கிக் கொண்டான்.

இனிமையாகப் பேசுபவன் நிறைய காசு கேட்பானோ?

அவளுக்கு சட்டென்று அடுத்த கவலை ஒட்டிக் கொண்டது. பையில் என்ன காசு இருக்கிறது. நூற்றி நாப்பது ரூபாய். அவ்வளவு கேட்க மாட்டான். ஆனால் எவ்வளவு கொடுப்பது? நாப்பதா, அம்பதா, மீட்டர் போட்டால் பதினைந்து ரூபாய்தான் ஆகும். இருபது ரூபாய் கொடுத்தால் சரியென்று சொல்வானா? சரி பார்ப்போம்.

பையை இருக்கைக்கு பின்னால் வைத்து விட்டு இருக்கையை ஓங்கித் தட்டி தூசு துடைத்து விட்டு உட்காருங்கய்யா என்று பணிவாக பெரியவரை அழைத்தான்.

பெரியவர் குனிந்து உள்ளே நுழைந்து உட்கார்ந்து கொண்டார். அடுத்தது மாணிக்கவல்லியும் அவருக்கருகே உட்கார்ந்து கொண்டாள்.

"இது பெரிய ஆட்டோங்க. சின்ன ஆட்டோவா இருந்தா ஐயா உட்கார சிரமமாயிடுங்க."

அவன் சிரிப்பில்லாமல் பேசினான்.

ஆமாம் என்று பெரியவர் உட்கார்ந்து கொண்டார்.

வண்டி மெல்லியதாய் ஒரு குலுங்கல் குலுங்கி கருவூருக்குள் நகரத் துவங்கியது. ஸ்டேஷனிலிருந்து நேராக கோடு கிழித்தது போல ரோடு. இரண்டு பக்கமும் திறந்தவெளி.

ஒரு குழந்தைபோல இரண்டு பக்கமும் ஊரை பார்த்து வந்தார். ஆறு நிமிடங்களில் ஆட்டோ வீட்டு வாசலுக்கு வந்தது.

அடடே... மிகச் சரியாய் கொண்டு வந்து வீட்டில் இறக்கி விட்டாரே. இவருக்கு எப்படி என்னைத் தெரிந்திருக்கிறது?

மிக அதிசயமாக ஆட்டோக்காரனைப் பார்த்தாள்.

இவன் முகத்தை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று அவன் முகத்தை இரண்டு முறை ஏறிட்டுப் பார்த்து மனதில் வைத்துக் கொண்டாள். ஆனாலும் மறந்து விடும் என்ற பயம் இருந்தது.

"எவ்வளவு தரணும்ப்பா?"

"இதுக்குத்தானே. பதினஞ்சு ரூபா" என்று அவன் சாதாரணமாகச் சொன்னான்.

உள்ளே ஒரு நிம்மதி படர்ந்தது.

இருபது ரூபாயாக கொடுத்துவிடலாமா என்ற எண்ணம் தோன்றியது. ஆனால், பத்தும் ஐந்துமாக பதினஞ்சு ரூபாயாக எடுத்து அவனிடம் நீட்ட, அவன் கண்ணில் ஒற்றிக் கொண்டு பையில் வைத்துக் கொண்டான்.

ஆட்டோவிலிருந்து இறங்கியதும், உள்ளுக்குள் புகுந்து பையை எடுத்து தோளில் மாட்டிக் கொண்டான்.

"கொடு. நான் எடுத்துண்டு போயிடறேன்" என்று சொல்ல, "வேண்டாம் நீங்க உள்ள போங்க. நான் கொண்டு வந்து வைக்கறேன்" என்று சொல்லி வராண்டா வரை வந்து பையை வைத்துவிட்டு வணக்கம் சொல்லிவிட்டு ஆட்டோவை நோக்கி திரும்பிப் போனான்.

"சில பொம்பளைங்க இப்படித்தான். மனுஷாள் மேல ரொம்ப பிரியமா நடந்துப்பாங்க. எந்தக் காரணமும் இருக்காது."

பெரியவர் அவளைப் பார்த்து புன்னகையோடு பேசினார்.

அவள் ஆமென்று தலையசைத்தாள்.

"சில சமயம் எந்தக் காரணமும் இல்லாம கோபமும் படுவாங்க" என்று அடுத்தபடியாக இன்னொரு வார்த்தைச் சொன்னார்.

அதற்கு தலையசைப்பதா வேண்டாமா என்று மாணிக்கவல்லி யோசித்தாள்.



"ஆமாம் அப்படியும் இருக்கும்" என்று பதில் சொன்னாள். உள்ளே போனார்கள்.

ஹாலில் உள்ள கட்டிலில் அவரை அமரச் சொன்னாள். குடிக்க பிளாஸ்டிக் பாட்டில் நிறைய தண்ணீர் கொடுத்தாள்.

அதை ஆவலோடு வாங்கிப் பருகினார்.

"குளிச்சுட்டீங்களாய்யா?"

"இல்லைம்மா."

"ஏதாவது சாப்பிட்டீங்களாய்யா?"

"மூணு டீ சாப்பிட்டேன்."

"ஐயா, எப்போ வந்தீங்க கருவூருக்கு?"

"காலையில அஞ்சு இருவத்தஞ்சுக்கு இங்க இறக்கி விட்டான்."

"ஐயா, பதினொரு மணி வரைக்கும் என்ன பண்ணிகிட்டிருந்தீங்க?"

"அதான் சொன்னேனே மூணு டீ சாப்பிட்டேன்னு."

"பசியா இருக்கீங்களாய்யா?"

"ஆமாம். கொஞ்சம் பசிக்குது."

"சாப்பிடறீங்களா? இல்லை குளிச்சிடறீங்களா?"

மாணிக்கவல்லி பதறினாள்.

"ஒண்ணும் கலவரப்பட வேண்டாம். முதல்ல நீ யாரு? அது சொல்லவே இல்லையே."

"என் பேரு மாணிக்கவல்லி. எங்க அண்ணன் பேரு சுந்தரமூர்த்தி. எங்க அண்ணி பங்கஜம். அண்ணனுக்கு ஒரு புள்ள ராஜேந்திரன். ஒரு பொண்ணு கற்பகம்."

"அப்போ உங்க வீட்டுக்காரரு."

"எனக்கு இன்னும் கல்யாணமாகலை."

"அப்படியா... ஏன்?"

"அப்புறம் சொல்றேன்யா. குளிச்சிடறீங்களா? வெந்நீர் போடட்டுமா?"

"வெந்நீர்தான் எனக்கு நல்லது."

அவர் மிருதுவாகச் சொன்னார்.

அவள் ஓடிப் போய் கெய்சர் சுவிட்சைப் போட்டாள்.

மாடிக்கு ஓடினாள். சமையலறைக்கு ஓடிப் போய் நாலைந்து தானியங்களை வறுத்து ஒன்றாக்கி மாவாக்கி சலித்து வைத்திருந்த பொடியை எடுத்து காய்ச்சிய பாலில் போட்டு வேகமாகக் கலந்தாள். ஒரு முறை கொதிக்க வைத்து இறக்கினாள். திரும்ப ஆற்றினாள்.

நான்கு நிமிடத்தில் ஓடிப்போய் அவரிடம் நீட்ட, "ரொம்ப சூடாயிருக்கே" என்று அவர் லேசாக கையை உதறியபடி டம்ளரை அவளிடம் நீட்டினார்.

அவள் வாங்கி இன்னும் நன்றாக ஆற்ற ஆரம்பித்தாள்.

பெரியவர் வயதில்தான் பெரியவரே தவிர பல விதங் களில் குழந்தை என்பது ஒரு பார்வையில் தெரிந்தது.

சட்டையை கழற்றி கட்டிலில் ஓரம் போட்டிருந்தார். இடுப்பு வேட்டியை தளரவிட்டிருந்தார். பாதங்களில் வலி இருக்கும்போலும். அழுத்தி அழுத்தி மெல்ல வலி நீக்கிக் கொண்டிருந்தார்.

அந்தக் கஞ்சியை ஆற்றிக் கொடுத்தவுடன் மெதுவாக சப்தமெழ உறிஞ்சி சாப்பிட்டார்.

"என்ன இது? நல்லாயிருக்கே ஏதோ பாயஸம் மாதிரி."

"இல்லை. கஞ்சி."

"சர்க்கரை தூக்கலா போட்டுட்டியோ?"

"ஏன் உங்களுக்கு சர்க்கரை போடக்கூடாதா?"

"போடலாம். தப்பில்லை. இவ்வளவு தித்திப்பு இருக்கே. இது என்னன்னு பார்த்தேன்."



"கொஞ்சம் கூட விழுந்துருச்சு."

"சந்தோஷம். இனிப்பு கொடுத்து வரவேற்பு நடந்திருக்கு" என்று வாய்விட்டுச் சிரித்தார்.

"உன்னைத் தவிர வேற யாரும் இல்லையா?"

"இருக்காங்க. அண்ணன் வேலைக்கு போயிருக்காரு. அண்ணி கீழ வருவாங்க."

சொல்லிக் கொண்டு இருக்கும்போது அண்ணி வந்து நின்றாள்.

யாரு என்று கண்களால் மாணிக்கவல்லியை வினவினார்.

"சீனுவாசன்னு பேரு. ஸ்டேஷன்ல இருந்தாரு. எனக்கு என்னமோ தோணிச்சு. அதான் ஓடிப்போய் ஸ்டேஷன்லேர்ந்து அவரை கூட்டிட்டு வந்தேன். மெட்ராஸ்ல இருக்காராம். இப்படியே ஊர் ஊரா போயிகிட்டிருக்காராம். நம்ம வீட்ல ஒரு ரெண்டு மூணு நாள் இருப்பாருன்னு நினைக்கறேன்."

"இந்த ஊருக்கு என்னத்துக்கு வந்தாராம்?"

"தெரியலைம்மா" சீனுவாசன் அண்ணியின் கேள்விக்கு பதில் சொன்னார்.

"தெரியலைன்னா எப்படிங்க? இங்கேயிருந்து வறேன். இங்கேயிருந்து போறேன் அப்படின்னு சொல்லணுமில்லை?"

"இங்கேயிருந்து வரேன்னு நான் சொல்லிட்டேன். எங்க போறேன்றது யாருக்கு தெரியும்? அப்படியே ஊர் ஊரா போயி கிட்டிருக்கேன்."

"என்னா வேலைங்க? எதுனா வியாபாரமா?"

"ஒரு வியாபாரமும் இல்லை. சும்மா இப்படியே ஒரு ஊருக் குப் போய் ரெண்டு மூணு நாள் இருக்கறது. அப்புறம் இன் னொரு ஊருக்குப் போறது."

"தங்கற ஊர்ல என்னங்க பண்ணுவீங்க?"

"சில சமயம் ஒண்ணும் பண்ண மாட்டேன். சில சமயம் நாலஞ்சு பேரோட பேசுவேன். கோயிலுக்கு போவேன். ஏதாவது பூஜை புனஸ்காரம் நடந்தா அங்க போய் முதல் வரிசையில் உட்கார்ந்துப்பேன். சாப்பாடு போட்டாங்கன்னா சாப்பிடுவேன். அவ்ளோதாம்மா."

"சன்னியாசியா?"

"இல்லைம்மா."

"சாமியார் மாதிரியா?"

"அப்படியும் இல்லைம்மா. எனக்கு பொண்டாட்டி, குழந்தைங்க எல்லாம் இருக்கு. என் பொண்டாட்டி சௌக்கியமா இருக்கா. மூணு வேளையும் விதம் விதமா டி.வி பாரத்துண்டு ஆனந்தமா இருக்கா."

"ஏன் ஊர் ஊரா போறீங்க?"

"இதென்னடா கேள்வி. பொண்டாட்டி இருந்தா ஊர் ஊரா போகக்கூடாதா?"

"பொண்டாட்டி புள்ளைங்களுக்கு சோறு போடணுமில்லை."

"நல்ல வேளை. அந்தக் கொடுமையை கடவுள் எனக்கு கொடுக்கலை. ரெண்டு பசங்களை கொடுத்ததும், அவங்களை வளர்த்து பெரிய ஆளாக்கினதும், நீ சம்பாதிச்சது போறும்டா. பசங்க உன்னை வச்சுப்பாங்கன்னு கடவுள் சொல்லிட்டாரு. பசங்களும் கடவுள் சொல்லுக்கு கட்டுப்பட்டா மாதிரி நான் எப்போ காசு கேட்டாலும் தராங்க. எவ்வளவு கேட்டாலும் தராங்க."

"நீங்க எத்தினி நாள் தங்குவீங்க?"

அண்ணி கேள்வி கேட்டாள்.

"நீங்க வெளிய போடான்னு சொல்றவரைக்கும் தங்குவேன்" சொல்லிவிட்டு மறுபடியும் குழந்தை போல் சீனுவாசன் சிரித்தார்.



"நாங்க அப்படியெல்லாம் சொல்ல மாட்டோம்."

அண்ணி வேகமாகப் பேச, "அப்போ மூணு நாள்னு வச்சுக் கோங்களேன். மூணு நாளைக்கு மேல ஒரு இடத்துல தங்கக் கூடாதுன்னு உள்ளுக்குள்ள ஒரு திட்டம் வச்சுருக்கேன். சில சமயம் சரியா வருது. சில சமயம் மீறும்படியா ஆயிடுது. ஈரோடுல ஒரு டாக்டர் அம்மா வீட்ல நாலு நாள் தங்கிட்டேன். அம்மா போகக்கூடாதுன்னு மன்றாடுச்சு. மேல ஒரு நாள் கூட தங்கினேன்."

"அங்க எதுனா பூஜையா?"

"ஒண்ணுமில்லை. சும்மா அவங்க வீட்ல உட்கார்ந்துண்டிருந்தேன். புருஷன் வியாபாரி. அம்மா எம்.பி.பி.எஸ். டாக்டர். அந்த வீடு நல்லாயிருக்கணும்னு உட்கார்ந்து கடவுள் கிட்ட வேண்டிகிட்டு வந்துட்டேன்."

"வீடு நல்லாயிடுச்சுங்களா?"

அண்ணி ஆவலோடு கேட்டாள்.

"நல்லா ஆயிடுங்கற நம்பிக்கையிலதானே பிடிச்சு மடக்கி நிறுத்தறாங்க."

"அப்போ ஏன் கிளம்பி வந்துட்டீங்க."

"நல்லா ஆயிட்டா உட்காருவானேன்? அடுத்தபடியா வேற வீட்டுக்குப் போகலாமே அப்படின்னுதான்."

"எங்க வீடு நல்லாயில்லைன்னுதான் வந்தீங்களா?"

"தெரியலை தாயி. நான் வரலை. இந்தப் பொண்ணு கூட்டிண்டு வந்தது. வந்தேன்."

"நீங்க என்னாங்க, ஐயருங்களா?"

**"அந்தணர் என்போர் அறவோர் எவ்வுயிர்க்கும்**
**செந்தன்மை பூண்டொ முகலான்.**

அப்படின்னு குறள்ல சொல்லியிருக்கு. அது பிரகாரம் பார்த்தா என்னை ஐயருன்னு சொல்லலாம்."

"என்ன சாப்பிடுவீங்க?"

"மரக்கறி உணவு எதுவா இருந்தாலும். அசைவம் சாப்பிட மாட்டேன்."

"நாங்களும் செய்யறது இல்லீங்க."

"ரொம்ப சந்தோஷம்."

"எங்க வீட்லயே ஒரு ரெண்டு மூணு நாள் இருந்து, இதுக்கு எதுனா ஒரு நல்ல வழி காட்டுங்களேன். பாருங்களேன் நாப்பத்தியொரு வயசாகுது. இன்னும் கல்யாணம் ஆகலை. இப்போ கூட இது சரின்னு சொன்னா கல்யாணம் பண்ணிக்கறதுக்கு ஆள் ரெடியா இருக்கு."

"அண்ணன் எங்க அண்ணி?"

மாணிக்கவல்லி பேச்சை மாற்றினாள்.

"அவரு வண்டியை எடுத்துட்டு போயிருக்காரு. வேட்டியை கட்டிகிட்டு போறத பார்த்தா ஆபீஸ் போற மாதிரி தெரியலை. நாகமுனி முதலியாருக்கு உடம்பு சரியில்லையாமே. அதைப் பார்க்கறதுக்கு போறாரோ என்னமோ."

"என்ன உடம்பு?"

அண்ணி மறுபடியும் கல்யாணப் பேச்சு எடுத்து விடக் கூடாது என்பதற்காக அவள் தூண்டித் துருவ ஆரம்பித்தாள்.

"காலையில் நல்லாயிருந்தாராம். எட்டரை மணிக்கு டிபன் சாப்பிட்ட பிறகு நெஞ்சு வலிக்குதுன்னு சொன்னாராம். குடிக்கறதுக்கு வென்னீர் கேட்டாராம். போட்டு கொடுத்திருக்காங்க. ரெண்டு வாய் குடிச்சவுடனே சாப்பிட்டதெல்லாம் வெளிய வந்துடுச்சாம். ரொம்ப மயக்கா இருக்கே. என்னால முடியலைன்னவுடனே ஆஸ்பத்திரியில சேர்த்திருக்காங்க."

"எந்த ஆஸ்பத்திரி?"

"லோகா ஆஸ்பத்திரி."

"அப்புறம்?"



"மாரடைப்பா இருக்கும்னு நினைச்சு ஆக்ஸிஜன் போட்டு படுக்க வச்சுட்டாங்களாம். டாக்டர் வரலை, சொல்லி அனுப்பியிருக்காங்களாம்."

"எப்படி தெரிஞ்சுது அண்ணனுக்கு?"

"எதிர் வீட்டு முதலியார் போயிட்டு வந்து, இங்க வந்து சொல்லிட்டுப் போனாரு. உடனே அண்ணன் கிளம்பிட்டாரு."

"ஒண்ணும் ஆகாது."

சீனுவாசன் சட்டென்று நடுவில் புகுந்து பேசினார்.

இரண்டு பேரும் திடுக்கிட்டு அவரை பார்த்தார்கள்.

"மாரடைப்பெல்லாம் இல்லை. வாயு உபத்திரவம். ராத்திரி சாப்பாடு ஜீரணம் ஆகறதுக்குள்ள பகல் சாப்பாடு சாப்பிட்டா டொப்புனு நெஞ்சை பிடிச்சுக்கும். நாளைக்கு சாயந்தரம் அனுப்பிடுவாங்க."

"அனுப்பிட்டா சந்தோஷம்தான்."

"உங்களுக்கென்ன அவர் உறவா?"

"தூரத்து சொந்தம். ஆனா, நல்ல ஸ்நேகிதம். நல்லது கெட்டதுக்கு அவங்க வீட்ல எல்லாரும் ஓடி வந்துடுவாங்க. நாகமுனி முதலியார் தம்பிதான் இவளை ரெண்டாந்தாரமா கட்டிக்கிறேன் அப்படின்னு சொல்றான். இவதான் பிடி கொடுத்து பேசமாட்டேன்றா."

"முதல் தாரம் இருக்காங்களா?"

"இல்லீங்க. அவங்க கல்யாணமான மூணாவது மாசமே செத்துப்போயிட்டாங்க. அவரு இன்னொரு கல்யாணம் பண்ணமாட்டேன்னு இத்தனை நாள் இருந்துட்டு, இப்போ பண்ணிகிட்டா என்னன்னு ஆசைப்படறாரு. வந்து அவங்க வீட்ல கேட்டாங்க. இவ முடியாதுன்னே சொல்லிட்டா."

மறுபடியும் பேச்சு கல்யாணத்திற்கு வந்தது பார்த்து மாணிக்கவல்லி நெற்றி சுருக்கினாள். புருவம் நெளித்தாள்.

போதுமே இந்தப் பேச்சு என்பது போல் அண்ணியைப் பார்த்தாள்.

ஆனால், அண்ணி விடுவதாக இல்லை.

"நீங்க பெரியவங்க. தெய்வம் போல வந்திருக்கீங்க. நீங்க வந்து இந்தப் பொண்ணுக்கு கல்யாணம் ஆச்சுன்னா எனக்கு ரொம்ப சந்தோஷம். உங்க போட்டோவை சாமி படமா வச்சு தினம் கும்பிடுவோம்."

அடிசக்கை நல்லாயிருக்கே இது என்று மறுபடியும் சீனு வாசன் வாய் விட்டு குழந்தை போல் சிரித்தார்.

"மாணிக்கவல்லிக்கு ஒரு கல்யாணம் பண்ணிட்டா நான் சாமியாயிடுவேன் இந்த வீட்ல அப்படித்தானே" என்று மீண்டும் சிரித்தார்.

"போய் வென்னீர் போடுங்க. நான் இங்க குழாய் திறந்து தண்ணீர் ரொப்பிட்டு வந்துடறேன்."

மறுபடியும் மாணிக்கவல்லி அவர்களின் பேச்சை துண்டிப் பதற்காக திசை மாற்றினாள்.

அண்ணி மாடிக்கு நகர்ந்தாள். மாணிக்கவல்லி பாத்ரூமுக் குள் போய் குழாயை திறந்து விட்டாள். பெரிய இரைச்சலுடன் தண்ணீர் பெரிய எவர்சில்வர் பக்கெட்டில் நிரம்பியது.

மாடிக்கு ஓடினாள். இரண்டு பக்கெட்டுகள் வென்னீர் எடுத்து வந்தாள். அளவாகக் கலந்தாள். துண்டு எடுத்துப் போட்டாள்.

"புது சோப்பு எடுத்து வைக்கட்டுங்களா" என்று பவ்யமாகக் கேட்டாள்.

"வேண்டாம்மா. வெறுமனே குளிச்சுட்டு வந்துடுவேன்."

"பயத்தமாவு இருக்கு வேணுங்களா?"

"அடடே. கொடேன். அது உடம்புக்கு நல்லது."



"சோப்பு போடறதில்லைங்க, பயத்தமாவுதான் போடு வேன்."

ஒரு தட்டில் பயத்த மாவு ஊற்றி பன்னீர் தெளித்து பிசைந்து வைத்தாள். வாசனைப் பொடி என்று இன்னொன்று கொடுத்தாள்.

அவர் பாத்ரூமிற்குள் போனதும் சமையலறைக்குள் நுழைந்து என்ன சாப்பாடு இருக்கிறது என்று திறந்து பார்த் தாள்.

"காலையில வச்ச சாதம். ஆறிடுச்சு. புதுசா சாதம் வச்சிட லாமா அண்ணி?"

"வச்சிடலாம். ஆனா இது நல்லாயில்லை" என்று அண்ணி சுருக்கென்று திருப்பிச் சொன்னாள்.

"எது அண்ணி?"

"யாரையோ வீட்ல கொண்ணாந்து உட்கார வைக்கறது. வழியோட போறவங்களை கூப்பிட்டு விருந்து உபசாரம் பண்றது."

"அவரு வயசானவர் அண்ணி."

"என்ன வயசானாலும் ஆம்பளை இல்லையா, நாம பொம் பளை இல்லையா? டப்புனு ஒரு ஆளைக் கொண்ணாந்து நிக்க வைக்கலாமா?"

"ஏன், அண்ணன் ஏதாவது சொல்வாரா?"

"உங்க அண்ணன் ஒண்ணும் சொல்லமாட்டாரு. அதனால தான் நீ கொண்ணாந்து வைக்கற. உனக்கு நான் இன்னும் கல்யாணம் பண்ணலையேன்னு ஒரு குற்ற உணர்வு அவருக்கு இருக்கு. அதனாலதான் நீ என்ன அயோக்கியத் தனம் பண்ணாலும் அவர் பொறுத்துக்கிட்டிருக்கார்."

"இதுல என்ன அண்ணி அயோக்கியத்தனம் இருக்கு?"

"எனக்கு பிடிக்கலை சொல்லிட்டேன். அப்புறம் உன் இஷ்டம். நான் இப்படி கண்டிக்கறேன்னு தெரிஞ்சாகூட உங்க

அண்ணன் என்னைதான் கோச்சுப்பாரு. இஷ்டமிருந்தா இரு. இல்லைன்னா உன் வீட்டைப் பார்க்கப்போ அப்படின்னுவாரு. இத்தனை வருஷம் குடித்தனம் பண்ணிட்டு ரெண்டை பெத்துட்டு நான் வீட்டை பார்த்து போகறதுக்கா இருக்கேன்? என்னால போக முடியாது. அதனால நீயோ, உங்க அண்ணனோ என்ன சொன்னாலும் என்ன செய்தாலும் நான் கேட்டுகிட்டுதான் இருப்பேனே தவிர, உள்ள பாய்ஞ்சு தடுக்க மாட்டேன். ஆனால், ஒரு வார்த்தை, இது தப்புன்னு சொல்றதுக்கு எனக்கு உரிமை இருக்கு. நான் சொல்லுவேன்."

"சொல்லுங்க அண்ணி. என் காதோட சொல்லுங்க. ஆனா வந்திருக்கறவர் காதுபட சொல்லாதீங்க."

"அப்படியெல்லாம் முட்டாள்தனமா பண்றவ நான் இல்லை. அந்தப் பெரியவரையே உங்க அண்ணன் கூட்டிட்டு வந்தாருன்னு வச்சுக்கோ. சுத்தி சுத்தி அவருக்கு உபசாரம் பண்ணுவேன். நீ கூட்டிகிட்டு வந்ததுதான் சங்கடமா இருக்கு."

மாணிக்கவல்லி யோசித்தாள்.

அண்ணியின் பேச்சில் ஒரு நாகரிகம் இருந்தது. ஒரு நிதானம் இருந்தது. அவள் ஆதங்கம் சரியென்று தெரிந்தது.

"ஒண்ணுமில்லை மாணிக்கவல்லி, நாளைக்கு தப்பா போச்சுன்னாக்க உங்க அண்ணனை சொல்லமாட்டாங்க. உன்னை சொல்லமாட்டாங்க. நீ என்னாடி குடித்தனம் பண்ற லட்சணம்னு என்னை சொல்வாங்க. நீ பார்க்கதானே நடந்தது. நீ என்னா பண்ணிகிட்டிருந்தன்னு என்னை சொல்வாங்க. நானும் பதில் சொல்ல கடமைப்பட்டவோன்றதுனாலதான் இது வேண்டாம் அப்படின்னு இப்போ உன் காதுபட சொல்றேன்."

"புரியுது அண்ணி. இந்த ஒரு தடவை எனக்காக விட்டுக் கொடுங்க. நாப்பது நாப்பத்தஞ்சு வயசா இருந்தாகூட நான் வீட்டுக்கு கூட்டிட்டு வரதுக்கு யோசனை பண்ணுவேன்.



அறுபது வயசு கிழவரு. அதனாலதான் டப்புனு வீட்டுக்கு கூட்டிட்டு வந்துட்டேன்."

"உனக்கு எப்படி தோணிச்சு?"

"பெருக்கிட்டிருந்தேன். உள்ளுக்குள்ள யாரோ, என்னமோ காத்துக்கிட்டிருங்காங்கன்னு தோணிச்சு."

"இதெல்லாம் யாருக்காவது தோணுமா?"

"எனக்கு தோணுது அண்ணி."

"என்னமோ போ, வீட்ல ஆம்பளைங்க சரியில்லைன்னா பொம்பளைங்க இப்படித்தான் ஆடுவாங்க."

"ஏன் அண்ணி, அண்ணனை தப்பா பேசறீங்க? அவருக்கு என்ன நல்லாதானே இருக்காரு?"

"என்ன நல்லாயிருக்காரு மாடு வந்துதா பாப்பாத்தியம்மான்னு ஒரு கவர்மெண்ட் உத்தியோகம். அதுவுமில்லைன்னா குடித்தனம் நாறிட்டிருக்கும்."

"அந்தப் பழமொழிக்கு என்ன அர்த்தம்?"

"மாட்டை அவுத்துவிட்டா தானா புல்வெளிக்கு போவும். ராத்திரி ஆச்சுன்னா தானா திரும்பி ஊரைப் பார்க்க வந்து, வீடு தெரிஞ்சு தானா வீட்டுக்குள்ள நுழைஞ்சிடும். எந்த மாட்டையும் எவனும் இழுத்து கட்ட வேணாம். மேய்க்க வேணாம். அது தானா நடக்கணும். மாடு வந்துதா பாப்பாத்தி அம்மான்னு மாடு மேய்க்கறவன் ஒரு குரல் கொடுப்பான். வந்ததுன்னு உள்ளேயிருந்து ஒரு குரல் வரும். அவ்ளோதான் அவன் வேலை. பொறுப்பில்லாத உத்தி யோகம்னு சொல்லுவாங்க."

"இது நல்லதுதானே. இதை ஏன் பெரிய குறையா சொல்றீங்க?"

"ஒரு பொறுப்பை எடுத்து பழக்கமில்லை அப்படின்னா, பொறுப்பை தட்டிக் கழிக்கிற புத்தி ஒரு இடத்துல வந்துச்சுன்னா, மத்த இடத்துலயும் பொறுப்பு வராது. சொந்தமா கடை நடத்தி வரவு செலவு பார்த்து, நாலு வாடிக்கையாளர் பார்த்து,

நல்ல ஒரு கம்பெனியில பொறுப்பா வேலை செய்து, வரவன் போறவனுக்கு பதில் சொல்லி காரியத்தை நிமிர்த்தி அப்படிப் பட்ட ஒரு வேலை இருந்தா அவங்களுக்கு வீட்லயும் பொறுப்பு இருக்கும். கீழ் கிடந்த குண்டூசி கால்ல குத்தினா ஐயோன்னு கத்தி கால்லேர்ந்து பிடுங்கி மறுபடியும் கீழ போடற புத்தி, இந்த மாதிரியான ஆளுங்களுக்கு வந்துடும்."

"எல்லா கவர்மெண்ட் ஆபிஸ்லயும் இப்படித்தான் இருக் காங்க அப்படின்றீங்களா?"

"அதெப்படி சொல்ல முடியும்? பொறி பறக்க வேலை செய்யறவங்க இருக்கத்தான் செய்யறாங்க. நம்ம ஆளுக்கு இந்த மாதிரி வேலை கிடைச்சுருக்கு. ஒருவேளை அந்த ஆபீஸ்லயே கூட இவராண்ட சொன்னா வேலை ஆகாதுன்னு ஓரமா உட்கார வச்சுட்டாங்களோ என்னமோ?"

அண்ணி அலுப்போடு பேசினாள்.

"ஏன் அண்ணனைப் பத்தி இப்படி அலுத்துக்கறீங்க?"

"நான் அப்படி இல்லை. அதனாலதான். எனக்கு பரபரன்னு காரியம் செய்யணும். புதுசு புதுசா பொறுப்பு எடுத்துக்கணும்."

"அண்ணன் அமைதியா இருக்காருன்னு நான் நினைச் சுண்டிருக்கேன். நீங்க என்னமோ சோம்பேறியா இருக்கா ருன்னு சொல்றீங்க."

"அமைதியா இருக்கறது வேற. சோம்பேறியா இருக்கறது வேற. அமைதியா இருக்கறவன் வேணுங்கறபோது ஆவேசமா காரியத்துல இறங்கிடுவான். சோம்பேறியா இருக்கறவங்க எந்தக் காரணம் கொண்டும் எந்த நேரத்துலயும் சரியா வரமாட் டாங்க."

"அவ்ளோ குறைபட்டுக்கற அளவுக்கு இப்போ என்ன அண்ணன் மேல கோபம்?"

"உங்க அண்ணன் வந்து இந்த மாதிரி ஒரு பெரியவர் வந் திருக்காரு. ஸ்டேஷனுக்கு போய் மாணிக்கவல்லி கூட்டி



கிட்டு வந்தது அப்படின்னு நான் சொன்னா கூட, அப்படியா சரி அப்படின்னு சொல்லிட்டு தன் வேலையை பார்க்கப் போயிடுவாரே தவிர, அது எப்படின்னு ஒண்ணு கூட கேட்க மாட்டாரு."

"கேட்டா நல்லவரு. கேட்காட்டி தப்பானவரா?"

"நல்லவரு கெட்டவருன்னு நான் பேசவரலை. ஒரு தலை வன் எப்படி இருக்கணுமோ அப்படி இருக்கணும். பொறுப் புள்ள ஆண்தான் தலைவனா இருக்க முடியும். நம்ம தலை சரியில்லை. அதனால நாமதான் பார்த்து நடந்துக்கணும். அவர் கேட்காட்டிலும் நான் கேட்கறதுக்கு இதான் காரணம்."

"புரியது. உங்களுக்கு மானக்கேடு வரும்படியா நான் ஒரு நாளும் நடக்க மாட்டேன். தப்பான சிந்தனையோ தப்பான செயலோ எங்கிட்டேயிருந்து வரவே வராது. உங்களுக்கு எந்த தொந்தரவும் தராது. எனக்கு நிறைய கத்துக்கணும்னு ஆசை. யாரண்ட போய் கத்துக்கறது? யாருக்கு தெரியும்? யார் எனக்கு சரியா கத்து கொடுப்பாங்க? அப்படின்னு நான் ராப் பகலா தவிச்சுகிட்டிருந்தேன். நாமளா போய் இவரு கத்து கொடுப்பாரு, அவரு கத்துகொடுப்பாருன்னு நின்னு ஏமாந்து திரும்பறதை விட, அல்லது எங்கேயாவது எக்குத்தப்பா மாட் டிக்கறதைவிட, கடவுள்கிட்டயே விட்டுடலாம்னு நினைச்சு தினம் தினம் எனக்கு ஒரு குருவை கொடுக்கக்கூடாதா, அப்படின்னு கேட்டுகிட்டிருக்கேன். ஓடு ஓடு உன்னை தேடி கிட்டு ஒருத்தர் வந்திருக்கார் பார், ஸ்டேஷன்ல உட்கார்ந்து கிட்டிருக்கார் பார் அப்படின்னு உள்ள குரல் கேட்டுது. அத னாலதான் ஓடினேன்."

நிதானமாக, கம்பீரமாக, திடமாக மாணிக்கவல்லி சொல்லி முடித்தாள்.

அண்ணி அவளை ஊடுருவிப் பார்த்தாள். சிறிது நேரம் மௌனமாக நின்றாள்.

"எனக்குப் புரியாத விஷயம் இதுதான். எனக்குள்ள அந்த மாதிரியெல்லாம் எதுவும் தோன்றதே இல்லையே."

"உங்களுக்கும் தோணும். உங்களுக்குள்ள ஆயிரம் பிரச்சினை. உள்ளுக்குள்ள ஆயிரம் பேச்சு. குழம்புல உப்பு போட்டோமா, எலக்ட்ரிசிட்டி பில் கட்டினோமா, பையன் டியூஷனுக்கு காசு கொடுத்தோமா அப்படின்னு ஆயிரம் கவலை. கூட நான் ஒரு கவலை. உங்களுக்குள்ள குரல் தோணும். ஆனா கேட்க மறந்துடுவீங்க. விட்ருவீங்க."

"எனக்கும் ஆசைதாண்டி. இன்னிக்கு நீ தனியா உட்கார்ந்து கண்ணை மூடிகிட்டு பூஜையறையில இருக்கறத பார்க்கறபோது அடடா... என்னாத்துக்கு இந்த கல்யாணத்தை பண்ணிக்கணும்னு எனக்கும் தோணுது. கல்யாணம் ஆகணும்னு வேற ஆசைப்பட்டோமே என்ன முட்டாள்தனம்னு தோணுது. கல்யாணம் பண்ணிக்காமலேயே இருந்திருக்கலாமே அப்படின்னு ஒரு எண்ணம் வருது. ஆனா இருந்திருக்க என்னால முடியாது. சுத்தியிருக்கறவங்க ஆகலையா, கல்யாணம் ஆகலையா அப்படின்னு கேட்கறது தாங்காதயேதான் நான் கல்யாணம் பண்ணிகிட்டேன். பதினாறு வயசுலேர்ந்து ஆரம்பிச்சுட்டாங்க. கல்யாணம் பண்ணலையா, கல்யாணம் பண்ணலயான்னு. எனக்கு பத்தொன்பது வயசுல கல்யாணம் ஆகிப்போச்சு. அதுவே தாமதம். உனக்கு தோணலையா கல்யாணம் பத்தி?"

"இல்லை."

"நிசமாத்தான் சொல்றியா? இல்லை கேட்கறாங்களேன்னு ஒரு கம்பீரமா பொய் சொல்றியா?"

"எதனாலன்னு தெரியலை. பள்ளிக்கூடத்துல படிக்கறதுலேர்ந்தே நான் தனியாத்தான் இருப்பேன். ரொம்ப நல்லா படிக்க மாட்டேன். ரொம்ப மக்கு இல்லை. எல்லா சப்ஜெக்ட்லயும் பாஸ் பண்ணிடுவேன். பன்னெண்டாவது ரேங்க், பதின்மூணாவது ரேங்க்குன்னு வருவேன். ஆனால், ஆட்டம் பாட்டம் விளையாட்டு எதுவும் எனக்கு பிடிக்காது. கண்ணை மூடிகிட்டு உட்கார்ந்திருக்கறது. ஒண்ணை பத்தியே யோசனை பண்றது. சுத்தி மரம் செடி கொடியெல்லாம் பார்த்துகிட்டு இருக்கறது. குருவிங்களோட பேசறது. தட்டு நிறைய சாப்பாடு எடுத்துகிட்டு போய் உருண்டை உருண்டையா காக்காக்கு போடறது. இப்படியெல்லாம் இருந்தா பிடிக்கும். சாப்பிடறபோது அடடே... அணிலுக்கெல்லாம் பசிக்குமே அதுங்களுக்கு சோறு போடலாமே அப்படின்னும் நினைச்சுருக்கேன்.



'எனக்கு மனுஷாள பத்தி பயம் உண்டு. ஏன்... ஏன் எல்லாரும் இப்படி இருக்காங்க? எதுக்கு சண்டை போடறாங்க? எதுக்கு பொய் சொல்றாங்க? ஏன் முந்தணும்னு நினைக்கறாங்க? நான் சொன்னா சிரிப்பீங்க.

ரன்னிங் ரேஸ் ஓடறபோது ஒருத்தர் முந்தி ஒருத்தர் போகக்கூடாது. எல்லாரும் கை கோர்த்துகிட்டு ஒண்ணா போய் அந்தக் கயிறு தொடணும்னு நினைச்சிருக்கேன். ஒரு பொண்ணுகிட்ட சொன்னேன். அவ சிரிச்சு சிரிச்சு பள்ளிக்கூடம் முழுக்க சொல்லிட்டா. எல்லாரும் சிரிச்சாங்க. எனக்கு அவமானமாப் போயிடுச்சு. இதுல என்ன தப்பு அப்படின்னு கேட்டேன். பைத்தியம், லூஸு அப்படின்னு சொன்னாங்க. அப்போலேர்ந்து நான் எல்லோரோடையும் பேசறதை நிறுத்திட்டேன். ஏன் அண்ணி, ஒரு ரன்னிங் ரேஸ் எல்லாரும் ஒண்ணா கைகோர்த்துகிட்டு ஓடி ஒரே நேரத்துல தொலை தூரத்தில் இருக்கற கயிற்றை தொடறது தவறா? அதுல சிரிக்கறதுக்கு என்ன இருக்கு?"

அண்ணி வாய்விட்டுச் சிரித்தாள். மெல்லப்போய் அவளைக் கட்டிக் கொண்டாள்.

"நீ குழந்தைடி. நீ குழந்தை. ஒரு பக்கம் உன்னைப் பத்தி கோவம் வந்தாலும், இன்னொரு பக்கத்துல உங்கிட்ட இருக்கற குழந்தைத்தனம் எனக்கு ரொம்ப பிடிச்சுருக்கு. ஆனா உல

கத்து இயல்பு அது இல்லை மாணிக்கவல்லி. சண்டைதான் இயல்பு. முந்திப்போறதுதான் இயல்பு. ஒருத்தரை ஏமாத்தி ஒருத்தர் வாழறதுதான் இயல்பு. அதுதான் மனுஷனுடைய அடிப்படை குணம். தருமம்கறதுதான் நாடகம். உண்மைங் கறதுதான் பெரிய பொய். நான் நல்லாயிருக்கணும்னுதான் தருமமே தவிர அவங்களுக்கு பசிக்குதுன்னு தருமம் எவனும் பண்ணலை. நான் சொல்வதெல்லாம் உண்மைன்னு சத்திய பிரமாணம் பண்றபோது நான் பொய் சொல்றவன்தான் அப்ப டின்னு உள்ளேயிருந்து குரல் வருது. அப்படி ஒத்துக்கறது னாலதான் இந்தப் பேச்சு. சொல்வதெல்லாம் உண்மைங்கற வாக்குப் பிரமாணம். பொய்யே சொல்லாதவன் நான் சொல்வ தெல்லாம் உண்மைன்னு பிரமாணம் பண்ணணுமா? எல்லா மனுஷாளும் பொய் சொல்லுவாங்கன்னுதான் பிரமாணம் எடுக்கச் சொல்றாங்க. நான் சொல்றது புரியலை."

"நல்லா புரியுது. சரி சொல்லுங்க. பெரியவர் வந்துட்டாரு. அவருக்கு தனியா சாப்பாடு போட வேண்டாமா?"

"சோறு மட்டும் தனியா பண்ணணுமா, வெஞ்சினமும் தனியா பண்ணணுமா?"

"நான் கீழ போய் என்ன வெஞ்சினம் சாப்பிடுவாருன்னு கேட்டுட்டு வரட்டுமா?"

"கேட்டுட்டு வா. புதுசா சொன்னார்னா வாங்கிட்டு வரத்துக்கு கடைக்கு நீதான் போகணும்."

"நான் பார்த்துக்கறேன் அதை."

சமையல் அறையிலிருந்து கூடம் தாண்டி படியிறங் கினாள். மறுபடியும் அண்ணியை நோக்கி வந்தாள். கைகளை பிடித்துக் கொண்டாள்.

"என்னடி என்னாச்சு?"

"ரொம்ப நன்றி."

"கடவுளே, போ. போய் வேலையை கவனி."



சீனுவாசய்யருக்கு தனியே சோறு மட்டும் வடித்தார்கள். கத்தரிக்காய் கூட்டு விருப்பம் என்று அவர் சொல்ல, இரண்டு வீடு தள்ளி இருக்கிற கடையில கத்தரிக்காய் வாங்கி வந்து சிறிதாக நறுக்கி பத்தே நிமிடத்தில் கொடுக்க, அண்ணி கூட்டு செய்து இறக்கினாள்.

கடலைப் பருப்புகள் நிறைய முழித்துக் கொண்டு நிற்க கத்தரிக்காய் வாசனையுடன் இருந்தது.

சீனுவாசய்யர், முருங்கைக்காய் கீரைக் குழம்பும், கத்தரிக் காய் கூட்டும், தக்காளி ரசமும் விரும்பி சாப்பிட்டார். மோர் நிறைய ஊற்றிக் கொண்டு உறிஞ்சி குடித்தார். முகம் துடைத் துக் கொண்டு கட்டிலுக்கு வந்தார்.

வெற்றிலையும் பாக்கும் அண்ணி அருகே வந்து வைத்தாள்.

"நல்லாயிருந்துதாங்க சாப்பாடு?"

"அற்புதமா இருந்தது. ரொம்ப ஆரோக்கியமா இருந்தது. நிறைய அன்பு இருந்தது."

"கேலி பண்றிங்களாய்யா?"

"இல்லைம்மா. ஒரு சாப்பாடு ருசியா இருந்ததுங்கறது அதனுடைய உப்பு, உறைப்பு கலவையினால் அல்ல. அந்த உப்பு, உறைப்பு கரைப்பு நல்லா இருக்கணும்னா உள்ள அன்பு இருந்தாதான் சரியா வரும். சாப்பாட்டுல அன்பு இருந்ததும்மா. அதனால ரொம்ப ருசியா இருந்தது."

"வீட்ல பூஜை புனஸ்காரம் எதுவும் செய்யமாட்டீங்களா?"

"ஒரு பூஜையும், ஒரு புனஸ்காரமும் கிடையாது. சும்மா வெறுமனே உள்ளுக்குள்ள இருக்கற என்னோட துடிப்பை பார்த்துகிட்டு உட்கார்ந்திருப்பேன். அது ஏதாவது சொல்லும். எப்போவாவது கொஞ்ச நேரம் பாட்டுபாடுவேன். அப்போவும் ஏதாவது தெரியும்."

"ஐயா, இதுக்கு முன்னாடி என்ன வேலை செய்துகிட்டிருந்தீங்க?"

"என்னென்னமோ வேலை செய்துகிட்டிருந்தேன். எல்லாத்தையும் நிறுத்தியாச்சும்மா."

"அம்மா ஒண்ணும் சொல்லலீங்களா?"

"எந்தம்மா?"

"உங்க மனைவி."

"எது பத்தி?"

"இப்படி ஊர் ஊரா கிளம்பறதைப் பத்தி."

"சகல சந்தோஷமா வழியனுப்பி வச்சா."

"எப்படி அப்படியொரு பொண்டாட்டி நினைப்பா?"

"அம்மா, நான் இருந்தா எனக்குன்னு ஏறி இறங்கி குதிச்சு உதவி செய்யணும். என்னை கவனிக்கணும். என்னை கவனிக்கிற வேலை இல்லை. அவளை கவனிக்கறதுக்குன்னு ரெண்டு மருமகள் இருக்காங்க. அதனால ஊர் அக்கப்போர் பேசி பரம சந்தோஷமா வாழ்க்கை நகருமே தவிர இதைப் பத்தி அக்கறையில்லை."

"சாப்பாட்டுக்கு என்ன பண்ணுவீங்கன்னு நினைக்கலையா?"

"இல்லைம்மா. எங்க போனாலும் எனக்கு சோறு போடுவாங்கன்னு அவளுக்குத் தெரியும்."

"எப்படித் தெரியும்?"

"என்கூட அவளும் இந்த மாதிரி கிளம்பி வந்திருக்கா. கேரளாவுல இருக்கற திருவனந்தபுரம் பத்மநாப ஸ்வாமி கோயிலுக்குப் போனோம். யாரையும் தெரியாது. வந்து இறங்கி பஸ்ஸ்டாண்டில் நிக்கரே.ாம். நல்ல பசி. ஒரு டீக்கு ஆர்டர் பண்ணி திரும்பறபோது, வெள்ளை சட்டை வெள்ளை வேட்டி போட்டுகிட்டு நாலு பிரம்மச்சாரி பசங்க வந்து எங்க



ளுடைய ஆசிரமத்துக்கு வரணும். அங்க வந்து தங்கணும்னு சொன்னாங்க. யாரப்பா நீ, யாரையோ தப்பா புரிஞ்சுண்டிருக்க. நான் மெட்ராஸ்லேர்ந்து வரேன், 'உங்களோடது திருப்பதி வெங்கடாஜலபதி பேரான்னான்.' என் பேர் வெங்கடாஜலபதி பேர் இல்லைப்பா. என்பேர் சீனுவாசன்னேன். சீனுவாசன்தானே திருப்பதி வெங்கடாஜலபதி பேரு. வாங்க அப்பன்னு கூட்டிண்டுபோய் மூணு நாள் அவங்க ஆஸ்ரமத்துல தங்க வச்சு வேளாவேளைக்கு டிபன் காபி சாப்பாடு போட்டு கைகால் பிடிச்சுவிட்டு துணியெல்லாம் தோய்ச்சு உலர்த்தி ராத்திரி கொசு கடிக்காம இருக்கறதுக்கு வத்தி கொளுத்தி வச்சு விசிறி அடாடா, ராஜ உபசாரம். தினம் முணு வேளை பத்மநாப ஸ்வாமி தரிசனம். நாங்க கிளம்பறோம்னு சொன்ன போது திரும்பிப் போற டிக்கெட்டும் அவங்களே எடுத்துக்கொடுத்தாங்க. ஏண்டாப்பா... அப்படின்னு கேட்டேன். எங்களுக்கு தோணிச்சு. நாலு பேருக்கும் தோணுச்சு. அதனாலதான் உங்களைப்போய் பார்த்து கூட்டிண்டு வந்தோம்."

"அது என்னா இடங்க?" ஆவலாக மாணிக்கவல்லி கேட்டாள்.

தாழ்த்தப்பட்ட சமூகத்தினருடைய ஆசிரமம். அவங்க குரு பெரிய மகான். மிக நல்ல மனிதர். ரொம்ப அற்புதமான ஆசிரமம் அது. அதே மாதிரி நானும் என் மனைவியும் கோயம்புத்தூர் போனோம். காலையில அஞ்சரை மணிக்கு இறங்கறோம். வெளிய நின்ன ஒரு கார்காரருகிட்ட இங்க ஏதாவது சத்திரம் இருக்கா தங்கறதுக்கு அப்படின்னு கேட்டேன். சத்திரம்னு இல்லை. ஹோட்டல்ஸ் இருக்கு அப்படின்னாரு. ரொம்ப குறைஞ்சு வாடகையில என்ன ஹோட்டல் கிடைக்கும் அப்படின்னேன். எவ்வளவு குறைஞ்ச வாடகை அப்படின்னு கேட்டார். நான் பழைய நினைப்புல பத்து ரூபா, பதினஞ்சு ரூபான்னு சொன்னவுடனே வாய்விட்டு சிரிச்சார். அப்படியொரு ஹோட்டல் எனக்கு இருக்கறதா தெரியலை. குறைஞ்ச

பட்ச வாடகை கூட இருநூறு ரூபான்னு நினைக்கறேன். உங்களுக்கு எங்க போகணும் அப்படின்னாரு. இல்ல, கோயம் புத்தூர்ல உட்கார்ந்து நாலு இடங்கள் சுத்திப் பார்க்கணும். அப்படின்னு சொன்னேன். என் வீட்டுக்கு வாங்கன்னு கூட்டிட்டுப் போனார். அவர் வீட்ல பெரிய விசேஷம். ஏதோ ஹோமம் பதினஞ்சு பேர் உட்கார்ந்து பூஜை பண்றாங்க. மூணு நாள் பூஜை. அந்த மூணு நாளும் எங்களுக்கு சாப்பாடு, மரியாதை, சால்வை, வேட்டி, புடவை. இப்படித்தான் நடக்கு தம்மா."

"கடவுள் அருளா?"

"ஆமாம்மா. வேற என்னவா இருக்க முடியும்?"

"எனக்கும் இந்த மாதிரி போகணும்னு ஆசைதான். ஆனா, மனசுல தைரியம் இல்லை."

"நம்பிக்கையில்லைன்னு சொல்லுங்கம்மா. அப்படி போய் இறங்கறதுக்கு அடிப்படையில ஒரு நம்பிக்கை வேணும்."

"ஏங்க, எனக்கொரு கேள்வி வருது" மாணிக்கவல்லி அருகே உட்கார்ந்து கைகட்டிக்கொண்டு கேட்டாள்.

"கேளு மாணிக்கவல்லி."

"ஏதாவது ஒரு ஊருக்குப்போய் அனாதையா ஒண்ணுமே பண்ண முடியாம தவிச்சுருக்கிங்களா?"

"ஆஹா... அப்படியும் நடந்திருக்கு."

"எப்படிங்க?"

"மதுரைக்கு போனேன். யாரும் கூப்பிடலை. யாராவது கூப்பிடுவாங்கன்னு ஜங்ஷன்லயே உட்கார்ந்து வெறுமனே கையில இருக்கற காசுக்கு டீ சாப்டுண்டிருந்தேன். பகல் மூணு மணி வரைக்கும் யாரும் கூப்பிடலை. ரொம்ப பசி, தாங்கவே யில்லை. பன்னெண்டு ரூபா அம்பது பைசா கொடுத்து ஹோட்டல்ல அளவு சாப்பாடு வாங்கி சாப்பிடறதுக்கு உட் கார்ந்தேன். பட்டை சாதம் இலையில போட்டா உதிர்த்துட்டு



பார்க்கறேன். பட்டை சாதத்துக்குள்ள விரல் நீள கரப்பான் பூச்சி. அந்த சர்வரும் பார்த்துட்டான். இருங்க இருங்க வேற சாப்பாடு கொண்டு வரேன்னு சொன்னான். ஹோட்டல் ஓனர் வந்து பார்த்தாங்க. நான் எழுந்தேன். கை கழுவினேன். தோள்ல பையை மாட்டிகிட்டு வெளிய போயிட்டேன். வந்து கெஞ்சினாங்க. சாப்பிடுங்கய்யா தப்பாகிப் போச்சு. சரி பண்ணிட்டோம்னாங்க. அப்படியெல்லாம் ஒரு எண்ணமு மில்லை. என்னை சாப்பிடாதேன்னு கடவுள் சொல்றாரு. அதனால சாப்பிடாம இருக்கேன் அப்படின்னு சொல்லி மறு படியும் போய் உட்கார்ந்து இன்னொரு டீ சாப்பிட்டேன். ராத்திரி ஒன்பது மணிக்கு ஒரு ஆள் வந்து வீட்டுக்கு வாங்கய்யா நான் சாப்பாடு போடறேன்னான். நீ யார் தம்பின்னு கேட்டேன். காலைலேர்ந்து உங்களை பார்த்துட்டே இருக் கேன். கூப்பிடணும்னு தோணுது. வேண்டாம்னு தோணுது. ஏன் தம்பி கூப்பிடலை அப்படின்னு கேட்டேன். நீங்க ஹோட் டலுக்கு சாப்பிட போயிட்டீங்க. சரி நாம கூப்பிடற நேரத்துக்கு ஹோட்டல் சாப்பாட்டுக்கு போயிட்டாரு அப்படின்னு நினைச்சு நானும் டோக்கன் வாங்கி தள்ளி உட்கார்ந்தேன். நீங்க இலையை மூடிட்டு அப்படியே எழுந்து போயிட்டீங்க. நான் போகலை. என்னா என்னா எதுக்குப் போறாருன்னு கேட் டேன். யாரும் பதில் சொல்லலை. நான் சாப்டுட்டு வந்தேன். அப்புறம் உங்களை தேடினேன் காணோம். நீங்க எங்கயோ இடம் மாறி உட்கார்ந்திருந்தீங்க. வீட்டுக்கு போயிட்டு மறுபடி யும் உள்ளுக்குள்ள தொந்தரவு தாங்காத இங்க வந்து பார்த்தா இங்கயே உட்கார்ந்திருக்கீங்க. எங்க வீட்டுக்கு வாங் கய்யா'ன்னு சொன்னான். அவன் வீட்டுக்கு போனேன். ஒரு நாள் தங்கினேன். மதுரை கோயில் சுற்றிப் பார்த்தேன். என்னை வண்டி ஏத்தினான். மறுபடியும் வீட்டுக்கு வந்துட் டேன்."

"எதனால இப்படி தப்பா நடந்தது?"

"என்னுடைய கர்வம்."

"என்ன கர்வம் உங்களுக்கு?"

"எவனாவது வருவான். இன்னிக்கு நல்ல சோறு சாப்பிடணும். பசிக்குது. இதைப் பண்ணி போடச் சொல்லணும் அப்படின்னு ஒரு மூணு நாலு தடவை உள்ள நினைச்சேன். பட்டினி போட்டார் கடவுள்."

"அப்படி நினைச்சது தப்புங்களா?"

"அவர்கிட்ட எல்லாத்தையும் விட்டுட்டு இருக்கறதுக்கு தெரியலையே? அப்போ அந்த வேலையை பண்ணாத்தானே புரியும்?"

"பசியில மயக்கமாயிட்டிருந்தீங்கள்னா?"

"மயக்கம் போல வந்தது. ஆனா, கடவுள் விட மாட்டார்" என்று உறுதியாகச் சொன்னார்.

மாணிக்கவல்லியின் மரக்கட்டிலில் சீனுவாசய்யர் தலைக்கு தலைகாணி வைத்துக்கொண்டு ஒரு குழந்தை போல் தூங்கினார்.

முதலில் கொடுத்த தலைகாணியை சற்று நேரம் வைத்திருந்து பிறகு எழுந்திருந்து மாணிக்கவல்லியைக் கேட்டு இன்னும் மெத்துனு தலைகாணி கொடேன். இது ரொம்ப கல் மாதிரி இருக்கே என்று சொல்ல, மேலே போய் அண்ணன் மகளுடைய தலைகாணிய வேறு உறை மாற்றி எடுத்து வந்து மாணிக்கவல்லி அவருக்கு தலையில் அண்டக் கொடுத்தாள்.

"ஆங்... இது நல்லாயிருக்கு" என்று இரண்டு முறை தலையை உருட்டி தலைகாணியின் மென்மையை உணர்ந்தார்.

சீனுவாசய்யர் புன்னகையோடு நன்றியைச் சொன்னார்.

"கிழவருக்கு வயசானாலும் சொகுசு தேவைப்படுது, சின்ன வயசுல ஷோக்காளியா இருந்திருப்பார் போல" அண்ணி படியேறும் போது முணுமுணுப்பாய் பேசினாள்.

மாணிக்கவல்லி அதற்கு எந்தப் பதிலும் சொல்லவில்லை.



மறுபடியும் மாடிக்குப்போய் விசிறியை எடுத்து வந்து மெல்ல விசிறி விட்டாள். விசிறி விட்ட சிறிது நேரத்திலேயே சீனுவாசய்யர் மெல்லிய குறட்டையோடு தூங்குவதை உணர முடிந்தது.

மேலே ஒரு மெல்லிய போர்வையை போர்த்தி விட்டு பெடஸ்டல் ஃபேனை அவர் பக்கம் நகர்த்தி வைத்து விட்டு, மாணிக்கவல்லி சாப்பிடப்போனாள்.

நான்கு மணிக்கு காபியோடு அவருக்கு அருகே போக, காபியின் வாசனை பட்டு மெல்ல அவர் புரண்டு படுத்தார். எழுந்து உட்கார்ந்தார்.

"அட... உங்க வீட்ல கூட வாசனையா காபி போடுவீங்களா" என்று ஆவலோடு விசாரித்தார்.

"ஏங்கய்யா அப்படி கேட்கறீங்க?"

"ஏதோ தண்ணி காபியா கொடுக்கப் போறீங்களோன்னு கவலையா இருந்தது. நல்ல வாசனையா இருக்கே. இரு. வாய் கொப்புளிச்சுட்டு வந்துடறேன்."

சீனுவாசய்யர் எழுந்து நின்று சற்றுத் தள்ளாடி வேட்டியை இறுக்கிக் கட்டிக் கொண்டு மெல்ல நடந்து முற்றத்திற்கு பக்கத்தில் இருக்கிற குழாயடிக்குப் போய் முகம் அலம்பி வாய்க்கொப்புளித்து துண்டின் நுனியை ஈரத்தில் நனைத்து அதைப் பிழிந்து உடம்பெல்லாம் துடைத்துக்கொண்டு ஒரு குளுமையான பார்வையோடு கூடத்திற்கு வந்தார். பையிலிருந்து விபூதிப் பொட்டலம் பிரித்து எடுத்து நெற்றியில் பூசிக்கொண்டார். உடம்பெல்லாம் விபூதியை தேய்த்துக் கொண்டார். சிவோஹம் என்று உரக்கச் சொன்னார்.

மாணிக்கவல்லியின் பூஜையறையை நோக்கி கையெடுத்துக் கும்பிட்டார். ஆற்றிய காப்பியை வாயிற்கொண்டு உறிஞ்சிக் குடித்தார்.

"இங்க கல்யாண பசுபதீஸ்வர்னு ஒரு கோவில் இருக்காமே. அங்க போகலாமா மாணிக்கவல்லி" என்று ஆவலாகக் கேட்டார்.

"போகலாங்கய்யா. அடுத்தது என்ன பண்ணணும்னு கேட்கணும்னு நினைச்சேன். நீங்களே கோயிலுக்கு போக லாம்னு சொல்லிட்டீங்க."

"கோயில் இங்கேயிருந்து ரொம்ப தூரமா?"

"ஆமாங்கய்யா. கொஞ்சம் தூரம்தான். ஆட்டோல போயிட லாமில்லை."

"ஆஹா... ஆட்டோதான் வசதி. நடக்க சொல்லிடாத. என்னால ரொம்ப தூரம் நடக்க முடியாது."

"இல்லீங்கய்யா. நான் சொல்ல மாட்டேன்."

"கோயில் ரொம்ப பிரம்மாண்டமா?"

அடுத்த கேள்வி கவலையோடு வந்தது.

"இல்லைய்யா. அது பெருசுமில்லை. சிறிசுமில்லை. ஒரு நடுவாந்திரமான கோவில்."

"எப்போ கிளம்பலாம்?"

"மேல அண்ணாரு சாப்டுகிட்டிருக்காரு. அவரை கீழ வந்து உங்களை பார்க்க சொல்லியிருக்கேன். பார்த்த பிறகு கிளம்பிடலாம்."

யாரோ படியிறங்கி வருவதாக குரல் கேட்டது.

மாணிக்கவல்லி சுவர் பக்கம் ஒதுங்கி, ஆவலாக வாசலைப் பார்த்தாள்.

உயரமாயும் மெல்லியதாயும் மாணிக்கவல்லி சாயலோடும் ஒரு ஐம்பது வயது மனிதர் உள்ளே நுழைந்தார்.

சீனுவாசய்யரை நோக்கி கை கூப்பினார்.

"வாங்கய்யா. நீங்க வந்திருக்கறதா வீட்ல சொன்னாங்க. நல்லா ஓய்வெடுத்தீங்களா?"



"ஆச்சு."

சீனுவாசய்யர் ஒரே வார்த்தையில் சொன்னார்.

"ஐயாவுக்கு மெட்ராஸுங்களா?"

"ஆமாம்."

"மெட்ராஸ்ல எங்கய்யா?"

"மயிலாப்பூர்."

"கோயிலுக்கு கிட்டங்களா வீடு?"

"இல்லை. கொஞ்சம் தள்ளி. இது விலாசம்."

தோளிலிருந்த பையை துழாவி அதிலிருந்து ஒரு சிறிய தட்டையான அலுமினியப் பெட்டியை எடுத்து அதிலிருந்து ஒரு விசிட்டிங் கார்டு உருவி அண்ணனிடம் நீட்டினார்.

"அடடே... ரிஸர்வ் பாங்க்ல இருந்தீங்களா?"

"ஆமாம்."

"கருவூருக்கு என்ன வேலையா வந்திருக்கீங்கய்யா?"

"ஒரு வேலையும் இல்லை. வந்தவுடனே எதாவது வேலை மாதிரி வரும். அல்லது செய்யணும்னு தோணும். அதை செய் வேன்."

"இப்படி நாலு ஊர் பார்க்கறதையே தொழிலா வச்சுருக் கீங்களா?"

"இதுக்கென்ன தொழில்னா பேரு, ஒரு சந்தோஷம். தொழில்ல நூத்துக்கு தொண்ணூறு பேருக்கு சந்தோஷம் இருக்காது. அலுப்புதான் வரும். நான் இதை சந்தோஷமா செய்யறேன். அதுவும் தவிர இதுல ஒரு லாபமும் இல்லை. இதுல காசு சம்பாதிச்சு எனக்கு ஆக வேண்டியது எதுவு மில்லை. இப்படி ஊர் ஊரா சுத்தறதுக்கு வேண்டிய காசை என் பசங்க தராங்க."

"அப்போ ஐயா துறவியெல்லாம் இல்லைங்களா?"

"என்ன, என்னை துறவியாக்கிப் பார்க்கணும்னா உங்களுக்கு ஆசை?"

"இல்லீங்க. நீங்க என்னான்னு தெரிஞ்சுக்க கேட்டேன்."

"அறுவது வயசு வரைக்கும் பொண்டாட்டி புள்ளைங்களோட வாழ்ந்துட்டு அப்புறம் அறுவத்தோராவது வயசுல துறவின்னா கொஞ்சம் தமாஷா இல்லை?"

"ஆமாங்க. அது வேடிக்கைதான்."

மாணிக்கவல்லியின் அண்ணன் பேசினார்.

சட்டென்று அங்கே ஒரு மௌனம் நிலவியது.

"நீங்க போன விஷயம் என்னாச்சு?"

சீனுவாசய்யர் கண்களை இடுக்கிக்கொண்டு கூர்மையாக மாணிக்கவல்லியின் அண்ணனைப் பார்த்துக் கேட்டார்.

"அது ஒண்ணுமில்லைங்க. நம்ம சொந்தக்காரங்களுக்கு உடம்பு சரியில்லை. உடனடியா ஆஸ்பத்திரிக்கு அடிச்சு பிடிச்சுகிட்டு போனாங்கன்னு சொன்னாங்க. நானும் போய் பார்த்தேன். நெஞ்சுவலி. ஹார்ட் ப்ராப்ளம்னு நினைச்சு இன்டென்ஸிவ்கேர்ல போட்டாங்க. ஒரு மணி நேரம் கழிச்சு டாக்டர் வந்து பார்த்துட்டு எல்லாம் சரியா இருக்கு. இது எதுவோ வாயு உபத்திரவம்னு சொல்லிட்டாரு. அதே போல ஒரு மாத்திரை கொடுத்தவுடனே வாயு நல்லா பிரிஞ்சு சரியாயிட்டாரு."

"ஐயா இதை அப்பவே சொல்லிட்டாங்க."

மாணிக்கவல்லி வேகமாக அண்ணனுக்கு சீனுவாசய்யரின் மகிமையை எடுத்துரைத்தாள்.

மாணிக்கவல்லியின் அண்ணியும் சற்று ஆச்சரியத்தோடு சீனுவாசய்யரைப் பார்த்தாள்.

"அதெப்படிங்கய்யா கரெக்டா வாயு உபத்திரவம்னு சொன்னீங்க?"



"தோணும். சில சமயம் அப்படித் தோணும். தோண்றது சரியா இருக்கும்."

"எல்லா சமயமும் சரியா தோணுங்களா?"

"விஷயத்தை கடவுள்கிட்ட விட்டுட்டா சரியா தோணும். ஆனா நம்ம புத்தி குரங்கு புத்தியாச்சே. நம்ம இஷ்டப்படி வாழ்க்கையைத் திருப்பணும்னு ஆசைப்படுவோமே. அப்போ உள்ளுக்குள்ள மனசு என்ன பேசுது, அந்தக் குரல் என்ன சொல்லுது அப்படின்னு கேட்காத நம்முடைய ஆசைப்படி பேசிடுவோம். தப்பா வந்துடும்."

"எதுவும் ஆசையில்லாத இருந்தா உள் குரலை கேட்கலாம்னு சொல்றீங்களா?"

"ஆசை இல்லாத இருந்தா என்னென்னமோ பண்ணலாம்னு சொல்றேன்."

மாணிக்கவல்லி கேட்டாள்.

"என்னென்னமோன்னா?"

"அது இப்போ உனக்கு சொல்ல முடியாது மாணிக்கவல்லி. நேரம் வரும்போது உனக்கு சொல்றேன். ஆசையில்லாம இருக்கறதுங்கறது வெறும் வார்த்தை இல்லை. அது மகத்தான நிலை. கோயிலுக்கு போகலாமா?"

சீனுவாசய்யர் ஆவலாகக் கேட்டார்.

மாணிக்கவல்லியின் அண்ணன் எழுந்து நின்று கை கூப்பினார்.

"வேணும்னா நானும் வரட்டுங்களா?"

"நீங்க வந்தாலும் சரி. வராட்டாலும் சரி. உங்களுக்கு வேலை இருந்தா அந்த வேலையை பார்க்கப் போகலாம். நானும் மாணிக்கவல்லியும் மட்டும் போறோம். இல்லை, மாணிக்கவல்லிக்கு துணையா எனக்கு ஆதரவா வரணும்னு தோணிச்சுன்னா அப்படியும் வரலாம்."

"இல்லைங்க. நேத்து ராத்திரி அந்த நண்பருக்கு துணையா படுத்துக்கலாம் அப்படின்னு ஒரு எண்ணம். அவங்க வீட்டு மனுஷாள் உதவியா இல்லை. வேற யாரும் வேணாம். நீ வாடான்னு ரொம்ப அழுதுகிட்டே அவரு கேட்டாரு. நான் சரின்னு சொல்லிட்டேன். காலையிலயே போயிட்டேனா மத்தியானம் தூங்கலையா. கொஞ்சம் இழுத்தாப்போல இருக்கு."

"ஐயோ, முதல்ல படுத்துண்டு தூங்குங்க. அப்போதானே ராத்திரி கண்முழிச்சு உதவியா இருக்கலாம். நீங்க அங்கபோய் தூங்குனீங்கன்னா பிரச்சினை ஆயிடும்."

சீனுவாசய்யர் சாதாரணமாகச் சொன்னார்.

ஆனால், அந்த மூவருக்குமே அதில் ஏதோ விஷயம் இருப்பது போல் பட்டது. அவர்கள் கேட்க விருப்பப்படாமல் இருந்தார்கள்.

மாணிக்கவல்லியும் சீனுவாசய்யரும் வெளியே கிளம்பி ஆட்டோவுக்காக காத்திருந்து ஆட்டோ வந்ததும் கை நீட்டி ஏறினார்கள்.

அந்தத் தெருவில் நாலைந்து குடித்தனங்கள். மாணிக்க வல்லி ஒரு கிழவரோடு போவதை அதிசயமாக வேடிக்கை பார்த்தார்கள்.

"அடேயப்பா... இவ்வளவு பெரிய கோபுரமா? பெரிய கோயிலா இருக்கும் போல இருக்கே."

மிகுந்த சந்தோஷத்தோடு கருவூரில் இருக்கும் கல்யாண பசுபதீஸ்வரர் கோவிலை நோக்கி சீனுவாசய்யர் ஆச்சரியத் துடன் வினவினார்.

கோபுரத்திற்கு அருகே போய் அந்த வலப்பக்கம் பசுமாடு சிவலிங்கத்தின் மீது பால் பொழிந்து கொண்டிருந்த சிற்பத்தை ஆவலாகப் பார்த்தார். தடவிக் கண்களில் ஒற்றிக் கொண்டார்.



"பசுபால் பொழிந்து சிவலிங்கம் தோன்றியதுன்னு நிறைய கோயிலுக்கு ஐதீகம். நிறைய கோவில்ல அப்படித்தான் தலவரலாறு."

"இதுக்கு ஏதாவது முக்கியத்துவம் உண்டாய்யா?"

மாணிக்கவல்லி ஆவலோடு கேட்டாள்.

"ஒரு நாலு கால் பிராணி. ஐந்து அறிவுள்ள ஒரு ஜந்து. அதுவே வழிபட்ட இறைவன். நீ என்ன பண்ணப் போறேன்னு கேள்விதான்."

"கடவுள் உண்டாய்யா?"

கோவிலுக்குள் காலடி எடுத்து வைக்கும்போது மாணிக்க வல்லி கேட்டாள்.

நின்று வாய்விட்டு சீனுவாசய்யர் சிரித்தார்.

"உன்னை நீயே கேட்டுக்க வேண்டிய கேள்வியை என்னை கேட்கற. கேள்வியே தப்பு. கடவுளை பார்த்திருக்கியா அப்படின்னு கேளு. நான் பார்க்கணும் என்ன பண்றதுன்னு பேசு. அதை விட்டுட்டு உண்டாய்யான்னு அடிப்படையையே அசைச்சின்னா என்ன அர்த்தம்?"

"இல்லைய்யா. அடிப்படையா எல்லா மனுஷாளுக்குள்ளும் அந்தக் கேள்வி இருக்குல்ல."

"செவ்வாய் கிரகம்னு ஒண்ணு இருக்கா, நீ பார்த்திருக்கியா அப்படின்னு கேட்டா நீ இல்லைன்னுதான் பதில் சொல்லுவ. யாரோ பார்த்திருக்காங்க. யாரோ அதன் குணநலன் சொல்லியிருக்காங்க. நீ அதை நம்பற. அதே மாதிரிதான் யாரோ பார்த்திருக்கற கடவுளை நீயும் பார்க்கலாம்னு சொல்றாங்க. நீ அதை பார்க்கறதுக்கு என்ன வழி உண்டோ அந்த வழியில ஈடுபடு. செவ்வாய் கிரகம் பார்க்கணும்னா என்ன பண்ணுவ? அதுக்குன்னு ஒரு தொலைநோக்கி கண்ணாடி, அது வழியா பார்க்கணும்னு எங்கயோ தேடிப் போவ இல்லை, அந்தத் தேடல் தான் இங்கயும் கேட்கறாங்க."

"அவங்க சும்மாவும் சொல்லியிருக்கலாமில்லை?"

"என்ன... எதுக்காக சொல்லணும்? நம்ம பெரியவங்களுக்கு உங்கிட்ட பொய் சொல்லி என்ன ஆகணும்? கடவுளை நம்பறதுனால அவருக்கு என்ன லாபம். நம்பாததுனால என்ன நஷ்டம்?"

"இல்லையே. இப்படி கோயில், குளம்னு வியாபாரம் ஆகுமே."

"இதோ பார். நீ ஏமாத்தறவனைப் பத்தி பேசற. கடவுளை கண்டுபிடிச்சவனைப் பத்தி பேசற. கடவுளை கண்டவன் ஏமாத்தறவனோட சம்பந்தமில்லை. ஏமாத்தறவன் எல்லா இடத்துலயும் இருக்கான். கடவுளே இல்லைன்னு சொல்ற இடத்துல கூட லஞ்சம் வாங்கறவன், ஏமாத்தறவன், காட்டிக் கொடுக்கறவன், முதுகுல குத்தறவன்னு நிறைய பேர் உண்டு. கடவுளே இல்லைன்னு ஒரு கட்சி ஆரம்பிச்சு அதுல கோடி கோடியா பணம் சேர்த்தவனும் உண்டு. பணம் சேர்க்கறதுக்காக பத்து பேரை பலி போட்டவனும் உண்டு. கடவுள் இல்லைன்னு நீ சொல்ல ஆசைப்பட்டா தேடி சுத்தி பார்த்துட்டு இல்லைன்னு சொல்லு. இந்த இடத்துல உன் தோடு விழுந்து எங்கயோ காணாமப் போச்சு. தேடு தேடுன்னு தேடற. இங்கதான் இருந்தது. இங்க தான் விட்டுட்டேன்னு சொல்ற. இடம் முழுக்க தேடியாச்சு. கிடைக்கலை. அதுக்கப்புறம்தான் நீ, அது இல்லை அப்படின்னு சொல்ற. அதே போல கடவுள் இல்லைன்னு சொல்றதுக்கு முன்னாடி கடவுளை தேடி இருக்கணுமில்லை?"

"நிறைய பேர் தேடி எதுவும் கிடைக்காததுனால கடவுள் இல்லையோன்னு ஒரு சந்தேகம்."

"அப்படியில்லை. யாரெல்லாம் தேடினாங்க, எப்படி தேடினாங்க அப்படின்னு கேள்வி வரும். தேடறா மாதிரி ஏமாத்து வேலை பண்ணியிருந்தா, பாவலா காட்டியிருந்தா கடவுள் கிடைக்க மாட்டாரு. தோடு விழுந்த இடத்துல நானூறு பேர்



உள்ள புகுந்து தேடினா என்னா கிடைக்கும்? ஒண்ணும் கிடைக்காது. பொய்தான் மிஞ்சும். தோடே விழலை அப்படின்னு சொல்லிட்டுப் போயிடுவான். தோடுன்னு ஒரு விஷயமே இல்லைன்னு இன்னொருத்தன் சொல்லுவான். அப்படித்தான் நடக்கும். கடவுள் இல்லைன்னு சொல்றத வேகமா நம்பறதுக்கு ஆசைப்படற போது இருக்குன்னு சொல்றத நம்பறதுக்கும் ஆசைப்படணுமில்ல. நான் என்ன சொல்றேன்? நீ மற்றவன் சொல்றத கேட்காத. கடவுள் என்பது இங்குள்ள ஒவ்வொரு மனிதனும் தேட வேண்டிய விஷயம். தேடிக் கண்டுகொள்ள வேண்டிய விஷயம். அதைக் காட்டவும் முடியாது. காட்டி விக்கவும் முடியாது. பாம்புக்கும் கீறிக்கும் சண்டை விடப் போறேன்னு உடுக்கை அடிச்சு கூவற மோடி மஸ்தான் கடைசி வரைக்கும் பாம்புக்கும், கீறிக்கும் சண்டை விடமாட்டான். ஃப்ராடுன்னு தள்ளிப் போனா ரத்தம் கக்கி செத்துப் போவேன்னுவான். அதுதான் இங்க இருக்கற சில பேர் பண்ணிகிட்டிருக்காங்க. மோடி மஸ்தான் வேலை செய்யறாங்க. அவங்களை பார்த்துட்டு கடவுள் இல்லைங்கற முடிவுக்கு வராத. கடவுள் என்பது அவங்க காண்பிச்சு நீ பார்க்கற பொருள் இல்லை. நீ உனக்குள் தேடுகிற பொருள்.

குரு யார். கடவுள் எப்படித் தேடறதுன்னு வழி காட்டறவர், கடவுளைக் காட்டறவர் அல்ல."

"கடவுளை அடைய வழிகாட்டறேன்னு சொல்லி ஏமாத்து வேலை செய்யலாமில்லை?"

"ஆஹா... தாராளமா செய்யலாம். அப்படி செய்யறவனுங்களும் இருக்காங்க. நான் சொல்றேன். இதுதான் பெஸ்ட் வழி அப்படின்னு சொல்லி சுத்தி ராமா ராமான்னு கும்மியடிக்க சொல்வாங்க. பொங்கல்வடை சாப்புட்டு தூங்கப் போயிடுவாங்க. மறுபடியும் மறுநாள் சாயந்தரம் வந்து ராமாராமான்னு கும்மியடிப்பாங்க. ஆபீஸ்காராளுக்கு ஏத்த வகையில உங்களுக்கு சௌகரியமா ஆறுலேர்ந்து எட்டு வரைக்கும் பஜன் வச்சுருக்கோம். அப்படின்னுவாங்க. கூப்பிடறபோது நம்ம

ஜாதி ஆளா கூப்பிடுங்க அப்படின்னு ஒரு சின்ன வட்டம் போட்டுப்பாங்க. அங்க காசு கலெக்ட் பண்ணுவாங்க. கணக்கு எழுதற வேலைக்கு பதிலா கடவுள் வேலை. அதுல சம்பாத்தியம். தெரியாத்தனமா நூறு பேர் இருநூறு பேர் கூடிட்டான்னு வச்சுக்கோ அவ்ளோதான். அவன் பேரு குரு. நூறு பேர் சேர்ந்தா குரு. முந்நூறு பேர் சேர்ந்தா பெரிய குரு. மாலையும் கழுத்துமா எங்க வேணாலும் உட்கார்ந்துண்டிருக்கலாம்."

"யார் நல்ல குரு?"

"உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதவர், பிறர் துக்கத்தை, சந்தோஷத்தை தன்னுடையதாக நினைப்பவர், தானற்று இருப்பவர். தன்னை முழுமையாக கடவுளிடம் அர்ப்பணித்தவர்."

"தான் இப்படி இருக்கறதா நிறைய பேர் சொல்றாங்களே?"

"பொய். இப்படி இருப்பவன், தான் இப்படி இருப்பதாக வார்த்தைகளை சொல்லவே மாட்டான். சொல்ல முடியாது. சொல்லத் தோன்றாது. அது மிக சந்தோஷமான, மிகப் பரவசமான, மிக முழுமையான, திருப்தியான நிலை. அந்த நிலையை முகம் சொல்லும்."

"நல்ல குரு வேணும்னா என்னய்யா பண்றது?"

கோவிலுக்குள் நுழைந்து கொண்டே மாணிக்கவல்லி கேட்டாள்.

"கதறணும். உள்ளுக்குள்ள கடவுளை நோக்கி எனக்கு ஒண்ணுமே தெரியலையே. எனக்கு சரியா வழிகாட்ட ஒரு ஆள் அனுப்புன்னு கை கூப்பி கதறணும். எனக்குத் தெரியும் என்கிற அகங்காரம் வரும்போது நல்ல குரு கிடைக்க மாட்டார். போலிகளிடம் இந்த அகங்காரம் பிடித்தவர்கள் எளிதாக சிக்கி விடுவார்கள். இனம் இனத்தையே சாரும். போலி போலியையே ஆகர்ஷிக்கும். போலியான குருவும் போலியான



சீடர்களை வைத்துக் கொண்டு கொண்டாட்டமாக குடித்தனம் நடத்துவார்."

"சரியான குருவை கண்டுபிடிப்பதெப்படி?"

"அதிகம் பேசாதவர். அதிகம் சுற்றாதவர், கடவுளை எய்து கிறவரையில் ஊர் சுற்றல் அவசியம். எய்திய பிறகு ஓரிடத்தில் ஆழ்ந்து அமைதியாய் அமர்ந்து விட முடியும். இப்படி அமர்ந்தவருக்கே அடுத்தவருடைய பிரச்சினை புரியும். அயராது சுற்றிக் கொண்டு போகிறவருக்கு தன்னையும் கவனிக்க முடியாது. தன்னை கவனிக்காத வரையில் பிறருடைய சுக துக்கங்களும் தெரியாது. உலகத்தில் நல்ல குருமார்களெல்லாம் ஒடுங்கி உட்கார்ந்தவர்கள். அந்த ஒடுங்குதல் என்பது தானாக ஏற்படும். அப்பொழுது ஏற்படும் பொலிவிற்கு ஈடு இணை எதுவும் இல்லை."

மாணிக்கவல்லியும் சீனுவாசய்யரும் கல்யாண பசுபதீஸ்வரரை வணங்கினார்கள்.

அவருக்கு சாமந்திசரம் மாலையாகப் போடப்பட்டது. கை நிறைய வில்வம் கொடுக்க அதை பையில் வைத்துக் கொண்டார். மெல்ல நடந்து சௌந்தரநாயகி சன்னதிக்கு இருவரும் போனார்கள்.

"ஐயா, சௌந்தரநாயகி சன்னதி பத்தி ஒரு கதை இருக்குதய்யா."

"சொல்லு. கேட்போம்."

சீனுவாசய்யர் மாணிக்கவல்லி பக்கம் திரும்பினார்.

"ரொம்ப வருஷத்துக்கு முன்னாடி வடிவு, அப்படின்னு ஒரு அம்மா இறைவனையே திருமணம் செய்து கொள்வேன் அப்படின்னு விரதமாயிருந்து அவ அப்பா அம்மா சம்மதிக்காம அவங்களோட போராடி பிறகு ஒத்துகிட்டு அவங்க வடிவை கொண்டு வந்து கல்யாண பசுபதீஸ்வரர் சன்னதிக்கு விட, அங்க உள்ள புகுந்து மறைஞ்சுட்டாங்க அப்படின்னு ஒரு கதை இருக்குதய்யா."

"'அடடே. சூடிக்கொடுத்த சுடர்கொடி. அவ கதை ஆண்டாள் கதை."

பரவசமாய் சன்னதி எதிரே சீனுவாசய்யர் கை கூப்பினார்.

"ஆண்டாள் அம்மா கதைன்னா இவங்க ஆண்டாள்னு சொல்றீங்களா?"

"இவங்க ஆண்டாள்னு சொல்லலை. இவங்க ஆண்டாள் மாதிரின்னு சொல்றேன். ஆண்டாள் என்ன தபஸ் பண்றாங்களோ அந்த தபஸை இவங்க பண்ணாங்கன்னு சொல்றேன்."

"பாருங்க படம் வரைஞ்சு வச்சுருக்காங்க."

அவள் வரிசையாக எழுதப்பட்டிருந்த படங்களை அவருக்குக் காட்டினாள். அவருக்கு அருகே நின்று அந்தப் படங்களுக்கு கீழுள்ள வாசகங்களை படித்துக் காட்டினாள்.

கருவூரில் வெகு காலத்திற்கு முன்பு சிவநேசன் என்கிற வேடுவ இனத்தைச் சேர்ந்த ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு சிவபக்தர். அவருக்கு ஒரு பெண் குழந்தை இருந்தது. அந்தப் பெண் குழந்தைக்குப் பெயர் வடிவுடையாள்.

சீனுவாசய்யரும், மாணிக்கவல்லியும் அந்தக் கதைக்குள் நுழைந்தார்கள். தங்களை மறந்தார்கள்.

"வடிவுடை.... வடிவுடை...."

தெருவில் ஒரு பெண் குரல் கேட்டது.

சிவநேசர் கண்மூடி அமர்ந்திருந்தவர் மெல்ல கண் விழித்தார்.

வடிவுடையின் ஸ்நேகிதி யாரோ, அவளை வாசலிலிருந்து வெளியே வரச்சொல்லி, வீட்டுக்குள் பார்த்து உரத்த குரலில் கூப்பிடுவது தெரிந்தது.

"அம்மா... இங்கே வா."

கூப்பிடுகிற பெண்ணை சிவநேசர் அருகே அழைத்தார்.



"ஒன்று வடிவு என்று கூப்பிடு அல்லது வடிவுடையாள் என்று முழுவதும் கூப்பிடு. எதற்கு வடிவுவுடை. வடிவுவுடை.. என்று அவள் வடிவை உடைக்கச் சொல்கிறாய். அவள் நீண்ட நெடுங்காலம் வாழ வேண்டுமம்மா. சொல் சரியாக இருக்க வேண்டும். வேளை கெட்ட வேளையில் தவறாகப் பேசினால், தவறாகப் பேசுவது பலித்து விடும். வடிவுவுடை என்று கூப்பிடாதே. அது வடிவை உடை என்றே என் காதுகளில் விழுகிறது. தயவு செய்து வடிவுடையாள் என்று கூப்பிடு. அவள் அழகானவள் அல்லவா! அவள் மிகப் பேரழகி அல்லவா! அதனால்தான் அந்தப் பெயர் வைத்தேன்" என்று சொல்ல, வந்தப் பெண்ணுக்கு முகம் இருண்டு விட்டது. கண்களில் நீர் கோர்த்துக் கொண்டது. உள்ளிருந்து வடிவுடையாள் வெளியே வந்தாள்.

"என்னப்பா, எதற்கு என் தோழியை கோபித்துக் கொள்கிறீர்கள்?"

"கோபித்துக் கொள்ளவில்லையம்மா. ஒரு விஷயத்தை அவளுக்கு விளக்கிச் சொன்னேன். நல்ல வார்த்தைகளை எப்பொழுதும் பேச வேண்டுமல்லவா? தவறான வார்த்தைகளை சொல்லிவிடக் கூடாதல்லவா? அதுவும் உனக்கு அழகான பெயர், நல்ல பெயர் வைத்திருக்கிறேன். அதை விட்டு வடிவுவுடை என்றால் என்ன அர்த்தம்? எனக்கு நெஞ்சு வலிக்கிறதே. அதைத்தான் இவளிடம் இதமாகச் சொன்னேன். மற்றபடி எனக்கு எந்தக் கோபமும் இல்லை."

"அப்பா வடிவு என்று எதைச் சொல்கிறீர்கள்?"

"அழகுதான்."

"எந்த அழகு?"

"உன்னுடைய முக அழகு."

"அதாவது உடம்பை அழகு என்று பாராட்டுகிறீர்கள் இல்லையா? அதைக் குறித்துத்தானே எனக்கு இந்தப் பெயர் வைத்தீர்கள்? கரு... கரு... என்ற தலைமுடியும், பெரிய கண்

களும், எடுப்பான நாசியும் வடிவான முகவாயும் அழகிய உதடும் உள்ள குழந்தை என்று பார்த்து வடிவுடையாள் என்று சொன்னீர்கள் அல்லவா?"

"ஆமாம் அம்மா."

"வடிவு என்பது அதுவும் உடம்பின் வடிவு என்பது ஒரு நாள் உடையத்தானே அப்போ போகிறது. இதனை அவச் சொல்லாக நீங்கள் கருத வேண்டிய அவசியமென்ன? ஒருவர் வடிவு உடைவது நல்லதல்லவா? உடம்பின் வடிவு உடைந்தால்தானே அப்பா உள்ளத்தின் வடிவு வெளியே வரும்."

"இதோ பார் வடிவுடையாள். நீ தவறாகப் பேசுகிறாய். உன்னுடைய வயதிற்கு இந்தப் பேச்சு அதிகம்."

"இல்லையப்பா. என்னுடைய தோழி மிகச் சரியான வார்த்தை சொன்னாள். வடிவுவுடை... வடிவுவுடை... என்று கூப்பிடுகிறபோது வடிவு உடை என்று தான் எனக்கும் காதில் விழுகிறது. உன் உடம்பை சீக்கிரம் உதறு என்று தான் எனக்கு அவள் சொல்வது போல் தோன்றுகிறது."

"போதும் நிறுத்தடி."

அம்மா கோபித்துக் கொண்டு வெளியே வந்தாள்.

"உன்னுடைய தோழி ஏதோ நாகரீகமாக கூப்பிடுவதாக நினைத்துக் கொண்டு அப்பாவித்தனமாக உன் பெயரை சுருக்கிக் கூப்பிட்டு விட்டாள். அப்படிக் கூப்பிடாதே என்றே அப்பா கண்டித்தார். இதற்கு நீ ஒரு வியாக்கியானமா உடம்பு அழகு, உயிர் அழகு என்று ஏன் தத்துபித்தென்று பேசுகிறாய்? உடம்பை ஒழித்து உயிரை வெளிப்படுத்துகின்ற நேரம் உனக்கு வந்துவிட்டதா அது வரும்போது தானாக வரும். பிறந்ததே அதற்குத்தான் என்பது போல் பேசாதே. நீ வளர்ந்த பெண். பருவத்திற்கு வந்த பெண். உனக்கு பெண் கேட்டு நாலா பக்கத்திலிருந்தும் ஓலைகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆட்கள் விசாரித்துக் கொண்டேயிருக்கிறார்கள். ஊர் விசாரிக்க விசாரிக்க எங்களுக்கு வயிறு கலங்குகிறது. நல்ல



படியாக நல்ல மனிதரிடம் உனக்கு திருமணம் செய்து முடிக்க வேண்டுமே என்ற வேதனை எழுகிறது. இது நல்ல வரனோ, அது நல்ல வரனோ என்று உள்ளுக்குள்ளே மிகப் பெரிய கலக்கம் ஏற்படுகிறது. இன்னும் யாரெல்லாம் வருவார்கள் என்ற கேள்வி எழுகிறது. ஆனால் நாங்கள் எதிர்பார்க்காத இடங்களிலிருந்தெல்லாம் ஆட்கள் வருகிறார்கள். மிகப் பெரிய நிலச்சுவன்தார்கள். ஏன், கிட்டத்தட்ட அரச பரம்பரையினர் கூட உன்னைப் பெண் கேட்டு வருகிறார்கள் என்றால், அது நாம் செய்த புண்ணியம். கல்யாண பசுபதீஸ்வருடைய அருள். உன்னைச் சுற்றி என்ன விஷயம் நடந்து கொண்டிருக்கிறது என்பது தெரியாமல் நீ பாட்டுக்கு ஏதாவது உளறாதே. திண்ணையில் நல்ல வேளை யாருமில்லை. யாராவது இருந்திருந்தால் எவ்வளவு அச்சாணியமாகப் போயிருக்கும். என்ன இந்த வேடுவரின் மகள் இப்படியெல்லாம் பேசுகிறாளே என்று ஊரில் எவருக்கேனும் சொல்ல, அவர் இன்னொருவருக்குச் சொல்ல எவ்வளவு பெரிய கெட்டப் பெயர் ஏற்படும். இலையில் முள் பட்டாலும், முள் மீது இலை பட்டாலும் பாதிக்கப் படப் போவது இலைதான். ஆகவே பேச்சு மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்."

"ஏனடி... உனக்கு வாசலிலிருந்து கூப்பிடுகிற பழக்கம் எப்படி வந்தது? வீட்டுக்குள் நுழைந்து அவளை அழைத்தால் வரமாட்டாளா? ஏன் எல்லாவற்றையும் விளம்பரமாகவே செய்கிறீர்கள்."

அம்மாவும் கடிந்து கொள்ள, அவள் தோழி அழுது கொண்டே ஓடிப் போனாள்.

வடிவுடையாள் சமாதானம் செய்ய முன்னே நடக்க, அப்பா போகட்டும் விடு என்பது போல் கையமர்த்தினார்.

வடிவுடையாள் மனம் நொந்தாள். மெல்ல வீட்டுக்குள் நுழைந்தாள். அறைக்குள் புகுந்து மெல்ல அறைக் கதவை சார்த்திக் கொண்டு தரையில் குத்திட்டு உட்கார்ந்தாள். பிறகு

மெல்ல சம்மணமிட்டாள். முதுகை நிமிர்த்தினாள். மூச்சை இழுத்து விட்டாள்.

என்ன, என்ன சொல்லி விட்டார்கள் என்று மனம் இப்படி பதைக்கிறது. ஏன் வருத்தம், இந்த வருத்தம் உண்மையானதா இல்லை, நாடகமா? நான் எதற்காக வருந்துகிறேன்?

அவள் யோசிக்கத் துவங்கினாள்.

அம்மா கண்டித்ததும் மனம் நாடகம் போடுகிறது. மிகவும் வருத்தப்பட்டதுபோல அவள் தோழி முகம் பொத்திக் கொண்டு ஓடினாள். அவள் வருத்தப்பட்டது பார்த்து நானும் வருத்தப்படத்தானே வேண்டும் என்று என் முகமும் மாறு கிறது. அந்த மாறின முகம் இன்னும் அம்மாவும், அப்பாவும் வருத்தப்பட வேண்டுமென்பதற்காக இன்னும் அதிகமாகச் சுருங்கி கண்ணிலிருந்து நீர் வழிய நான் இங்கு வந்து உட் கார்ந்து கொண்டிருக்கிறேன். இது நாடகம். என்ன நடந்தது? சரியாக யோசி. நாடகம் போடுவதை உடனடியாகக் கைவிடு.

"இப்பொழுது உன் கோபம் என்ன, உன்னுடைய தோழி அப்படி அழைத்ததா?"

"இல்லை."

"உன் தோழியை உன் தகப்பனார் கண்டித்ததா?"

"அவர் ஒண்ணும் பெரியதாகக் கண்டிக்கவில்லை. சாதா ரணமாகத்தானே சொன்னார்!"

"பிறகு, நீ போய் உன் தந்தையிடம் வடிவுடை என்றால் என்ன என்று வியாக்கியானம் செய்ததா?"

"இல்லை. எனக்குத் தோன்றியதை என் தந்தையிடம் பகிர்ந்து கொண்டிருக்கிறேன். பகிர்ந்து கொள்கின்ற சுதந்தி ரத்தை என் தந்தை கொடுத்திருக்கிறார்."

"பிறகென்ன... உன் தாய் கண்டித்ததா?"

"இல்லை. அவள் கண்டித்ததும் நியாயம். அது அவள் பார்வை."

5470252



"ஒருவேளை அந்தத் திண்ணையில் யாரேனும் இருந்து இந்த வியாக்கியானத்தைக் கேட்டால் என்ன சொல்வார்கள்? ஏன் இது, இப்படி இஷ்டத்திற்குப் பேசுகிறதே. இவ்வளவு பேச்சு நல்லதல்லவே என்று தானே சொல்வார்கள்?"

"நீ என்ன அப்படிப் பேசி விட்டாய்? உன் பேச்சில் ஏதே னும் தவறு உண்டா?"

"இல்லையே. இந்த வடிவு ஒரு நாள் உடையத்தானே போகிறது. உயிரின் வடிவு சீறி எழத்தானே போகிறது."

"வடிவு உடைதல் என்றால் என்ன?"

"உடம்பு உடைதல்."

"உடம்பு உடைதல் என்றால் என்ன?"

"மரணம்."

"மரணம் எப்படி இருக்கும்? அதைக்க கண்டு ஏன் எல்லா ரும் பயப்படுகிறார்கள்? மரணமடையக்கூடாது என்கிற பேரா வல் மனிதர்களுக்கு ஏன் இருக்கிறது? மனிதர்களுக்கு மட்டும் இருக்கிறதா? எல்லா உயிர்களுக்குமா? இங்கே எதை நிரந்தரம் என்று பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்?

"மற்ற மனிதர்களைப் பற்றி உனக்கென்ன கவலை வடிவு? நீ மரணம் பற்றி என்ன யோசிக்கிறாய்? யோசி."

வடிவு மௌனமாக இருந்தாள். அவள் மனம் எந்த பதிலும் இல்லாமல் இருந்தது.

"சொல்லு. மரணம் என்றால் என்ன? உனக்கு என்ன தெரியும்? சொல்."

மறுபடியும் மனம் மௌனமாக இருந்தது.

மரணம் பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது. அல்லவா? மரணம் என்ன என்று புரியவில்லை அல்லவா? புரியாத ஒன்றைத்தான் நீங்கள் கண்டு பயந்து கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? இது என்ன செய்யும் என்பது பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாததால்தான் நீங்கள் மறுபடியும், மறுபடியும்

அதைப் பற்றி யோசித்து கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

மரணம் என்றால் என்ன? அது எப்படி இருக்கும்? அது ஏன் பிடிக்காமல் போயிற்று? ஒரு விஷயத்தைப் பற்றி தெரிந்தால் தானே நாம் பிடிப்பதும் பிடிக்காததும் பற்றிப் பேச முடியும்?

ஒரு விஷயம் பற்றி எதுவுமே தெரியாமல் நாம் மறுதலித்துக் கொண்டிருக்கிறோமே இது நியாயமா? நான் புளிப்பு சாப்பிட்டுப் பார்த்தேன். எனக்குப் பிடிக்கவில்லை. இனிப்பு சாப்பிட்டுப் பார்த்தேன். எனக்குப் பிடித்தது. இனிப்பை விட துவர்ப்பு பிடித்தது. துவர்ப்பை விட கசப்பு பிடித்தது. பாகற்காய் வதக்கல் சுகம். நாகப்பழக் கொட்டை தனி ருசி. கரும்புச் சாறு. நல்ல மொந்தன் வாழை. நாட்டுச் சர்க்கரையில் புரட்டி எடுக்கப்பட்ட பச்சை வாழைப்பழம் எல்லாம் பார்த்து எனக்குப் பிடித்தது மாங்காய் புளிப்பு. தொடுவதே இல்லை. இனிப்பு எப்பொழுதேனும் சப்பிடுகிறேன். நாகப்பழ துவர்ப்பு அடிக்கடி. கசப்பு தினமும். இது போல ஒவ்வொரு விஷயமும் தெரிந்து கொண்டு தானே ஏற்றலும் மறுதலிப்பும் இருக்கிறது. ஆனால், மரணம் பற்றி எதுவும் தெரியாமல் நான் மறுதலிப்பது நியாயமா, மரணம் என்றால் என்ன? யாரைக் கேட்பது?

யாரையேனும் கேட்கலாம். கேட்டவர் பதில் சொல்வார்கள். மரணம் என்றால் இன்னது என்று சொல்வார்கள். உடனே அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமா? இத்தனை பொருள்களை நீயாக சாப்பிட்டுத்தானே தெளிவடைந்தாய். உன்னுடைய தோழிக்கு இனிப்புப் பிடிக்கும். அப்பாவுக்கு காரம் பிடிக்கும். அம்மாவிற்குப் புளிப்புப் பிடிக்கும். அம்மா எப்பொழுதும் நெல்லிக்காயை அதக்கிக் கொண்டிருப்பாள். அப்பா காரக் குழம்பை உள்ளங்கையில் விட்டு நக்கிச் சாப்பிடுவார். இன்னும் இரண்டு மிளகாய் அரிந்து போடு என்று சொல்வார். மற்றவர்களுக்கெல்லாம் பிடித்தது தனக்குப் பிடிக்கவில்லை. தான் மற்றவர் என்ன சொன்னாலும் கேட்காமல், உணவு பற்றி தன் விருப்பத்தை நேரடியாக தானே உணர்ந்து ஒரு விதத்தில்



முழுமையடைந்தது போல மரணம் பற்றி முழுமையடைய முடியாதா? பல பேர் பலவிதமாக சொல்லியிருப்பினும் அது பற்றி அக்கறைப்படாமல் மரணம் என்றால் என்ன என்று பாகற்காய் வதக்கலை ருசித்தது போல மரணத்தை ருசிக்க முடியாதா? எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டேதான் இருக்க வேண்டுமா? பிறர் சொன்ன வார்த்தைகள் தான் நமக்கு முக்கியமா?

மரணம் என்றால் என்ன, யாரிடம் கேட்பது?

அவள் அமைதியாக உட்கார்ந்திருந்தாள். கண்மூடி சுவர் மீது சாய்ந்திருந்தாள். அவள் கால்கள் சம்மணம் கொட்டி ஆழ்ந்து தூங்குவது போல ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டாள். உள்ளுக்குள் மற்ற எல்லா விஷயங்களும் மறைந்து மரணம் என்றால் என்ன, மரணம் என்றால் என்ன என்று கேள்வி வந்து கொண்டிருந்தது.

சட்டென்று கருவூர் என்ற பெயர் ஞாபகம் வந்தது.

கருவூர் என்றால் பிறப்பு.

பிறப்பு பற்றிய ஊரில் இருந்து கொண்டு இறப்பு பற்றிக் கேட்கிறேன். யாரிடம் கேட்கிறேன்? என்னிடமே கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

அவள் தொடர்ந்து ஆழ்ந்து சிந்தித்தாள். உள்ளே ஒரு குரல் கேட்டது. வா. வந்து கேள் என்று கேட்டது.

அவள் ஆச்சரியமானாள்.

யாரது என்று உள்ளுக்குள் ஆழ்ந்து பார்த்தாள்.

மறுபடியும் கேட்டது.

வா. வந்து கேள் என்று மறுபடியும் குரல் சொன்னது.

என்ன இது, கருவூர் என்றதும் உள்ளுக்குள் வா, வந்து கேள் என்று கேள்வி வருகிறதே. குரல் எழுகிறதே. யார் கருவூர்?

கருவூர் அல்ல. கரவூரார். இந்த ஊர் சித்த புருஷர். வெகு காலத்திற்கு முன்பு வாழ்ந்ததாக சொல்லப்படுபவர். ராஜராஜ சோழன் கோயில் கட்ட, அந்தக் கோயிலிலுள்ள சிவலிங்கம் நிற்காமல் போக, அந்தச் சிவலிங்கம் நிற்பதற்காக வெற்றிலைப் பாக்கு மென்று அந்தத் தாம்பூலத்தை உமிழ்ந்து நிற்க வைத்தவர்.

கருவூரார் எங்கிருக்கிறார்?

ஹா... கோவிலில். கல்யாண பசுபதீஸ்வரர் கோவிலில் வெளிப் பிரகாரத்தில் தனி சன்னதியாக உட்கார்ந்து கொண்டிருக்கிறார். சிவரூபமாக இருக்கிறார்.

அவரிடம் போய் கேட்பதா, மரணம் என்றால் என்ன?

அவள் எழுந்தாள். திருநீறு இட்டுக் கொண்டாள். கிளம்பி வெளியே போனாள்.

ஒரு பலகைக் கல்லைத்தான் கரவூராரின் சமாதி என்று சொல்கிறார்கள். அந்த கல்லுக்கு முன்னே வடிவுடையாள் விழுந்து வணங்கினாள். அந்த ஒரு முறை நமஸ்காரம் போதாது என்று தோன்றிற்று. மறுபடியும் விழுந்து வணங்கினாள். எழுந்து நின்று கை கூப்பினாள். மீண்டும் இந்தப் பணிவு போதாது என்று தோன்றியது.

உண்மை. எத்தனை முறை நமஸ்கரித்தாலும் நெஞ்சு இனிக்கிறதய்யா என்று சொல்லி மறுபடியும் விழுந்து வணங்கினாள். எழுந்து நின்று மீண்டும் வணங்கினாள். உள்ளத்து உணர்வெல்லாம் ஒன்று திரட்டி கருவூராரின் காலில் போடுகின்ற சுகத்தோடு வணங்கினாள். இருபது முறைக்கு மேலே வணங்கிவிட்டு இன்னும் சற்று அருகே போய் கைகூப்பினாள்.

திருநீற்றின் வாசனையோடு, தனித்த ஒரு ஒளியோடு அந்தப் பலகைக்கல் இருப்பதாக அவளுக்குத் தோன்றியது.

"சத்குரு தேவாரம் பாடுகிறேன் கேட்கிறீர்களா?"



வாசற்படியின் மிக அருகிலேயே உட்கார்ந்து கொண்டாள். மெல்ல தொடையில் தாளம் போட்டு தேவாரமும், திருவாசகமும் பாடினாள்.

கேள்விகள் நிறைய இருக்கின்றன. பதில், தெரியவில்லை. வேறு யாரையும் கேட்கவும் விருப்பமில்லை. மனிதர்களைக் கேட்டால் விதம் விதமாக ஏதேனும் தேவையில்லாத பதில் சொல்வார்கள். இதுதான் எனக்கு நன்றாகத் தெரியுமென்று இறுமாப்போடு பேசுவார்கள். இது எவ்வளவு பெரிய விஷயம் என்ற உண்மை தெரியாமல் மற்றவருக்கு சொல்வதற்காகவே பிறந்திருக்கிறேன் என்று கர்வத்தோடு பேசுவார்கள்.

இது சொல்லி வருவதல்ல. எனக்கு புரிகிறது. சொல்லாமல் வருவது. இது உணர்த்தப்படுவது. உரைக்கப்படுவதல்ல. முறையாக நிகழ்த்தப்படுவதல்ல.

உள்ளுக்குள் இந்த எண்ணங்கள் தோன்றின. திடப்பட்டன.

அதுவரை எவருமில்லாத அந்தக் கருவறையில் யாரோ உள்ளே புகுந்து அவளுக்கு சாமந்தி மாலையும் திருநீறும் கொடுத்தார்கள். சாமந்தி மாலையை கழுத்தில் போட்டுக் கொண்டு, திருநீற்றை நெற்றியில் பட்டையாக இட்டுக் கொண்டு அவள் கோவிலை வலம் வந்தாள்.

சில பேர் அவளை விசித்திரமாகப் பார்த்தார்கள்.

"அடடே... உனக்கு சாமந்தி மாலை மிக நன்றாக இருக்கிறது."

யாரோ அவளை கேலி செய்தார்கள்.

சரி என்று புன்னகையோடு அவள் அந்த கேலியை ஏற்றுக் கொண்டாள்.

மாலையைக் கழற்றாமல் தெருவில் பலபேர் பார்க்க நடந்து வீட்டிற்கு வந்தாள். அறைக்குள் போய் நிலைக்கண்ணாடி முன்பு நின்றாள். கழுத்திலுள்ள சாமந்தி மாலையைப் பார்த்தாள். பெரிதாகச் சிரித்தாள். மெல்ல தரையில் உட்கார்ந்து

கால் நீட்டி படுத்துக் கொண்டாள். தாழ்வான ஜன்னல் வழியாக காற்று குபுகுபுவென்று வந்தது. படுத்த சில வினாடிகளிலேயே மனம் ஒருமித்தது. உயிர் நகரப் போகிறதென்று உற்று பார்த்துக்கொண்டிருந்தது. உயிர் எங்கே இருக்கிறது, எப்படி நகரும் என்று முழுவதுமாக வேடிக்கை பார்க்க உள்ளுக்குள் மெல்லியதாய் மாற்றங்கள் நடந்தன. அந்த மாற்றங்கள் தடை செய்யாது அவள் அமைதியாய் கவனிக்கத் துவங்கினாள்.

மனம் மெல்ல மெல்ல அமைதியாயிற்று. ஒன்றுமில்லாமல் போயிற்று. கறுப்பு மொத்தமாய் அவளை சூழ்ந்து கொண்டது. கறுப்பில் கறுப்பு உருவங்கள் எழுந்து நின்றன. ஆடின. கிரீச்சென்று உடல் நடுங்கும்படியாய் கிரீச்சிட்டன.

பிரமை என்று உள்ளே ஒரு எண்ணம் தோன்றியது. உன் மனம் உன்னை பயமுறுத்துகிறது. என்னை ஏன் அசையாமல் இருக்க வைக்கிறாய் என்று அசையாமல் இருப்பதற்கு தடங்கல் ஏற்படுத்துகிறது.

இது பிரமை. உள் மனம் போடும் தடை. சும்மாகிட.

அவள் மௌனமாக எந்த உத்தரவையும் ஏற்காது பேசாமல் இருந்தாள்.

உள்ளேயிருந்து ஒரு ஒளிக்கதிர் தோன்றியது. வெளிச்சம் பரவ, கறுப்பு நீலமாயிற்று. வெறும் நீலம் கவிழ்ந்து கொண்டது.

அவள் எதிர்ப்பின்றி கிடந்தாள்.

நீலத்தில் சூரிய வட்டங்கள் ஏற்பட்டன. மெல்லிய துகள்கள் அலைந்தன. துகள்கள் முன்னும் பின்னும் அலைந்து ஏதோ உருவத்தை கொண்டு வந்து காட்டியது. விதம் விதமான உருவங்கள் மனக்கண் முன் தென்பட்டன. மடங்கிய இலைகள், விசித்திரமான பூக்கள் என்று கறுப்பு வெளுப்பாய் நிறைய உருவங்கள் தோன்றின.

அவள் மௌனமாய் அதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.



வயிறு குழையத் துவங்கியது. காரணமென்ன என்று மனம் யோசிக்கும் போது அதட்டி அடக்கினாள். வயிற்றுக் குழைவை ஏற்றுக் கொண்டாள்.

மூச்சில் திணறல் ஏற்பட்டது. சுவாசத்தில் மாறுதல் ஏற்பட்டது.

வேண்டாமே என்ற எண்ணம் தோன்றியது. மறுபடியும் அதை அடக்கினாள்.

மனம் இன்னும் பேசிக் கொண்டிருக்கிறதே என்று கவலைப்பட்டாள். அந்த கவலையையும் உடைத் தெறிந்தாள். என்ன வேணாலும் ஆகட்டும் என்று வெறுமே கிடந்தாள்.

உள்ளங்கால் குறுகுறுத்தது. முழங்கால்கள் வலித்தன. தொடைகள் முறுக்கேறின.

சட்டென்று யாரையேனும் கட்டிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

அவள் வெறுமே கிடந்தாள். நெஞ்சுக்கூட்டில் வலி ஏற்பட்டது. நெற்றிப் பொட்டில் அழுத்தம் இருந்தது. நாசி மூச்சை வாங்கி இழுத்து வெளி விடுவது மும்முரமாக இருந்தது. கண்கள் உள்ளுக்குள் இழுக்கத் துவங்கின. நாக்கு உலர்ந்தது. காதுகளில் ரீங்காரம் அதிகரித்தது.

மனம் இப்பொழுது வேறெங்கோ இருந்தது. வேறு எதையோ தடவிக் கொண்டிருந்தது. வேறு ஒரு சூழலில் நுழைய முயன்று கொண்டிருந்தது. உடம்பு பற்றிய சிந்தனை இல்லாமல் வெறும் மனமாக எங்கோ அலையத் துவங்கியது. அந்த மனதிற்கு ஒரு உடம்பு இருந்தது. அது வேறு ஒரு உடம்பு. பெரிய வெளியோடு அந்த மன உடம்புக்கு தொடர்பு இருந்தது.

என்ன வேண்டுமானாலும் ஆகட்டும் என்று அவள் பேசாமல் இருந்தாள்.

மனம் தயங்கித் தயங்கி வேறெங்கோ நகர்ந்தது. மிக
அற்புதமாய் வெளியில் மிதந்தது. எல்லா இடமும் ஒளியால்
நிறைந்திருந்தன. எந்தச் சக்தியுமில்லாமல் ஒரு ஒளி அந்த
இடத்தை தடவிக் கொண்டிருந்தது. எந்த எரிதலுமில்லாமல்
அந்த ஒளி அங்கே திகழ்ந்து கொண்டிருந்தது.

இது இதுவரை பார்த்திராத விஷயம். இது ஒரு புது அனுப
வம். இது ஒரு நல்ல இடம். சுகம், பசி, வாசனை, காற்று
என்று எந்த உணர்ச்சியுமில்லாத இடம். கனத்த அமைதி
சூழ்ந்திருக்கின்ற இடம்.

அவள் மனம் எந்த இலக்குமில்லாமல் அலையத் துவங்
கியது.

இந்த ஒளியைத் தாண்டி இந்த உடம்பு எங்கோ போக
வேண்டும் என்று ஆசைப்பட்டது. அந்த மன உடம்பு
போவதை அவள் பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால், இப்
பொழுது போகக் கூட இல்லை. இழுக்கப்படுகிறது. எதனால்
என்று தெரியவில்லை. அதுவொரு பாதை. எவரும் போடாத
பாதை. எல்லோரும் போன பாதை அந்தப் பாதை வழியாக
அவள் போய்க் கொண்டிருந்தாள். முன்னும் பின்னும் எவரு
மில்லை. வெகு தொலைவு... வெகு வெகு தொலைவு. எண்
ணத்திற்கு அப்பாற்பட்ட தொலைவு. இன்னும் வேகமாயிற்று.
சொல்ல முடியாத வேகத்தில் இருந்தது. அந்த வேகம் எந்த
அசைவும் இல்லாத போதும் அவளால் உணர முடிந்தது.
அசையாது இருப்பினும் மிகப்பெரிய வேகத்தில் நகர்ந்து
கொண்டிருக்கிறோம். இழுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம்
என்று தெரிந்தது.

நான் என்ற இந்த விஷயத்தை அவளால் விட்டு விட
முடியவில்லை. தன் உடம்பு என்கிற விஷயத்தை அவளால்
உதற முடியவில்லை. ஆனால், அது என்ன செய்தாலும்
சரியே என்பது போல் முழுவதுமாய் அதனை அதனிடமே
ஒப்படைத்துவிட்டு அவள் மௌனமாக இருந்தாள். டக்



கென்று எதனாலோ இழுக்கப்பட, மறுபடியும் ஒரு அதிசயம்
நடந்தது.

அவள் பூமிக்கு மிக அருகிலே வந்து மிதந்தாள்.

இப்போது அவளுக்கு புதியதாய் இருந்தது. பூமியிலுள்ள
எல்லா உயிர்களும் அவளுக்கு ஒன்றே போல் தெரிந்தன.
சட்டென்று கட்டெறும்புக்குள் புகுந்தாள். பூமியினுடைய
உஷ்ணமும், நீளமும், அகலமும், காற்றின் வேகமும் அவளை
திகைக்க வைத்தன.

சட்டென்று கரப்பான் பூச்சிக்குள் புகுந்தாள். இருட்டும்,
வெளிச்சமும் பிரிகின்ற விஷயம் தெரிந்தது. சிறிய மணல்
துகளெல்லாம் பெரும் பெரும் பாறைகளாக இருப்பதை அவள்
உணர்ந்தாள். அவளால் ஒரு வாசற்படியோரம் திரண்டிருந்த
அழுக்கை தின்ன முடிந்தது.

சட்டென்று அவள் சிட்டுக் குருவியானாள். வீசிப் பறந்
தாள். எதிரே உள்ள கிளையில் உட்கார்ந்தாள். மரப்பட்டை
களின் இடுக்கில் சிறுசிறு புழுக்கள் இருப்பதை கவனித்தாள்.
இலைகளின் மீதும், கிளைகளின் மீதும் பல்வேறு உயிரினங்
கள் நகர்ந்து கொண்டும், உறங்கிக் கொண்டும் கிடந்தன.

சிட்டுக் குருவியிலிருந்து காகத்திற்குப் போனாள். சட்
டென்று பறந்தாள். ஒரு கோபுரத்தின் உச்சியில் போய் அமர்ந்
தாள். ஒரு எலியை காகங்கள் கொத்தி தின்று கொண்டிருந்
தன. அவளும் வேகமாகப் பாய்ந்து அந்த எலியைப் பற்றி
தூக்கினாள். தரையில் போட்டாள்.

சட்டென்று பாம்பானாள். பாம்பிற்குள் புகுந்து உலகத்
தைப் பார்த்தாள். உடம்பு முழுவதும் தழுவியபடி பூமியோடு
இருப்பதை உணர்ந்தாள். பூமி விதம் விதமான சூட்டோடு
இருப்பதை கண்டு கொண்டாள். செத்துப் போன எலியின்
குஞ்சுகளைத் தேடினாள்.

ஒரு எலி எகிறி குதித்து ஓடி வர சட்டென்று அதை
உற்றுப் பார்த்து நிற்க வைத்தாள். ஓடிப்போய் லபக்கென்று

விழுங்கினாள். அழுத்தி மூச்சு நிறுத்தினாள். அப்படியே உள்ளுக்குள் விழுங்கினாள். தோலும், ரத்தமும், சதையுமாய் அந்த உணவு தொண்டைக்குள் இறங்கியது.

உதறி ஒரு ஆட்டுக்குள் புகுந்தாள். ஆடு கட்டப்பட்டிருந்தது. தழைக்கு, கட்டை இழுத்து இழுத்து அறுக்க முயன்றது. எவனோ தெருவோடு போகிறவன் சரக்கென்று கயிற்றினுடைய சுருக்கை அவிழ்த்து விட ஆடு துள்ளிக் கொண்டு ஓடிற்று. யாரோ விரட்ட இன்னும் வேகமாக ஓடிற்று. ஓடிப் போய் தெருவோர செடிகளை வேகமாகத் தின்றது. அவசர அவசரமாக விழுங்கியது. மடி கனக்க நகர்ந்தது. பின்னங்கால்களில் இடதும், வலதுமாக மறுபடி ஓடிப்போய் மீண்டும் இலைகளைத் தின்றது. புற்களை மென்றது. பின்னாலேயே ஆட்டுக் குட்டிகள் ஓடி வந்தன. அவைகளை நின்று பார்த்தாள்.

இவைகளுக்கும் எனக்கும் என்ன உறவு என்று யோசித்தாள்.

அந்த ஆட்டுக் குட்டிகள் ஓடி வந்து மடியில் வாய் வைத்து முட்டி உறிஞ்சின. கண்ணில் இரக்கம் ஏற்பட்டது. மிகப் பெரிய சுகம் தன்னை சூழ்ந்து கொள்வதை உணர்ந்தாள்.

சட்டென்று ஆட்டிலிருந்து நகர்ந்து போய் எருதின் உடம்புக்குள் புகுந்து கொண்டாள்.

அந்த எருது கோவிலுக்கு சொந்தமானது. திமிரானது. மிகுந்த வலிவுடையது. எவராலும் அடக்க முடியாதது. அதே நேரத்தில் சோம்பலானது. அதற்குள் புகுந்து கொள்ளும் போது விதம் விதமான உணர்வுகள் ஏற்பட்டன. எங்கே பசு என்று தேடின.

ஒரு சுவரோரத்தில் இருந்த மூத்திரத்தை முகர்ந்து பார்த்தாள். அது எந்தப் பசுவினுடையது, அது எந்தப் பக்கம் போயிருக்கிறது என்பதை அந்த எருதால் உணர முடிந்தது. அந்த எருது திமிறி அசைய வேகமாக நடக்கத் துவங்கியது.



தெருவோரம் இருந்தவர்கள் விலகி வழிவிட்டார்கள். அவர்கள் விலகி வழிவிட, அது இன்னும் கம்பீரமாய் நடந்தது. பசு ஒரு சந்தில் திரும்புவது தெரிந்து சற்று மிடுக்கான நடை போட்டு ஓடிற்று. சுற்றியிருந்தவர்கள் ஏய்... ஏய்... என்று கூச்சலிட்டார்கள். அது இன்னும் வேகமாகப் போய் சந்தில் திரும்பியது. அங்கே சிகப்பு நிற பசு ஒன்று குனிந்து புல்லை மேய்ந்து கொண்டிருக்க, சட்டென்று அதற்கருகே போய் உரசியது. பசு மிரண்டது. ஆனால், எருது விடவில்லை.

எல்லாப் பக்கமும் அதை உரசி அதற்கு திகைப்பைக் கொடுத்தது. பசு திகைத்துப் போக தன் இரண்டு கால்களையும் தூக்கி பசுவோடு சேர்ந்தது.

பாதியிலேயே எருதிலிருந்து வெளியேறி யானையிடம் போய் அமர்ந்து கொண்டாள்.

யானை நின்றபடியே உறங்கிக் கொண்டிருந்தது. வெறுமே அவ்வப்போது வாலை சுழற்றி ஈக்களை விரட்டிக் கொண்டிருந்தது. காலில் கடுமையான வலி. சங்கிலி போட்டு இழுத்ததால் ஒரு நோவு. நின்றபடியே தூங்க, வயிற்றிலிருந்த உணவு நகர்ந்து மலக்குடலுக்குப் போக, மலக்குடல் விரிந்து சாணம் வெளியே வந்து விழுந்தது.

தின்னும் போது உண்டான உணர்வும், புணரும் போது உண்டான உணர்வும், சாணம் போகும் போது உண்டான உணர்வும் ஒன்றே என்று கண்டு கொண்டாள்.

குளத்து நீருக்குள் வாழும் மீனுக்குள் புகுந்தாள். அங்கு வேறுபட்ட சூழ்நிலை இருந்தது.

நீரிலிருக்கின்ற காற்றை உறிஞ்சிக் கொள்ள வழி தெரிந்தது. நீரிலிருந்து சட்டென்று தாவரமானாள். ஒரு கொடிக்குள் புகுந்து கொண்டாள். உடம்பெல்லாம் இலையாயிற்று. நகர மீண்டும் இலை. இலைக் கொழுந்து. இலைக் கொழுந்தின் நுனி என்று போய் அங்கிருந்து உலகம் பார்க்க காற்றின்

வேகமும், குளுமையும் வெய்யிலின் சுகமும், மண்ணின் ஈரமும் அவளை கிறுகிறுக்க வைத்தன.

மனிதன் சுவாசிப்பது போலவே தாவரம். தாவரம் சுவாசிப் பது போலவே மீன் என்று தோன்றியது.

எல்லாமும் சுவாசம். எல்லா உயிரினமும் சுவாசம். இழுத்து வெளியே விட்டு, இழுத்து வெளியே விட்டு உள்ளே புகுந்து வெளியேறி உள்ளே புகுந்து வெளியேறி இதுதான் நடக் கிறது.

அவள் சட்டென்று ஒரு குழந்தைக்குள் புகுந்து கொண் டாள்.

முகம் முழுவதும் தாயின் மெத்தென்ற மார்புகள் இதமாக் கின. பால் வாசனை துளைத்தது. அம்மாவின் சூடு மிக இதமாக இருந்தது.

அவள் குரலெடுத்து சிணுங்கினாள். பிறகு அழுதாள்.

அந்த அழுகை நன்றாக இருந்தது. மேலும் நன்றாக சுவா சிக்க முடிந்தது.

காற்றை உள்ளே இழுத்து வெளியே விட்டு, மூச்சை உள்ளே இழுத்து வெளியே விட்டு இதுதான் உலகமெங்கும் நடக்கிறது என்பது புரிந்தது.

அவள் ஒரு வாலிபனுக்குள் புகுந்து கொண்டாள்.

மிகப்பெரிய சிரிப்பு அவன் சிரித்தான். தொடை தட்டினான். சக்தி உடம்பு முழுவதும் பரவியிருந்தது. தோள்களில் கனம் இருந்தது. இடுப்பில் ஒரு இறுக்கம் இருந்தது. தொடைகளில் ஒரு வலிவு இருந்தது. அவன் ஆண் குறியில் ஒரு துறுதுறுப்பு இருந்தது. எப்பொழுதும் எதைப் பற்றியும் வேகமாக சிந்தித் தான். எல்லாமும் தனக்கு வேண்டுமென்று ஆசைப்பட்டான். தான் பெறுவேன் என்று நம்பினான்.

அவள் இடம் பெயர்ந்தாள்.



திருமணம் முடிந்த பெண்ணின் உடம்புக்குள் புகுந்து கொண்டாள்.

அந்தப் பெண்ணுக்கும் காமம் இருந்தது. அதே சமயம் இன்னும் எத்தனை நாள் இப்படி அவஸ்தைப்பட வேண்டும், என்று இது ஒழியும் என்ற ஏக்கமும் இருந்தது.

குழந்தைகளை கட்டிக் கொள்வதின் மூலமும், கன்றுகளை தழுவிக் கொள்வதின் மூலமும், பசுமாட்டை வருடிக் கொள்வ தின் மூலமும், தூணை அணைத்துக் கொள்வதின் மூலமும் அவளுடைய உடம்பின் சூடு மெல்ல குறைந்தது.

மறுபடியும் தகிக்கலாயிற்று.

போதும் போ. நான் படற அவஸ்தை.

அவள் மீண்டும் அலுத்துக் கொண்டாள்.

இம்முறை அவள் சட்டென்று வெளியேறி, மரணத் தரு வாயில் இருக்கின்ற ஒரு கிழவனுடைய கூட்டுக்குள் புகுந்து கொண்டாள்.

அங்கேயும் காற்று உள்ளுக்குள் புகுந்து வெளியேறிக் கொண்டிருந்தது. காற்று போகும் இடமெல்லாம் தடைபட் டிருந்தது. மிகுந்த வலிவுக்கிடையே காற்று உள்ளிழுக்கப் பட்டது. வெளியே தள்ளப்படாமல் உள்ளுக்குள்ளேயே திகைத்துப் போய் நின்றது. பிறகு மெல்ல வெளியேறியது. காற்று இடர்பாடாக உள்ளுக்குள் போய் வந்தபடியால் உடம்பின் மற்ற பகுதிகள் வலியில் துவண்டன. தவித்தன.

அவள் உள்ளே புகுந்த வினாடி அந்தக் கிழவன் திகைத் தான். 'என்னது... என்னது' என்றான்.

உடம்பிலிருந்து வெளியேறுவது என்ன என்பது அப்பொ ழுது புரிந்தது. கவனிக்கத் துவங்கினாள். இடையறாத ஒரு அதிர்வை, மின்னல்களை மார்பின் நடுப்பகுதி குறைத்துக் கொண்டே வந்தது. உடம்பெங்கும் பரவிய அந்த மின்னலை கள் நின்று போக, காலும், கழுத்தும், தலையும், தோள்களும்,

புஜங்களும், விரல்களும் மரத்துப் போயின. வயிறு குழைந்து நின்றது. கைகளும் கால்களும் மெல்ல மெல்ல மரக்கத் துவங்கின. ரதத ஒட்டம் நின்றது. இருதயத்தின் மெல்லிய அசைவு புரண்டு புரண்டு இருதயம் தவிக்கின்ற அசைவு மட்டும் அவளால் உணர முடிந்தது. காற்று இழுக்கும் பைகள் இடைவெளி விட்டு, இடைவெளி விட்டு காற்றை இழுக்கவும், தள்ளவும் முயற்சி செய்து கொண்டிருந்தன. தயங்கித் தயங்கி செய்தன. செய்தால் செய், செய்யாவிட்டால் போ என்பது போல கட்டளைகள் என்று தெரியாமல் காற்றுப் பைகள் அவஸ்தைப்பட்டன.

அந்த உடம்பின் காதுக்குள் கேட்ட ரீங்காரம் உடம்பு முழுவதும் பரவிற்று; அவளையும் தாக்கிற்று. மெல்ல உடம்பிலிருந்து தனித்ததாய் ஒரு சக்தி விலகத் துவங்கியது. உடம்புக்குள்ளேயே எந்த வித பிடிப்புமில்லாமல் மெல்ல எழுந்து துல்லியமாக தனியாக நின்றது. அவளைப் பார்த்து அவளுக்குள் புகுந்து மெல்ல வெளியேறியது. அவள் அந்த உடம்பில் தயங்கி நின்றாள். காதுக்குள் இருந்த ரீங்காரமும் கப்பென்று நின்றது. கடைசிக் காற்று நுரையீரலிலிருந்து மடமடவென்று வெளியேறி வாய் வழியாக சப்தத்துடன் மேலே போயிற்று.

சுற்றியிருந்த எல்லோரும் பெரிய குரலெடுத்து அழத் துவங்கினார்கள்.

சூடு குறைந்து, மிகுந்து குளிராக மாறும் அந்த உடம்பை பார்க்கத் துவங்கினாள். இனி மேல் இந்த உடம்பில் இருக்க முடியாது என்பது போல இறுக்கமாக மெல்ல மெல்ல மாறிக் கொண்டிருந்தது.

அவள் வெளியேறினாள்.

சட்டென்று ஒரு மத்திய வயது மனிதரிடம் போய் புகுந்து கொண்டாள்.

அப்பா... உள்ளே வெளியே உள்ளே வெளியே... சுவாசம் வேகமாக இழுபட்டு மெல்லிய நூலிழையாய் வெளியே



போயிற்று. மீண்டும் வேகமாக இழுக்கப்பட்டு மீண்டும் நிதானமாக வெளியே போயிற்று. காற்று உள்ளும் புறமும் போனதால் உடம்பின் எல்லா இடங்களிலும் ஒரே விதமான சூடு இருந்தது. உடம்பின் எல்லா பகுதிகளிலும் ஒரே விதமான சூடு இருப்பதால் அங்கே யோசிப்பில் மிகுந்த நிதானம் இருந்தது. நாடியின் துள்ளல் தெளிவாக இருந்தது. சீராக இருந்தது.

இழு. ஸோ... வெளியே விடு ஹம்.. இழு... ஸோ... வெளியே விடு ஹம்... ஸோஹம்.. ஸோஹம்...

அந்த மனிதர் இவ்விதம் எண்ணியபடியே இழுத்து வெளியே விட்டார்.

அட... அழகாக இருக்கிறதே என்று அவள் யோசித்தாள். அவன் நெற்றிக்குள் நீலச்சுடர் ஒளிர்ந்தது. நெற்றிக்குள் சிறிதளவு இருந்த அபாணவாயுவும் அவர் அழுத்தி வெளியேற்றினார். உடம்பின் எல்லாப் பகுதிகளிலும் சீரான காற்றோட்டம். சீரான அசைவு. தெளிவான புத்தி என்று ஒரு குளுமையான இடத்தில் அவள் சிறிது நேரம் இருந்தாள்.

மெல்ல வெளியேறினாள்.

மீண்டும் நீலப்பரப்பு. மீண்டும் மிகப்பெரிய வெளிச்சம். வெளிச்சத்துக்கு அப்பால் அவள் போக நேரிட்டாள். இடையறாது பிரயாணம் பண்ண நினைத்தாள். இன்னும் வேகத்தை அதிகரிக்க நினைத்தாள்.

உள்ளே குரல் கேட்டது.

"போதும். போ."

கண் திறந்து பார்த்தாள். கருவூரார் சன்னதியிலிருந்து உத்தரவு போலும் ஒரு செய்தி வந்தது.

"போதும். போ."

அவள் சட்டென்று நகர்ந்தாள்.

ஒரு பிரயாசையுடன் தனக்குள் புகுந்தாள். உள்ளே வந்து கிடந்தாள். பரவினாள். அமைதியாக இருந்தாள். உடம்பு மெல்ல அசைந்தது. விரல்கள் சுருங்கி நீண்டன. வயிறு குழைந்து ஏறிற்று. அபாணவாயு வெளியேறிற்று. மூச்சுக் காற்று எழும்பி கீழ் வந்தது. இருதயம் லப்டப் என்று மறுபடியும் அடித்துக் கொண்டது. ரத்த ஓட்டம் உடம்பு வலிக்க எல்லாப் பக்கங்களுக்கும் வேகமாகப் பரவின. மரத்துப் போன கைகளில் சுறுசுறு என்று பிடுங்கியது. உடம்பெல்லாம் ரத்த ஓட்டம் போவதினுடைய அவஸ்தையை உணர்ந்தாள். பிய்த்துக் கொள்ள வேண்டும் என்பது போல தோன்றியது. அலற வேண்டுமென்ற ஆசை வந்தது.

ஆனால், பொறுத்துக் கொண்டாள். உடம்பு பேரவஸ்தைப் பட்டது. உடம்பு துரிதமாவதற்கு முயற்சி செய்ய இன்னும் மூச்சுக் காற்றை வேகமாக இழுத்து விடவேண்டியிருந்தது.

வடிவுடையாள் மெல்ல மனம் விழித்தாள். விழித்த மனம் எல்லா சப்தங்களையும் வாங்கிக் கொண்டது. சப்தங்களை வாங்கிக் கொண்டதும் உலகத்தினுடைய உருவமும், அமைப்பும், சப்தங்கள் எங்கிருந்து வருகின்றன என்ற சித்திரங்களும் ஏற்பட்டன.

வடிவுடையாள் மெல்ல வடிவு கூட்டி கண்களைத் திறந்தாள். கோயிலின் மேற் கூரை தெரிந்தது. மெல்ல எழுந்து உட்கார்ந்தாள். தன் உடம்பை தானே பார்த்துக் கொண்டாள். சுவர் பார்த்தாள். கதவு பார்த்தாள். ஜன்னல் பார்த்தாள். ஜன்னலுக்கு வெளியே தெரியும் நீலவானம் பார்த்ததும் குறுக்கே ஓடிய காகம் பார்த்தாள். தென்னை மரங்களில் அசைவைப் பார்த்தாள். எல்லாம்... எல்லாம் புதிதாக இருந்தன.

வேறு எங்கோ ஓரிடத்திலிருந்து இங்கு வந்திருக்கிறோம். அந்த இடம் வெகுதூரம். எல்லா இடத்திலும் இதே போலதான் இருக்கிறது. எல்லா இடத்திலும் ஒரே விஷயம்தான். எல்லா இடத்திலும் சுவாசம்தான். எல்லா இடத்திலும் அணுக்களின் அசைவுதான். எல்லா இடத்திலும் ஒரே விதமான சக்திதான். எல்லா இடத்திலும் ஒளி ரூபம்தான்.



நானும் கரப்பானும், நானும் எலியும், நானும் எருதும், நானும் யானையும், நானும் மற்ற மனிதரும் ஒன்றே. நான் வேறு. அவர் வேறு அல்ல. இது சின்னச்சிறை. நானே எனக்குள் ஏற்படுத்திக் கொண்ட சிறை. நானே போட்டுக் கொண்ட தாழ்ப்பாள். இந்த அறைக்குள் எப்படி கதவு சார்த்திக் கொண்டு படித்துக் கொண்டிருக்கிறோமோ அதே போல என் உயிரும் ஒரு அறைக்குள் புகுந்து கதவு சார்த்தி படுத்துக் கொண்டிருக்கிறது. ஒரு நாள் கதவு விழ நான் வெளியேற வேண்டிய அவசியமும் ஏற்பட்டு விடுகிறது. அறையிலிருந்து வெளியேறி வேறெங்கோ ஒரு ஒளிமயமான இடத்திற்குப் போகிறேன். அது தாண்டி, அது தாண்டி என்ன இருக்கிறது?

திரும்ப முடியாத வழியா, மீள முடியாத பாதையா. இதுவரை நான் போனது என்னைச் சுற்றியிருக்கின்ற ஒரு உலகம். இதுவரை நான் மிதந்தது நான் மறுபடியும் இங்கே வருவதற்குண்டான வழியுள்ள ஒரு இடம். சுற்றி சுற்றி நான் இங்கே வரலாம். அங்கே போகலாம். ஆனால், அதையும் தாண்டி எங்கோ போக வேண்டும். போனால் வருவதற்கில்லை. அது ஒரு வழிப்பாதை.

நான் ஏன் அங்குப் போகவில்லை? அங்குப் போவதில் என்ன தவறு? ஏன் அது மீள முடியாத இடம்? அது என்ன இடம்? அது எங்கிருக்கிறது? என்னை ஏன் கருவூரார் தடுத்தார்?

அவள் ஆழ்ந்து சிந்தித்தாள்.

அவள் எப்பொழுதும் பூமியை விட்டு வெளியே போன ஒரு நிறைவோடே கிடந்தாள். சுற்றியிருந்த பல பேரின் முகமும் பேரும் மறந்து போயின. கண்கள் பார்த்தன. காதுகள் கேட்டன. எதிர்ப்படும் மனிதர்களுக்கு அவள் மிகச் சரியாக பதில் உத்தரவாதங்கள் அளித்தாள். செய்கைகளைச் சரியாகச்

செய்தாள். ஆனால், மனம் இதுவரை அனுபவித்த அந்த ஒளி உலகத்திலேயே கிடந்தது. உடம்பு விழித்திருந்தாலும் மனம் ஒரு துயிலிலேயே இருந்தது. இது விழிப்பில் துயில். மனம் எந்த செயலின் மீதும் பின்னிப் பிணையவில்லை. எதற்கும் பொறுப்பேற்கவில்லை. ஆனால், அதே சமயம் பூமியிலுள்ள விஷயங்களுக்கு மிகச் சரியாக உத்தரவாதம் அளித்துக் கொண்டிருந்தது.

'அடியே... வடிவுடையாள் வாசலில் யார் வந்திருக்கிறார் என்று பார்.'

அவள் கதவு திறக்க யாரோ அங்கு நின்றிருப்பார்கள். நிற் பவர்களின் உள்ளுக்குள் இருக்கின்ற ஆத்மசொரூபம் அவள் கண்ணுக்குத் தெரிய, அவள் முகம் மலரச் சிரிப்பாள். அம்மா விடம் போய் இன்னார் வந்திருக்கிறார் என்று சொல்வாள். அம்மாவிடம் சொன்னதும் உண்மை. அவள் அந்த மனிதரின் உள்ளுக்குள் இருந்த ஆத்மாவை உணர்ந்ததும் உண்மை. ஒன்று புவியியல் உண்மை. இன்னொன்று ஆன்மீக உண்மை.

உலகத்தாரிடம் மிகச் சரியாக நடந்து கொண்டதால் அவள் மீது எந்த சந்தேகமும் வீட்டாருக்கு வரவில்லை. கொஞ்சம் சோர்வாகவே இருக்கிறாயே. வாடினார் போல் இருக்கிறாயே என்று அப்பா ஒரு முறை கேட்க, அம்மா அப்படித்தான் பெண் களுக்கு சில சமயம் முகத்தில் களை கட்டும். சில சமயம் ஏதோ காரணத்தால் பலவீனமாகும். இரண்டுக்குமே அர்த்த மில்லை என்று சொல்ல, அப்படியா என்று அப்பா கேட்டுக் கொண்டார்.

அம்மாவின் வியாக்கியானத்தால், அவளை கவனிப்பவர் கள் குறைவாய்ப் போனார்கள். எப்பொழுதுமே அவள் வீடு தோழிகள் வரும் வீடு அல்ல. இருந்த இரண்டு மூன்று தோழி களும் அவள் வராதது கண்டு அலுப்புற்று மௌனமானார்கள். வேறு தோழிகளோடு சங்கமமானார்கள்.



வீட்டிற்கு தினமும் வருகின்ற வியாபாரிகள் மட்டும் அவள் மாற்றங்களை உணர்ந்து வியப்போடு அவளைப் பார்த்தார்கள்.

"உன் உடம்பு ஒடுங்கி போயிருக்கு. ஆனா கண்ணு நல்லா யிருக்கு. உதடு நல்லாயிருக்கு. முகத்துல ஒரு வசீகரம் இருக்கு. என்ன சாப்பாட்டை குறைச்சுட்டு மஞ்சள் ஜாஸ்தி பூசற அப்படித்தானே?"

ஒரு கிழவி சொன்னாள்.

அவள் சிரித்து விட்டு மௌனமாக இருந்தாள்.

"'தஞ்சாவூர்லேர்ந்து நல்ல கஸ்தூரி மஞ்சள் கொண்ணாந் திருக்காங்க. நான் உனக்கு தரேன். ஐயாகிட்ட சொல்லி எனக்கு நல்லபுடவை ஒண்ணு கொடுக்கச் சொல்லேன். எல்லாப் புடவையும் கிழிஞ்சு போயிருக்கு."

அவள் வீட்டுக்குள் ஓடி தன்னுடைய புடவையை எடுத்துக் கொண்டு போய் கிழவியின் கைகளில் போட்டாள்.

"என்னா... உன்னுத எடுத்து கொடுத்துட்ட."

"என்னதுன்னு எப்படி தெரியும்?"

"இதை மூணுநாலு தடவை கட்டியிருக்கியே. நான் பார்த் திருக்கேன் இல்ல."

"உனக்குத்தான் இது வச்சுக்கோ."

"தடுக்குனு கொடுத்துட்டியேம்மா. வீட்ல கோச்சுக்க மாட்டாங்க?"

"எங்கப்பா, நான் எது செய்தாலும் கோச்சுக்க மாட்டாரு."

"உனக்கு இன்னிக்கு ராத்திரியே கஸ்தூரி மஞ்சள் கொண்டு வந்து தரேன்."

அந்தப் புடைவையைக் கூடையில் வைத்துக் கொண்டு கிழவி வேகமாக வேறு பக்கம் நடந்தாள். மாலை நேரத்தில் வீட்டிற்கு வந்தாள்.

கஸ்தூரி மஞ்சளும், மருதாணி தைலமும், வாசனைப் பொடியும் கொண்டு வந்து கொடுத்தாள்.

"கஸ்தூரி மஞ்சளுக்குத்தானே புடவை கொடுத்தேன். இதுக்கு என்ன" என்று கேட்க, கிழவிக்கு ஒன்றும் பதில் சொல்லத் தோன்றவில்லை.

"எல்லாத்துக்கும் புடவை போதும்" என்று சொன்னாள்.

"போதாது."

அவள் வலக்கையிலிருந்து ஒரு வளையலைக் கழற்றி கிழவியின் கைகளில் போட்டாள்.

"அப்பா கோச்சுக்கப் போறாரும்மா."

"இது என்னுது. அப்பா ஆசையா இது எனக்குப் போட்டது. இதை நான் யாருக்கு வேணாலும் கொடுப்பேன். யாரும் என்னை ஒண்ணும் கேட்க முடியாது."

"அப்பாகிட்ட ஒரு வார்த்தை சொல்லிடும்மா."

"நான் சொல்லிடறேன். நீங்க போங்க."

கிழவியை அனுப்பினாள். வாசனைத் திரவியங்ளை கொண்டு வந்தாள்.

அறைக்குள் இருக்கிற அலமாரியில் வாசனைப் பொருள் களை வைத்தாள். மூடினாள். மறுபடியும் திறந்து பார்த்தாள்.

எதற்காக இந்த வாசனை திரவியங்களை வாங்கியிருக் கிறோம்? இதனால் என்ன புண்ணியம்? இதில் என்ன பயன் என்று யோசித்தாள்.

மறுபடியும் திறந்து பார்த்தாள். வாசனை தைலத்தை உள்ளங்கையில் எடுத்து தலைக்குத் தேய்த்துக் கொண்டாள். தலையில் குளுமையாய் இறங்கியது.

வாசனை அறை முழுவதும் பரவியது. கூந்தல் முழுவதும் வாசனை தைலத்தைத் தடவி மஞ்சளும் வாசனைப் பொடியு மாய் அந்த மாலை நேரம் குளிக்கப் போனாள்.



கிணற்றிலிருந்து தொட்டியில் வேலைக்காரி நீர் இறைத்து வைத்திருக்க, அந்தத் தொட்டியில் நீர் மொண்டு தலையில் விட்டுக் கொண்டாள். வாசனைப் பொடியை தலையில் வைத்துத் தேய்த்துக் கொண்டாள். கஸ்தூரி மஞ்சளை நசுக்கி உடம்பு முழுவதும் தடவிக் கொண்டாள். முகத்தில் அப்பிக் கொண்டாள். மறுபடியும் வேகமாக தண்ணீர் விட்டு வாசனைப் பொடி போக அலம்பினாள். உடம்பு முழுவதும் மிக அற்புதமான ஒரு நறுமணம் பரவியது.

இது சுகமா, இல்லையா? அவளுக்குள் கேள்வி வந்தது.

இந்தக் குளிர்ந்த நீரில் மாலை நேரத்தில் வாசனைப் பொடியோடு குளிப்பது அற்புதமாகத்தானே இருக்கிறது?

அப்படியா... யாருக்கு அற்புதம். வாசனை யாருக்கு? எனக் காகவா. இந்த எண்ணம் யாருக்கு? உனக்காகவா, இந்த மஞ் சள் பூச்சு எதற்கு? எனக்காகவா அல்லது மற்றவருக்காகவா, வேறு யாரேனும் பார்த்து ஆஹா... என்ன அழகான முகம் எத் தனை மஞ்சளான முகம் என்று கொண்டாடப்படவேண்டுமா?

நான் இந்த வாசனைப் பொருள்களை எனக்காக உபயோ கிக்கிறேனா, மற்றவருக்காவா, இன்னொருவர் பாராட்டவா, எனக்கென்று நான் என்ன செய்து கொள்கிறேன்? இவைகள் எனக்கு எந்த விதத்தில் உதவி செய்யும். அந்த நீல நிற ஒளியில் மிதந்தேனே அந்த சுகம் அற்புதமா, இந்த வாசனை சுகம் அற்புதமா? எனக்கு இந்த வாசனைகள் என்ன செய் கின்றன? என்ன விதமான நன்மையை தருகின்றன?

அவள் ஆழ்ந்து யோசித்தாள்.

தலையைத் துவட்டினாள். உலர வைத்தாள். ஜன்னலருகே உட்கார்ந்து தெருவைப் பார்த்தாள். அறைக்குள் முன்னும் பின்னும் உலவினாள். தரையில் உட்கார்ந்து கொண்டு முழங் கையை கட்டிக்கொண்டு தீவிரமாக யோசித்தாள். அறை முழு வதும் தைல வாசனை. உடம்பு முழுவதும் கஸ்தூரி மஞ்சள், வாசனைப்பொடி வாசனை.

வாசனை எனக்கு என்ன செய்கிறது சொல். இந்த வாசனை எனக்கு என்ன செய்கிறது என்று கேட்க யாரிடமாவது போய் தன் வாசனையை பகிர்ந்து கொள்ள வேண்டும். யார் மூக்கை யாவது தன் இருப்பு நிமிண்ட வேண்டும். யாரையாவது தன் இருப்பு மாற்றத்திற்குள்ளாக்க வேண்டும். கேள்வி எழுப்ப வேண்டும். என்ன இது வாசனை என்று யாராவது சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் இதை செய்து கொண்டிருக் கிறேனே தவிர, இத எனக்கு எந்த விதத்திலும் உதவி செய்ய வில்லை. இது ஆழ்ந்த நிலைக்கு எடுத்துப் போகவில்லை. மாறாக இந்த வாசனை என் மேற்புறத்தைத்தான் யோசிக்க வைக்கிறது. என்னுடைய தலைமுடியையும், தோளையும், உதடுகளையும், கன்னங்களையும், கண்களையும்தான் கவ னிக்க வைக்கிறது. உள்ளே திருப்பவில்லை. உள்ளே திருப்ப மறுக்கிறது. உள்ளே போக முடியாமல் மனம் வெளியே கிடந்து உழல்கிறது.

இந்த வாசனைகள் ஆபத்தானவை. இவைகள் பூமியோடு மிதப்பவைகள். நான்வேறு இடத்தில் மிதக்க விரும்புகின் றேன். ஆழ்ந்து ஆழ்ந்து எனக்குள்ளேயே இருக்க விரும்புகின் றேன். வாசனை என்னை நான் உணர தடை செய்யும் விஷ யங்கள்.

வாசனைப் பொடிகள் நிறைந்த ஜாடியை, வாசனைத் தைலத்தை, மஞ்சளை அவள ஒட்டு மொத்தமாக எடுத்துக் கொண்டு போய் தெருவின் விளிம்பில் வைத்தாள். அன் றோடு அவளுக்கும் அந்த வாசனைப் பொருள்களுக்கும் உண் டான சம்பந்தம் அறவே அறுந்தது.

அவள் மறுபடியும் தன் அறைக்குள் புகுந்தாள். உட்கார்ந்து கொண்டாள். கண் மூடினாள். உள்ளுக்குள்ளே ஒளியைத் தேடினாள். சரக்கென்று இழுபட்டாள். பூமியிலிருந்து விடுபட் டாள். மறுபடியும் நேற்று போலவே அவள் மிகப்பெரிய பிரபஞ்ச வெளியில் மிதக்கத் துவங்கினாள். இலக்கில்லாமல் நடக்கத் துவங்கினாள்.



மிகப்பெரிய குதூகலம் அங்கே படர்ந்தது. வெளிப்படுத் தவே தோன்றாத ஒரு ஆனந்தம் உள்ளே நிரம்பி வழிந்தது.

மனம் என்பது பாத்திரம். சந்தோஷம் என்பது அமிர்தம். மனம் முழுவதும் சந்தோஷத்தால் நிரம்பி வழிந்தது.

சந்தோஷத்தை அந்த மனம் அகற்றவும் இல்லை. அனுப விக்கவும் இல்லை. பாத்திரம் எப்படி அமிர்தத்தை அனுபவிக் காதோ, பாத்திரம் எப்படி அமிரதத்திலிருந்து அன்னியமா காதோ அதே போல சந்தோஷம் என்பது அகற்றப்படாமலும், அனுபவிக்கப் படாமலும் அமைதியாக இருந்தது. ஒரு நிரந்தர மான, நிம்மதியான, எதையும் சாராத, எதனாலும் கிளராத, உண்டாக்கப்படாத எப்பொழுதுமே இருக்கின்ற சந்தோஷமாக அது இருந்தது.

இந்த முறை எந்த பயமுமின்றி தன்னைச் சுற்றியுள்ள ஒளி வெள்ளத்தை நெருக்கமாக உணர்ந்து மிக கம்பீரமாக அவள் பயணப்பட்டாள். பூமியைப் பற்றி அறவே மறந்தாள்.

அவள் அம்மாவிற்கு உறவினர் வீட்டுக் கல்யாணங்களும் அதற்குச் செய்யவேண்டிய உதவிகளும் விருந்தோம்பல் களும் நிறைய இருந்தன. தந்தைக்கு விவசாய வேலைகளும் வேடுவர்களோடு பஞ்சாயத்தும், அவர் கொண்டு வந்த பொருள்களை நகர மக்களுக்கு விற்கின்ற பொறுப்பும் இருந்தன.

குடம் குடமாக தேனை வீடுகளுக்கு கொண்டு வந்தார் கள். விதம் விதமான மூலிகைகளை கடை பரப்பினார்கள். உலோகம் போன்ற வைரம் பாய்ந்த மூங்கில்களை விற்ப னைக்குக் கொண்டு வந்திருந்தார்கள். மத்திம வயதுள்ள ஒரு வேடுவர் மிகப்பெரிய சந்தன மரத்தை அறுத்து அவன் ஒருவனாகவே காடுகளுடே மிக கவனமாக எடுத்து வந்து வீட்டு வாசலில் போட்டான்.

பச்சை மரமே நல்ல வாசனை அடித்தது. காயக்காய இன் னும் வாசனை அதிகரித்தது. செண்பக மொட்டுகளும்

வெட்டிவேரும் ஒரு வேடர் கொண்டு வந்து கொடுக்க, அதைக் கொண்டு போய் கல்யாண பசுபதீஸ்வரர் கோயிலுக்கு கொடுத்தார்கள். கோவிலில் மிக சந்தோஷமாக வாங்கிக் கொண்டார்கள். வேரை இடித்து நசுக்கி நீரில் போட்டு செண்பக மொட்டுகளோடு கலந்து சிவனுக்கு அபிஷேகம் செய்தார்கள். கருவறை முழுவதும் வாசனை கிறங்க வைத்தது. கருவறையை நினைக்கும்போதெல்லாம் அந்த வாசனை மூளையை தாக்கிற்று.

எப்பொழுதும் அவள் மனதுக்குள் ஒரு வெட்டிவேர் வாசனை. ஒரு செண்பக வாசனை இருந்துகொண்டே இருந்தது.

கருவூரின் எல்லையிலிருந்த அப்பிப்பாளையத்திற்கு நல்ல மரத்தச்சர்கள் வரத் துவங்கினார்கள். வேடர்கள் காட்டுக்குள் போய் கொண்டு வந்த மரத்தை வாங்குவதற்கு போட்டி போட்டுக் கொண்டு முன் வந்தார்கள். மரம் வையுங்கள் என்று கெஞ்சினார்கள். தேக்கும், சந்தனமரமும் கோங்கு மரமும் பலாவும் சிவனேசரால் விற்கப்பட்டன.

சந்தன மரத்தில் நாராயணர் சிலை செய்யச் சொல்லி காஞ்சிபுரத்தில் ஒரு தனவணிகர் உத்தரவிட்டிருக்கிறார். மரம் தேடி, நான் சேர தேசத்திற்குப் போய் எதுவும் கிடைக்காமல் இந்தப் பக்கம் வந்தேன். உங்களிடம் நல்ல மரம் இருக்கிறதென்று சொன்னார்கள். வயது முதிர்ந்த ஒரு ஆசாரி தன்னுடைய சீடப்பிள்ளைகளோடு அப்பிப்பாளையம வந்து உட்கார்ந்தார்.

அவருக்கு சமீபத்தில் வந்த சந்தன மரம் காட்டப்பட்டது.

அடடா... நல்ல ஆண் மரம். ஒரு சிறு விரிசல் கூட உள் பக்கம் இல்லை. ஒரே அளவில் பலம் வாய்ந்து உடம்பு முழுவதும் இறுக்கமாக இருக்கிறது. கை வைத்தால் வெண்ணெயைப் போல் இழைத்துக் கொண்டு வரும். புருவமும், புருவ இமைகளும், கண் விழிகளும், உதடுகளும், நகங்



களும் கூட இந்த மரத்தில் செதுக்க முடியும். இதை நான் வாங்கிக் கொள்கிறேன். என்ன விலை சொல்லுங்கள் என்று கேட்க, தன்னுடைய மகளின் சார்பாக இந்த மரத்தை தானே வாங்கி சிலை செய்ய தானம் தருவதாக சிவநேசர் சொன்னார்.

அந்த மரத்தச்சர் திகைப்பானார். பதிலுக்கு நான் ஏதாவது செய்ய வேண்டாமா? சிறிதளவாவது காசு வாங்கிக் கொள்ளுங்கள் என்று கெஞ்சினார்.

இல்லை. இந்த மரம் முழுவதும் கடவுள் விஷயத்திற்கு உபயோகப்படுத்துவதாக நீங்கள் எனக்கு வாக்களித்தால் போதும். உதிரும் சக்கைகளைக் கூட நீங்கள் பொடியாக்கி சந்தனமாக்கி பூஜை விஷயங்களுக்கு பயன்படுத்த வேண்டும். மற்றபடி மனிதர்களுக்காக உபயோகம் இதில செய்ய வேண்டாம் என்று சொல்ல, மரத்தச்சர் அவ்விதமே செய்வதாக வாக்களித்தார்.

மெல்ல வடிவுடையாள் அப்பாவுக்கு அருகே வந்தாள். மரத்தச்சர் வடிவுடையாளை ஏறிட்டுப் பார்த்தார்.

"யாருடைய குழந்தை?"

"என்னுடைய மகள்தான்."

"முகத்தில் தெய்வத்தன்மை மிளிருகிறது. அங்க லட்சணங்கள் மிக உன்னதமாக இருக்கின்றன. மேலுயர்ந்த நெற்றி. பெரிய கண்கள். சிறிய சீரான மூக்கு. கீழுதடு நன்கு வளைந்திருக்கிறது. முகவாய் சிரித்து நீண்டிருக்கிறது. காது மடல்கள் முன்பக்கம் விரிந்திருக்கின்றன. பெரிதான கண் இமைகள். மெல்லிய புருவம். கேசத்தின் நீளம், மென்மை, சுருளில்லாத நீண்ட தன்மை இவையாவும் அற்புதமாக இருக்கின்றன. கால் கட்டை விரலை விட அடுத்த விரல் நீண்டிருக்கிறது. இடுப்பு அகன்றிருக்கிறது. இவள் சாதாரணப் பெண்ணாக எனக்குத் தோன்றவில்லை. கடவுள் சக்தியுடையவள். மந்திர ஜபங்கள் செய்தால் இவள் சொன்ன வாக்கு பலிக்கும். இவளுக்கு

ஏதேனும் நல்ல விஷயங்கள் கற்றுத் தருகிறீர்களா" என்று ஆவலாக வினவினார்.

"அவளாகவே ஏதோ தேடி கற்றுக் கொள்கிறாள். நாங்களாக ஒன்றும் கற்பிப்பதில்லை. எந்நேரமும் கல்யாண பசுபதீஸ்வரரையே நினைத்துக் கொண்டிருக்கிறாள்"என்று சொல்ல, எழுந்து நின்று மரத்தச்சன் கை கூப்பினார்.

"என்ன எழுந்து நின்று கை கூப்புகிறீர்கள்?"

சிவநேசன் வினவினார்.

"நீங்கள் சொன்னதும் தொலைவே மணி ஒலித்தது. இடது பக்கம் பல்லி குறி சொல்லிற்று. பறவைகள் சலசலத்துப் பறந்தன. காக்கை ஒன்று மிக நெருக்கமாக வந்து தரை தொட்டிற்று. பறவைகள் நின்று கை கூப்பின. அப்பொழுது நான் கூப்ப வேண்டாமா? நீங்கள் ஒரு வார்த்தை சொன்னதும் இந்த சுற்றுப் பிரகாரம் முழுவதும் அதை ஆமோதிப்பது போல் நடந்து கொள்ள, நான் அதற்கு மரியாதை செலுத்த வேண்டாமா" என்று பரவசமாகச் சொன்னார்.

அவருடைய சீடர்களும் மரம் வாங்க வந்த மற்ற தச்சர்களும் அவளை ஆச்சரியத்துடன் பார்த்தார்கள்.

அவள் மௌனமாக நின்று கொண்டிருந்தாள். அவர்கள் சொற்கள் ஏதும் மனதில் ஏற்றுக் கொள்ளாமல் தலை கவிழ்ந்திருந்தாள்.

"அப்பா..." என்று நிதானமாகக் கூப்பிட்டாள்.

"என்ன தாயே?"

அப்பா ஊர் கூடி மகளை புகழ்ந்ததின் போதை தாங்காமல் தடுமாறியபடி கேட்டார்.

"எனக்கு சந்தனமரத்தில் ஒரு சிவலிங்கம் செய்து தர இயலுமா? அதை வைத்துக் கொண்டு நான் தினமும் பூஜை செய்வேனே" என்று சொன்னாள்.



"ஆஹா... நிச்சயம் செய்து தருகிறேன்" சிவநேசர் கட்டளை இடுவதற்கு முன்பு ஆச்சாரி மறுபடியும் எழுந்து நின்றார்.

"இதோ பாருங்கள், ஒரு பிடி அரிசி போட்டால் பதிலுக்கு அந்த அரிசியிலிருந்து சில அரிசிமணிகள் எடுத்து அரிசியைக் கவிழ்த்த பாத்திரத்தில் அதாவது பிச்சை யார் இட்டாரோ அவருடைய பாத்திரத்தில் போடுவதுண்டு. அதே போல நீங்கள் எனக்கு தாராளமாகக் கொடுத்த இந்த நீண்ட மரத்திலிருந்து ஒரு பகுதியை இப்பொழுதே வெட்டி எடுத்து ஒரு சிவலிங்கம் செய்து தருகிறேன்" என்று சொன்னார்.

முழம் உயரத்திற்கு ஒரு கட்டையை அறுக்கச் சொன்னார். அரை பனை உயரத்திற்கு நீண்டிருக்கின்ற அந்த மரத்திலிருந்து ஒரு முழ உயரம் சந்தனக் கட்டை செவ்வகமாக வெட்டி எடுக்கப்பட்டது. குளிர் நீரால் சந்தனக் கட்டையை நனைத்தார்கள். கண் முன்னே வெகு விரைவாக ஒரு சிவலிங்கம் தயாராகியது. ஆவுடையாரையும், லிங்கத்தையும் தனித்தனியாக வெகு வேகமாக செய்தார்கள்.

சிவநேசர் வீட்டிலேயே மதிய உணவு சாப்பிட்டு விட்டு, சிறிது நேரம் திண்ணையில் அயர்ந்து விட்டு, மறுபடியும் உட்கார்ந்து அதை இழைக்கத் துவங்கினார்கள்.

மங்கிய மஞ்சள் நிறத்தில் மழமழப்பாய் ஆவுடையாரும், லிங்கமும் தனித்தனியாக செய்யப்பட்டன. மிகச் சரியாக அதைப் பொருத்தி வஜ்ஜிரம் காய்ச்சி அந்த இரண்டு துண்டுகளையும் இணைத்தார்கள்.

"சிவலிங்கத்திற்கு கண் திறப்பது வழக்கமில்லை. ஆனால், கண் திறப்பதற்கு பதிலாக ஒரு சூலரேகை வரைவதுண்டு. அதேபோல, ஒரு சூலரேகையை நான் இதில் வரைந்து விடுகிறேன்" என்று சொல்லி, உளியினால் மிக நிதானமாக ஒரு சூலரேகையை வரைந்து சுத்தப்படுத்தி சிவநேசரிடம் மரத்தச்சர் நீட்டினார்

சிவநேசர் சிவலிங்கத்தை வாங்கி கண்ணில் ஒற்றிக் கொண்டு தன் மகளிடம் கொடுத்தார்.

மரத்தச்சருக்கு நன்றி சொல்லி, அப்பாவுக்கு நன்றி சொல்லி அந்த சிவலிங்கத்தை வடிவுடை வீட்டுக்குள் எடுத்துக் கொண்டு போனாள். அறையில் கிழக்கு பார்த்து வைத்தாள்.

சிவலிங்கத்தை மனையில் வைக்கலாமா அல்லது இன்னும் சற்று பெரிய பீடத்தல் வைக்கலாமா? வீட்டுக்குள் எல்லா இடங்களிலும் புகுந்து புறப்பட்டாள். சிவலிங்கத்தை வைப்ப தற்கும், பூஜை செய்வதற்கும் உண்டான உபகரணங்களை சேகரித்தாள்.

சந்தன சிவலிங்கத்தின் மீது மஞ்சள் பூசி, மஞ்சள் மீது குங்குமம் வைத்து, மேலே கதம்பசரம் போட்டு, சுற்றிலும் வாசனைப் பொடிகளை அழுத்தி நிற்க வைத்து, அதன் உச்சி யில் கற்பூரம் வைத்து, தூபம் பற்ற வைத்து தூபப்புகை எழ, வெற்றிலை பாக்கும் வாழைப்பழமும் நிவேதனம் செய்தாள். மெல்ல தேவாரத் திருவாசக பாடல்களைப் பாடினாள். சிவ லிங்கத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறேன்? எதற்கு இந்த விளையாட்டு? எதற்கு இந்த தூபப்புகை? எதற்கு இந்த கதம்பச்சரம்? எதற்கு இந்த உருவம்? எதற்கு இந்த வழிபாடு? இது விளையாட்டா இல்லை ஏதேனும் உண்மையான செயலா? எல்லோரும் செய்கிறார்கள் என்று எனக்கு செய்யத் தோன்றுகிறதா அல்லது இப்படிச் செய்வதுதான் வழிபாடா? இது கற்றுக் கொடுக்கப்பட்டதா நானே உணர்ந்து லயிப்பதா?

ஒளி வெள்ளத்தில் பாய யாரும் கற்றுக் கொடுக்கவில் லையே. உடம்பு தாண்டிப் போக எவரும் பாடம் சொல்லித் தரவில்லையே. அது எனக்குள் தானாகவல்லவா ஏற்பட்டது.

இது என்ன. இது எப்படி கடவுளாகும். இது எப்படி எல்லாம் கடந்ததாகும். உண்மையில் இந்தச் சிவலிங்கம் என்ன? ஒரு



மரத்தின் பகுதி. அந்த மரம் பூமியின் ஒரு பகுதி. பூமி சூரியனி லிருந்து தோன்றிய ஒரு பகுதி. எப்படித் தோன்றியது? நில மும், நீரும், காற்றும், வெப்பமும் சேர்ந்து ஆகாயத்தை நோக்கி வளர்ந்த ஒரு விஷயம். இது எப்படிக் கடவுளாகும்? எல்லா இடத்திலும் கடவுள் இருக்கிறார் என்றால் இதுவும் கடவுளாகத்தானே வேண்டும்? இது மட்டும் கடவுளுக்கு என்ன அன்னியம்?

கடவுள் என்பது என்ன?

எங்கும் நிறைந்த சக்தி. பிரபஞ்சவெளி முழுவதும் பரந்த நீல ஒளி. நமக்குள் இருக்கின்ற ஒரு சக்தி. அது பூமியில் இழுட்டு, இழுபட்ட வேகத்தில் எங்கு இறங்குகிறதோ அந்த விதமாக மாறுகிறது. மரம் இழுத்தால் விதையாகிறது. பூச்சி இழுத்தால் புழுவாகிறது. மீன் இழுத்தால் குஞ்சாகிறது. பறவை இழுத்தால் முட்டையாகிறது. மிருகமும், மனிதர்களும் இழுத்தால் கருவாகின்றன. பிறகு வளர்ந்து குழந்தையாய் வெளியே வருகின்றன. ஓடுகின்ற நீர் தேங்குகின்ற நீரை இழுப்பது போல இங்கே இழுப்பதற்கும் ஒரு சக்தி இருக்கிறது. அந்த எல்லாமுமான சக்தி சிறை விடுத்தும் சிறையில் தங்கி யும் வித்தைகள் காட்டுகின்றன. பூமியைச் சுற்றியுள்ள இந்த சக்தியின் சுழலிலிருந்து தப்பிப் போக வேண்டும். இந்த சக்திச் சூழல் மறுபடி மறுபடி பூமிக்கு இழுத்து பிறக்கின்ற வித்தையை செய்கிறது. பூமிக்கு அப்பால் உள்ள பிரபஞ்சத் திற்கு போக வேண்டும். இங்கே சுற்றியுள்ள ஒளியைத் தாண்டி வேறெங்கோ போக வேண்டும். இழுபடாத இடத் திற்கு போக வேண்டும்.

ஆனால், ஏன் இங்கே கருவூரார் போக வேண்டாமென்று சொன்னார், ஏன் தடுக்கப்பட்டேன்? மறுக்கப்பட்டேன்?

இல்லை. நான் தடுக்கப்படக்கூடாது. நான் மறுக்கப்படக் கூடாது. நான் கடக்க வேண்டும். நான் கடக்க வேண்டும். இவையெல்லாம் உதறிப்போக வேண்டும். எதுவும் என்னு டையதல்ல என்று உதறிப்போக வேண்டும். நான் உதறு

கிறேன் என்பதையும் உதற வேண்டும். என் இருப்பு என்பதையும் உதற ண்டும். போதும்... போ... என்று சொன்னபோது திரும்பி விட்டேனே. அப்பொழுது ஏதோ ஒன்றை கட்டளையிடுவதாகவும், ஏதோ ஒன்றை கேட்பதாகவல்லவா மாறி விட்டது? அதே போலத்தான் இங்கும். பூமியில் இழுக்கின்ற விஷயமும், இழுபடுகின்ற விஷயமும் என்று சக்தி இரண்டாகப் பிரிந்திருக்கிறது. அங்கு போயும் நான் இரண்டாகத்தான் இருந்தேன். நான் என்று இருந்தேன். நான் என்ற இருப்பு இருக்கும்வரை நான் கட்டளைக்கு கீழ்படிய வேண்டும்.

பூமி இழுக்கிறது. பூமியைச் சுற்றியுள்ள பிரபஞ்சம் இழுக்கிறது. இது தாண்டி இது கடந்து இது எல்லாம் கடந்து, அந்த கடந்து நின்ற இடத்திற்குப் பெயர்தான் கடவுள். எதிலும் சிக்காமல், எந்த மாற்றமும் இல்லாமல் எது ஆனந்தமோ அந்த ஆனந்தமாகக் கிடப்பதுதான் கடவுள். சுழலுகின்றதிலிருந்து சிக்கி, சுழலாத இடத்திற்குப் போய்க் கிடப்பதுதான் கடவுள். பூமி சுழல்வது. கிரகங்கள் சுழல்வன. கிரகங்களைச் சுற்றிய பிரபஞ்சமும் சுழல்வது. சுழலாத இடம் சுழலைத் தாண்டிய இடம். சுழலுக்கு அப்பால் உள்ள இடம். என்ன அது? எங்கிருக்கிறது அது? எப்படிப்போவது?

இந்த யோசிப்பு தப்பு. போவது எது? போவது என்றால் ஏதோ ஒன்றுதானே. ஏதோ ஒரு இடம் நோக்கித்தானே. இங்கே தவறு இருக்கிறது. நான், அது என்ற பிரிவு இருக்கிறது. நான் என்று பற்றிக் கொள்கிறபோது அது என்று வருகிறது. நான் என்பதை எப்படி ஒழிப்பது? எப்படி பிடித்து ஆட்டிக் கொண்டிருக்கிறது? எதைச் செய்தாலும் நான் நான் என்றுதானே வருகிறது. இதை நான் எப்படி அழிப்பேன்?

அவள் அழுதாள். உதடு கோணி நெஞ்சு வலிக்க கேவிக் கேவி அழுதாள். எப்படி ஒழிப்பேன் என்று அழுதாள். இதை ஒழிக்காமல் எப்படி விடுதலை என்று அழுதாள். என்னை ஒழிக்கவே முடியாதோ? என் முயற்சியால் நடவாதோ? யார் ஒழிப்பார்கள்? நீயோ... நீயா... எங்கும் இருக்கிற நீயா?



எல்லாம் கடந்தவன் நீ. இங்கு உட்கார்ந்து கொண்டு என்னை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறாயா?

சிவலிங்கத்தை நோக்கி கைகூப்பினாள்.

எல்லா இடத்திலும் இருக்கின்ற கடவுள் இங்கும் இருக்கிறார் எனில் உனக்கு நமஸ்காரம். என்னை எப்படி ஒழிப்பது? என்னை நான் எப்படி இழப்பது?

அவள் கண்ணீர மல்க கேட்கத் துவங்கினாள்.

"நீ என்ன நடிக்கிறாய்?"

உள்மனம் சட்டென்று சிலிர்த்துக் கொண்டு கேள்வி கேட்டது.

"நான் நடிக்கிறேனா?"

அவள் மறுபடியும் தன்னை உற்றுப் பார்த்துக் கொண்டாள்.

"சொல். என்ன நடிக்கிறேன்?"

"உனக்கு உன்னதமான விஷயத்தில் ஆசை வந்துவிட்டது. உன்னதமான விஷயமெல்லாம் உனக்கு கைவசம் கிடைத்து விட்டன. பட்டுப் பாவாடையும், தங்க நகைகளும், ஒட்டியாணங்களும், கால் கொலுசும் கேட்டதற்குண்டான தின்பண்டங்களும் உனக்கு கிடைத்துவிட, உலகத்தின் ஆசையைவிட இன்னும் உயர்வான ஆசை உன்னை பற்றிக் கொண்டு விட்டது. எது கிடைக்காதோ, எது கிடைப்பதற்கு அபூர்வமோ அதைத் தேடிக் கொண்டிருக்கிறாய். எல்லாம் கிடைத்த நிறைவில் இன்னொன்றுக்கு ஆசைப்படுகிறாய். மிக அரிதான விஷயத்திற்கு ஆசைப்பட்டு, அதையும் அடைந்து விட்டேன் பார் என்று கொக்கரிப்பதற்கு முயற்சிக்கிறாய். கடவுளே... கடவுளே... அப்படியா... நான் அப்படியா?"

மறுபடியும் அழுகை வந்தது. திகைப்பு ஏற்பட்டது.

அப்படியா... நான் அப்படியா சொல்? நான் அவ்விதம் தானா?

அவள் தன்னைக் கேட்கத் துவங்கினாள்.

கொல்லைப்புறத்தில் போய் சிறிதுநேரம் உட்கார்ந்தாள். எழுந்து வந்து சிவலிங்கத்தின் முன்பு வந்து உற்றுப் பார்த்து நான் அவ்விதம்தானா, எனக்கு யார் எடுத்துரைப்பார்கள்? எப்படி நான் இதை கண்டு கொள்வேன் என்று கேட்டாள். எனக்கு கற்றுக் கொடேன் என்று கைகூப்பினாள். ஏன் இப்படி அலைகிறேன் என்று அயர்ந்தாள். சுருண்டு படுத்துக் கொண்டாள். எழுந்து உட்கார்ந்து சிவலிங்கத்தைப் பார்த்தாள்.

என்ன. என்னைப் பார்த்தால் சிரிப்பாக இருக்கிறதா? நான் பைத்தியமா? எங்கேயோ தவறு நடந்திருக்கிறதா? நான் சரியாக யோசிக்கவில்லை. எப்படி என்னை கண்டுபிடிப்பது? இது என்ன? இந்த வாழ்க்கை என்ன? இது என்ன மாயம்? என்ன சூழல்? இது தாண்டிய ஏதோ ஒன்றிற்கு நான் புறப்படும் போது வேண்டாம் என்று தடுத்தார்களே, யார் அது, கருவூரார் தானே? இதோ போய் அவரைக் கேட்டு வருகிறேன். என்னை எதற்கு தடுக்கிறீர்? என்னைத் தடுக்க நீர் யார் என்று கேட்டு வருகிறேன்.

அவள் உதறினாள். எழுந்து நின்றாள். மடமடவென்று கூடம் தாண்டி வாசலுக்குப் போனாள்.

வாசலில் மிகப்பெரிய பஞ்சாயத்து நடந்து கொண்டிருந்தது. உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி வழக்கு.

ஒருவர் அந்த வழியாகப் போகக்கூடாது என்றும் அந்த வழியில்தான் போவேன் என்றும் இரண்டு கட்சிகள் உரத்த குரலில் பேசிக்கொண்டிருந்தார்கள்.

இந்த கிராமத்தின் இந்த வழியை உயர்குலத்தோர் மட்டுமே உபயோகப்படுத்த வேண்டுமாம்.

அவளுக்கு சிரிப்பு வந்தது.

வேடுவர்கள் பல் கடித்தார்கள்.

"நீ ஊர் தாண்டி ஊர் போக மாட்டாயா? அப்போது காட்டு வழியாகத்தானே போக வேண்டும். நீ நடந்து போகும்போது உன்னை ஒரே அம்பால் அடித்து வீழ்த்துகிறேன் பார். காட்டெருமை என நினைத்து விட்டேன் என்று சொல்கிறேன் பார். எதற்கு யாரிடமாவது சொல்லவேண்டும் இழுத்து புதைசேற்றில் புதைத்து விட்டால் போயிற்று." என்று சொல்ல உயர்குலத்தோர்கள் நடுங்கினார்கள். அப்படி நடுங்குவதால் உரக்க சத்தமிட்டார்கள். அப்படி சத்தமிடுவதைப் பார்த்து வேடுவர்களும் உரத்த குரலில் பேசினார்கள்.



இங்கே எவருக்கு எது சொந்தம்? பூமியிலுள்ள அத்தனை விஷயமும் உடம்பின்பாற்பட்டுதானே இருக்கின்றன? பூமியால் வளர்ந்த உடம்பு. பூமிக்கே போகப் போகிறது. அழியும் உடம்பு எப்படிப் போனால் என்ன? எந்த வழியில் நின்றால் என்ன? இதற்கு ஏன் இத்தனை பிரச்சினை?

என்னைத் தொடாதே என்று உடம்பு உடம்பைப் பார்த்துச் சொல்கிறதே. இந்த இரண்டு உடம்புமல்லவா அழுகிப் போகப்போகிறது? எரிந்து சாம்பலாகப் போகிறது. சாகப் போகிற இரண்டு பேரும் சாஸ்வதம் என்று நினைத்துக் கொண்டு பேசுகிறார்களே? நான் என்கிற புத்தியே உடம்பால் தானே ஏற்படுகிறது? நான் என்று யோசிப்பதே உடம்பை மையமாக வைத்துத்தானே. நான் என்ற எண்ணம் மனதுக்குள் தோன்றுவதற்குக் காரணம் உடம்புதானே. உடம்பை மனது உதற என்ன செய்ய வேண்டும்?

அவள் வெளியே தாண்ட முற்படும்போது வாசலில் நின்ற பெண்கள் வேண்டாம் இங்கு வராதே. கைகலப்பு ஏற்படும் போல இருக்கிறது. உள்ளே போய் விடு என்று கடிந்து கொண்டார்கள்.

அவள் உள்ளே வந்து உட்கார்ந்து கொண்டாள்.

இப்போது கருவூராரை போய் கேட்க வேண்டுமே. நான் எப்படிக் கேட்பது? நான் எப்படி இந்தக் கூட்டத்தைத் தாண்டிப்போவது? நான் என்று இப்பொழுது உடம்பைத்தானே சொல்லிக் கொண்டிருக்கிறேன். உடம்பு இந்த இடத்தை கடந்து போவதைப் பற்றித்தானே சிந்தித்துக் கொண்டிருக்

கிறது. நான் என்று உடம்பாக இல்லாமல் வேறு விதமாக நகரவே முடியாதா? உடம்பிலிருந்து உயிர் நகர்ந்ததே. உயிரிலிருந்து நான் என்ற எண்ணம் நகராதா? நான் என்ற எண்ணத்தை உதறிவிட்டு உயிர் போகாதா? அது என்ன? அது என்ன உதறியது? எது இந்த உடம்பை பிடித்துக் கொண்டிருக்கிறது. இந்த உடம்பை அது ஏன் பிடித்துக் கொண்டிருக்கிறது? எது... எது... என்று தேடினாள். நின்ற வண்ணம், அமர்ந்த வண்ணம். எழுந்து கொல்லைப்புறம் போய் நின்ற வண்ணம், சமையல் அறை மேற்கூரையை வெறித்துப் பார்த்த வண்ணம், குறுக்கும் நெடுக்குமாக கூடத்தில் நடந்த வண்ணம், பூவைப் பிடித்துக் கொண்டு வானத்தைப் பார்த்த வண்ணம், மறுபடியும் வந்து சிவலிங்கத்தை கை கூப்பிய வண்ணம் உள்ளே நடக்கிறதை உற்றுப் பார்த்தாள். மெல்ல உடம்பின் நடுப்பகுதியில் வலி ஏற்பட்டது.

போதும். என்னை விடுவித்து விடு. இதுதான் மரணமென்றாலும் இந்த மரணத்திற்கும் நான் தயாராக இருக்கிறேன். நூறு தேள்கள் கொட்டியதுபோல மரணத்தறுவாயில் நெஞ்சு வலிக்கும். உடம்பு உயிரை பிடித்துக் கொண்டு கதறும் என்று சொன்னார்கள். அதற்கும் நான் தயாராக இருக்கிறேன். நான் இங்கிருந்து போய்விடவே விரும்புகின்றேன்.

போதும். எனக்கிது போதும். அந்தப் பிரபஞ்சம் வேண்டும். அங்கிங்கெனாதபடி பிரகாசமாக இருக்கின்ற பிரபஞ்சம் வேண்டும். ஒளியற்ற அந்த ஒளி வேண்டும்.

அவள் கண்மூடி உள்ளுக்குள் இருக்கின்ற அந்தச் சத்தியை உற்றுப் பார்த்தாள். நன்றாக உணர்ந்தாள். பளிச்சென்று வெளியே வந்தாள். மேலே மிதந்தாள். காற்றினில் மெல்ல போனாள். கல்யாண பசுபதீஸ்வரர் கோபுரத்தின் மீது அமர்ந்து கொண்டாள். அங்கிருந்து விமானத்திற்கு வந்தாள். விமானத்திலிருந்து கர்ப்பக் கிருஹத்திற்குள் இறங்கினாள். இறங்கி சிவலிங்கத்தை ஆரத்தழுவிக் கொண்டாள்.



'என் அப்பனே.. என் ஐயனே' என்றாள். ஓடிப்போய் அம்பாளை தரிசித்தாள். சுற்றி வலம் வந்தாள்.

கருவூரார் எதிரே போய் நின்றாள். என்ன என்று கேள்வி கேட்டாள்.

கருவூராரின் இடத்திலிருந்து மெல்லியதாய் ஒரு ரீங்காரம் எழுந்தது. அந்த ரீங்காரம் அடர்த்தியாகவும் அமைதியாகவும் இருந்தது. உடம்பு முழுவதும் நிறைந்தது. அவளுள் நிரம்பியது.

பார்வையை மட்டுமே முக்கியமாக வைத்துக் கொண்டிருக்கிறேன். சப்தம் என்பதை மறந்து விட்டேன். அந்த நீல ஒளியில் என்ன சப்தம் ஏற்பட்டது என்பதை நான் கவனிக்கவேயில்லை. பிரகாரத்தை பார்த்தே பயந்து விட்டேன். இதோ ரீங்காரம் உடம்பு முழுவதும் நிரம்புகிறது. சுற்றியும் நீல ஒளி. உடம்பில் ரீங்காரம். அட இது ஒன்றுக்கொன்று இணைந்து இரண்டும் ஒன்றாகவே உடம்புக்குள் இறங்கி முறுக்கிக் கிடக்கின்றன. ஒலியும், ஒளியும் பூமியை சுற்றிக் கொண்டிருக்கின்றன. ஏகப்பட்ட ஒலிகள் பூமியிலிருந்து எழுந்து எழுந்து பிரபஞ்சத்தை நிறைத்துக் கொண்டிருக்கின்றன.

அவளுக்கு பெரும் திகைப்பு ஏற்பட்டது.

எப்படி, எவ்விதம், எவரால், திகைப்பில் மூச்சு முட்டியது. உடம்புக்கு வெளியேயிருந்து உடம்பைப் பார்த்துக் கொண்டிருந்தவள் உடம்பு தடேரென்று சரிந்து விழுந்ததைப் பார்த்தாள். உடம்பற்று வாசற்பக்கம் போனாள். எல்லா மனிதர்களையும், எல்லா பிராணிகளையும், எல்லா தாவரங்களையும் வியப்போடு பார்த்தாள். உந்தி எழுந்தாள். ஏதோடோ கலக்க வேண்டும் என்பது போல எல்லாப் பக்கமுமாய் அலைந்தாள். வேண்டாம் இது என்று உதறுவது போல சகலத்தையும் துறந்து விட்டு மிக விரைவாக நகர்ந்தாள்.

சூட்சும உடம்பு அந்த ஜனங்களுக்கு மேலேயே மிதந்து கிடந்தது. ஆனால் எங்கோ வேகமாகக் கலந்து போகின்ற,

கரைந்து போகின்ற ஒரு அதீதப் பரவசம் ஏற்பட்டது. உடைத்துப் போட்டது போல பளிச்சென்று கூச்சலிடுகிற ஜனங்களை உதற, அவள் வேறெங்கோ கரைந்து போனாள். அந்த நீல ஒளியிலிருந்து வேறு இடத்திற்கு நகர்ந்தாள்.

அடர்த்தியான கருமை. பிறகு வெண்மை. பால்போலும் வெண்மை. வெண்மைக்குள் உள்ளே புக அவளும் வெள்ளையானாள். வெண்மை அவளை இழுத்துக் கொண்டது. இழுத்து தனக்குள் வைத்துக் கொண்டது. வெண்மையில் காணாமல் போனாள். எல்லாம் மறந்து வெள்ளையாய் நின்றாள். எல்லாம் உதறி வெள்ளையாகி ஆனந்தித்தாள். கனத்த அமைதியான ஒரு சூழல் அவளை அழுத்திக் கொண்டது. அவள் மறைந்து போனாள். ஆழ்ந்த உறக்கம் போலும், சுவாசமற்ற இருப்பு போலும், தேகம் ஒடுங்கியது போலும், செயல்படாத மனம் போலும் அவளுக்கு ஏற்பட்டது. ஒரு அளவு, ஒரு புள்ளி நான் என்று ஒன்றி நிறைந்திருந்தது. எங்கும் ரீங்காரம் நிரம்பிய இடம். எந்தச் செயலும் அற்ற இடம். எந்த வேலையும் அற்ற இடம். எந்த அசைவுமற்ற இடம். எந்த எண்ணமும் அற்ற இடம். அவள் நான் என்று அந்தப் புள்ளியை உற்றுப் பார்க்க சரக்கென்று மறுபடியும் கருமை தாண்டி நீல ஒளிக்கு வந்து நீல ஒளியிலிருந்து பூமிக்கு வந்து பூமியினுடைய நிழல் வெளிச்சங்களை அனுபவித்து வீட்டிற்குள் இறங்கி அறைக்குள்போய் அறையிலிருந்து உடம்புக்குள் இறங்கிக் கிடந்தாள்.

யாரோ கதவு திறந்தார்கள்.

"என்னடி இப்படி படுத்துகிட்டிருக்க ஏய். எழுந்திரு" தாவி அவளைத் தூக்கி நிறுத்தினார்கள். அவள் சரிய, உரக்கக் குரல் கொடுத்தார்கள்.

உள்ளே ஆணும், பெண்ணுமாய் வருவது தெரிந்தது.

அவள் கண் விழித்தாள். மெல்ல சிரித்தாள்.



அந்த ஒரு புள்ளி. அவள் இருக்கின்ற இடம் அசையாது அவளுக்குள் தெள்ளத் தெளிவாய் தெரிந்து கொண்டே இருந்தது. அந்தப் புள்ளியில் அவள் மனம் ஒருங்க மற்றவைகளை எல்லாம் வினோதமாகப் பார்த்தாள்.

என்னடி... என்ன ஆச்சு என்று சொல்ல நெஞ்சில் கை வைத்து அடித்துக்கொண்டாள்.

என்ன... என்று கேட்க எல்லோர் முகத்தையும் தடவினாள்.

இது அழகல்லவோ, இது நானல்லவோ, இது எனக்குள் இருக்கிற புள்ளியல்லவோ. இந்தப் புள்ளியும் அந்தப் புள்ளியும் ஒன்றல்லவோ. இந்த வெண்மையும். அந்த வெண்மையும் ஒன்றல்லவோ. இதுவும் அதுவும் அதுவேயல்லவோ என்று இறுக்கத் தழுவிக் கொண்டாள். ஆண், பெண் பாராமல் தழுவிக் கொண்டாள். பெண்களின் தலையைத் தடவினாள். இறுக்கத் தழுவிக்கொண்டாள். நெஞ்சு தடவினாள். முதுகு தடவினாள். எல்லோரையும் தழுவிக் கொண்டாள்.

"என்னடி ஆச்சு என்னாச்சு" என்று சொல்ல பின்னே யாரோ இரண்டு பேர் எட்டிப் பார்த்தார்கள்.

"கொஞ்சம் பிசாசு அடிச்சா மாதிரி தெரியலை. முழிப்பே நல்லாயில்லையேப்பா" என்று சொல்ல, "ஆமாம் ஒண்ணு பைத்தியமா இருக்கணும் இல்லை, பிசாசு அடிச்சுருக்கணும் முகம் நல்லாயில்லை."

கள்ளமாய் பார்ப்பவர்கள், வெள்ளையாய் பார்ப்பவளைப் பார்த்து வினோதமாய்ப் பேசினார்கள்.

அவளை தாங்கியவளை நிமிர்ந்து அவள் பார்த்தாள்.

"வா... என்னோடு வா. நான் காட்டுகிறேன். வா" என்று மறுபடியும் நகர முற்பட்டாள். தாங்கியவளின் உள்ளிருக்கின்ற சக்தியும் வெளியே வர தயாராக, அவள் ஐயோ என்று அலறினாள்.

"இவ தொட்டா எனக்கு என்னமோ பண்ணுது. என்னால முடியலை. இவளை வேற யாராவது வாங்கிக்கோங்களேன். வேற யாராவது வாங்கிக்கோங்களேன்" என்று தாங்கியவள் கத்த, சுற்றியிருந்தவர்கள் விலகி ஓடினார்கள். தாங்கியவள் மெல்ல அவளை கிடத்திவிட்டு தப்பித்தோம் பிழைத்தோம் என்பது போல  எகிறி குதித்து கூடம் நோக்கிப் போனாள். அவளை ஊர் ஜனம் சுற்றிக் கொண்டது.

"எதுவோ பண்ணுது. உடம்புக்குள்ள யாரோ கையவிட்டு பிடுங்கறா மாதிரி என்னமோ ஒரு வேதனை. தொண்டை அடைக்குது. நிலை குத்திப் போறா மாதிரி ஆயிப்போச்சு."

"அது பிசாசுதான். நான் அப்பவே சொல்லலை."

பின்னாலிருந்து குரல் கொடுத்தவன், முன்னால் வந்து பேசினான். என்னது என்று தெரியவில்லையென்றால் அது இன்னது என்று சொல்ல மனிதர்கள் எப்பொழுதுமே தயாராக இருந்தார்கள். தனக்குத் தெரிகிறதோ தெரியவில்லையோ தெரிந்தாற்போல பாவனை செய்ய அவர்கள் ஆவேசப்பட்டார்கள். தனக்குத் தெரியும் என்பதை மற்றவருக்கு பொய்யாக வேனும் காட்டுவதற்கு முயற்சி செய்தார்கள். அதில் குதூகலமடைந்தார்கள்.

'உங்களுக்குத் தெரியுமா இது பிசாசுன்னு' என்று யாரோ கேட்க, 'இந்த மாதிரி பலதும் பார்த்திருக்கிறேன்' என்று அவன் தன் பழைய அனுபவங்களைச் சொல்ல, அவனைச் சுற்றி ஒரு கூட்டம் வந்தது.

பொய்கள்... பொய்கள்... பொய்கள் மீது பொய்கள் என்று அங்கே பல்வேறு மனிதர்கள், பல்வேறு கோணங்களில் பல்வேறு விதமாக பொய் சொல்ல ஆரம்பித்தார்கள்.

நெல் முனையளவும் தெரியாத ஒரு விஷயம் பற்றி கண், காது, மூக்கு, வைத்து மிகப்பெரிய கற்பனைக் கதைகளை அவிழ்த்துவிட்டார்கள். இதனால் கேட்பவர் மனதும் சிதறிப் போயிற்று. பொய்கள் பலப்பட்டு பலப்பட்டு உண்மைக்கு



எதிராக மிகப்பெரிய தடைக்கற்களாக பொய் விளங்குவதை அவள் உணர்ந்தாள். கடவுளுக்கு  எதிராக, கடவுளை மறைக்கும் வண்ணம் மிகப்பெரிய பொய்மலை ஒன்று மனிதர்களால் கட்டப்பட்டிருப்பதை அவள் உணர்ந்தாள். மறுபடியும் தனக்குள் புகுந்து அடங்கினாள். எழுந்து நின்றாள்.

"என்னாச்சும்மா... என்னாச்சு?"

அவளை எல்லோரும் சுற்றி வந்து நின்றார்கள். வந்து சில பேர் விலகி நின்று பார்த்தார்கள்.

தகப்பன் ஓடி வந்து அவள் தோளில் கை வைத்தான். தலையைத் தடவினான். நெற்றியில் முத்தமிட்டான்.

"கொஞ்ச நாளாவே நீ சரியில்லை கண்ணு. என்னமோ பேசிகிட்டிருக்க. தனக்குத்தானே பாடிகிட்டிருக்க. நேரங்கெட்ட நேரத்துல தூங்கற அப்படின்னு சொன்னாங்க. வயசுக்கோளாறுன்னு விட்டுட்டேன். இது வேற எதுவோ கோளாறா இருக்கும்போல இருக்கே  அம்மா. ஏதாவது பார்த்தியா? தப்பா ஏதாவது நடந்துடுச்சா? துர்தேவதை, பிசாசு ஏதாவது உன்னை தொந்தரவு பண்ணுதா சொல்லும்மா. எது இருந்தாலும் சரி பண்றதுக்கு ஆள் இருக்கு."

அவள் திகைத்தாள்.

எப்படி இல்லாத ஒன்றை எப்படி சரி செய்வது? யார் சரி செய்வார்கள்?

"யாரப்பா..."

"இதோ பார்... அவர் உடுக்கை அடிக்கறவரு. அவர் உடுக்கைய தூக்கி விபூதியை தலையில தடவி அடிச்சார்னாக்க எந்தப் பிசாசும் பயந்து ஓடும்."

"அடிக்கச் சொல்லுங்கப்பா."

அவளுக்கு அந்த உடுக்கைக்காரன் என்ன பொய் சொல்லப் போகிறான் என்று ஆச்சரியமாக இருந்தது.

அவன் அருகே வந்து உட்கார்ந்தான். உறுத்து அவள் கண்களைப் பார்த்தான். அவள் பதிலுக்கு இன்னும் வேகமாகப் பார்த்தாள்.

அவன் மிரண்டான்.

"சிவநேசய்யா. இது பெரிய விஷயமா இருக்கும்போல இருக்கே" என்று எழுந்து நின்றான்.

அவளை உறுத்துப் பார்த்து, அவளை மறுபடியும் உட்கார வைத்தான்.

"என்ன சொல்றீங்க?"

"இல்லை. ரொம்ப பலமானது. ரொம்ப ரொம்ப பலமானது உங்க பொண்ணுக்குள்ள புகுந்துகிட்டிருக்கு" என்று அவன் உரத்துச் சொல்ல, அவள் மெல்லச் சிரித்தாள்.

"என் எதிர்க்க இப்படி யாரும் சிரிச்சதே இல்லை."

அவன் உரத்துப் பேச, அவள் "ச்சீ... போடா" என்று அதட்டினாள்.

"பாருங்க.. .பாருங்க உங்க பொண்ணு பேசுமா? என்ன தங்கமான பொண்ணு அது. பாருங்க இப்போ என்னை பேசுது பாருங்க. உள்ளுக்குள்ள பிசாசோட பேசறேன் பாருங்க. போயிடுவேனா போயிடுவேனா உன்னை அனுப்பாம நான் போக மாட்டேன்டி" என்று உடுக்கை எடுத்து அடிக்கத் துவங்கினான்.

உடுக்கு அடிப்பதால் அந்த உடுக்கைக்குள் ஒரு அதிர்வு ஏற்பட்டது. அந்த அதிர்வு சத்தமும், பிரபஞ்ச சத்தமும் ஒன்றே என்பதை அவள் புரிந்து கொண்டாள். ஆவலோடு உற்றுப் பார்த்தாள்.

ஹா... மனிதர்கள் கெட்டிக்காரர்கள். பிரபஞ்சத்திற்கு அருகே அருகே போய் ஒவ்வொரு விஷயமாக கண்டு கொண்டு வந்து இங்கே உலகத்தில் பரவ விட்டிருக்கிறார்கள்.



உடுக்கை, மனிதனின் பிரபஞ்ச அறிவு. மந்திரங்கள் மனிதனின் பிரபஞ்ச அறிவு. தீயில் ஊற்றும் நெய் மனிதனின் பிரபஞ்ச அறிவு. அழுகையிலிருந்து வழியும் நீர், மனிதனின் பிரபஞ்ச அறிவு. கோயில், மனிதனின் பிரபஞ்ச அறிவு. கும்பிடும்போது உள்ளே ஏற்படுகின்ற பணிவு, நொய்மை, குழைவு மனிதனின் பிரபஞ்ச அறிவு. அடடா... மனிதன் எத்தனை அற்புதமானவன்?

அவள் வியந்தாள்.

பிரபஞ்சம் மனிதனுக்கு உதவி செய்திருக்கிறதோ?

செய்திருக்கிறதே. அடாடா.. பிரபஞ்சம் மனிதனுக்கு தூக்கத்தை கொடுத்திருக்கிறதே. பிரபஞ்சம் வழங்கிய காதல் இன்னொரு கொடை. கலவியில் ஏற்படும் பரவசமும் பிரபஞ்ச சந்தோஷமும் ஒன்றே பசியும்போது உண்ணலும், வேட்கையின்போது நீர் குடித்தலும் பிரபஞ்ச சந்தோஷமே. குளிரில் வெப்பமும், வெப்பத்தில் குளிரும் பிரபஞ்ச அறிவே. பிரபஞ்சம் எங்கும் நிறைந்த அது, கடவுள் எனப்படுவது இங்கே இப்படியெல்லாம் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

மனிதன் அதை தன்னுடைய சந்தோஷம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறான். உடம்பின் மூலமாக மனதின் வழியாக உள்ளுக்குள்ளே இருப்பதை உணரும் நிறைவு அது.

"அம்மாக்குள்ள இருக்கறது காட்டேரி. ரத்தக் காட்டேரி. ரெண்டு எருமை வெட்டினாதான் கொஞ்சமாச்சும் அடங்கும்."

எதிரே இருப்பவன் மனசுக்குள் வேகமாய் காசு கணக்குப் போட்டு, உரத்த குரலில் வேறு வழியே இல்லை என்பது போல் சொல்ல, சிவநேசர் சரியென்று தலையாட்ட, அவள் எழுந்திருந்தாள்.

எல்லோரும் பயந்து விலகினார்கள்.

ஹும்... என்று ஒரு ஹுங்காரமிட்டாள். அந்தக் கோடங்கி பயந்து பின் வாங்கினான்.

"என்னடா" என்று பல் கடித்து அவனை முறைத்துப் பார்த்தாள்.

அவன் கைகள் நடுங்க, ஓடி கால் தடுக்கி கீழே விழுந்து, உச்சி மண்டை தூணில் நச்சென்று முட்டிக் கொண்டது. அவன் துவண்டு விழுந்தான்.

சிவநேசர் சுவரோடு ஒண்டி நின்றார்.

"எனக்கு ஒண்ணுமில்லைப்பா. இவங்களையெல்லாம் ஏன் கூப்பிடற? நான் வேற ஒரு இடத்துல இருக்கேன்."

"ஏம்மா... ஏன் அப்படி? இங்க வந்துட்டா இங்க இருக்க வேண்டியதுதானேம்மா! ஏம்மா வேற இடத்துக்குபோற?" அப்பா அழுகையோடு கேட்டார்.

அவர் கேள்வி நியாயம்தானே என்று அவளுக்குத் தோன்றியது.

அந்தக் கேள்வி முகத்தில் அடித்தாற்போல் இருந்தது.

அதுதானே, இந்த உலகத்தின் நியதி என்னவோ அது போல் இருந்து விடாமல் இந்த உலகத்தின் நியதிக்கு அப்பாற்பட்டு இருப்பதற்கு நான் ஆசைப்படுவானேன்? இந்த உலகத்தின் நியதி என்ன?

இங்கு பிறந்து, உழன்று இங்கு உள்ளோரோடு கலந்து, கூடிக்களித்து, சண்டையிட்டு கூடிக்களிப்பதில் சந்தோஷமடைந்து, சண்டையிடுவதில் சந்தோஷமடைந்து விதம் விதமான பிரச்சினைகளுக்கு நடுவே வாழ்ந்து கொண்டிருப்பது தானே சந்தோஷம். உண்பது சந்தோஷம், உறங்குவது சந்தோஷம். உடுப்பது சந்தோஷம். நான் இவைகளையெல்லாம் ஏன் புறக்கணித்துவிட்டு வேறு எதற்கோ ஓடுகிறேன்?

அவள் மௌனமாக இருந்தாள்.

உண்பது சந்தோஷமெனில், எத்தனை முறை உண்பது. உடுப்பது சந்தோஷமெனில், எத்தனை முறை உடுப்பது? உறங்குவது சந்தோஷமெனில் எத்தனை முறை உறங்குவது?



ஒரு சந்தோஷம் அனுபவிக்கப்படுகிறபொழுதே அதை மறுத்துவிட்டு இன்னொரு சந்தோஷத்திற்கு யாரேனும் ஓடுவார்களா? சந்தோஷம்தான் இருக்கிறதே. பிறகு ஏன் உறக்கத்தைக் கலைக்க வேண்டும்? உண்பது சந்தோஷம்தானே, பிறகு ஏன் உண்பதை நிறுத்த வேண்டும்? உடுப்பது சந்தோஷம்தானே. பிறகு ஏன் மாறி மாறி உடுத்த வேண்டும்? அப்படியெனில் உண்பது சந்தோஷமில்லையோ?

அவளுள் கேள்வி எழுந்தன.

உண்பது சந்தோஷம்தான். ஆனால் நிரந்தரமல்ல. உடுப்பது சந்தோஷம்தான். ஆனால் நிரந்தரமல்ல.

இப்படியே சந்தோஷங்கள் பலதும் தேடி அலைகிறது. அதனால்தான் உண்கிறது. அதனால்தான் உறங்குகிறது. அதனால்தான் உடுத்தி உடுத்தி களைகிறது. அதனால்தான் ஆண் பெண்ணையும், பெண் ஆணையும் தேடுகின்ற நிலைமை ஏற்படுகிறது. அதனால்தான் போர், அதனால்தான் உல கத்தின் எல்லா விஷயங்களும். இது சந்தோஷம், இது சந்தோஷம் என்று தேடி... இல்லை இல்லை என்று ஏமாந்து இடம் மாறி இடம் மாறி அமர்ந்து எதுவுமே இல்லை என்று களைத்துப் போய் மரணம் ஏற்படுகிறது. இறப்பு தானாக ஏற்படுவதில்லை. மனிதர்கள் ஏற்படுத்துகிறார்கள். தேடித் தேடி மனம் அலுத்துப் போய்,மனம் அலுத்ததால் உடம்பும் அலுத்து விட்டது. மூப்பு என்பது மனதால் ஏற்படுவது. மூப்பின் காரணமாக மரணம் ஏற்படுகிறது. ஆனால், மரணத்தை மனம் ஏற்பதில்லை. மூப்பு மட்டுமே அலுப்பு மட்டுமே ஏற்பட்டு அந்த அலுப்பு தாண்டி வேறு ஏதேனும் நல்லது கிடைக்காதா என்று யோசிக்க, மரணம் வந்து விடுகிறது. பிறகு தொடர்ச்சியாய் தேடுதல் ஆரம்பிக்கிறது. மரணத்திற்குப் பிறகும் தேடுதல் தொடர்கிறது. எனவே இந்த உலகம் சந்தோஷமல்ல. நிரந்தரமான சந்தோஷமல்ல.

எது நிரந்தரமான சந்தோஷம்?

அந்தக் கருமையைத் தாண்டி வெண்மைக்குள் புகுந்தோமே, வெண்மைக்குள் வெண்மையாய் மாறினோமே, வெறும் புள்ளியாய்க் கிடந்தோமே, அதில் கரைந்து காணாமல் போனோமே, தானற்று நின்றோமே, அதுதானே அழகு. அதுதானே சந்தோஷம். அதுதானே எல்லாம். அதுதானே நிரந்தரம்.

அப்படியானால் பூமி என்பது...

ஆத்மா என்பது அகோரப்பட்டு உடம்பாயிற்று. உடம்பு தங்குகின்ற இடம் பூமியாயிற்று. பூவாக பூச்சியாய், புழுவாய், பூண்டாய், பறவையாய், மிருகமாய் மறுபடி மறுபடி சந்தோஷம் தேடிப் பிடிக்கும் இடமாயிற்று.

அப்படியானால் பிறப்பிலும் சந்தோஷமில்லை. இறந்து மிதப்பதிலும் சந்தோஷமில்லை.

ஏன் பிறக்க வைக்கிறது?

சந்தோஷம் தேடுவதற்காக.

சந்தோஷம் தேடுதல் என்பதற்கு என்ன அர்த்தம்?

ஆசை என்று அர்த்தம். ஆசை மறுபடியும் பிறக்க வைக்கிறது. ஆசை என்பதுதான் சந்தோஷம் தேடுதல். சந்தோஷம் என்பது உள்ளே இருக்கிறது. உள்ளே இருப்பதை உணர்வதில் இருக்கிறது. உள்ளே இருப்பதை உணர்ந்து அதற்குள் அமிழ்வதில் இருக்கிறது. சந்தோஷம் ஒரு இடத்தில் அல்ல. ஒரு பொருளில் அல்ல. அது ஒரு நிலை. அது அன்னியமாய் இல்லை. அலைந்து தேட கிடைக்கப் பெறுவதில்லை. சந்தோஷமாகவே பெறுவதுதான் இங்குள்ள விதி. இதை எத்தனை விதமாகச் சொன்னாலும் அனுபவிக்கிறவரையில் புரிவதில்லை.

அப்பிப்பாளையத்தில் இருக்கின்ற ஒரு இளைஞனுக்கு கருவூர் போய், கருவூர் இவ்விதமாக இருக்கிறதென்று காட்டினால்தான் முடியும். கருவூரைக் காட்டாது, கருவூரைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தால் அவன் ஏதோ ஒரு ஊரைத்தான்



நினைத்துக் கொள்வானே தவிர, அவன் நினைத்துக் கொண்டது கருவூராக இருக்காது. இது மொழிக்கு அப்பாற்பட்டது. பேசி விளங்க வைக்க முடியாது. உபமானத்தாலும், உவமேயத்தாலும் விளங்காது. அறிந்தவரும், புரிந்தவரும் பார்க்கும் போது அட... உங்களுக்குப் புரிந்து விட்டதா என்று பேசாமல் பேசிக் கொள்வார்கள். இது சொல்லாமல் சொல்வது. வெறுமே உணர வைப்பது.

அவளைச் சோதிக்க இப்பொழுது மருத்துவர்கள் வந்தார்கள்.

திருச்சிரப்புரத்திலிருந்து ஒரு மருத்துவரும், அதற்கு அருகேயுள்ள உறையூரிலிருந்து ஒரு மருத்துவரும், குதிரை வண்டி கட்டிக் கொண்டு வந்திருந்தார்கள்.

அரசரைப்போல மிக கம்பீரமாக நடந்து கொண்டார்கள்.

உடம்பின் எல்லாப் பகுதிகளும் எனக்குத் தெரியும். உடம்பின் எல்லா சூட்சுமங்களும் எனக்குத் தெரியும். எல்லா நோய்களும் எனக்குத் தெரியும். அதற்குண்டான மருந்துகளும் தெரியும் என்று பெரிதாய் பேசி முழங்கினார்கள். கூட்டம் கை கூப்பி கேட்டுக் கொண்டது.

அந்த வைத்தியர்கள் மருந்தினால் குணமாவது பற்றியே பேசினார்கள். மருந்தில்லாமல் குணமாவது பற்றி அவர்களுக்குத் தெரியவில்லை. மருந்தில்லாத ஒரு அருமருந்து இருக்கிறது. அது என்னவென்று புரியவில்லை.

எங்கே நோய் இருக்கிறதோ, அதை நோக்கி உள்ளுக்குள் இருக்கிற மின்சக்தி தூண்டப்பட்டால் நோயற்ற இடத்தை அந்த மின்சக்தி குணப்படுத்திவிடும். மின்சக்தியைத் தூண்ட மனம் ஒருமிக்கப்படவேண்டும். மனம் ஒருமிக்கப்பட்டு ஆத்மாவைக் கெஞ்ச வேண்டும். அங்கிருந்து ஏற்படுகின்ற அலைகளை, அதிர்வுகளை உடம்பு ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்த அலைகள், அந்த அதிர்வுகள் உடம்பை பருக்க வைக்கும். சிறுக்க வைக்கும். ஒன்றுமில்லாமல் போக வைக்கும்.

ஐந்தடி உயரமுள்ள பெண் ஏழடியாக வளரலாம். ஐந்தடி உயரமுள்ள பெண் ஐந்தங்குலமாகப் போகலாம். அதற்குக் கீழும் தேயலாம். காற்றோடு கலந்து விடலாம். அது வேறு மருத்துவம். தன்னை அன்னியமாக்க தனக்குத்தானே செய்து கொள்ளும் உதவி. தன் உடம்பை தன்னிடமிருந்து பிரித்து தானே உற்சாக மூட்டிக் கொள்ளும் விதம். இதுவே உபத்திரவத்தை ஒழிக்கும் வழி.

பூமிக்கு கறுப்பை இறைத்திருக்கிற பிரபஞ்ச சக்தி வெளுப்பையும் இறைத்திருக்கிறது. பூமிக்கு இனிப்பை இறைத்திருக்கிற பிரபஞ்ச சக்தி கசப்பையும் இறைத்திருக்கிறது. எனவே இனிப்பு அதிகமானால் கசப்பும், கறுப்பு அதிகமானால் வெள்ளையும் இவர்கள் கொடுத்துவிடுகிறார்கள். இதைத்தான் மருந்து என்று சொல்கிறார்கள். உஷ்ணம் அதிகமானால் குளுமையையும் குளுமை அதிகமானால் உஷ்ணத்தையும் அனுப்புகிறார்கள். மாவு சத்து அடி வயிற்றில் அடைத்துக் கொண்டால் நார்சத்து அனுப்புகிறார்கள். நார் சத்து தேங்கி நின்றால் விளக்கெண்ணை அனுப்புகிறார்கள். வயிற்றிலிருந்த அடைப்பை நீக்கி வாயுவை விடுவிக்கிறார்கள்.

ரத்த ஓட்டம் துவண்டு சுருண்டால் உஷ்ணத்தை அனுப்புகிறார்கள். உஷ்ணம் அதிகரித்தால் ரத்த ஓட்டம் அதிகரிப்பு. உச்சி மண்டை தெறிக்கும்படி வலித்தால் குளுமையை ஏற்படுத்துகிறார்கள்.

இவை எல்லாமே மனதால் முடியும். மனது வலிமையினால் முடியும். மனது வலிமையாக மனிதனுடைய வேர் தெரிந்திருக்க வேண்டும். மனதினுடைய வேருக்குப் பெயர் ஆன்மா. ஆன்மாதான் உயிர், கடவுள், குரு, சக்தி எல்லாம்.

கரு என்கிற கருவூராரும், கல்யாண பசுபதீஸ்வரரும் எங்கும் நிறைந்த பிரபஞ்சமும், என்னுள் இருக்கின்ற சக்தியும் எல்லா உயிரினங்களிலும் நிறைந்திருக்கின்ற சக்தியும் ஒன்றே. ஒவ்வொரு இரவும் தூங்கப்போவது போல, ஒவ்வொரு பிறவியும் பிறந்து இறக்க நேரிடுகிறது. ஒவ்வொரு



நாளும் ஒவ்வொரு பிறவி. பல நாள்கள் சேர்ந்த ஒரு பெரும் பிறவி. பல பிறவிகள் சேர்ந்த பெரும் பிறவி. பிறவிப் பெருங்கடல், புல்லாயும், புழுவாயும், மீனாயும், மானாயும், ஆடாயும், மாடாயும் இருக்கும்போது பிறவியைத் தாண்ட இயலாது. பிறவிக் கடலை கடக்க முடியாது. மனிதனாகப் பிறக்கும்போது அந்தப் பிறவியை தாண்டுவதற்குண்டான அறிவும், ஆற்றலும் கிடைக்கின்றன. யானையும், பூனையும் மறுபடியும் பிறப்பதற்கே பிறந்திருக்கின்றன. மனிதன் மட்டுமே பிறவியை அறுக்கத் தெரிந்தவனாக இருக்கின்றான். மனிதனாகப் பிறந்த பிறகும் பிறவியை அறுக்க முடியவில்லையெனில் பிறப்பதே வீண். இறப்பது அபத்தம். மறுபடியும் பிறக்கத்தான் இறக்கிறோம் என்று சொல்லும்போது இறக்கிற நிலையில் மிகப்பெரிய வேதனை ஏற்படுகிறது. ஐயோ... மேலே போகும் வழி தெரியவில்லையே என்று வேதனை முறுக்குகிறது. வலியும் அலறலுமாய் சூட்சும ஜனங்களைப் பார்த்து மனம் பேதலிக்கிறது. மேலயும் போக முடியாமல் பூமிக்கும் வர முடியாமல் தவிக்கின்றவர்களைப் பார்த்து மனம் பயம் கொள்ளுகிறது. பைசாசம் என்பது பயம். பயம்தான் பிசாசு. சூட்சும உருவங்களைப் பார்த்து பயப்படத் தேவையில்லை. நம்மைப் பார்த்து அவை பயப்படுகின்றன. எங்கும் போகாமல் இங்கு வந்து சிக்கிக் கொண்டிருக்கின்றேனே என்று விவரமில்லாமல் அலைகின்றன.

பரிட்சயமில்லாததால் மனிதர்கள் பயப்படுகிறார்கள். சுற்றியுள்ளோர்கள் பொய் மேல் பொய் சொல்ல மிரண்டு போய் தவிக்கிறார்கள். உலகம் என்பது மாயை.

மாயை என்பது எதனால்?

இந்த மாதிரிப் பொய்களால்.

பிரபஞ்சமும் சத்தியம். உலகமும் சத்தியம். சத்தியமான உலகத்தில் மனிதனுடைய அற்புதங்களே அதிகம். அந்தப் பெண் அழகு. இந்த ஆண் வலிவு. இவள் புத்தி மிகக் கூர்மை. இந்தப் பேச்சு மிக இனிமை இதெல்லாம்தான் மாயை. உலகில்

அழகில்லாததும் இருக்கிறது. பலத்தில் பலவீனமும் உண்டு. எல்லா புத்திக்கூர்மையும் சறுக்கும். பூமி வள்ளல். வாரி வாரிக் கொடுக்கிறது. மனிதன் திருடன், திருடிக் கொள்கிறான். பொய் சொல்லுகிறான். என்னுடையது என்று இறுக்கிக் கொள்கிறான். இந்த நிலம் என்னுடையது என்று சொல்பவன் போல் நிர்மூடன் உலகத்தில் எவரேனும் உண்டா?

பூமியே நிரந்தரமில்லை. நிலம் என்ன நிரந்தரம்? நிலம் வாங்கவும், விற்கவும் செய்கிறவன் அபத்தமானவன். பணம் கடன் கொடுத்து வட்டி வாங்குகிறவன் சமூகத் துரோகி. தான் மட்டும் உண்பவன் தரித்திரன். உழைக்காமல் இருப்பவன் மனநோயாளி. பிறரை ஏய்த்து உண்பவன் மிருகன். மிருகத்திலும் கேவலமானவன்.

இந்த மாதிரி ஆயிரக்கணக்கானவர்கள் சொல்லுகின்ற பொய்யால் உலகம் மாயத்தோற்றம் அடைகிறது.

அவள் எத்தனை அழகு? அவளை நான் காதலிக்கிறேன்.

பொய் ஆரம்பிக்கிறது.

அவன் எத்தனை வலிவு? அவனை நான் விரும்புகின்றேன்.

பொய்யிற்கு பொய், இரண்டும் சந்திக்க நூற்றுக்கணக்கான, ஆயரக்கணக்கான பொய்கள் இருக்கின்றன. இந்தப் பொய்களைப் பாராட்டி, கவிதைகளாய் பல பொய்கள் எழுதப் படுகின்றன.

நெசவுதான் மிகச் சிறந்த தொழில், தையற் தொழில்தான் உலகத்திற்கே உன்னதமான தொழில். வேதம் சொல்வதுதான் மிக ஆரோக்கியமான தொழில். அரசாள்வதுதான் கம்பீரம். ஆள்பவனுக்கு அதிகாரியாக இருப்பதுதான் அதிர்ஷ்டம். இந்தத் தொழில் செய்பவன் உயர்வு. இந்தத் தொழில் செய்பவன் தாழ்வு. அரசன் என்றால் மண்டியிடு. அந்தணன் என்றால் விழுந்து கும்பிடு. வணிகன் என்றால் தானம்கேள். வீரன் என்றால் பயந்து நட என்று மக்களுக்கு உபதேசம் சொல்லி



ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான விளக்கம் சொல்லி, பிரிவுகள் ஏற்படுத்தி, பிரிவுகளைப் பெரிதாக்கி, அந்தப் பிரிவுகளையே மெய்யென்று நம்பி, பொய்யான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிற முட்டாள் ஜனங்கள்.

பிறகு என்ன செய்வது? எப்படி அறிந்து கொள்வது? இவையெல்லாம் பொய்யென்று என்று உணர்ந்து உதறுவது?

பிறந்து, மீண்டும் பிறந்து, மீண்டும் பிறந்து உதறவேண்டும். வேறு வழியில்லை. இது சொல்லிப் புரியாது. எழுதிப் படித்து விளங்காது. உள்ளுக்குள் எங்கோ முள் தைக்க வேண்டும். தைத்து அலறி எழவேண்டும் ஏன் எத்தனை நாள் இந்தப் பிறவி என்று சிறுவயதிலேயே தோன்ற வேண்டும். எனக்கு அப்படி தோன்றிவிட்டது. இந்தப் பிறவியை அறுப்பதே இந்தப் பிறவியின் பணி. இந்தத் தொடரை முடிப்பதே என்னுடைய வாழ்க்கை. நான் இந்த தொடரை முடிக்க என்ன செய்ய வேண்டும்? இனி பிறவாதிருக்க வழி என்ன?

இந்தப் பொய்களில் சிக்காமல் இருத்தல்.

பொய்களில் சிக்காமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?

ஆசைப்படாதிருக்க வேண்டும்.

எதன் மீது ஆசைப்படாதீருக்க வேண்டும்?

எல்லாவற்றின் மீதும். 'ஆசை அறுமின் ஆசை அறுமின் ஈசனோடாயினும் ஆசை அறுமின்.'

ஆசை அறுத்த வாழ்க்கை எப்படி இருக்கும்? எதுவுமற்றிருக்கும். எந்த வேலையுமற்றிருக்கும். எந்த வேலையும் தனது என்று சொல்லாமல் இருக்கும். எதன் மீதும் பிடிப்பு இல்லாமல் இருக்கும். எவர் மீதும் ஒட்டல் இல்லாமல் இருக்கும். எதை நோக்கியும் நகராமல் இருக்கும். இருந்த இடத்திலேயே இருக்கும். வெறுமே இருக்கும். சும்மா இருக்கும். சும்மாயிருத்தல்தான் இங்கு விஷயம். தப்பித்துக் கொள்ளும் ஒரே வழி.

சும்மாயிருத்தலென்றால் எந்த அசைவுமற்று இருத்தலா? கைகால்களை கட்டிப் போட்டது போல கிடத்தலா?

இல்லை. இங்கே நடக்கின்ற எந்த விஷயத்திற்கும் காரண காரியம் ஏற்காது வெறுமே சாட்சியாக இருத்தல். இதற்காக உண்ணுகிறேன். இதற்காக உயிர் வாழ்கிறேன். இதை நோக்கி நகருகிறேன். இது செய்யத்தான் பிறந்திருக்கிறேன் என்று இல்லாமல் மனதை தனியே உடம்பிலிருந்து விடுவித்து விடுதல்.

எல்லாக் காரியங்களிலும் புகுந்த புறப்பட்டு அதை என்னுடையது என்று கருதாமல் இங்கே நடக்கின்ற நாடகமாகக் கருதி இதனுடைய பயன்களையும், விளைவுகளையும், எது உன்னதமோ, எது மிகப்பெரிய விஷயமோ, எது ஆத்மாவோ அதனிடம் ஒப்படைத்து விடல். பூஜை செய். விழுந்து வணங்கு. கொண்டாடு. பாட்டுப்பாடு மறந்து போ. பூஜையினால் இந்தப் பலன் என்று தெரியாமல் வெறுமே பாடிக் கொண்டிரு. வெறுமே பூஜை செய்து கொண்டிரு. வெறுமே உணவு எடுத்து வாயில் போட்டுக் கொள். வெறுமே உடுத்து. பேசு. சிரி. அழு. ஆனந்தப்படு. சண்டையிடு. சல்லாபம் செய். ஆனால், இவை எதுவும் இவை எதுவும் உன்னோடு சம்பந்தமுள்ளவை அல்ல. அத்தனையும் விளையாட்டு. அலகிலா விளையாட்டு.

ஒருநாள் எல்லாம் உதறி, எங்கோ மிதந்து, மிதந்த இடத்திலிருந்து மேலே போய் கருமை தாண்டி, வெண்மை தாண்டி கரைந்து போய் காணாமல் போகின்ற பரமானந்த நிலைக்கு நகரத்தான் நீ பிறந்திருக்கிறாய். அதுவரை இங்கு ஆடுகின்ற எல்லா நாடகங்களையும் கவனித்து வா. ஒட்டாதே. உற்சவம் கொள்ளாதே. கொள்ள வேண்டிய ஒரே ஊர் அங்கே இருக்கிறது. கருமை தாண்டிய வெண்மை. நீ வெண்மைக்குள் கலக்க வேண்டிய வெண்மை. வெண்மைக்குள் கலந்து காணாமல் போக வேண்டிய வெண்மை. உருவே இல்லாமல் தான் என்ற நினைப்பேயில்லாமல் சரக்கென்று சகலமும் கரைந்து காணாமல் போகின்ற ஒரு தூய்மை. பரமானந்தம். அமைதி. நிம்மதி. இதற்காகத்தான் இத்தனை ஆட்டமும்.



அதற்காகத்தான் ஒவ்வொரு பருவமாக தாண்டி வந்து கொண்டிருக்கிறாய். இதோ, இனி அடுத்த வழி. அங்கு சேர வேண்டிய கல்யாண நாள் வந்து விட்டது. வளர்ந்து வனப்பாகி நிற்பது அதற்குத்தான். எத்தனை பிறவி, எத்தனை பருவம், எத்தனை நாள்கள், அடாடா... அடாடா... எனக்குத் திருமணம். விரைவில் திருமணம். ஈசனோடு திருமணம். மென்மையாகக் கலந்து போகின்ற திருமணம். காணாமல் போகின்ற திருமணம். எனக்குப் புரிந்து விட்டது. நான் இங்கு எவரையும் திருமணம் செய்து கொள்ள விரும்பவில்லை இந்த உலகத்தோடு நான் வாழவில்லை. இந்த உலகம் தாண்டி ஒரு பெரும் பிரபஞ்சத்தில் நான் கிடக்கின்றேன். எனக்கு இது விளையாட்டு. நான் வேறு இடத்திற்குப் போகிறேன். இதைவிட வேறுவித வாழ்க்கைக்கு ஏங்குகிறேன். நான் காணாமல் போக, கலந்து போக பிரயத்தனப்படுகிறேன். அன்று தான் எனக்குத் திருமணம். அதுதான் என் கல்யாணம். என் திருமணம் கல்யாண பசுபதீஸ்வரரோடு.

கல்யாண பசுபதீஸ்வரர் யார்?

கோயிலில் இருப்பவரா?

இல்லை. அவர் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் இருப்பவர். கருமை தாண்டிய வெண்மை. மிகுந்த வெண்மை. என்னை இழுத்து உறிஞ்சி தனக்குள்ளே ஒதுக்கிக் கொள்கிற வெண்மை. என்னை தன்னுள் இருத்தி என்னை காணாமல் அடிக்கின்ற வெண்மை.

அவள் மருத்துவரிடம் கை நீட்டினாள்.

நாடி துடிக்காமல் இருந்தது.

அவர் திகைத்துப் போய் அவளைப் பார்த்தார்.

"விழித்துக் கொண்டிருக்கிறாய். நாடி [illegible] லையே. எப்படி?"

அவர் வினவினார்.

37684
5470252

உள்ளே எண்ணமில்லை. எண்ணமில்லாததால் மூச்சில்லை. மூச்சு இல்லாததால் துடிப்பில்லை. துடிப்பில்லாததால் உயிரும் இல்லாது போகும். மூச்சு எண்ணத்தோடு சம்பந்தப்பட்டது. வேகமான எண்ணங்கள். வேகான மூச்சு. வேகமான மூச்சு. மறுபடியும் வேகமாக எண்ணங்கள். அவள் சொன்னது அவருக்கு புரிந்தது போலும் இருந்தது. புரியாதது போலவும் இருந்தது.

அவர் மருத்துவப் பெட்டியை எடுத்து அவள் காலில் வைத்து விட்டு கையெடுத்துக் கும்பிட்டார்.

"என்னை ஆசீர்வதிக்க வேண்டும்" என்றார்.

அவள் தன வலக்காலை தூக்கி, அந்த மருத்துவப் பெட்டியின் மீது வைத்தாள்.

எங்குமுள்ள பிரபஞ்சத்தின் சக்தி. நான் அறிந்த வெண்மை. இங்கு வந்து தங்கட்டும். இதற்குள் புகட்டும், எல்லா இடத்திலும் எல்லாமுமாய் உள்ளவன் இங்கும் வந்து இறங்கட்டும். இன்னும் குளுமையாய் இருக்கட்டும். இன்னும் செழிப்பாய் இருக்கட்டும். இந்த மருந்து சாப்பிட்ட அனைவரும் சுகமாகட்டும், இறையைப் பற்றி உணரட்டும். எங்கும் இருப்பதே இங்கும் இருக்கிறது என்பதை அவர்கள் தெரிந்து கொள்ளட்டும்.

மருத்துவருக்கு ஏனோ அழுகை வந்தது.

"சிவநேசரே, மிகுந்த கவனமாக இருக்க வேண்டிய கால கட்டம் இது. உன் மகளை மருத்துவத்தாலோ மற்ற வேறு வித ஆர்ப்பாட்டத்தினாலோ எதுவும் செய்து விட முடியாது. அவள் எல்லாம் வல்லவள். எல்லாம் தெரிந்தவள். எங்கோ இருக்கிறவள். எங்கோ போகப் போகிறவள். எனவே, அவள் என்ன சொல்கிறாளோ, அதற்கு தலையசைப்பதே உம்முடைய பணி. அவள் எது கேட்டாலும், கொண்டு வந்து கொடுப்பதே உம்முடைய வாழ்க்கை. சத்தியம் சில சமயம் பூமியில் ஜனிக்கும். உமக்குப் பிறந்திருப்பது சத்தியம். இது அரிதினும் அரிதான விஷயம். கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். வேறு எவரும் அண்டாமல் பார்த்துக் கொள்ளுங்கள். எவரும் சத்தியத்தை எதுவும் செய்து விட முடியாது. சத்தியத்தின் சூடு தாங்காமல், இங்கு பல பேர் பொசுங்கி விடப் போகிறார்களே என்பதற்காகச் சொல்கிறேன்.



ஆனால், உங்கள் அழைப்பால் எனக்கு ஞானம் உண்டாயிற்று. உங்களை நமஸ்கரிக்கிறேன்."

அவள் கால் தடவி, கண்ணில் ஒற்றிக்கொண்டு வைத்தியர் கிளம்பினார்.

சிவநேசர் அதிர்ந்து போய் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தார்.

அந்த வீடு மௌனமாக இருந்தது.

யாரையும் தேவையின்றி வீட்டிற்கு வரவேண்டாம் என்று சிவநேசர் ஆணையிட்டார். வாசலில் காவல் வைத்தார். மகளைப் பார்க்க அவரும் அஞ்சினார். தன் மனைவியின் மூலமே செய்திகள் சொல்லி அனுப்பினார். மனைவியோ கூடத்திலிருந்து அறைக்குள் எட்டிப் பார்க்க பயந்தாள்.

அவர்களுடைய பயம் வடிவுடையாளுக்கு சாதகமாயிற்று. சில சமயம் அதிகம் உண்டாள். சில சமயம் எதுவும் உண்ணாமல் இருந்தாள். பல சமயம் படுத்துக் கிடந்தாள். சில சமயம் உட்கார்ந்து ஆழ்ந்த மௌனத்தில் இருந்தாள். சில சமயம் மேல் தளத்திற்குப் போய் அங்கிருந்து உலகத்தை வியப்போடு பார்த்தாள். அவள் நிற்க கிளிகளும் அணில்களும், காக்கைகளும் வந்து உட்கார்ந்தன. பெரிய மயில்கள் வந்து மாடியில் அவளுக்கருகே உலவின. பசுக்கள் வாசலுக்கு வந்து குரல் கொடுத்தன. தெருவோடு யானை ஒன்று நகர மறுத்தது. பாகன் எத்தனை அடித்தும் அங்கேயே இருந்தது. ஹும்... என்று அது ஒரு உறுமல் செய்ய பாகனுடைய கம்பு நழுவி விழுந்தது. அவன் கைகட்டி ஓரமாக நின்றான்.

யானை வீட்டிற்கெதிரே வெகு நேரம் துதிக்கையை ஆட்டியபடியே நின்றிருந்தது.

"அம்மா... உன்னை நான் எதுவும் கேட்கவில்லை. ஆனால் இனி ஏதாவது நான் செய்ய வேண்டியிருக்கிறதா? நீ சொல்லாமல் இருக்கிறாயா? அதை நான் தெரிந்து கொள்ள விரும்புகின்றேன். உனக்கு என்ன செய்வது என்று தெரியாமல் இருக்கிறேன்."

ஒருநாள் காலை அறைக்குள் நுழைந்து பூஜையில் இருந்த மகளை நோக்கி தந்தை கை கூப்பிக் கேட்டார்.

"எனக்குத் திருமணமாகப் போகிறதப்பா."

மெல்லிய குரலில் பதில் சொன்னாள்.

"அப்படியா.. யாருடனம்மா?"

அவர் நம்ப முடியாமல் கேட்டார்.

"கல்யாண பசுபதீஸ்வரரை நான் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன். எங்கும் உள்ள இறையை நான் மணக்கப் போகிறேன்."

அவள் பதில் சொன்னாள்.

அப்பா நம்ப முடியாமல் சாதாரணமாக முகத்தை வைத்துக் கொண்டு, 'எனக்கு ஒன்றும் புரியவில்லையே அம்மா' என்பது போல் நின்றார்.

"இது நடக்குமப்பா. இது நடக்கும் வேளை. என் கழுத்தில் தாலிச் சரடும், காலில் மெட்டியும், கழுத்தில் மாலையும் கைகளில் வளையலும் போடப்பட்டிருக்கும். நம் தெரு முழுவதும் பூக்கள் வாரி இறைக்கப்பட்டிருக்கும். அப்படி பூக்கள் வாரி இறைக்கப்பட்ட போது, நம் ஊராரை கூட்டிக் கொண்டு இந்த அப்பிப்பாளையத்திலிருந்து கருவூர் நோக்கி நீங்கள் என்னை பல்லக்கில் அழைத்துப் போங்கள். கல்யாண பசுபதீஸ்வரர் கோவிலில் கொண்டு போய் விட்டால் அங்கே என்னை இறைவன் ஏற்றுக் கொள்வார்" என்று பதில் சொன்னாள்.



"எங்குமுள்ள இறைவன் உன்னை இங்கு ஏற்றுக் கொள்ளக் கூடாதா அம்மா?"

அவர் மரியாதையாகக் கேட்டார்.

"ஊருக்குத் தெரிய வேண்டாமா? நம் வீட்டுக்குள் நடந்தால் என் கல்யாணத்தை எப்படி அறிவார்கள்? இப்படி ஒரு கல்யாணம் நடக்க முடியும் என்பதை இந்த ஊர் தெரிந்து கொள்ள வேண்டாமா? அதனால்தான் அப்பிப் பாளையத்திலிருந்து கரூர் வரையிலும் மிகப்பெரிய ஊர்வலம் ஒன்று நடத்த வேண்டுமென்று சொல்லுகிறேன்."

அவள் சொல்லவிட்டு சிரித்தாள்.

அவர் கை கூப்பி தலை குனிந்து வணங்கி சரியென்று வருத்தமுமில்லாமல், சந்தோஷமுமில்லாமல் சொல்லி விட்டுப்போனார்.

அவள் சொன்ன தேதியில், அவள் கழுத்தில் மாலை விழுந்தது. தங்கத்தாலி சரட்டில் கோர்க்கட்டிருந்தது. முகத்தில் புதிய பொலிவு தோன்றியது. காலில் மெட்டி இருந்தது. சிறிய கொலுசுகள் இருந்தன. அவள் மிகுந்த அழகோடும், பளபளப்போடும் விளங்கினாள். அவள் அலங்கரிக்கப்பட்ட அதே வேளையில் தெருவெங்கும் பூமழை பொழிந்தது. மெல்லிய தென்றல் காற்றும் வீசியது. லேசாய் குளிர்ந்து மேகங்கள் ஊரை வெம்மை தாக்காமல் மறைத்தபடி இருந்தன. கிளிகள் கூவிக்கூவி அமர்ந்தன. புறாக்கள் சலசலத்து கூரை மீது ஏறின. பசுக்கள் முன்னும் பின்னும் அலைந்தன. கன்றுகள் துள்ளி குதித்தன. யானை கொட்டடியிலிருந்து உதறிக் கிளம்பி அவள் வீட்டு வாசலில் நின்று பிளிறிற்று.

அப்பா அந்தப் பிளிறல் சத்தம் கேட்டு விழித்துக் கொண்டார். என்ன என்று தெருவில் இறங்கிப் பார்த்தார். நடந்த விசேஷங்களை பார்த்துத் திகைத்தார். உள்ளுக்குள்ளே ஓடினார். மனைவியை எழுப்பி அறைக்குள் எட்டிப் பார்த்தார். பெண் அலங்காரமாய் விளங்கினாள்.

"இன்று எனக்கு திருமணம்பா. நான் என் புருஷனோடு சேர வேண்டும். அதற்காக கிளம்ப வேண்டும். பல்லக்கு ஏற்பாடு செய்யுங்களப்பா."

அவள் தகப்பனை நோக்கிப் பேசினாள்.

சிவநேசருக்கு நெஞ்சு முட்டி துக்கம் வந்தது. கண்கள் கலங்கின. இதற்காகவா உன்னைப் பெற்றேன் என்பது போல் பார்த்தார்.

"எல்லோரும் ஒரு நாள் பெற்ற மகளை கொண்டு போய் புருஷன் வீட்டில் விட வேண்டியதுதானே. என் புருஷன் மிகப் பெரியவனப்பா. எங்கும் நிறைந்தவன். எல்லாமும் ஆனவன். அவனுடன் நான் கலப்பதற்கு என்ன புண்ணியம் பண்ணி யிருக்க வேண்டும்."

"ஆமாம்மா. உன்னைப் பெறுவதற்கும் நாங்கள் பெரும் புண்ணியம் செய்திருக்க வேண்டும். நீ என்ன சொல்கிறாயோ அதே போல் ஏற்பாடு செய்கிறேன்." என்று சொல்லி மூடிய பல்லக்கு ஏற்பாடு செய்தார். தாரை தப்பட்டைகள் முழங்கின. எக்காளம் ஊதப்பட்டன. ஊர் கூடிற்று. யானை முன்னால் போயிற்று. முரசு அதிர்ந்தது. வீரர்கள் குதிரைகளில் கொடி யோடு போனார்கள். பசுக்கள் நடந்தன.

சிவநேசருடைய இனத்தாரும் மற்ற ஊராரும் ஒன்று சேர்ந்து உர்வலமாக நடக்க, சிவநேசருடைய உறவுகள் பல்லக்குத் தூக்கினார்கள். வீட்டு வாசலில் வைத்து காத் திருந்தார்கள். மின்னலென வெளியே வந்த வடிவுடையாள் நின்று ஊரைச் சுற்றிப் பார்த்தாள். எல்லோருக்கும் வணக்கம் சொன்னாள். ஊர் கை கூப்பி தலை குனிந்து வணங்கிற்று. சிலர் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினார்கள். பல்லக்கின் உள்ளே ஏறி வடிவுடையாள் அமர்ந்து கொண் டாள். திரையை மூடிக்கொண்டாள்.

அவர்கள் தூக்குவதற்கு சம்மதம் கேட்டார்கள்.

"சரி நடத்துங்கள்" உள்ளிருந்து குரல் வந்தது.



அவர்கள் தூக்கி தோளில் வைத்துக் கொண்டார்கள். அதி ராமல் நடந்தார்கள். ஊர்வலம் அப்பிப் பாளையத்திலிருந்து கருவூரை நோக்கி நகர்ந்தது.

புண்ணியவதியான மகளைப் பெற்ற தாயும் தந்தையும் பின்னால் கை கூப்பிக் கொண்டு ஓடினார்கள். கோவிலுக் கருகே ஊர்வலம் வந்து நின்றது. பெரும் கோபுரத்தை தாண் டியது. உள்ளுக்குள் நுழைந்து இடப்பக்கம் நகர்ந்து வலமாக கோவிலை சுற்றி வந்து படியேறி சிவன் சன்னதிக்கு பல்லக்கு போயிற்று. இறக்கி வைத்து கை கட்டி காத்திருந்தார்கள்.

திரை விலகவில்லை.

"அம்மா வெளியே வா" மெல்ல பெற்றவர் கூப்பிட்டார். எந்த அசைவுமில்லை.

மெல்ல குனிந்து திரைச்சீலையை விலக்கினார். உள்ளே ஏதுமில்லாதிருந்தது.

யாருமில்லையே. வழியில் எங்கே இறங்கினாள் என்று எல்லோரும் தேடினார்கள். சுரீரென்ற ஒரு ரீங்காரம் கருவூரில் ஏற்பட்டது. கருவூரிலுள்ள கல்யாண பசுபதீஸ்வரர் லிங்கத் தின் மீது அவள் அணிந்திருந்த பூமாலை இருந்தது. அங்கே யும் மலர் பொலிவு நிகழ்ந்தது.

உங்கள் மகள் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டாள். இறைவனோடு ஐக்கியமானாள்.

வாசலில் இருந்த அந்தணர் உரக்கக் கூறினார்.

'அப்பா... எனக்கு தனி சன்னதி வைத்து சௌந்தரநாயகி என்று பெயரிட்டு பூஜை செய்து வாருங்கள்' என்று வடி வுடையாள் குரல் கேட்டது.

தந்தை சரியென்று தலையசைத்தார். மெல்லக் கண்ணீர் விட்டு அழுதார். இறைவனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

ஐயனே, நீர் இருப்பதை நான் உணர ஒரு சந்தர்ப்பம் கொடுத்ததற்கு நன்றி. நீர் கல்லோ, மண்ணோ இல்லை. நீர்

எங்கும் உள்ளவர் என்பதை என் மகள் மூலம் தெரிந்து கொண்டேன். நீர் சத்தியம் என்பதை இந்த நிகழ்ச்சியின் மூலம் அறிந்துகொண்டேன். ஐயனே நான் உணர்ந்து கொண்டால் மட்டும் போதாது. இந்த உலகத்தில் பரம்பரை பரம்பரையாய், தலைமுறை தலைமுறையாய் எல்லா ஜனங்களும் உணர வேண்டும். ஒரு குடும்பத்தில் ஒரு நபராவது உணர வேண்டும். ஐயனே இடையறாது இடையறாது இந்தக் கல்யாணக் கோலத்தில் நீர் காட்சியளிக்க வேண்டும். இடையறாது. இடையறாது இங்குள்ள மக்களை உன்பால் ஈர்த்துக் கொள்ள வேண்டும்.

கை கூப்பி கேட்டுக் கொண்டார். விழுந்து வணங்கினார்.

வீடு வந்தார்.

வடிவுடையாளுக்கு தனி சன்னதி வைத்து சௌந்தரநாயகி என்று தனியே ஒரு கர்ப்பக்கிருகம் கட்டினார். ஊர் கூடி மக்களெல்லாம் ஒன்று சேர்ந்து அதற்கு விமானம் அமைத்தார்கள்.

என் குடும்பம் செழிக்க வேண்டும். என் வீடு விளங்க வேண்டும். திருமணமான என் மகள் நிம்மதியோடு வாழ வேண்டும். நிம்மதியோடு இங்கு வாழ்கின்ற மக்களுக்கு நல்ல குழந்தைகள் பிறக்க வேண்டும். அந்தக் குழந்தைகளுக்கும் திருமணமாக வேண்டும் என்று இடையறாது... இடையறாது இல்லறம் நடத்துகின்ற சௌந்தரநாயகியிடம் மிகப் பெரிய வேண்டுதலை வேண்டிக்கொண்டார்கள். இந்த இல்லறத்திலிருந்து மிக உயர்ந்த ஒரு நிலைக்கு, இந்தத் திருமணத்திலிருந்து எல்லாம் அறிந்தவனோடு சேரும் திருமணத்திற்கு எங்களை அழைத்துப் போவாயாக என்று வேண்டினார்கள். ஏதேனும் ஒரு பிறவியில் இப்படி ஒரு திருமணத்தை எனக்கு கொடுத்தருள்வாயாக என்று கை கூப்பி கேட்டுக் கொண்டார்கள்.

சௌந்தரநாயகி இல்லம் வளர்ப்பவள். இல்லறத்தோடு ஞானம் வளர்ப்பவள். சௌந்தரநாயகி கருவூரில் இன்றும்



நின்று கொண்டு வருவோருக்கு இல்லற சுகமும் அதன் மீது பொங்கும் ஞானமும் அளித்துக் கொண்டிருக்கிறாள். அவளுக்கு இந்த பூமியில் வாழ்தல் பற்றியும் தெரியும். இந்த பூமியின் வாழ்தலுக்கப்பால் எங்கு போய் சேர வேண்டும் என்றும் தெரியும். இவை இரண்டும் சொல்லிக் கொடுக்க அவள் ஒருத்திக்குத்தான் முடியும்.

சீனுவாசய்யரும், மாணிக்கவல்லியும் மண்டபத்தில் அமைதியாக உட்கார்ந்திருந்தார்கள்.

உட்கார்ந்திருந்தபடியே சௌந்தரநாயகியை நோக்கி கை கூப்பினார்கள்.

"இந்தக் கதை எனக்குப் புரிகிறது. இருப்பினும் வாய் வார்த்தையாய் சில கேள்விகள் கேட்க வேண்டுமென்று தோன்றுகிறது. நான் கேட்கட்டுமா?"

பணிவோடு மாணிக்கவல்லி கேட்டாள்.

"கேளு. மாணிக்கவல்லி."

தூணில் சாய்ந்து கொண்டே சீனுவாசய்யர் பதில் சொன்னார்.

"எந்த வேலையும் செய்யாதவளாலதான் இறைவனை அடைய முடியுமா?"

"எந்த வேலையையும் தன்னுடைய வேலை, தன்னுடைய திறமை, தன்னுடைய புத்தி, தன்னுடைய லாபம், தன்னுடைய நஷ்டம் என்று கணக்குப் போடுவதால் சேர முடியாது. செய்கின்ற வேலையை தன்னிலிருந்து அப்புறப்படுத்தி அன்னியப்படுத்தி பார்ப்பவரால்தான் வேலையை சரிவர செய்யவும் முடியும். அதனின்று விலகி இருக்கவும் முடியும். வேலையிலிருந்து விலகி இருப்பதே ஈசனை நோக்கி நடக்கும் வழி."

"ஈசனோடு கலத்தல் என்பது சும்மாயிருத்தலா? வெறுமே இருத்தலா?"

"ஆமாம், இது விளையாட்டில்லை. சும்மாயிருத்தல் என்பது சாதாரணமில்லை. இது பல ஜென்ம தவம்"

"இது என்னால் முடியுமா?"

"என்னால் முடியுமா என்று என்ன கேள்வி? வேறு எதற்கு பிந்திருக்கிறாய்? யோசனை செய்து பார் மாணிக்கவல்லி. உனக்கு சொந்தவீடு. அதில் உன் அண்ணன் குடியிருந்து உனக்கு ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் வாடகை தருகிறார். உன் அண்ணி உனக்கு சமைத்துப் போடுகிறாள். உனக்கு உதவி செய்யவே ஒரு வேலைக்காரி இருக்கிறாள். வேறு என்ன வேலை உனக்கு? நீ திருமணம் செய்து கொள்ளாதே. இந்தத் திருமணம் செய்து கொள்ளத்தான். ஈசனோடு ஒன்று சேரத் தான். மாணிக்கவல்லி, யாருக்குமே கிடைக்காத ஒரு அற்புதமான வாழ்க்கை உனக்கு கிடைத்திருக்கிறது. ஈசனோடு சேருவதற்காகவே இவ்விதமான சூழல் உனக்கு ஏற்பட்டிக்கிறது. மாணிக்கவல்லி, நீதான் தவம் செய்ய வேண்டும். தொடர்ந்து தவம் செய்ய வேண்டும்."

"தவம் செய்வது என்றால் என்ன?"

"அன்பு செய்தல்."

"அன்பு செய்தல் என்றால் என்ன?"

"எந்த ஆசையும் இல்லாது இருப்பவருக்குத்தான் அன்பு செய்ய முடியும். ஆசையிருப்பவர்களால் விருப்புக்கும் வெறுப்புக்கும் ஆளாக வேண்டியிருக்கும். எதை விரும்புகிறோமோ, அப்போது வெறுக்கவும் ஏதோ சில வகை வந்துவிடும். எதை நேசிக்கிறோமோ அங்கு நேசிக்கப்படாதவை என்று சிலவை ஏற்பட்டு விடும். விருப்பு வெறுப்புக்கு அப்பால் இருக்க ஆசையில்லாமல் இருக்க வேண்டும். ஆசையில்லாமல் இருந்தால் அமைதியாக இருக்கலாம். அந்த அமைதி எந்த வேலையை செய்தாலும் எந்த லட்சியமுமில்லாமல் இருக்கும். எந்தத் தொடர்பும் இல்லாமல் இருக்கும். மாணிக்கவல்லி நீ கொடுத்து வைத்தவள். ஈசனோடு கலப்பதற்காகவே பிறந்த



வள். நீ தொடர்ந்து தவம் செய். வடிவுடையாள் எப்படி வெறுமே... வெறுமே இறைவனைப் பார்த்துக் கொண்டிருந் தாளோ, எந்த வேலையும் இல்லாமல் உள்ளுக்குள் தன்னையே கவனித்துக் கொண்டிருந்தாளோ, அதேபோல உன்னை கவனித்துக் கொண்டிரு. உன்னை கடைசி வரை உன் அண்ணன் மட்டுமல்ல, அண்ணியும் குழந்தைகளும் காப்பாற்றுவார்கள். இந்த ஊர் முழுவதும் உன்னை வணங்கும். அந்த வணக்கம் உனக்கு ஒரு பொருட்டாக இருக்காது. அப்படிப் பாராட்டுவது உனக்கு மண்டை கனம் தராது. அவர்களால் நீ நேசிக்கப் படுவாய். உன் நேசிப்பை இங்கு வருபவர்கள் அத்தனை பேருக்கும் வழங்குவாய்.

கடவுள் தேடுதல் என்பது குழு சேர்த்தல் அல்ல. தன்னுடைய ஜாதி மக்களை மட்டும் ஒரு பக்கமாக இழுத்தல் அல்ல. வேண்டப்பட்டவர்கள் கொடுக்கின்ற காசில் உயிர் வாழ்வது அல்ல. தனக்குத் தெரியும் என்று எல்லோருக்கும் இடையறாது பிரசங்கம் செய்து கொண்டிருப்பது அல்ல. இங்கு பத்து நாள் கூட்டம். அங்கு பத்து நாள் தொடர் சொற்பொழிவு. அங்கு பத்து நாள் ஹோமம். இங்கு பத்து நாள் கும்பாபிஷேகம் என்று அலைவது அல்ல. இலக்கின்றி இருத்தல். எந்த நோக்கமும் இல்லாமல் இருத்தல். கடவுளை அடைவதைப் பற்றிக் கூட சிந்திக்காமல், அதை அடியவனிடம் கொடுத்து விடுதல். சும்மாயிருத்தல்.

இது உனக்குக் கைகூடும். உனக்குக் கைகூட வேண்டுமென்றே என்னை இங்கு அனுப்பியிருக்கிறார். நீயும் ஒரு நாள் கல்யாண பசுபதீஸ்வரரைச் சேருவாய். உனக்கும் அந்தக் கல்யாணம் நடக்கும். எல்லையில்லாத அந்த வெள்ளை பிரபஞ்சத்தோடு ஒட்டுவது நடக்கும். மாணிக்கவல்லி, நீ அதற்காகவே பிறந்திருக்கிறாய். வாழ்க வாழ்க நீ வாழ்க! அவர்... உன்னுடைய அவருக்கு என்னுடைய நமஸ்காரத்தைத் தெரிவி.''

மெல்ல சீனுவாசன் கையூன்றி எழுந்திருந்தார். சிறிது நேரம் தூணைப் பிடித்து நின்றார்.

கீழேயிருந்த பையை மாணிக்கவல்லி எடுத்துக் கொடுத்து, அவர் கால்களைத்தடவி கண்ணில் ஒற்றிக் கொண்டாள். சீனுவாசன் அவள் கையைத் தடவி, தன் கண்களில் ஒற்றிக் கொண்டு சிரித்தார். பையை வாங்கி தோளில் மாட்டிக் கொண்டார். மெல்ல வீடு நோக்கி நடந்தார். வீட்டிலிருந்த பையை எடுத்துக் கொண்டார்.

"மாணிக்கவல்லி ஸ்டேஷனுக்கு போகலாமா? ஆட்டோ ஏற்பாடு செய்கிறாயா?" என்று கேட்டார்.

"என்ன திடீர்னு கிளம்பிட்டீங்க?"

"வேலை முடிஞ்சு போச்சு. அதான்."

"நான் வரட்டுங்களா?"

அவர் தீர்மானமாக விடைபெற்றார். வண்டியேறினார்.

மாணிக்கவல்லி அருகே உட்கார்ந்து கொண்டார். இரண்டு பேரும் எதுவும் பேசாமல் மௌனமாக ஸ்டேஷன் வந்து அடைந்தார்கள்.

அவர் கோயம்புத்தூருக்கு டிக்கெட் வாங்கினார். டிக்கெட்டை பர்ஸில் பத்திரப்படுத்திக் கொண்டார். பர்ஸை பையில் வைத்துக் கொண்டார்.

மெல்ல பிளாட்பாரத்தில் போய் பெஞ்சில் உட்கார்ந்து கொண்டார். மாணிக்கவல்லி அருகில் உடகார்ந்து கொள்ள இருவரும் ஒருவரையொருவர் உணர்ந்தவாறு அமைதியாக இருந்தார்கள்.

"உங்கள் வருகையால் என் எண்ணம் திடப்பட்டதய்யா."

"இல்லை. என் வருகை ஈசன் ஏற்படுத்தியது. உன்னை திடப்படுத்த என்னை கருவியாக அவன் பயன்படுத்திக் கொண்டான்."



"அம்மா... மாணிக்கவல்லி. நான் கருவியாக இயங்குகிறேன். என்பதை தெள்ளத் தெளிவாக உணர்ந்திருக்கிறேன். என்னை எங்கு போகச் சொல்கிறானோ என்ன செய்யச் சொல்கிறானோ, அதைத்தான் செய்து கொண்டிருக்கிறேன். நான் இங்கு இல்லையம்மா இங்கு எனக்குள் இருந்து இயக்குவது ஈசன். இறைவன். நான் செய்கின்ற அத்தனை வேலைகளும் அவன் செய்வதே. நான் செய்வதென்று ஒன்றுமல்ல. நான் செய்வதிலிருந்து எதுவுமே எதிர்பார்க்கவில்லை. எதுவுமே கிடைக்க வேண்டுமென்று செய்வதில்லை. எதனோடும் ஒட்டவில்லை. எதுவும் எனக்கு வேண்டுமென்று கேட்கவில்லை. அம்மா இப்படி கேட்காமல் இருக்கும்போது எனக்கு என்ன வேண்டுமோ அத்தனையும் கிடைக்கிறது. ஒரு சிறு குறை கூட இல்லாமல் இறைவன் என்னை மிக நன்றாக வைத்துக் கொண்டிருக்கிறான். நான் பரமானந்தமாக இந்த பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். எனக்கு எந்தக் குறையுமில்லை. தாயே, நான் வரட்டுமா?"

தொலைவில் ரயில் வண்டியின் ஊது குழல் கேட்டது. ரயில் உள்ளே நுழைந்தது. பகல் வண்டி என்பதால் காலியாக இருந்தது. அவர் கூட்டம் அதிகமில்லாத ஒரு கம்ப்பார்ட்மென்டில் ஏறி உட்கார்ந்து கொண்டார். ஜன்னலோரம் அமர்ந்து கொண்டார்.

மாணிக்கவல்லி அவரை நோக்கி கை கூப்பினாள். மெல்ல அவள் கண்ணிலிருந்து நீர் வழிந்தது.

"எதற்குக் கைகூப்பினாய்? இல்லை தாயே. என்னை ஆசீர்வதிக்க வேண்டியவள் நீ. எதற்கு எனக்கு கை கூப்புகிறாய். இந்தக் கிழவன் நல்லபடியாக நல்ல காரியங்கள் செய்ய வேண்டுமென்று தயவு செய்து ஆசிர்வாதம் செய்" இரண்டு கைகளையும் கூப்பி தலை குனிந்து உட்கார்ந்தபடி அவர் கேட்க, தன்னை மறந்தவளாய் மாணிக்கவல்லி தன் வலக்கை தூக்கி அவர் உச்சியில் வைத்து ஆசீர்வதித்தாள். அவர் கிளம்பும் வரை வலக்கையை உயர்த்திக் கொண்டிருந்தாள். வண்டி நகர்ந்தது. மெல்ல மெல்ல ஸ்டேஷனை கடந்தது.

மாணிக்கவல்லி மறைந்து போனாள்.

சீனுவாசய்யர் ஜன்னலோரத்தில் அமர்ந்தபடி கல்யாண பசுபதீஸ்வரருடைய கோயில் கோபுரம் பார்த்தார். மறுபடியும் வணங்கினார். பிறகு வயல்கள் வந்தன. காவிரி வந்தன. ரயில் காவிரி தாண்டியது.

நெரூர் சதாசிவபிரம்மேந்திரரின் நினைவு வந்தது. அந்தப் பிரம்மேந்திரரும் இந்தக் கருவூருக்கு அடுத்த நெரூரில்தானே சுற்றிக் கொண்டிருந்தார்? இந்த வயல்களூடேதானே நடந்து கொண்டிருந்தார். இதெல்லாம் அவர் நடந்த இடம்தானே, எல்லாம் உணர்ந்து வெறுமே பூமியில் சும்மா வாழ்ந்தவ ராயிற்றே. வெறுமே இருந்தவராயிற்றே. அவர் இருந்த பூமி அற்புதமான பூமி. அவர் தொட்ட கருவூர் அற்புதமான ஊர் என்று கருவூரை நோக்கி வணங்கினார்.

எதிரே அவரையே பார்த்துக் கொண்டிருந்த ஒரு பெண் எழுந்து நின்று அவருக்கு எதிரேயுள்ள பெஞ்சில் வந்து உட்கார்ந்தது.

"ஐயா, உங்களிடம் ஒரு கேள்வி கேட்க வேண்டும்."

"கேளம்மா."

"கடவுள் என்பவர் உண்டா, கடவுள் உண்மைதானா? தயவுசெய்து எனக்குச் சொல்லுங்கள் ஐயா. இது என் வெகு நாள் குழப்பம்."

அந்தப் பெண் கை கூப்பிக் கேட்டாள்.

சீனுவாசன் மெல்லச் சிரித்தார்.

"உண்டம்மா."

தொண்டையைச் செருமிக் கொண்டார்.

அவர் பயணம் தொடர்ந்தது.

மாவட்ட கிளை நூலகம்
37684
5470252